அக்னி வாசம்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

அக்னி வாசம்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு

தியாகராயநகர், சென்னை - 600 017

முதற் பதிப்பு : டிசம்பர், 2009
உரிமை : ஆசிரியருக்கு

கங்கை வெளியீடு

விலை : ரூ. 75.00

❒	Title	**AGNI VASAM**
❒	Author	Melanmai Ponnusami
❒	Language	Tamil
❒	Subject	Short Stories
❒	Edition	First Edition, Dec - 2009
❒	Pages	288
❒	Published By	**Gangai Puthaka Nilayam** 23, Deenadayalu Street, T.Nagar, Chennai-600 017. Ph: 24342810 / 24310769
❒	Price	**Rs : 75.00**

Laser Typeset by: Sivaa Graphics, Ph: 9884712091

Printed at: Novena Printers, Chennai.

சமர்ப்பணம்

அது ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாம் வருடம். பத்தாண்டு காலத்து வறுமை. பஞ்சம், பரிதவிப்பு. நாதியற்ற அவலம். அவமானம், கம்மங் கஞ்சிக்கு கடித்துக் கொள்ள வெங்காயமும் வாங்க முடியாத அவலம். அவமதிப்பின் மனக்கொதிப்பு. மீண்டும் கடையைத் துவக்க வேண்டும் என்கிற வைராக்யம். பணம்? ஏதுமற்ற எங்களுக்கு யார் நம்பி, கடன் தருவார்? முரட்டுத் துணிச்சலுடன் ஒருவரிடம் போய் தலையைச் சொறிந்தேன். ஆச்சரியம், வக்கு இல்லாத என்னை நம்பி ரெண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கித் தந்தார். அவர் ஏற்றிய சுடரில் ஏற்றப்பட்ட கடைத்தீபம். எங்கள் குடும்பம் அதன் ஒளியில் கண் மலர்கின்றது. அந்தக் கருணை மகான் பெரியதம்பி என்கிற அமரர் த.செண்பகப்பெருமாள் அவர்கள் நினைவிற்கு...

முன்னுரை

அமெரிக்கா ராணுவ ஆயுதப் பொருளாதார நாடு, இந்தியா விவசாயப் பொருளாதார நாடு. இந்திய மக்களில் எழுபது சதவிகிதத்தினர் மண்ணோடும், மண்சார்ந்த உழவுத்தொழிலோடும் பின்னிக்கிடக்கின்றனர். நிலமுள்ள உழவர்களும், நிலமில்லா கூலி மக்களும் நிலம் சார்ந்த விவசாய உற்பத்தி வாழ்க்கை நடத்துகின்றனர். இந்தியாவுக்கு உணவும், உபயோகப் பொருட்களும் வழங்குகின்றனர். ஹார்லிக்ஸ் குடிக்கிறவர்களின் தொண்டைக் குழிக்குள் கம்பு விவசாயிகளின் வியர்வையும் சேர்ந்து இறங்குகிறது. தேய்க்கிற தேங்காயெண்ணெயில் தென்னை விவசாயிகளின் ரத்தம் கலந்திருக்கிறது.

இந்தியாவின் உயிரும் உடம்பும் எதிர்காலமும் உழவர்களின் வியர்வையை நம்பியிருக்கின்றன. உழவு செழித்தால் இந்தியா செழிக்கும். உழவு மெலிந்தால், இந்தியப் பொருளாதாரமும் தடுமாறித் தத்தளிக்கும்.

''இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது'' என்று மகாத்மா காந்தி இதனால்தான் சொன்னார்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்''

- என்ற வள்ளுவரின் குறளுக்குப் பதவுரைதான், மகாத்மா காந்தியின் சொற்கள்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்– வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்''

என்று புதிய தீர்ப்பை தாட்சண்யமில்லாமல் முன் வைக்கிறார், மகாகவி பாரதி.

இவையெல்லாம் காகிதங்களில் காணப்படுகின்ற எழுத்து இந்தியா. காகிதங்களைத் தாண்டிய பொதுவெளியில் எழுத்துக்கப்பால் மண்ணில் நடக்கிற இந்தியாவின் நிஜம் என்னவாக இருக்கிறது?

இந்திய நகரங்கள் செழிப்பும் சிங்காரமுமாக சிரித்துக் கொண்டிருக்க... இந்திய ஆன்மாக்களான கிராமங்கள் நோயுற்று வீழ்ந்து கிடக்கின்றன.

இந்தியத் தொழில்களிலேயே நட்டம் நிச்சயமாக வருகிற தொழில் எது என்றால், விவசாயம்தான் என்று எல்லோருக்கும் தெரியும்.

விவசாயப் பொருளாதார நாட்டில் விவசாயம் நிச்சயமான நட்டத் தொழிலாக வீழ்ந்து கிடப்பதுதான் அவிழ்த்தெடுக்க இயலாத முரண்முடிச்சாகக் கிடக்கிறது.

விவசாயத்தை நம்பி வாழ்ந்த கூலிக்காரர்கள் கொய்யாப்பழ வியாபாரத்துக்கும், சிவகாசி சித்தாள் வேலைகளுக்கும், திருப்பூர் கட்டிட வேலைகளுக்கும் தப்பித்தோடிக் கொண்டிருக்கின்றனர். நிலமுள்ள விவசாயிகளே நிலங்களையும் நட்டத்தையும் விட்டோடிக் கொண்டிருக்கின்றனர்.

விளைநிலங்களெல்லாம் விலை நிலங்களாக முளைக்கிற அவலம். செம்மண் பரப்புகளில் சுண்ணாம்புக்கற்கள்.

விவசாயத்தையும், விவசாயிகளையும், கிராமங்களையும் எப்படிக் காப்பாற்றுவது என்று எந்த விஞ்ஞானியும் யோசிப்பதில்லை. எந்தப் பொருளாதார நிபுணரும் சிந்திப்பதில்லை. எந்த

ஆளும் கட்சித் தலைவர்களும் நினைப்பதில்லை. எந்த எழுத்தாளரும்கூட கிராமங்களைப்பற்றி எழுதுவது இல்லை. நகர்சார்ந்த மனித மனநெருக்கடிகளையே கதைப் பொருளாக்கி, நாலு காசைப் பார்த்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கின்றனர். இந்திய விவசாயிகளைப்பற்றி கதையெழுதக்கூட யாரும் முன் வருவதில்லை. இப்படி சகல துறையினர்களாலும் சுத்தமாகப் புறக்கணிக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றில் நான் வாழ்வதாலும்... நிகழ்நிலவரத்துக்கு முரண்பட்டுப் போராடுகிற மார்க்ஸிஸ சித்தாந்தத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பதாலும்... நான் கிராமங்களைப்பற்றியே சிறுகதைகள் எழுதி வந்தேன், வருகிறேன்.

எளிய மக்களின் வியர்வையையும் கண்ணீரையும் கனவுச் சிதைவுகளையும் கருப்பொருளாக்கி சிறு கதைகள் எழுதி வந்தேன். சகலராலும், சகலதுறையினராலும் புறக்கணிக்கப்பட்டு, வளர்ச்சியற்று, சுரண்டல்காரர்களின் சுதந்திரமான வேட்டைக் காடாக்கப்பட்ட கிராம மக்களின் அவலங்களையே கதைகளாக்கினேன். ஆக்குகிறேன்.

புறக்கணிக்கப்பட்ட கிராமங்களைப்பற்றி எழுதினால், நானும் புறக்கணிக்கப்படுவேன் என்ற சந்தேகம் எனக்குள் வரவில்லை. தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடக நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளக்கூட இயலாமல், தொலைதூரத்து கிராமத்திற்குள் புதைய வேண்டியிருக்குமோ என்ற பயமும் வரவில்லை.

எளிய மக்களைப்பற்றி... ஏழை விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதைப் பற்றி... எளிய சாதி மக்கள் அவமதிக்கப்படுவதைப்பற்றி... இந்திய கிராமங்கள்

அலட்சியப்படுத்தப்படுவதைப்பற்றி... எளிய மொழியில் இலக்கியமாக்குவதுதான் எனது இலக்கு. இந்திய கிராமங்களின் வலிகளை, ரண அதிர்வுகளை - இந்தியர்களின் மனசாட்சியை உலுக்குகிற மாதிரி இலக்கியமாக்குவதுதான் எனது லட்சியம்.

'இனி' நாவலை வாசித்துவிட்டு, சர்வதேச விருதுகள் பலபெற்ற பத்திரிகையாளரான சாய்நாத் என்னை நேர்காணல் செய்துவிட்டு எழுதிய பேட்டிக் கட்டுரைக்கு அவர் வைத்த தலைப்பு, "கிராமங்களுக்கு வாழ்க்கைப்பட்ட எழுத்தாளர்."

ஆமாம், கிராமங்களுக்கு வாழ்க்கைப்பட்ட எழுத்தாளனாக உண்மையாக இருந்தேன். எதையும் எதிர் பார்க்காத நேர்மையுடன் லட்சியத்தில் இயங்கினேன். எளிய கிராமங்களைப்பற்றி எளிய மொழியில் யதார்த்தவாதமாக தொடர்ந்து எழுதி வந்தேன். அதிநவீன இலக்கிய அறிவுஜீவிகளின் பரிகசிப்புக்கும் ஏளனத்துக்கும் ஆளானேன்.

ஆனால், மத்திய அரசின் சாகித்ய அகாடமி விருது, அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் "மாட்சிமைப் பரிசு" என்ற விருது உட்பட பல விருதுகள் என்னை வந்தடைந்தன.

இந்த விருதுகள், எனக்குக் கிடைத்த மகுடங்களல்ல; சகல துறையினர்களாலும் புறக்கணிக்கப்பட்ட கிராமவிவசாய மனிதர்களுக்கு அரசு செய்திருக்கிற முதல் மரியாதை. என் கதை மாந்தர்களுக்குக் கிடைத்திருக்கிற முதல் கௌரவம். என் கதை உயிர்களின் அழுக்கு மேனியில் அரசு அளித்திருக்கிற முதல் சால்வை.

அமெரிக்காவில் 40க்கும் மேற்பட்ட தமிழ்ச்சங்கங்கள் பல்வேறு பெயர்களில் பல்வேறு வகைப்பட்ட மனிதர்களின் நிர்வாகத்தில் தனித்தனியாக இயங்குகின்றன. இந்தச் சங்கங்கள் யாவும் ஒருங்கிணைந்த ஓர் அமைப்புதான், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை. அந்தப் பேரவையின் மாட்சிமைப் பரிசு என்ற விருது எனக்கு அறிவிக்கப்பட்டது. விசா கிடைக்காத சிக்கலின் காரணமாக, நிச்சயிக்கப்பட்ட அமெரிக்கப்பயணம் சாத்தியமற்றுப் போயிற்று.

ஆனால், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் செயலாளர் "ஆக்ஸஸ்" பால்பாண்டி அவர்களும், தலைவர் தேவ் அவர்களும் சென்னைக்கே வருகைதந்து, மிகப்பெரிய விழா நடத்தி... பாராட்டிப் பேசி... எனக்கு விருதும், 2000 டாலர் மதிப்புள்ள தொகையும் வழங்கப்பட்டது.

வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையே சென்னைக்குத் தேடிவந்து, எனக்கு விருதும் வெளிச்சமும் தந்து விட்டுப் போனது, தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் கிடைத்த மகத்தான கௌரவமாகும்.

ஆச்சரியம் என்னவென்றால்... இத்தனை புகழ்மிகு கௌரவிப்பு நிகழ்ந்ததைத் தமிழ் ஊடகங்கள் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. சுத்தமாக கண்டு கொள்ளவேயில்லை. நாளிதழ்களில்கூட ஒருவரிச் செய்தியாக வரவில்லை. இது நிகழ்ந்தது, 2005ல்.

ஆனால், எனது 'மின்சாரப் பூ' சிறுகதைத் தொகுப்புக்காக 2008ம் ஆண்டிற்கான மத்திய அரசின் சாகித்ய அகாதமி விருது எனக்கு அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் அனைத்து ஊடகங்களும் தனது சொந்த வீட்டு வைபவத்தைப்போலக் கொண்டாடி மகிழ்ந்தன.

அத்தனை தொலைக்காட்சிகளின் கவனிப்புக்கும், காட்சிக்கும் இலக்காயிற்று எனது சிறிய குக்கிராமம் - விருது நகர் மாவட்டத்தின் கடைக்கோடி விளிம்பில் - இரண்டு இடுக்கில் சிக்கிக்கிடக்கும் - மேலாண் மறைநாடு என்ற சின்னஞ்சிறு கிராமம், ஊடக முற்றுகையில் திணறித் தவித்தது.

அனைத்து தொலைக்காட்சிகளின் கேமராக்களும், நாளிதழ்களின் நிருபர்களும், வார இதழ்களின் பேட்டிக் கேள்விகளும் எனது கிராமத் தெருக்காற்றை நிரப்பிற்று. கோடை பண்பலை, ஆஸ்திரேலிய வானொலித் தமிழ்ப் பிரிவு, தென்கிழக்காசிய வானொலி, போன்ற ஏகப்பட்ட வானொலிகளில் எனது குரலும் என்னைப்பற்றிய விவரிப்புகளும் ஒலித்தன.

ஒளி, ஒலி, எழுத்து என்று அனைத்து ஊடகங்களும் ஒற்றுமைப்பட்ட உணர்வெழுச்சியுடன் இதை ஒரு சொந்த விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தன; மகிழ்வித்தன.

ஓர் எழுத்தாளருக்குரிய அறிவு ஜீவி அடையாளங்களோ... மிகப் பெரிய கல்விசார் பட்டங்களோ... செல்வாக்கும் செல்வமும் நிறைந்த கௌரவமான உத்தியோக அந்தஸ்தோ எதுவுமேயில்லாத கிராமத்துப் பாமரனாகிய எனக்கு - எளிய விவசாயிகளின் விவசாயக் கூலிகளின் வியர்வையையும், கண்ணீரையும், கனவுகளையும், போராட்டங்களையும் எளியமொழியில் இலக்கியமாக்குகிற எளிய மனிதனான எழுத்தாளனுக்கு - இந்த உயரிய விருது கிடைத்ததை, உண்மையிலேயே ஊடக நண்பர்கள் உற்சாகத்துப் பேரெழுச்சியுடன் வரவேற்றார்கள்; உளப்பூர்வமான ஒப்புதல்களோடு வாழ்த்தினார்கள். தங்களுக்கே கிடைத்த

"எந்த ஒரு தீர்க்கதரிசியும் சொந்த ஊரில் கனம் பெற மாட்டான்" என்று ஏசுநாதர் கசந்த மனதுடன் சொன்ன வேதனை வார்த்தைகள் பைபிளில் உண்டு.

ஆனால்... எங்கள் கிராமத்தில் என்னை வாழ்த்தி புகைப்படத்துடன் டிஜிட்டல் பேனர்கள் ஏற்றினார்கள். கிராமத்தின் அனைத்து சமுதாயத்தினரும் ஒருங்கிணைந்து உள்ளூரில் மிகப்பெரிய விழா நடத்தினர். இயக்குநர்கள் சசி, மூர்த்தியுடன் அப்போதைய மாவட்டாட்சியர் திருமிகு ரகுபதி அவர்களும் விழாவில் கலந்து, மூன்று மணி நேரத்துக்கும் மேல் பங்கெடுத்துச் சிறப்பித்தார். சொந்த ஊரின் பாசமிகு கொண்டாட்டப் பரவசம்.

விருதுகளை எதிர்பார்க்காமல், எளிய மனிதனுக்குரிய தன்னடக்கத்துடன் வியர்வை மக்களின் விசாரங்களையும், விமோசனங்களையும் பற்றிய லட்சியப்பற்றுறுதியுடன் எளியமொழியில் இலக்கியமாக்குகிற நேர்மைக்கும் உண்மைக்கும் விருதுகளும் வெளிச்சமும் தந்து கௌரவித்திருக்கிறது, இந்தியாவும், தமிழ்ச் சமூகமும்.

சாகித்ய அகாதமி விருது மட்டுமல்ல... மக்கள் தொலைக்காட்சியின் "மனிதநேய இலக்கியப் படைப்பாளி" என்ற விருதும், இமயம் தொலைக்காட்சியின் 'சாதனையாளர்' விருதும் வந்து கூடுதல் வெளிச்சம் தந்தது. நக்கீரன் இணையதளத்தின் வீடியோ பேட்டியின் விரிவான பரப்பு, உலகம் முழுமையும் தமிழர்களிடம் சென்று சேர்த்தது.

இந்த விருதுகளும், வெளிச்ச விழாக்களும், நேர்காணல்களும், பாராட்டு விழாக்களும், பரவசப் பெருக்குகளும் என்னை மகிழ்வித்திருக்கிறது, சத்தியமாக. ஆனால்-

எனது இலக்கியக் கோட்பாடு, எளிய மக்களை, எளிய மொழியில் எதார்த்தமாக சித்தரிப்பது என்கிற எனது இலக்கியப்பாதை எந்தத்திசை மாற்றத்துக்கும் வேறு வகையான சலனங்களுக்கும் ஆளாகவில்லை என்பதற்கும்... எனது பயணம் எனக்கான மார்க்ஸீயப் பாதையில் தொடர்கிறது என்பதற்கும் இந்த 'அக்னிவாசம்' சிறுகதைத் தொகுப்பே சாட்சியமாகும்.

இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள்பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை. தம்மைத்தாமே வெளிக்காட்டிக் கொள்ளக் கூடிய தெளிவும், திராணியும் என் கதைகளுக்கு உண்டு. எனது கதைகளே தம்மைப்பற்றி சொல்லிச் செல்லும், உங்கள் வாசிப்பனுபவத்தில் ஒரு புதிய வெளிச்சம் தரும்.

கிராமத்தின் அடித்தட்டு மாந்தர்களே வேனாக் கொதிக்கிற வெயிலில் அலைந்து கொண்டும், மண்ணோடும் வாழ்க்கையோடும் மல்லுக்கட்டிக் கொண்டும் கதைகளின் வழியாக உங்களிடம் வருகின்றனர். பயங்கரவாதியாகக் கருதுகிற ராவுத்தரை மனிதராக மட்டுமே பார்க்கிற அருஞ்சுனை... வெள்ளாமையை அழிமானம் செய்கிற பறவைகளுக்கும் தாய் மனம் காட்டுகிற சூரியப் பெண்கள்... காட்டான்களிடமும் காதலுணர்வு அரும்பிவிட்டால், கண்ணியம் பூக்கிற தருணங்கள்... ஆட்டுச்சளிகளிலும், சாணமூத்திர வாசத்திலும், வெயில் வெளிகளிலும், வனாந்தரத் தனிமைகளிலும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்கிற போர்க்குணப் பேச்சிகள்... என்று வகை வகையான ஏழை ஜீவன்கள், வாழ்க்கை தந்த வலிகளையும், காயங்களையும் சீழ் நாற்றத்தையும் கதைகளின் வழியாக உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

'கோகுலம் கதிர்' இதழ் கேட்டு, நான் அனுப்பிய கதையான 'ஆதி காலத்தீ' என்ற கதையின் கையெழுத்துப் பிரதியை வாசித்து, மனம் லயித்துப் போன ஓவியர் ஷ்யாம், தனது வேலைச் சுமைகளுக்குமிடையில் எனது அலைபேசி எண்ணை தேடிப் பெற்று... கதையைப் பாராட்டி ஒரு மணி நேரமாக பேசிப் பரவசப்பட்டு, பரவசப்படுத்திய அனுபவம், மிகவும் வித்தியாசமானது.

'அக்னி வாசம்' மிகவும் வித்தியாசமானது.

இந்தத் தொகுப்பை அழகாக அச்சிட்டு... கச்சிதமான வடிவமைப்போடு வெளியிடுகிற கங்கை புத்தக நிலையம் திருமிகு இராமநாதன் அவர்களுக்கும், முகப்போவியம் வழங்கிய புகழ்மிகு ஓவியர் ஷ்யாம் அவர்களுக்கும், வாழ்க்கைப் பயணத்தில் உயிர்ப்பலமாகத் திகழ்கிற எனது துணைவி பொன்னுத்தாய் அவர்களுக்கும், என் தம்பி கரிகாலனுக்கும், தொகுப்புக்கான கதையைப் பாதுகாத்து, சேகரித்து, கத்தரித்து, ஒழுங்குபடுத்துவதில் உதவிகள் செய்த மகள் தென்றல், மகள் ராஜஅன்னம் ஆகியோருக்கும், 'தொகுப்பு போடலியா, தொகுப்பு போடலியா' என்று தொடர்ந்து கேட்டு என்னைத் தூண்டி சுடரேற்றிய எனது மூத்த மகள் திருமதி வைகறைச் செல்வி சந்திரமோகனுக்கும், எனது மகன்கள் வெண்மணிச்செல்வன், இளவேனில் ஆகியோருக்கும், 'தாத்தா புஸ்தகத்துலே எங்க பேரு ஏன் வரல்லே' என்று உரிமையுடன் நச்சரிக்கிற எனது பேத்திகள் இளந்திங்கள் கத்யூஸா, அமிர்த நிதி ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும் என்றென்றும் உரித்தாகும்.

வாசித்து முடித்து மௌனத்தில் உறைந்து விடாமல் ஓர் அஞ்சலட்டை எழுதுங்கள். உங்கள் பாராட்டுப் பூக்கள் என்னை உற்சாகப்படுத்தி வளர்க்கும், விமர்சன வார்த்தைகளும் என்னைச் செதுக்கி நெறிப்படுத்தும்.

நன்றிகள்!

என்றும் உங்கள்,
மேலாண்மை பொன்னுச்சாமி
27.9.09

மேலாண்மறைநாடு
626127
இராஜபாளையம் வழி,
விருதுநகர் மாவட்டம்.
04562- 271233
9942610700

உள்ளடக்கம்

1.	ஆதிகாலத்தீ	17
2.	கோணல்கம்பு	34
3.	புதிரிருட்டு	52
4.	சூரியத்தாய்	68
5.	காதல் வேர்வை	75
6.	மகள்முகம்	88
7.	அக்னிவாசம்	102
8.	வாரந்தோறும்	112
9.	ஆகாய விரிவு	121
10.	கதகதப்பு	135
11.	களவுக்கலை	145
12.	மனப்பாரம்	160
13.	அரியகணம்	172
14.	மனத்தாய்மை	186
15.	கூலிக்காரன்	200
16.	காட்டின்கரை	208
17.	சட்டைத்துணி	220
18.	அதீதம் (சற்றே நெடிய சிறுகதை)	232

1. ஆதிகாலத்தீ

தெறித்து ஓடி பயிர்களைக் கடிக்க ஆலாய்ப் பறக்கிற வெள்ளாடுகளை ஓடி ஓடி மடக்கி, பாதைக்குள்ளேயே பத்துவதற்குள் ஆத்தாடி, அம்மாடி என்றாகி விடுகிறது பூச்சிக்கு. வியர்த்துக் கொட்டுகிறது. முத்து முத்தான வியர்வையில் இளவெயிலின் ஒளித்தெறிப்பு.

பாதையின் இருபக்கமும் மட்டுமல்ல, சுற்றிலும் பச்சைப் பசேலென்று மக்காச்சோள வெள்ளாமை. சமுத்திரமாக விரிந்து பரந்து கிடக்கிற கரிசல்காடு பூராவிலும், ஆளுயரத்துக்குப் பயிர்கள். குளிர்ப் பச்சையாக கிளி நிறப்பயிர், பூப்பருவம். பயிர்களின் உச்சந்தலையில் தோகை விரிக்கிற பூக்கள்.

பச்சைப் பயிரில் வாய் வைக்க தவியாய்த் தவிக்கிற ஆடுகள். கள்ளத் தாவல்கள். திருட்டு நழுவல்கள். இவளிடமிருந்து சிறகு முளைத்துப் பறக்கிற கற்கள். காற்றையும், வெயிலையும் அதிர வைக்கிற நாற வசவுச் சொற்கள். கம்பு வீச்சுக்கள்.

"செத்த நாய்களா... எடுபட்ட கழுதைகளா."

எரிச்சலும், கோபச் சீறலுமான பூச்சியின் வசவுகளில் ஒன்றிரண்டு. இன்னும் கெட்ட வார்த்தைகளெல்லாம் பேசுகிறாள். விரசமான வசவுகளும் தெறிக்கும்.

யாருக்கும் பயப்பட மாட்டாள். துணிச்சலானவள். இருட்டுக்கும், தனிமைக்கும், பேய்க்கும் பயப்படாதவள்.

ஊரைத் தாண்டி, காலனியைத் தாண்டி... கரிசல்காட்டுப் பெரு வெளியைத் தாண்டி... தாறுமாறாக நடக்கிற ஆடுகள். கன்னங்கரேலென்ற வெள்ளாடுகள்.

வெள்ளையன் செம்மறியாடுகள் பத்திக் கொண்டு வருவான். அவனுடன் கூடவே ஏழெட்டு வருஷமாக திரிகிறாள். இவளைவிட நாலைந்து வயது பெரியவன். அவனும் இப்படித்தான் கெட்ட வார்த்தைகளிலேயே ஆடுகளைத் திட்டி விரட்டுவான். கூச்ச நாச்சமில்லாமல் நாறப் பேச்சு பேசுவான். அவனிடமிருந்து வந்து ஒட்டிக்கொண்ட பழக்கம்.

ஆளற்ற வனாந்தரச் சுதந்திரம். கேட்பாரற்ற - வாய்த்துணையற்ற - தனிமைச் சூன்யம் தருகிற சலிப்பும், தைரியமும், வெட்ட வெளியின் தகிக்கும் வெயிலுடனேயே கருகிச் சாகிற மனத்துயரம். ஆட்டின் வாலிலேயே தொங்கித் துடிக்கிற வாழ்க்கையின் வெறுமையும், கசப்பும்.

கெட்ட வார்த்தைகள்தாம், மனத்துணை. சினிமாப் பாட்டுக்களை கெட்ட வார்த்தைப் பாட்டுக்களாக்கி... உச்ச குரலில் கத்திப் பாடுவாள். ரகசிய உறுப்புக்களை ஓர் ஆங்காரமாக - ஓங்காரமாக - சத்தம்போட்டு உச்சரிப்பதில் ஒரு மகிழ்வான மனநிறைவு. விதிக்கப்பட்ட வறுமை வாழ்க்கையின்மீதான வன்மத்துடன், காறித் துப்பிய சந்தோஷம். ஆடு மேய்க்க ஆளற்ற வனாந்தர வெயிலில் தகிக்கவிட்ட தலையெழுத்தை செருப்பால் அடித்த மன ஆறுதல்.

கறுத்தூருணிக்குள் ஆடுகளை இறக்கினாள். இனி, கவலையில்லை. அதுகள் பாட்டுக்கு விட்டாத்தியாக புல்லைக் கடிக்கும்.

கறுத்தூருணியில் தண்ணீர் இருக்காது. மஞ்சனத்தி, கருவேல மரங்களும், மத்தாங்கப் புல்லும், கோரைப் புல்லும், வற்றாத கொழை தழைகள் செழித்துக் கிடக்கும். உயரமான வட்டக் கரைகள். சரள் அள்ளிய பெரிய பெரிய கிடங்குகள்.

கொலை செய்து முண்டத்தைப் போட்டாலும், யாருக்கும் தெரியாது. அப்படியொரு மறைவு. ஊருணியை சுற்றியிருக்கிற நாலைந்து தரிசுக் கரிசலிலும் அடர்த்தியான மரங்கள்.

ஊருணிக்குள் சுதந்திரமாகிய வெள்ளாடுகள் பாய்ந்து, பாய்ந்து புல்லை வளைத்துப் பிடித்தன. 'பர் ருச், பர்ர்ர் ருச்' சென்று மேய்கிற சத்தம்.

பூச்சிக்குக் களைப்பாக இருந்தது. உயிர் வடிந்து ஓய்ந்து போனமாதிரி உடம்பெல்லாம் அயற்சி. அடி வயிற்றிலிருந்து பீறிட்டு வருகிற ஆசுவாசப் பெருமூச்சு. "அம்...ம்... மாடி" என்று மனக்கூவலாக வெளிப்படுகிற வியர்வை மணிகள். செம்பட்டை முடியெல்லாம் கலைந்து கிடக்க... உள்ளிருந்து வழிகிற நீர்க்கோடுகள். விம்மி விம்மித் தணிகிற நெஞ்சு. 'தஸ்ஸ்... புஸ்ஸ்'ஸென்று மூச்சிரைக்கிறது. குறுக்கெலும்பெல்லாம் ரண அதிர்வுகள்.

காற்றே இல்லை. மரங்களும், மக்காச்சோளப் பயிர்களும் எதையோ கண்டு அரண்டமாதிரி, ஆடாமல் அசையாமல் நின்றன. காலடிப் பாவாடையைத் தூக்கி, கூச்சமில்லாமல் முகத்து வியர்வையையும், கழுத்தடி நசநசப்பையும் துடைத்துக் கொள்கிறாள். தொடை வரைக்கும் வெயில் தொடுகிறது.

'இதுலே... கூசுறதுக்கும், பயப்படுறதுக்கும் என்ன இருக்கு? வேட்டி நுனியாலே ஆம்பளைக முகத்தைத் துடைக்கிறதில்லியா? அப்படித்தான் இதுவும்.'

செம்மறியாடுகளின் வாசம் வந்தது. மூத்திரமும், சாணியும், மூக்குச் சளியுமான ஒருவகை மணம். திரும்பிப் பார்த்தாள். வெள்ளையன்தான் செம்மறியாடுகளைப் பத்திக் கொண்டு வருகிறான். பீடிப்புகை அவன் தலைக்கு மேல் தெரிகிறது. நீலக்கலர் பனியன். கச்சிதமாக மடித்துக் கட்டிய கைலி. தலையில் வட்டக் கட்டாக துண்டு. அதற்குள் சொருகப்பட்டிருக்கும் தீப்பெட்டி. உருட்டுக் கட்டான திரேகம். முறுக்கேறிய தசைத் திரட்சி. லட்சணமான ஆள். தாட்டியமானவன்.

ஒன்பது வயதில் கம்பு தூக்கியவள் பூச்சி. அன்றிலிருந்து இவன் கூடவே சேர்ந்து ஆடு மேய்க்கிறாள்.

"யப்பா... வெள்ளையா, அப்பனைப் பறிகுடுத்த பொட்டப்புள்ள, பச்சைமண்ணு. வேறபுகல் இல்லாம கம்பெடுத்துக் குடுத்து, ஒங்கூட அனுப்புதேன்பா... கண்ணும் கருத்துமா பார்த்துக்கப்பா..."

"ஆட்டும்க்கா... நா பாத்துக்கிடுதேன்."

இதுவரைக்கும் 'பார்த்துக்கிட்டான்'; துணையாயிருந்தான். வேறு யாருக்கும் வாலையாட்டிப் பார்க்கிற தைரியம் வராமலிருந்ததில்... அவனது துணை, ஒரு காரணம்தான். இப்ப இப்ப... ஒரு தினுசாக பார்க்கிறான்; பார்வையில் கபடம். வெள்ளையன் மனசு கறுப்பாகி வருகிறது.

'என்ன செய்யப் போறானோ... என்ன கூத்து கட்டப் போறானோ... என்ன இழவு வந்து சேரப் போகுதோ...'

ஒரு புதிர் மயமான இருட்டான நினைவு அவளுக்குள் ஓடியது.

அவளுக்குள் ஒரு தைரியம். துணிவு. 'நம்மை என்ன கடிச்சா முழுங்கிருவான்?' என்கிற மனத்தெளிவு.

பூச்சி, சடங்காகி (பூப்பெய்தி) நாலைந்து வருஷமாயிற்று. ஊர் உலகத்துக்குச் சொல்லவில்லை. மிரட்சியும், அறியாமையுமாக ஊமையழுகை அழுத பூச்சிக்கு, அம்மாதான் அழுதுகொண்டே ஆறுதல் சொன்னாள். தைரியம் தந்தாள்.

"பொண்ணா ஜென்மம் எடுத்த எல்லாருக்கும் உள்ளதுதான். பயப்படாதே... செடி பூக்குறது, நல்லதுதான். பூக்காட்டாத்தான் கவலைப்படணும்."

"பெறகெதுக்கும்மா... நீ அழுகுதே?"

"நம்ம விதிய நெனைச்சு."

அழுகையும், கண்ணீருமாகப் புலம்பிய அம்மா,

"மணிக்கொத்து மாதிரி ஒத்தைப் பிள்ளை வயசுக்கு வந்திருக்கா. 'எம்புள்ளே பூத்துட்டா'ன்னு ஊர் உலகத்துக்குச் சொல்ல முடியாம மருகித் தவிக்கிறேன்... அதை நெனைச்சுத்தாண்டி..."

தலையில் ஓங்கியடித்து அழுது கதறுகிற அம்மா.

"தாய் மாமன் சீர் வரிசையோட... மைக் செட் கட்டி, ரேடியோ போட்டு... மேளம் வைச்சு... பத்திரிகை அடிச்சு... ஊர் சொல்லி.. பந்தி வைச்சு... முறைப்படி நம்ம வழக்கப்படி

சடங்கு நடத்துனா... எம்புட்டு நல்லா இருக்கும்? சாதி சனத்தைக் கூட்டி கொண்டாடுனா... பெருமையா இருக்கும்லே?''

''ஆசையிருக்கு தாசில் பண்ண, யோகமிருக்கு கழுதைமேய்க்க'ன்னு சொலவடை சொல்ற மாதிரியிருக்கு நம்ம பொழைப்பு. வவுத்துப் பாட்டுக்கு வழியத்துப் போயிருக்கையிலே... ரெண்டாயிரம், நாலாயிரம் செலவழிக்க ஏலுமா? சடங்குதான் வைக்க முடியுமா? இப்படியுமா எம்புள்ள தலையெழுத்து, கோண எழுத்தா அமையணும்? அட, குருட்டுப் பய தெய்வமே... ஒங் கண்ணும் அவிஞ்சு போச்சா? கருத்தழிஞ்சு போச்சா?''

குமுறலும் குமைச்சலுமாகப் பாட்டம் பாட்டமாக அழுது தீர்த்தாள். 'ஊமைக் கனா கண்டால், ஒருத்தரிடமும் சொல்லாதே' என்கிறமாதிரி... யாருக்கும் தெரியாமல் தலைக்குத் தண்ணீர் ஊற்றி... சடங்கு முறை கழித்தாள்.

ஒரு புதுத் துணிக்குக்கூட வழியில்லை.

சோகப்பாரம் நிறைந்த நினைவுகளுடன், கனத்த மனசுடன் தன்னைத்தானே பார்த்தாள். பூப்போட்ட பாவாடை. சுடிதார் பெண்கள் போடுகிற முண்டா பனியனைப் போன்ற உள்ளாடைகள் மூன்று ஓசி கிடைத்தன. ஒன்றிரண்டு ஓட்டைகள் தையல் இழை பிரிந்திருந்தது. அதைத்தான் உள்ளே போட்டிருக்கிறாள். செத்துப் போன அய்யாவின் பெரிய சைஸ் அரைக்கைச் சட்டையை அதற்கு மேல் போட்டிருக்கிறாள்.

கட்டம் போட்ட அரைக்கைச் சட்டை, ஒரு வசதி. தொள தொளப்பாக கிடக்கும். வயதை மறைக்கலாம். நெஞ்சுத் திரட்சியை மறைக்கலாம். சிறுமியாகவே தோற்றம் தரலாம்.

சீர்குலைந்து, சித்திரம் அழிந்த குறைகோலம். பூப்போட்ட பாவாடையும், 'தொள தொள' ஆண் சட்டையும், பார்க்கவே அசிங்கமாய்... அவலட்சணமாய்... அலங்கோலமாய்...

அவளுக்குள் முட்டிக் கொண்டு வருகிற அழுகை. கண்ணுக்குள் நீர்முள்ளின் உறுத்தல். அழுத்துகிற மனக்கனம். அடி நெஞ்சில் அறைகிற இல்லாமையின் அவலம்.

பத்து நாளுக்கு முன்பு...

ராத்திரி குளித்தாள். அரை குறையான கிடுகுகள், வீட்டுச் சுவரின் நிழலின் இருள் மறைப்பில் குளித்தாள். குளித்து முடித்துவிட்டு... துணி மாற்ற கூரை வீட்டுக்குள் போனாள்.

அம்மா இல்லாத தைரியத்தில் ஈரத்துணியை நழுவ விட்டு விட்டு...

உலகின் கண்ணுக்குக் காட்டாத தன்னை, தனது முழுமையை - தேகவெளிச்சத்தை - தானே பார்த்தாள். அவளே அவளுக்கு புதுமையாக - பேரழகியாகத் தோன்றினாள். 'தான் இம்புட்டு அழகா' என்று நினைத்து பிரமித்தது நினைவுக்கு வந்தது. போட்ட கோல ஓவியத்தை காலால் தடவி பரசி அழித்த மாதிரி... பாவாடையும், அரைக்கைச் சட்டையுமாக இருக்கிற தனது தோற்றம்.

தன்னிடம் ஒரு ஜாக்கெட்கூட இல்லை என்பதை நினைத்தவுடன்... அடி வயிற்றில் ஒரு பிசைவு. நெஞ்சில் பார அழுத்தம். குமுறிப் பீறிடுகிற அழுகை உணர்ச்சி.

நெருங்கிவிட்ட செம்மறியாடுகள். கிட்டத்தில் வந்துவிட்ட வெள்ளையன். அவனிடம் தனது பலவீனத்தைக் காட்டிக் கொள்ளக்கூடாது என்ற சுயவிழிப்பு. சுதாரித்துக் கொண்டாள். முகத்தை மனசால் துடைத்துக் கொண்டாள்.

ஒரு வெள்ளாடு மஞ்சணத்தி மரத்தில் முன்னத்தி கால்களை போட்டு, நிமிர்ந்து, தொங்குகிற சிறு கிளையைக் கடித்தது.

ஒரு கல்லை விட்டெறிந்தாள். ''விர்ர்ர்' ரென்று பறக்கிற கல். ''புல்லை மேயாம... மரத்து மேலே என்ன நக்குறே... பேய்க்...'' என்று கோபமாகக் கத்தினாள்.

அவளது வசவின் நாராசம். விரச வசவு, வெள்ளையனுக்கு 'என்னவோ' போலிருந்தது. ஆண் கர்வம் பங்கப்பட்டதாக ரோஷப்பட்டான்.

'தன்னை ஓர் ஆணாக மதித்திருந்தால்... இப்படி வசவு வையத் தோணுமா பொட்டைக் கழுதைக்கு?' அவனுள் ஓடுகிற நினைவு.

''பூச்சி அப்பதையே வந்துட்டீயா?''

''இப்பத்தான் வந்து... மூஞ்சியை துடைச்சிருக்கேன்.''

''இந்தா... தூக்குச் சட்டியையும், தண்ணிபாட்டிலையும் மரத்துலே தொங்க விட்டுரு.''

வாங்கினாள். அவளது தூக்குச் சட்டியும், தண்ணீர் பாட்டிலும் தொங்குகிற அதே கருவேல மரத்தில் இதையும் தொங்க விட்டாள்.

மேலுதட்டை மேலாகப் பிதுக்கிக் கொண்டு செம்மறியாடுகளை மேயவிடாமல் காமக்கனைப்பு

கனைத்துக் கொண்டே, தொல்லைபடுத்திய செம்மறிக்கிடாயை நோக்கி ஒரு வசவு தெறித்தது அவளிடமிருந்து. ஒரு கல்லும் பறந்தது.

அவளையே கூர்ந்து பார்க்கிற வெள்ளையன். அவளது உருண்ட கையின் மினுமினுப்பை - உப்பிய கன்னத்தின் ஒளியைப் பார்க்கிற அவன். பார்வையில் மேலுதட்டுப் பிதுங்கல்.

ரெண்டு பாக்கட் ஊறுகாயை தலைப்பாகையிலிருந்து எடுத்தான். உரிமையோடு அவளது சட்டைப்பைக்குள் கைவிட்டான். 'இதைப் பையிலே வைச்சிரு. மதியத்துக்கு ஆகும்.''

பைக்குள் விட்ட கையை எடுக்காத வெள்ளையன். விரல்களின் சில்மிஷம். சதையை அழுத்துகிறான். ஒரு சிறிய கிள்ளல்.

தேள் கொட்டின மாதிரியிருந்தது பூச்சிக்கு. ரௌத்ரமாகிய அவள், கோபாவேசமாக கையைத் தட்டிவிட்ட பூச்சி.

காமக்கிடாயைப்போல இளிக்கிற வெள்ளையன்.

எல்லாம்... வார்த்தையாகாத மௌன நாடகம். அடி மனசுகளின் அந்தரங்க உரசல். உரசலில் எழும் தீப்பொறி.

ஒன்றும் நடக்காத பாவனையில் வெள்ளையன்,

''என்ன... இம்புட்டு தூஷணமான வசவா வைய்றே?''

''ஆடுக பண்ணுற சேட்டைக, கொஞ்சமா? அதுகளை அப்படித்தான் வையணும். இந்த வசவுகள்ல்லாம் உங்ககிட்டேயிருந்துதானே... வந்துச்சு?''

"நா ஆம்பளை. எனக்குச் சரி. நீ பொம்பளை. ஒரு கூச்சம், ஒரு வாயொடுக்கம் வேணாம்?"

"ஆம்பளைக்கொரு சட்டம், பொம்பளைக்கொரு சட்டம்னு ரெண்டு சட்டமா? ஒழுக்கம்னா... ரெண்டு பேருக்கும் பொதுதானே?"

அவனது சகஜமான இயல்பான பேச்சு... அவளிடமோ கூடுதல் சீற்றம். மார்பில் அவன் கிள்ளிய கபடம். தேள் கடிபட்ட வலியின் கோப அதிர்வு பூச்சியிடம்.

"நீயென்ன, புதுச்சட்டம் போடுதே? சாண்புள்ளையானாலும், ஆண்புள்ளே சிங்கம்லே? பொட்டச்சி ஈடாயிருவாளா?"

"ஆம்பிளைன்னா பதினோரு மாசமா? அவனுக்கு மட்டும் கொம்பா மொளைச்சிருக்கு? கொம்பு மொளைச்சிருந்தா... ஒடிச்சிரத்தான் செய்யணும்."

வாயடைத்துப் போனான். வார்த்தைகளற்றுப் போன மனச்சூன்யம். எப்பவும் போலவே... இப்பவும் சரி மல்லுக்கு நின்றாள். பின் வாங்க மாட்டாள். பயம் என்ற பேச்சே அவளிடம் அண்டாது. தெளிவான மனசின் துணிச்சல். துணிச்சலின் வெடிப்பான அனல் சொற்கள். நேர்படப் பேசுவாள். நிமிர்ந்து பார்ப்பாள். தளராத தலை நிமிர்வு.

சட்டைப் பையில் கிடந்த ஊறுகாய்ப் பொட்டலம், தேளாக உறுத்தியது. அவன் விரல் விஷமத்தின் தீ நினைவு. அழுத்திய அழுத்தத்தில் தெரிந்த ஆண் திமிர்.

முந்தியெல்லாம் இப்படியில்லை. இவளை சிறுமியாக மட்டுமே நினைப்பான். பாசமும் காட்ட மாட்டான்.

பாதகமும் செய்ய மாட்டான். அவனது உடனிருப்பே ஒரு பாதுகாப்பாக இருந்தது.

அதற்காக வெள்ளையன் யோக்கியனுமில்லை. காட்டுத் தனிமையில் - வெட்ட வெளிப் பரப்பில் - ஒற்றையாக - வெக்கை வெயிலில் மொத்தப் பொழுதையும் கழிக்கிறவனின் மனசு, கோணலாகாமல் இருப்பது சிரமம். உள்ளுக்குள்ளேயே உழல்கிற நினைவு, பகிர்வதற்கு ஆளில்லாமல் குமைந்து குமைந்து வக்கிரமடையும்.

பூச்சிக்கும் அதுதான். சபலமடைகிற மனசையும், உடம்பையும், கெட்ட வார்த்தைப் பாடல் கத்தலில் ஆற்றிக் கொள்கிறாள். வாய் வார்த்தைகளில் மனக்காமம் தணியும்.

அவனும் அப்படித்தான். நாலைந்து புஞ்சைகள் தாண்டி, தூரத்தில் எருமைகளைப் பத்திக் கொண்டு மேய்க்கிற நடு வயதுப் பெண்ணாக இருந்தாலும் சரி, "ஆட்டைப் பாத்து மேய்... அந்த ஒட்டை மூக்கும், வவுத்து வெள்ளையும் கள்ளத்தனம் பண்ணி... நழுவும் பார்த்துக்கோ..." என்பான்.

ஆணி வைத்து தைத்த செருப்பு 'சர்ர்ருக், சர்ர்ருக்' கென்று கிரீச்சிட நடப்பான். போய் 'மேய்ந்து' விட்டு ஆற அமர வருவான். ஆத்துப் பாலம் பக்கம் மேய்ச்சலுக்குப் போனால்... காய்ந்த முள் நறுக்கவும், விறகு பொறுக்கவும் தூரந்தொலைவில் தட்டுப்படுகிற பெண்களைக் குறி வைத்துப் போவான். சில நேரம் 'மேய்வான்'. பல நேரம் கல்லெறி வாங்கி ஓடி வருவான்.

'எங்கே போனான், என்ன செய்தான்' என்று சொல்ல மாட்டான். காட்டிக் கொள்ள மாட்டான். இவளுக்குத்

தெரியும். இவளும் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ள மாட்டாள்.

அந்தச் சேட்டைகளை - தினவுகளை - காமத் திமிரை இவளிடம் காட்டியதில்லை. இவளை சின்னஞ்சிறுமியாகவே நினைத்து, பொருட்படுத்தியதில்லை.

இந்த மூணுமாசமாக இவன் பார்வையே சரியில்லை. கண்ணில் வழிகிற காமம். வெள்ளையனின் மனம், கரிய இருளாகி வருகிறது. 'குர்ர்ர், குர்ர்ர்'ரென்று விடாத பார்வைத் துரத்தல். இதோ... இன்னைக்கு விரல் விஷமம்...

மூணு மாசத்துக்கு முந்தி... ஆத்துப் பாலம் பக்கம் வெட்ட வெளித் தரிசில் வெள்ளாடுகளும், செம்மறிகளும் மேய்ந்தன. ஒரு செம்மறியின் காலில் முள் விளார் குத்தி இழுபட்டது.

''பூச்சி... அந்த முள்ளைப் பிடுங்கி விடு.'' ஒருச்சாயலாக ஊன்றிய கம்பில் கட்கத்தைப் போட்டு, மொத்த உடல் பாரத்தையும் அதில் இறக்கி நின்றுகொண்டிருந்த வெள்ளையனின் கனிவான குரல், குழைவான தொனி.

போனாள். அந்தச் செம்மறியைக் காலைப் பிடித்து நிறுத்தி, இவளும் உட்கார்ந்து முள்ளைப் பிடுங்க யத்தனிக்கிற போது,

முதுகில் வந்து இன்னொரு செம்மறி.

அதன் நாசிக்குள் நுழைந்த ஈயின் கூச்சம் தாளாமல், செருமிய செருமலில், இவளது சட்டை முதுகெல்லாம் மூக்குச்சளி. அதே சமயத்தில் முள் பிடுங்கிய செம்மறியும் தும்மித் தலையாட்ட, சட்டையின் முன்பக்கம் ஆட்டுச்சளி.

அவள் அசிங்கப்படவில்லை. ஆனாலும் சளியைக் கழுவணுமே.

கேலியாக சிரித்த வெள்ளையன்,

"ரெண்டு நாய்களும் தும்மியிருச்சா? முன்னும், பின்னும் சளியா? அய்யய்யே... சரி... பாலத்துக்கு அடியிலே பாறைக் குழியிலே தண்ணி கிடக்கும். சட்டையை கழுவிட்டு வா..."

"ஆட்டைப் பார்த்துக்கிட்டு... இங்கேயே இருக்கணும்."

"நா வந்து... ஒன்னைப் பாத்து என்ன செய்யப் போறேன்? போய்ட்டு வா... சின்ன நாயி... வெருசா வந்து சேரு."

வேலிமுள் குவியலைத் தாண்டி, பாலத்துக்கு அடியில் இறங்கினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். வெயிலைத் தவிர வேறொரு சுடு குஞ்சுகூட இல்லை.

சட்டை பட்டனை கழற்றினாள். உள்ளே பார்த்தாள். உள்ளாடை சற்று பெரிது. இறக்கமாக இருந்தது. மார்பை மறைக்காமல் இருந்தது. அம்புட்டு இறக்கம்.

எச்சரிக்கை உணர்வில் மறுபடியும் ஒரு பருந்துப் பார்வை. மிச்ச பட்டனைக் கழற்றினாள். கட்டம் போட்ட அய்யா சட்டை. பாறையின் குழித்தண்ணீரில் நனைத்தாள். அகல மறுக்கிற சளிப் பிசுபிசுப்பு. வெயில் பார்க்காத மார்பக முழுமை வெயிலைப் பார்க்கிறது. வெயிலை மிஞ்சுகிற தங்கத் தகதகப்பு. குழிக்குள் இறங்கி மொத்தமும் முங்கியெழுந்தாள். வெயில் சூட்டில் தண்ணீர் வெதுவெதுப்பாகியிருந்தது. சட்டையை மட்டும் நன்றாக அலசிப் பிழிந்து... உதறி... ஈரச் சொட்டடிக்கிற தேகத்தில் மாட்டிக் கொண்டாள். மேடேறிப் பார்த்தால்-

பாலத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வெள்ளையன், குற்ற உணர்வில்லாத வியப்புச் சிரிப்பு.

"அட...! குட்டி நாயின்னு நெனைச்சுக்கிட்டிருக்கேன்... நீ என்னடான்னா... முழுத்த கொமரியாயிட்டியே... சூப்பராயிருக்கீயே..."

அவனை வெறுப்புடன் ஓரப் பார்வையால் வெட்டினாள்.

"பிஞ்சுன்னு நெனைக்க... நீ என்னடான்னா... பழுத்துக் கனிஞ்ச மாம்பழமாயிட்டியே..." அன்றிலிருந்து வெள்ளையனின் கரிய மனமாற்றம், இருளான குணமாற்றம். கொம்பு முளைத்த செம்மறிக்கிடாயின் காமக் கனைப்பு.

என்னைக்கு வெளிப்படையா வாரானோ...? 'வந்து, படுடி' என்பானோ? உரிமையோட சூறையாடுவானோ? மாம்பழங்களைக் கடித்துத் தின்ன வருவானோ?

அவளுக்குள் நினைவுச் சரடுகள். பயமோ, நடுக்கமோ... பதற்றமோ... படபடப்போ இல்லாத வெற்று நினைவுகள். தெளிந்த மனசின் துணிவான நினைவு.

'எப்படிச் சமாளிக்க? என்ன மாதிரி தப்பிக்க? பொட்டச்சின்னா மட்டம்... பொண்ணுன்னா பூ'ன்னு அலட்சியமா நசுக்க நெனைக்குற வெள்ளையன் கிட்டேயிருந்து எப்படி மீள்றது?' காரியார்த்தமாக யோசிக்கிற பூச்சி. கலங்காமல், அஞ்சாமல் நிதானமாக யோசிக்கிற அவள்.

வெயில் உக்கிரமாகிறது. உச்சி மதியத்துக்கு வந்துவிட்ட பொழுது. மேய்கிற வெள்ளாடுகளைப் பார்க்கிறாள். செம்மறிகளையும் கவனிக்கிறாள். காமக் கனைப்போடு செம்மறியைத் துரத்துகிற கிடாயி. அதன் திருகுக் கொம்பு.

"கொம்பு மொளைச்சிருந்தா... ஒடிச்சிருவீயா?"

காதோரத்தில் கேட்கிற வெள்ளையனின் கோபக்குரல். சட்டென்று திரும்புகிற பூச்சி. தோளில் நாடி உரசுகிற அண்மை. அவனது வெப்ப மூச்சு செவி மடலில் சுடுகிறது.

"பயந்துட்டியா?"

"என்னத்துக்குப் பயப்படணும்? சிங்கமா, கரடியா? கடிச்சி முழுங்கிர முடியுமா?"

"ஆம்பளை நா, நெனைச்சா... கடிச்சுப் பார்க்க முடியாதா? பொட்டச்சியாலே ஆம்பளைய மீற முடியுமா?"

"பொட்டச்சி சம்மதமில்லாம, பொடி ரோமத்தைக்கூட தொட்டுர முடியாது. தெரியுமா?"

தோளில் கை வைத்தான். அழுத்தினான். தோளைப் பற்றிய வேகத்தில் சுழற்றி இழுத்தான். நெஞ்சில் மோதிச் சாய்ந்த அவளை அப்படியே இறுக்கினான்.

"பூ மாதிரி பொண்ணு. ஆம்பளை நெனைச்சு அமுக்குனா... தப்பிச்சிட முடியுமா? பொட்டச்சின்னா... அடங்கித்தானே ஆகணும்? ஆம்பளைன்னா மேலேதான்... பொம்பளைன்னா கீழ்தான். தெரியுமா? காலங்காலமா கதை இதுதானே?"

அவளது நடு முதுகில் அவனது வலது கையின் மூர்க்க இறுக்கம்.

மிரட்டலான குரலில், "வுட்ருங்க... வுட்ருங்க... ஞாயமில்லே, ஒங்களுக்கு நல்லதுல்லே," என்கிறாள். அவளது அச்சுறுத்தும் குரலின் தொனி, அவனைச் சீண்டுகிறது.

அவள் கண்ணில் கலக்கமில்லை. நடுக்கமில்லை. பதைப்போ... மிரட்சியோயில்லை. பயமற்ற அவளது முகம், அவனது ஆண் கர்வத்தை சீண்டியது. அவனை வெறி கொள்ள வைத்தது.

'பொட்டச்சின்னா... தாழ்த்திதான்' என்று அவளை உணர வைக்க வேண்டும் என்கிறவன் வெறி.

அவளது உடல் சூடு தருகிற உன்மத்தம். ஆணாதிக்கத் திமிரோடு சேர்ந்து கொண்ட காம மூர்க்கம்.

"என்னடி, நல்லதுல்லே? அத்துவானக் காடு. ஊருணிக் கிடங்கு. கொலை நடந்தாலும் வெளியே தெரியாத மறைவு. இங்க... அப்படியே பூப்பந்தா ஒன்னைத் தூக்கி... மலர்த்திப் போட்டு... நாசக்காடு பண்ணுனா... ஒன்னாலே என்ன செஞ்சுர முடியும்?"

இறுக்குகிற அவன். திமிறுகிற அவள். மூச்சுத் திணறுகிறது.

"நா என்னைக் காப்பாத்திக்கிட முடியும். ஆனா உங்க ஜென்மம் நரகமாயிரும்."

திணறலிலும் அச்சுறுத்துகிற அவள். அது அவனை மேலும் வெறியேற்ற...

பூப்போட்ட பாவாடையை... நாடாவை உருவி நழுவ விட்டான், இடது கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு வலது கையால் அவளது மேல் சட்டையை மேல் நோக்கி உயர்த்தினான். திமிறி மீறுகிற அவளது முகத்தை எச்சிலாக்குகிற அவனது முரட்டு யத்தனிப்பு.

முழுமையாகிவிட்ட அவனது ஆக்ரமிப்பு. மீளமுடியாத முற்றுகைக்குள் நிர்வாணமாகிற தேகம். அவளுள் ரௌத்ரம். பொங்கிச் சீறுகிற மனத்தீ. பத்ரகாளியாக ருத்ரமாகிற உக்கிரம். பரபரப்பாகிற பூச்சி.

அவளது இடது கை உயிர்த் தலத்தை அழுத்தமாகப் பற்றியது.

உச்சந்தலையில் உலக்கையடி வாங்கிய பன்றியைப்போல துடித்தான் வெள்ளையன்.

"ஐயோ..." என்று கத்தக்கூட முடியாமல், அப்படியே உள் மடங்காக குன்றிக் குனிந்த அவன்.

தரையில் உட்கார்ந்து சுருண்ட அவனால், உட்காரவும் முடியாமல், சரிந்து துடிக்கிற அவனை எரிக்கிற சூரிய வெயில்.

தரையில் கிடந்த பாவாடையை உயர்த்தி இடுப்பில் கட்டிக் கொள்கிற பூச்சி, புழுவைப் பார்ப்பதுபோல அவனது துடிப்பையும், கதறலையும் கேட்கிற அவள்.

பத்ரகாளியாக - ருத்ரகாளியாக - கற்காலத்து தாய்வழிச் சமூக ஆதிப் பெண்ணாக கனன்ற நிலையில் நகர்கிற பூச்சியை... காதுகள் விடைக்கப் பார்க்கிற வெள்ளாடுகள்.

- **கோகுலம் கதிர், ஜனவரி, 2009**

2. கோணல் கம்பு

பங்குனி மாசத்து உச்சிவெயிலையே வெறிக்கிற செல்லாண்டிக்குள், ஆவுடை பேசிய சொற்களின் தீக்கங்கான தகிப்பு. அவள் சொன்னதாக இவன் கேள்விப்பட்ட வார்த்தைகள். பாம்பெனச் சீறிச்சினந்த முகத்தீவிரம் எல்லாமே தீயலைகளாக குப்குப்பெனச் சீறுகிறது.

வெட்டவெளிப் பொட்டல்தரிசில் பச்சைப்புல்லை 'பறிச், பறிச்' சென்று கடித்துக் கடித்து மேய்கிற செம்மறியாடுகள். ஓட்டைக் காது, முதுகில் உட்கார்ந்திருக்கிற கரிச்சானைப் பொருட்படுத்தாமல் பச்சைப்புல்லைப் பாய்ந்து பாய்ந்து பிடித்து மாட்டுகின்றது. கன்னக்கதுப்பில் காந்தலெடுக்கிற உச்சிவெயிலின் தகிப்பு. மனசுக்குள்ளும்.

பொட்டைச் சிறுக்கிக்கு அம்புட்டுத் திமிரா என்று நினைக்க நினைக்க உள்ளுக்குள் திகுதிகுவென்று எரிகிறது.

காயடிக்காத கிடாயின் காமக்கனைப்பு, மேய்ச்சலில் குறியாக இருக்கிற செம்மறிகளை விரட்டி விரட்டி அச்சிலாத்திப் படுத்துகிற அதன் காமச் சேட்டை.

கால் கட்டைவிரலால் ஒரு கல்லெடுத்து கைக்குக் கொண்டுவந்த கணக்கில் கல்லுக்கு ரெக்கை முளைத்து 'விர்ர்' ரென்று இரைந்தது. கிடாயின் முறுக்கி நின்ற கொம்பில் போய் சட்டேரென்று பட்டுத் தெறித்தது கல்.

ஆவுடை இன்ன மாதிரிப் பேசினாள் என்று காதில் செய்தி கேள்விப்பட்ட நேற்றிலிருந்து அலைபாய்கிற கொதி மனசு.

ராத்திரி பூராவும் ஒறக்கம் கண்ணில் ஒட்டவேயில்லை. சாமத்து ஆந்தைகள் அலறுகிற சத்தம், பனந்தோப்பு, மயில் கத்தல் எல்லாவற்றையும் உறங்காமல் கேட்டுக்கொண்டிருந்தான்.

பத்து மணிக்குமேல்தான் தொழுவத்துப் படலைத் திறந்தான் செல்லாண்டி. மாறி மாறிப் பெய்த மூத்திரமும், போட்ட சாணமும் ஈரத்தரையை சகதியாக்கியிருந்தது. இளம் பச்சை நிறத்திலான சகதி. படுத்துறங்கி எழுந்த செம்மறிகளின் உதிர்ந்த ரோமங்கள்.

மூத்திரமும் சாணியும் கலந்த அந்த வாசம், செல்லாண்டிக்கு ரொம்பப் பிடிக்கும். கமகமவென்று மணக்கிற அந்த வாசத்தை தம் பிடித்து மூச்சிழுத்து உள்வாங்கி ரசிப்பான். இன்றைக்கு இருக்கிற மனக்கொதிப்பில் அதெல்லாம் தோன்றவில்லை.

எரிச்சலில் படாரென்று திறந்த படல் கதவு. 'நாமுந்தி நீ முந்தி' என்று முண்டியடித்து வெளியேறிய செம்மறிகளின் ஆவல். அதன் கண்ணில் மனத்துள்ளல். பச்சைப் புல்லைத் தேடுகிற உயிர்ப் பசி.

கூட்டுக்கனைப்புகளும், செருமல் சத்தங்களும் காற்றில்லா வெயிலை நிறைத்தது. தலைக்குலுக்கல்களில் உதறிச் சிதறுகிற மூக்குச்சளி, புழுதிமண்டலத்தில் தெறிக்கிறது. முட்டல்கள், மோதல்கள், தள்ளுமுல்லுகள், ஒன்றின் வயிறை ஒன்று இடிக்க, வெளியேறத் துடிக்கிற ஆடுகள்.

ஆட்டுக்கம்பைத் தூக்கிக்கொண்ட செல்லாண்டி. மஞ்சணத்திக் கம்பு. இவனே தேடித் தேடிக் கண்டுபிடித்து, வெட்டியது. துரட்டியால் சீவிச் சீவித் தோலுரித்து

உள்ளிருக்கும் மெல்லிய தோலையும் செதுக்கி வழித்து வெள்ளை வெளேரென்று வழுவழுப்பாக்கியது. சற்றே கோணல்கம்பு. ஆனால் வலுவானது.

கொழைகட்டுவதற்கான நூல்கயிறை பெல்ட் மாதிரி இடுப்பில் கட்டியிருக்க, அதில் தொங்குகிற ரெண்டுலிட்டர் தண்ணிப் பாட்டிலும், சோற்றுத் தூக்குச் சட்டியும்.

தெருவை நிறைத்த ஆடுகள் அததுக்கு விருப்பப்பட்ட திசைகளில் நகர, சிலதுகள் கூளப்படப்பில் உரசின. சிலதுகள் தித்திச் செடிகள், குருவிக்காய்ச் செடிகளைக் கடித்தன. சிலதுகள் வெளிப்பானைத் தண்ணீரில் வாய்வைத்தன.

ஆவுடையின் மீதான ஆங்காரத்தையெல்லாம் கூட்டிச் சேர்த்து... 'ஆய்ய்ய்க் ஆய்ய்ய்'யென்று காட்டமாக கூவல்காடு போடுகிற செல்லாண்டி.

ஓட்டமும் நடையுமாக அங்கிட்டும் இங்கிட்டுமாக ஓடித் தவிக்கிற அவன். வசவுகளும் கோப வெடிப்புகளுமாகத் தெறிக்கிற செல்லாண்டி.

"ஏய்ய்க், ஓட்டைக்காது. ஒழுங்கா இங்கிட்டு வாரீயா? இல்லே... கல்லெறி வாங்கிச் சாகப் போறீயா?"

"ஏய் வவுத்து வெள்ளை, ஒனக்கு அங்கிட்டு என்ன ஜோலி."

"அடக், கிழிஞ்ச வாலு, மறிகளோட அணைஞ்சு நில்லு."

கையை ஓங்குவதும், கம்பை வீசுவதும், கல்லெறிவதுமாக சத்தக்காடுபோட்டு எல்லா மறிகளையும் ஒரே மந்தையாக்கி, வண்டிப்பாதை வரம்புக்குள் நெறிப்படுத்தி நடக்க வைப்பதற்குள் உயிர் அ(று)ந்து போகிறது.

காலை வெயிலில் எழுகிற தெருப்புழுதி மண்டலம், ஆடுகளின் வெக்கை மூச்சுகளால் நிரம்பி, கண்ணாடித் திரையாகிறது.

ஆடுகள், ஊரெல்லை தாண்டிவிட்டன.

"என்ன கோணாண்டி, இன்னிக்கு எங்குட்டு? சாமிநாத புரத்துக் காடா, ஆத்துப்பாலமா?"

"ஆத்துப்பாலம் பக்கந்தான்."

செல்லாண்டி என்கிற அம்மா வைத்த பெயர், இப்ப கோணாண்டியாகிவிட்டது. ஆடு மேய்த்து மேய்த்து கோணல் காலாகிப் போனதால் வந்து அப்பிக் கொண்ட பட்டப்பெயர்.

ஆட்டுக்கம்பை ஒருச்சாயலாக ஊன்றி, இடது கட்கத்தை அதன்மேல் போட்டு காலை மடித்து நின்ற வாக்கில், உடல் பாரம் முழுவதையும் அதன் மேல் சாய்த்திருக்கிற செல்லாண்டி, குனிந்து காலைப் பார்த்தான். முழங்கால் முட்டியின் உள் வளைசலான புடைப்புகளால் கோணலாகி விட்ட அலங்கோலம்.

"அதனாலேதான்... ஆவுடை அப்புடிப் பேசிட்டாளோ. பொட்டைச் சிறுக்கி எம்புட்டு எடுத்தெறிஞ்சு பேசியிருக்கா? நம்மளை எம்புட்டு எளப்பமா நெனைச்சிருக்கா?"

வெட்டவெளித் தரிசில் மேய்கிற ஆடுகள், மஞ்சணத்தி மரத்தின் நிழலில் அவன். ஒன்றிரண்டு கரிச்சான்களும் மைனாக்களும் குதித்துக் குதித்து கும்மாளிக்கின்றன. ஆடுகளின் செருமல்களில் சிதறுகிற சளியில் கிடக்கிற புழுக்களை மேய்வதில் அதன் உல்லாசம்.

அவனுக்குள் வந்து போகிற ஆவுடையின் முகச் சீற்றம். தீக்கங்குகளின் சொற்கள். 'அவளை என்னமாச்சும் செய்யணும்' என்கிற மூர்க்க வன்மம், ஜெம்மத்துக்கும் தீராத தலைகுனிவா கேவலப்படுத்தணும்... அசிங்கப்படுத்தணும் என்கிற உன்மத்தம்.

முத்தையாக்கோனார் வீட்டிலேயே 'பதிவாக' கூலி வேலை பார்த்து, கஞ்சித் தண்ணி குடித்த ஆத்தா முனியம்மா சாகிறபோது செல்லாண்டிக்கு வயசு, ஆறு. இவன் பிறந்த மூணாவது மாசமே போய்ச் சேர்ந்து விட்ட அப்பன்.

ஆட்டுத் தொழுவத்தில்தான் நாதியற்றுப் படுத்திருப்பான். ஆட்டின் கால்குளம்பு மிதிபட்டுத்தான் கண்விழிப்பான். கோனார் வீட்டம்மா எப்பவாச்சும் ஊத்துகிற கஞ்சி, இவனும் எட்டு வயசிலேயே கம்பு தூக்கிவிட்டான். ரெண்டு மூன்று வெள்ளாடுகளையும், கிடாய்களையும்தான் முதலில் மேய்த்தான்.

இப்பவும்... கோனார் வீட்டுக் கஞ்சிதான். தொழுவத்தில்தான் படுக்கை. கயிற்றுக் கட்டில், ஒரு கந்தல் கம்பளி.

அன்புக்கு ஏங்குவான். பாசத்துக்கும் பரிவுக்கும் தவிப்பான். "என்ன மொகம் வாடியிருக்கே" என்று கேட்க ஓர் உயிரில்லையே என்று ஏங்கிச் சாவான். என்ன செய்ய? பாலை. அன்பில்லா அனல் பாலையே வாழ்க்கை. பாசமோ, பரிவோ, ஈரமோ தட்டுப்படாத பாலைத் தகிப்பு.

ஆட்டுக்குப் பின்னால் காலம் பூராவையும் கரைத்ததால் ஆட்டுக் கம்பின் பலத்திலே நின்று நின்று வேரடித்ததால் காலே வளைந்து விட்டது. ரெண்டு முழங்கால் மூட்டுகளும்

உள் பக்கமாகப் புடைத்து, ஒன்றையொன்று உரசும். இடமும் வலமுமாக பாதங்கள் அகலித்து விரியும்.

'கோணாண்டி, கோணாண்டி' என்று எல்லாரும் ஏளனமாய்ப் பேசுவார்கள்.

கோணல் கம்பு, கோணல் தலையெழுத்து, காலும் கோணல்.

தூரத்தில் ஆள் வந்தால், முகத்தை முதலில் பார்க்க மாட்டான். காலையும் நடையையும்தான் பார்ப்பான். மனசுக்குள் ஏங்குவான்.

"குடுத்து வைச்ச புண்ணியாளன்க. காலு ரெண்டும் நேரா நெடு, நெடுன்னு இருக்கு. சிங்கம் கணக்கா நடக்கான். நமக்கும் பாரு காலை."

அவனே அவனை இகழ்வாக எண்ணி எண்ணி வந்த ஒரு தாழ்மை உணர்ச்சி.

"கோணக்காலு உள்ள பயலுக்கு ஒருத்தரும் பொண்ணு தர மாட்டாக" என்று எகத்தாளமாகப் பேசி நையாண்டிச் சிரிப்பு சிரிப்பார்கள்.

"பொண்ணு குடுத்துட்டாலும் வைச்சு சாமிதான் கும்புட முடியும். குடும்பமா நடத்திர முடியும்?" என்று வேறு கூத்தடித்து கும்மாளம் போடுவார்கள். இவனுக்கு நம்பிக்கையின் ஆணி வேர் அறுபடும்.

இப்படிப் பேசுவதைக் கேட்டுக்கேட்டு அதையே நிஜமென நம்பி, கல்யாணமே வேண்டாமென்று வெறும் வாழ்க்கை வாழ்ந்து செத்த சங்கரலிங்கம் போன்றவர்கள் கதைகளும் உண்டு.

ஆள் செல்வாக்கு இருந்து கல்யாணமே நடத்தி விட்டாலும் ''கோணக்காலு பயலோட எப்படி குடும்பம் நடத்தி குப்பை கொட்டுறது'' என்று நினைத்து கிட்டவே அண்டவிடாமல் தாம்பத்யத்தையே கிழித்து நாசம் பண்ணிக் கொண்ட பெண்களும் உண்டு.

கிராமத்தில் ஆடு மேய்க்கிற பலருக்கும் கோணல்காலாகி விடுவதும் உண்டு ஆகாமலிருப்பதும் உண்டு.

முத்தையா கோனாருக்கு கோணல் கால்தான். ரெண்டு பெண்கள் அவருக்கு. அதுகளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து பேரன் பேத்திகளைப் பார்த்துவிட்டார்.

''நாதியத்த நம்ம பயலுக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்கலாமே'' என்று பாசத்தோடு நினைத்தார். ஒவ்வொரு பெண்ணாக யோசித்தார். கூலி வேலை பார்த்து, கஞ்சி குடிக்கிற மூக்கம்மா மகள் ஆவுடையை மனசுக்குள் குறித்தார்.

''நம்ம பய நாதியத்த அனாதைப்பய. அவளோ மூக்குத்திக்கும் வழியில்லாத ஏழைப்புள்ளே. நாதியத்தவனையும், ஏதுமத்தவளையும் ஒண்ணு சேர்த்துட்டா எல்லாம் உள்ளவுகளாயிருவாக'' என்று முணுமுணுப்போடு யோசித்தார்... சட்டென்று துரிதப்பட்டார்.

மாரிக்காளையை ஏவி விட்டார். ''மூக்கம்மாகிட்டே போயிப் பேசு. முத்தையாக் கோனாரு அனுப்பி வைச்சதாக சொல்லு.''

அவன் திரும்பி வந்து பதில் சொல்கிறபோது முத்தையாக் கோனார் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து மீசையை நீவிக் கொண்டிருந்தார்.

செல்லாண்டி வீட்டுக்குள் மறைவில் குத்துக் கால் வைத்து உட்கார்ந்து, கஞ்சி குடித்தான்.

"என்னப்பா? போன காரியம் காயா - பழமா?"

"காய்தான்."

"என்னவாம்?"

"அவனுக்கு வாழ்க்கைப்படுறதைவுட பாழுங்கெணத்துலே வுழுந்து மாண்டுரலாம்னு ஆவுடை சீறிப் பாய்றா."

"ஏனாம்?"

"வாக்கப்பட்டு வந்தவளை வைச்சு பூசைபண்ணுவானா? கோணக்காலை வைச்சுக்கிட்டு அவனாலே என்ன முடியும்? என்ன தெரியும்? ஆம்பளையா பெறந்தா போதுமான்னு சீறு சீறுன்னு பாம்பு கணக்கா சீறுதா."

கவலையும் சோகமுமான யோசிப்புகளுடன் முழங்காலைத் தடவுகிற அவர் முகத்தில், அவமானப்பட்ட மனசின் வலி. முகவாட்டம்.

இவன் பெயர் சொல்லாவிட்டாலும் இவனுக்குப் புரிந்து போயிற்று. ஆவுடையின் ஒவ்வொரு சொல்லும் அரிவாள் வெட்டுகளாக விழுந்தன.

ஒரு பெண்ணின் நிராகரிப்பே, அரிவாள் வெட்டுத்தான். அதுவும் இப்படி எடுத்தெறிந்து பேசி, இழிவுச் சொற்களுடன் நிராகரிப்பதென்பது உயிரின் குருதியில் விழுகிற அரிவாள் வெட்டு மாதிரி.

ஆவுடையின் வார்த்தைகள், ஏகப்பட்ட அரிவாள்களாக அவனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

இதோ வெட்ட வெளிச்சத்தில் விரிகிற வெயிலையும் மேய்கிற ஆடுகளையும் வெறிக்கிற கண்கள். ஆவுடையின் சொற்களையே நினைக்கிற மனசு.

“ஏய்க் கருங்காலு. எங்குட்டுப் போறே?”

அவனிடமிருந்து சிறகு முளைத்து ‘விர்ரெ’ன்று இரைச்சலோடு பறக்கிற கல். காது, வெள்ளைக்கு ஒரு வசவு. ‘ஒடைஞ்ச மூக்கு’க்கு ஒரு கல் சீறல், ‘வால் செவலை’க்கு ஒரு கல் பாய்ச்சல்.

எல்லாமே அனிச்சைச் செயலாக, அவன் மனசுக்குள் தீ நாக்குகள் பற்றிப் படர்ந்து தொற்றி உயர்கிற நினைவுத் தீ.

“ஆம்பளையா பொறந்தா போதுமா?” ஆவுடையின் கருத்த முகம், சீறிச் சினந்து துடிக்கிற உதடுகளின்சுழிப்பு, கோபத்தில் முகவிறைப்பு. கண்களின் விரிவு. தகிக்கும் பார்வை. விடைத்தெழும் நாசி நுனி.

செல்லாண்டிக்கு அவள் மேல் எப்பவும் ஓர் ‘இது’ உண்டு. ஆடுகளை மேய்த்து, கருங்கல் கிடங்குத் தண்ணீரில் போட்டெடுத்து, தாழ்வாரப்படலில் அடைத்து, குட்டிகளுக்கு கொழை கட்டி முடிக்கிறபோது, மணி எட்டாகிவிடும். குளிப்பும், கஞ்சியும் முடிந்து தலைநிறைய குளுகுளுவென்று தேங்காயெண்ணெய் தேய்த்து, மினுமினுப்பாகி, ஆவுடையின் கூரைக் குடிசையை ரெண்டு மூணு ரவுண்டடிப்பான்.

முற்றத்து வெளிச்சத்தில் சட்டிபானை கழுவ, விறகு அள்ள என்று வருகிற ஆவுடையை வைத்த கண் எடுக்காமல் பார்ப்பான், பார்ப்பான்... அப்படிப் பார்ப்பான். பார்க்கிற பார்வையில் மன உக்கிரம்.

அவளது வட்ட முகம். ஒட்டிவைத்த ஓவியமாக கச்சிதமான உதடுகள். கண்ணில் மின்னல். இவனுள் ஓர் ஈர்ப்பு, கிறுகிறுப்பு. மன மயக்கம்.

"ஏய்... ஆவுடை."

"என்ன சவுண்டு ஏறுது?"

"ஆட்டுக்குப் போகணும்லே?"

"அதுக்கு?"

"பொழுதாவுதுலே? கஞ்சியை ஊத்து."

"ஒனக்குப் புடிக்குமேன்னு வாளைக்கருவாடு வதக்குதேன். காலைக் கையை கழுவு."

"கருவாடா? அடி சக்கை."

இப்படி ஒன்றல்ல. பலநூறு சம்பவங்கள். அவனுக்குள்ளேயே அவளுடன் குடும்பம் நடத்தியிருக்கிறான். வெவ்வேறு விதமான நிகழ்வுகள், நினைவுகள், நினைவின் மயக்கத்தில் சொருகிக் கொள்கிற மனக்கண்ணின் இமைகள்.

உயிருக்குள் ஆணி வேரடித்திருந்த ஆத்ம நினைவுகள் மீதுதான், காறித் துப்பியிருக்கிறாள் ஆவுடை.

"அவனால் என்ன முடியும்? என்ன தெரியும்?"

அவனது ஆண்மையையும் ஆன்மாவையும் துடிக்க வைத்து வதைக்கிற வார்த்தைகள்.

கம்பை ஊன்றிய நிலையில் குனிந்து தனது முழங்கால் மூட்டுகளைப் பார்த்தான். இடமாகவும் வலமாகவும் நடையை அகலிக்கிற மூட்டுகளின் உள்வளைவு உரசல்.

முகம் தெரியாத அம்மாவின் வாசம், நினைவில்கூட இல்லை. நினைவெல்லாம், ஆட்டுமூத்திர வாசம். செம்மறியாடுகளின் உடல் சூடு. ரோமச் சொர சொரப்பு. ஆட்டு ரோமங்களுக்குள் ஒளிந்து பம்மியிருக்கிற உண்ணிகள்.

கோனார் வீட்டுக்கஞ்சி, ஆட்டுக்கம்பு, ஆடுகிற சிறுவால்களின் துள்ளல். ஆதரவற்ற அனாதையாகவே வாழ்ந்த நாட்களின் கசப்பும் கைப்புமாக ருசி. அன்பற்ற பாலையின் வெக்கையே தலைவிதியாகப்போன அவல வாழ்க்கை.

வெயில் எரிக்கிறது. தரிசு நிலத்தில் திரிகிற ஆடுகள். வேலிமரத்து விளார்களில் நிற்கிற கரிச்சான். வேலிமர அடர்த்திக்குள்ளிருந்து ஏக்கமும் சோகமும் ததும்புகிற செம்போத்துப் பறவையின் நீள்கூவல்.

செம்மறிகள் புல்லை ‘பறிச் பறிச்’ சென்று ஆவிஆவிக் கடிக்கின்றன. வாயில் நுரை தள்ள மேய்கிற வேகப் பறப்பு. வால் செவலைக்குப் பக்கத்தில் மேய்கிற வேங்கடம்மாவின் கரிய வெள்ளாடுகள்.

அப்போது செல்லாண்டிக்குப் பதினெட்டு வயது இருக்கும். கருகருவென்று முடிகள் உதட்டுக்கும் மேல். வாலிபத்தின் வாசலை நெஞ்சுக் குழி ரோமம் திறக்கிறது. உடம்பில் ஒரு மினுமினுப்பு. திரேக முறுக்கு.

வேங்கடம்மா ஒரு நாள் கூப்பிட்டாள். வயது முப்பத்தைந்து இருக்கும். கல்யாணமாகி பன்னிரண்டு வருஷமாயிற்று. பிள்ளை பாக்கியமில்லை. முகத்துக்கு

முன்னாலும் பின்னாலும் 'மலடி, மலடி' என்று நீள்கிற குத்தீட்டிகள்.

"யார் மலடு?... பாத்துருவமா?" என்று கேள்வி கேட்க முடியாத குடும்ப நிலைமை. குத்தீட்டிகளின் பாய்ச்சல் உயிரை அதிர வைக்கிறது.

"என்னம்மா?"

"எங்கவூட்டலே ஒரு வெள்ளாடும் ரெண்டு கிடாய்களும் நிக்குது. எங்களாலே இரைபாத்து சமாளிக்க முடியலே..."

"அதுக்கு நான் என்ன செய்ய?"

"ஒன்னோட ஆடுகளோட பத்திட்டுப்போ. ஆடுகளோட ஆடா மேயட்டும். சாயங்காலம் வர்ரப்ப, எங்க உருப்படிகளை எங்கவூட்லே வுட்டுரு."

"ம்... அப்படியா?"

"மாசாமாசம் இம்புட்டுன்னு ஒரு சம்பளம் தந்துருவேன்."

"எங்க மோலாளி சொன்னாச் சரி."

முத்தையா கோனாரிடம் வந்து நின்றாள் வேங்கடம்மா.

"பத்திட்டுப்போடா... குடுக்கற சம்பளத்தை கைச்செலவுக்கு வைச்சுக்கோ."

செல்லாண்டிக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. மனசுக்குள் ஒரே கூத்தாட்டம். கொண்டாட்டம்.

இது ஒரு பொறுப்பு. பாட்டோடு பாடாக இது ஒரு சிறு வேலை. தானும் சிலதுக்கு தேவைப்படுகிறோம் என்கிற தன்னம்பிக்கை தருகிற பொறுப்பு. அவனது அருமை அவனுக்கே புரிகிறது.

ஆடும் கிடாய்களும் பத்தப்போகிற - விடப்போகிற நேரமெல்லாம் - உபசாரம் தூள் பறக்கும். காரச்சேவு கிடைக்கும். சோளத்தோசையும் சட்னியும் கிடைக்கும். உளுந்த வடை கிடைக்கும். மனசுக்கும் வாய்க்கும் ருசி.

'இதென்னடா - மாப்பிள்ளைச் சோறா?' என்று மனசு கிடந்து பரவசப்படும். பூரிப்பு. ஏகக்கொண்டாட்டம். வாழ்வில் பார்த்தறியாத பலகாரம், அனுபவித்தறியாத உபசார மரியாதை, உணர்ந்தறியாத அன்பு, உயிர் குளிர்கிற அன்பு.

சம்பளம் வாங்கப்போன அன்றுதான்... அவள் தன்னையே பந்தி வைக்க... இவனையே பலகாரமாக அவள் வாரிச்சுருட்டி விழுங்கிவிட....

இப்போது-

அந்த அம்மாவுக்கு ரெண்டு பெண் பிள்ளைகள்.

பல்கிப் பெருகி வளர்ந்த வெள்ளாடுகளும் கிடாய்க் குட்டிகளும் அதோ மேய்கின்றன.

இவனுக்குள் வேங்கடம்மாவின் தேக அலைகள்.

தெற்கில் கருத்தூரணிப்பக்கம் ஆடுகளைப் பத்திக் கொண்டு போகிறபோது. எருமைமாடுகளைப் பத்திக்கொண்டு மேய்ச்சலுக்கு வருகிற கண்ணாத்தாளை மேய்ந்த நினைவுகள், திரேகச் சகவாசங்கள்.

தன்னுடன் சேர்ந்து ஆடு மேய்க்க வந்த ஒருசில பெண்களுடன் நிகழ்ந்த மன்மதச் சகவாசங்கள்.

ஆனால், ஆவுடை கேட்கிறாள். 'அவனால் என்ன முடியும், என்ன தெரியும்' என்று.

அவனுக்குள் ஆத்திராவேசம். அப்படியே அவளை 'சப்சப்சப்' பென்று அறையலாமா என்கிற வெறி.

பொழுதுக்காலைப் பார்த்தான். உச்சியிலிருந்து விலகி விட்டது. காலடியில் அரும்பிய நிழல்.

மேய்ச்சல் இடத்தை மாற்றலாமா என்ற யோசிப்பு. 'ஆய்க்... ஆய்ய்ய்க்' என்று ஆடுகளைப் பத்தினான். சிதறி மேய்ந்த செம்மறிகளைக் கல்லால் எறிந்து எறிந்து திரட்டினான். இடப்பெயர்வு நிகழ இருப்பதை உணர்ந்து மூத்திரம் பெய்கிற செம்மறிகள், நின்று புழுக்கைகளைப் போடுகின்றன.

ஆறு என்ற பெயரில் கிடந்த நீள் கிடங்கு. மணலையும் நீரையும் பறி கொடுத்து விட்ட விதவையைப்போல வெறுமையாகக் கிடந்த கிடங்குக்குள், வேலிமரப் புதர்கள். வெட்டுப்பட்டு காய்ந்து கறுத்த முட்குமிகள். நிறைய ஆவரஞ்செடிகளும், வேலி மர நிழல்களில் அருகம்புல்லும்...

கோணல் கம்பால் ஆடுகளின் முதுகில் செல்லத் தட்டுகள் தட்டி அதட்டுகிற செல்லாண்டி.

"ஏய்... கறுத்த மூக்கு, எங்குட்டுப் போறே?"

"ஏய் கிழிஞ்ச காது. உள்ளே போ."

"இந்தா மொட்டை நாக்கு, கல்லெறி வாங்கிச் சாகாதே."

ஆடுகள் ஆற்றுக்குள் இறங்கி அருகம்புல்லை மடக்கிப் பிடித்து கடிக்கின்றன. அதுகளின் ஆவல் பறப்பு, குதூகல மனசு, ஆடுகிற வாலில் தெரிகிறது.

தூரத்தில் வேலிமர அடர்த்திக்குள் ஏதோ சத்த சலனம். ஏதோ வேற்றாள் இருப்பதற்கான அடையாளம். காய்ந்த முள்

விளார்களை உதறி உருவுகிற அரவம். நறுக்குகிற அரிவாள் சத்தம். வீட்டு விறகுக்கு முள் நறுக்குறாகளோ...

“இந்நேரத்துலே யாரு? நடுக்காட்லே... ஆளுல்லாத வனாந்தரத்துலே... அத்துவானக் காட்டுலே. மத்தியானப் பொழுதுலே. யாரு? ஆளரவமத்த மறைப்பான எடத்துலே ஒத்தையிலே யாரு?”

இவனுக்குள் குறுகுறுப்பு. ஆர்வக் குசும்பு.

கைலியை மடித்துக் கட்டினான். கோணல் கம்பும், டயர் செருப்புமாக நடையை எட்டிப் போட்டான். வேலி முள் விளார்கள் கண்ணில் படாதவாறு குனிந்தும், விலகியும் மெல்ல நடக்க.

இடப்பக்கமாகவும் வலப்பக்கமாகவும் அகலித்து விரிகிற கோணல்கால். குதித்துக் குதித்து நடப்பது போன்ற நடை.

‘உச்சி மதியப்பொழுதுலே... வனாந்தரத்துலே வெறகு நறுக்குறதுன்னா... ஏதாச்சும் கெழடுகட்டையாக இருக்குமோ...?’

போய்ப் பார்த்தால், குத்துக்கால் வைத்து உட்கார்ந்து நறுக்கிக்கொண்டிருப்பது ஆவுடை.

இவனுக்குள் ஆவுடையின் சொற்கள். தீக்கங்குளான சொற்கள். இவனது ஆண்மையையும், ஆன்மாவையும் உலுக்கி யெடுத்த அரிவாள் வார்த்தைகள்.

“வாக்கப்பட்டு வந்தவளை வைச்சுப் பூசை பண்ணுவானா?”

இவனுக்குள் வேங்கடம்மாவின் தேக அலைகள். கண்ணாத்தாவின் உடல் சூடு. கோணல் உறவுகளின் தித்திப்பு.

நடையை எட்டிப்போட்டான். மனசின் வெறியும் வன்மமும் அவனைத் திருகுமுறுகலாக்குகிறது. கோணல் புத்தியாகிறது. திகுதிகுவென்று பற்றியெழுந்து உயர்கிற தீ நாக்குகள்.

நீட்டிப் போட்டிருந்த கயிற்றில் நறுக்கப்பட்ட முள் விறகுகள். உட்கார்ந்து நறுக்கிக் கொண்டிருந்த வேலிக் குச்சிகள்.

போய்... 'தக்க்' கென்று நின்றான். ஆட்டுக் கம்பும், கோபப் பார்வையும், வன்ம உக்கிரமுமாக கருப்பண்ணசாமியாக ஆவேசத்தில் நிற்கிற செல்லாண்டி.

அண்ணாந்து பார்க்கிற அவள் கண்ணில் பீதியும் கிலியும். முகமெல்லாம் அச்ச வியர்வை. பயப்படபடப்பு. உதடெல்லாம் உலர்ந்து முகமெல்லாம் கறுத்து, குப்பென்று திரேகமெல்லாம் வியர்த்து.

"மாரிக்காளைகிட்டே என்ன சொன்னே?"

அடிபட்ட சர்ப்பத்தின் சீற்றக்குரல். அவமானப்பட்ட மனக்காயத்தின் வலியால் வந்த அதட்டல்.

"என்ன சொன்னேன்?" குரலில் குழப்பநடுக்கம்.

"என்ன முடியும்? என்ன தெரியும்? வாக்கப்பட்டு வந்தவளை வைச்சு பூசை பண்ணுவானான்னு கேட்டீயாமே?" அதிகாரமும் ஆவேசமான அதட்டல்.

"இப்படியே செந்தூக்கா தூக்கிட்டுப் போயி என்னாலே என்ன முடியும், என்ன தெரியும்னு பூசை பண்ணிக் காட்டட்டா?"

ஆவுடையின் கழுத்து நரம்பில் வழிகிற வியர்வை. குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்ததால், மேல் நோக்கிப் பிதுங்குகிற மார்பகச்சதை, அவனுக்குள் வெறி கொள்கிற உன்மத்தம்.

தினவெடுத்து திமிறுகிற திரேகம். அவமானப்பட்ட மனசின் தினவு.

"என்ன பூசை பண்ணிக் காட்டட்டா?"

அவளது விரிந்த கண்ணில் பய நடுக்கம். அச்சத்தில் அலை பாய்கிற கருவிழிகள். மழையில் நனைந்த கோழிக் குஞ்சாக நடுங்குகிற ஆவுடை. அவள் முகமெல்லாம் திகில்.

காட்டிலேயே அலைந்து காட்டிலேயே பிழைத்து காட்டானாகவே ஆகிப்போன அந்தக் கோணல் குணத்து மனிதனுக்குள்.

ஆவுடையின் நடுங்கிய கண்கள்.

ஒரு நீர்ச்சுனையைக் கசிவெடுக்க வைக்கிறது.

அரிதாக ஊற்றெடுக்கிற அருஞ்சுனை. அன்புச் சுனை.

ஐயோ பாவம் என்றிருக்கிறது. மனசுக்குள் மனைவியாக ஆத்ம பங்காளியாக வாழ்ந்தவள், வாழ்கிறவள், அவனுக்குள் அன்பெனும் அருஞ்சுனையின் குளிர்ப்பரவல்.

"ஏய்.. ஆவுடை. என்ன இப்படி முழிக்கே? நா ஆட்டுக்காரப்பயதான். நாதியத்த நாயி. நாலு நல்ல புத்திமதி சொல்லி ஒழுங்காக்க ஆளுல்லாத அனாதைதான். கொழை களவாண்டு குட்டி வளர்த்த மாதிரி. தட்டாங்காய் பாசிப் பயத்தங்காய் களவாண்டு அவிச்சுத்திங்குறவன்தான். காடேறிக் கழுதைதான். வவுத்துக் கஞ்சிக்கு ஆடு மேச்சு, கோணக்காலானவந்தான். வாழ்க்கையும் கோணலாகணுமா?

எங்க கோனாரு மோலாளிமாதிரி குடும்பம் குட்டின்னு ஆகக்கூடாதா?''

கோபத்தின் குரலில் இறுக்கம், அதிலும் அவனது சோகப் பெருமூச்சு.

''என்னாலே என்ன முடியும், என்ன தெரியும்னு கேட்டலே. காட்டட்டா? இங்கனேயே பூசை பண்ணிக் காட்டட்டா? நா ஒண்ணும் ஏலாதவனில்லே, யோக்கியவானுமில்லே. ஆனா ஒன்னைத் தொடமாட்டேன் ஏந்தெரியுமா?''

கருப்பண்ண சாமியாக ஆகாச மட்டத்துக்கு உயரமாகத் தெரிகிற செல்லாண்டி. அண்ணாந்து பார்க்கிறாள்.

''இப்பவரைக்கும் ஏங்குட்டே சிக்குன பொம்பளைகளை அனுபவிச்சிருக்கேன். அவுக மேலே ஆசையில்லே. பிரியமில்லே. பாசமில்லே. ஆனா... ஒம்மேல எனக்கு ஆசையிருக்கு. பிரியமிருக்கு. உசுருக்கு உசுரா நெனைக்குற அன்பு இருக்கு. அதனாலே, ஒன்னைத் தொட மாட்டேன். சீரழிச்சு வேடிக்கை பார்க்க மாட்டேன். கண்ணுக்குள்ளே முழியா வைச்சு காப்பாத்த நெனைக்குற ஒன்னை, நா எப்புடி வீம்புக்கும் வீராப்புக்கும் நாசமாக்குவேன்?''

விறுவிறுவென்று திரும்பிப் போகிற செல்லாண்டியின் முதுகையே வெறிக்கிற ஆவுடை, இடமும் வலமுமாக கால்கள் அகலித்து நடக்கிற அவனை, முட்டிகள் உரச நடக்கிற அந்தக் கோணல் கால்களை, கோணல் கம்பையே வெறிக்கிற அவள்...

அவளுக்குள் கருப்பண்ணசாமியாய் கம்பீரமாக உயர்கிற அந்தக் கோணல் காலன்.

- உயிர் எழுத்து. ஜூன், 2009

3. புதிருட்டு

அந்தக் கல்யாணப் பத்திரிகையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். கண்ணிமைக்காமல் பார்த்தாள். வெறித்த பார்வை. விலகாத நங்கூரப் பார்வை.

மனசின் பதற்ற அலைகள் விரல் நடுக்கத்தில் தெரிந்தன. கற்பாறையாக கனப்பது போலிருக்கிறது.

''அவ்வண்ணமே கோரும் ஐ. மாரியப்பன்.'' அவர் மகளுக்குத்தான் கல்யாணம். தேதியைத் தேடிப் பார்த்தாள். நாளை மறுநாள் முகூர்த்தம். சிவகாசி கல்யாண மண்டபத்தில் காலை முகூர்த்தம்.

'போய்த்தான் ஆகணுமா?' கற்பாறை கேள்வி.

பத்திரிகையைப் பார்த்தாலே, பணக்கார வீட்டுக் கல்யாணம் என்று தெரிகிறது. கலைநயமான நாலு மடிப்புகள். வண்ண ஜொலிப்புகள். நாலு மடிப்புகளையும் விரித்தால்... பிரம்மாண்டமான அரண்மனை வடிவம்.

...ஒருவாரத்திற்கு முன்பு-

இவளது குடிசை இருக்கிற வீதிக்குள் வருவதற்கு ஒரு சிமிண்டுக் கலர் கார் உறுமி உறுமித் திணறுகிறது. சின்னஞ்சிறு தெரு. வளைந்துத் திரும்ப மறுக்கிற கார்.

வேறு வழியில்லாமல் கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கி வருகிற பெரியவர். பளீர் நீல வெள்ளையில் ஜொலிக்கிற வேட்டி சட்டை. காலில் உயர் ரகச் செருப்பு. விரல்களில் மோதிரங்கள். மறைவில்லாத பணக்கார லட்சணம்.

'கூலிவேலை செய்ஞ்சு வவுறு நனைக்கிற வக்கத்த ஏழைச் சிறுக்கி வீட்டுக்கா... இம்புட்டுப் பெரிய சீமான் வரப்போறாரு?'

சந்தேகமான திகைப்புடன் முற்றத்தில் நிற்கிற முத்து லட்சுமி. காரின் இடைவிடாத உறுமல் சத்தம்கேட்டு, ஈரக் கையை முந்திச் சேலையில் துடைத்துக் கொண்டு, குடிசையை விட்டு வெளியே வந்து நிற்கிற அவள் முகத்தில் குழப்ப இருட்டு. முகமெல்லாம் பூப்போன்ற சிரிப்பின் வெளிச்சம். நிறைந்த கும்பிடு போடுகிற அவர். யார் இது? பார்த்த மாதிரியும் தெரிகிறது. யார் என்றும் தெரியவில்லை.

இவளும் மருட்சியும் குழப்பமுமாக கையெடுத்துக் கும்பிடுகிறாள், யந்திரமாக.

"என்ன... முத்துலட்சுமி, நல்லாயிருக்கீயா?"

"இருக்கேன்யா," அவள் கண்ணில் கேள்விக்குறி.

"ஓம் மாப்ளே வீட்லே இருக்காரா?"

"திருப்பூருக்கு வேலைக்குப்போய், ரெண்டு மாசமாகுது."

"அப்படியா...! ஓம்புள்ளை நல்லாப் படிக்காளா?"

"படிக்காள்...ஐயா, நீ... ங்... க...?"

"என்னை ஒனக்குத் தெரியாது. ஒன்னை எனக்கு நல்லாத் தெரியும். உங்க அய்யா... அம்மா எல்லாரும் தெரியும். உங்க குடும்பமே எங்க தோட்டத்துலே வேலை பாத்துச்சு. விசுவாசமான குடும்பம். நம்பிக்கையான குடும்பம்."

"ம்..."

"எங்க தோட்டம் துரவு எல்லாம் இங்கதான் கெடக்கு. தொழில் தொடங்க செவகாசி போனோம். அங்கயே

செட்டிலாயிட்டோம்... இந்தாம்மா, பத்திரிகை. மகளுக்கு கல்யாணம் வைச்சிருக்கேன். நீ கட்டாயமா வந்துரணும்மா..."

"ஆட்டும் யா... ஆட்டும் யா..." என்று ஆட்டுரல் குளவி மாதிரி தலையை ஆட்டினாள்.

"நீ வராம இருந்துரக் கூடாது. ஒன்னை எதிர்பார்த்து வாசல்லே நிப்பேன். வந்தேயாகணும்மா... நீயும் எனக்கு ஒரு மகள் மாதிரித்தான்..."

"வந்துரணும், வந்துரணும்" என்று திரும்பத் திரும்ப சொன்னார். மருகி மருகிச் சொன்னவிதத்தில், மனசின் கெஞ்சல் தெரிந்தது.

வா என்று உபசரிக்கத் தெரியாத - உட்கார வைப்பதற்கு ஓர் இடமில்லாத - குடிப்பதற்கு எதுவும் வாங்கித் தர வக்கில்லாத இந்த ஏழைச்சிறுக்கியிடம், இம்புட்டுப் பெரிய சீமான் என்னத்துக்கு தேடி வரணும்? எதுக்கு இம்புட்டுச் சிரித்துச் சிரித்து மனப்பாசத்துடன் பேசணும்? உருகி உருகி என்னத்துக்குக் கூப்பிட்டு... கெஞ்சணும்?

அவர் போய்விட்டார். 'வந்துரும்மா வந்துரும்மா,' என்று ஆயிரம் தடவையாவது சொல்லியிருப்பார். காருக்குள் உட்கார்கிறவரை கையசைப்புகள். முகச்சிரிப்புகள். மன வெளிச்ச சிதறல்கள்.

இவளுக்குள் கண்ணைக்கட்டி காட்டில் விட்ட மாதிரியோர் இருட்டு. புரியாத புதிருட்டுகள். மனசையெல்லாம் மருட்டிக் குழப்புகிறமாதிரி முடிச்சுகள்.

இந்த ஏழைச்சிறுக்கிமேல் அம்புட்டுப் பாசமா? அக்கறையா? எனக்கு இத்தனை முக்கியத்துவம் என்னத்துக்கு?

பார்த்த முகமாக இருக்கிறதே... இது யார்?

'நீயும் எனக்கு ஒரு மகள் மாதிரிதான்' என்கிறாரே, அந்தளவுக்கு அன்பும் வாஞ்சையும் கொண்டிருக்கிற இவர் யார்?

முத்துலட்சுமி கையில் அந்த 'அரண்மனை' பத்திரிகை.

நாளைக்கு கல்யாணத்துக்குப் போகணுமா? போகாமலிருந்தால் நன்றாக இருக்குமா? இத்தனை தூரம் 'இறங்கி'வந்து, ஓர் அரண்மனைச் சீமான் மருகி மருகி அழைத்த பிறகும், போகாமல் இருக்கலாமா? அது மனுசத்தன்மையா?

யார், எவர் என்று தெரியாமலேயே... காட்டுகிற பாசத்துக்காக கல்யாணத்திற்குப் போய்விட வேண்டுமா? பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமா?

யார், எவர் என்பது தெரியணுமா? அது ரொம்ப முக்கியமா? பழகுறதுலே, பாசம் காட்டுறதுலே பண்பும் உண்மையும் தெரிந்தால்... போதாதா? அதுதானே, முக்கியம்!

உறவுமுறைக்காகப் பழகுறது பாசமா? அது, ஊரு உலகத்துக்காகப் போடுற வேஷம். பாசத்தோட பழகுறவுக தான்... நிஜமான உறவுக்காரவுக.

டிரங்க் பெட்டியைத் துழாவினாள். அடியில் கிடந்த ஒரு குயர் நோட்டு. இவளது கல்யாணத்தன்று எழுதிய மொய் நோட்டு. பிரித்து தேடினாள். 'சிவகாசி. ஐ. மாரியப்பன்' என்ற பெயருக்கு நேராக 'இரு நூறு' என்று போட்டிருந்தது. அந்த நோட்டிலேயே பெரிய தொகை அதுதான். மற்றதெல்லாம், இருபது, பதினைந்து, பத்துதான். பதினைந்துகள்தான் ஜாஸ்தி.

அவரது பாசம் பொய்யில்லை என்று சொல்லுகிற மொய்யின் கனம். அப்படீன்னா...

அவர் கல்யாணத்துக்கு வந்திருக்கிறார். நேரில் வந்திருக்கிறார். உள்ளுக்குள் குடைகிற யோசனை. மனசின் ஆழத்து சேகரங்களைத் தேடிக் குடைகிற யோசனை. யோசனையை உந்தி உந்தித் தள்ளுகிற மனக்குறுகுறுப்பு.

'ஆ... ங்!' அவளுக்குள் ஒரு மின்னல் கீற்று. பளிச்சென்று வெளிச்சமிட்ட பழைய நினைவு.

... மாலையும் கழுத்துமாக புதுமாப்பிள்ளையுடன் ஒட்டி நிற்கிறாள். தாய் மாமன், சித்தப்பா, பெரியப்பாமார்கள், அத்தைமார்கள், சித்திமார்கள் நெருக்கமான ரத்த பந்தங்கள் திருநீறு பூசுகிறார்கள்.

தட்டில் இருக்கும் திருநீறை அள்ளி, மணமகன் தலையில் தூவி, நெற்றியில் இட்டு, ஒரு கும்பிடு, அப்புறம் இவளுக்கும், அதே மாதிரி கும்பிடு. பதிலுக்கு இவர்களும் கும்பிடு. இவள் வகை உறவுக்காரர்கள் இவள் கைக்குள் அஞ்சோ, பத்தோ ரூபாயைத் திணிப்பார்கள். அவன் வகையினர் அவன் கையில்.

அந்த வைபவம் நடக்கும் வேளையில்- ரத்த பந்தமில்லாமல், யாரென்றும் தெரியாமல் ஒருவர் வந்தார். பெரிய மனிதர். பணக்காரச் சீமான் தோற்றம்.

சிரித்த முகத்தோடு திருநீறை எடுத்து, முதலில் முத்து லெட்சுமி பக்கம் திரும்பினார். அவர் கண்ணில் தளும்பி நின்ற மனக்கண்ணீர். பாசத்தில் துடிக்கும் மனசின் நெகிழ்ச்சி.

இவளுக்கு முதலில் பூசி... இவள் கைக்குள் நூறு ரூபாய் தாளைத் திணித்தார். அவனுக்கும் பூசினார்.

''யப்பா... நீ நல்லாயிருக்கணும். முத்துலட்சுமியைக் கண்ணு கலங்காம... நல்லபடியா காப்பாத்தணும். ரெண்டு பேரும் ஒத்துமையா... சந்தோஷமாயிருக்கணும். பாவம், முத்துலட்சுமி, தாயில்லாம வளர்ந்த புள்ளே. கஷ்டப்பட்ட புள்ளே. இனிமேலாச்சும்... ஒங்கிட்டே அவ சிரிச்ச மொகத்தோட, செழிச்ச வாழ்க்கை வாழணும்.''

''ஆட்டுங்க... நா பாத்துக்கிடுதேன்.''

''முத்துலட்சுமி எம்புள்ளேமாதிரி. இவுக அம்மாவும் அய்யாவும் நல்லவுக. விசுவாசமானவுக. பணிவும், நம்பிக்கையமானவுக. எங்க தோட்டத்துலேதான் இவுக அய்யாவும், அம்மாவும் ரொம்ப வருஷமா பராமரிப்பு வேலை பார்த்தாக. நானும் அவுகளை நல்லா பராமரிச்சுக்குட்டேன். இவுக அம்மா நல்லவா. எம்மேலே ரொம்ப மதிப்பு. மனங்கோணாம நடந்துக்குவா... நானும் ரொம்ப பாசமா இருப்பேன்.''

''அப்படியா... ய்யா?''

முத்துலட்சுமி முகத்தைக் கனிவுடன் பார்த்தார். பார்த்த பார்வையில் நீர் கோர்த்தது. பேசிய குரலில் ஓர் உடைவு தெரிந்தது. நெகிழ்ச்சி இருந்தது.

''நல்லாயிரும்மா.''

போகும்போது, திரும்பித் திரும்பி இவளைப் பார்த்த அதே முகம்தான்.

மாலையும் கழுத்துமாக சந்தனக் கலர் சட்டையும் வேட்டியுமாக பக்கத்தில் உரசிக் கொண்டு நின்ற லட்சுமணன் கூட கேட்டான்.

''யாரு இது? ஒம்மேலே ரொம்பப் பாசமா இருக்காரே...''

"தெரியலே..."

"நெசமான பாசம் இருக்குறதாலேதான் பேசுறப்ப குரல் நெகிழுது. கண்ணுலே தண்ணி வருது. உங்க அம்மா வழிச் சொந்தமா இருக்குமோ...?"

"தெரியலே... நெசமாவே தெரியலே..."

அய்யா அவரிடம் பவ்யமும் மரியாதையுமாக ஒதுங்கி நின்று, உடல் வளைந்து... பணிவும் விசுவாசமுமாகப் பேசியதை கவனித்தாள்.

அதே முகம்... அதே பெரியவர்தான். அதே செல்வச்சீமான் தான். பத்திரிகை கொடுத்து, வீடு தேடி வந்து, 'வந்துரும்மா வந்துரும்மா' என்று கெஞ்சி மருகி விட்டுப் போயிருக்கிறார்.

சிவகாசியில் வாழ்கிற இந்தச் சீமானுக்கு, இங்கே பிறந்து வாழ்கிற கூலிக்காரச் சிறுக்கிமேல் அப்படியென்ன பாசம்? தோட்டங்களைப் பராமரித்த கூலிக்காரக் குடும்பத்தின்மீது அன்பு இருக்கலாம். கருணை இருக்கலாம். பாசம் இருக்குமா? குரல் கலங்குகிற அளவுக்கு - கண்ணில் நீர் வருகிற அளவுக்குப் பாசம் இருக்குமா? நெகிழ்வு இருக்குமா?

இது என்ன சங்கதி? இது என்ன மர்மம்?

முத்துலட்சுமிக்குள் விலகாத அடர் இருட்டு. குழப்பித் திகைக்க வைக்கிற புதிருட்டு. மர்மப் புதிர். அவளுக்குள் புகையாக மண்டுகிற நினைவுகள், உள்ளுக்குள்ளேயே மண்டுகிற குழப்பங்கள்.

சரி...இப்ப கல்யாணத்துக்குப் போகணுமா? போகாம எப்படி இருக்கிறது? நம் கல்யாணத்துக்கு வந்து மொய் செய்திருக்கிறவருக்கு நாம எப்படிப் போகாமலிருப்பது?

செய்த மொய்க்கு கூடுதலாக மொய் செய்தாகணுமே! செய்யாம வுடுறது, கேவலமில்லியா? ஏழு வண்டிக் கேவலம்.

சரி... இப்ப ரூபாய்க்கு எங்க போறது? மொய் முந்நூறு, செலவுக்கு நூறு ஆக நானூறு வேணுமே. திடுதிப்புன்னு அம்புட்டு ரூபாய்க்கு என்ன செய்ய?

இந்த நினைவில் முட்டிக் கொண்ட மனதின் பதற்றம். விரல்களில் நடுக்கம்.

அந்தி வெயில் தங்கத்துகளாகத் தரையில் விழுகிறது. 'திருப்பூர்லே வேலை பார்க்குற லட்சுமணன்கிட்டே கலந்து பேசிக்கிடலாம்.

ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்துக் கொண்டு கடைக்குப் போனாள். பெட்டி போன் இருக்கும். பேசிக் கொள்ளலாம்.

அவன் போகச் சொன்னான். பணத்துக்கும் வழி சொன்னான். "போஸ்டாபிஸ்லே கேளு. நானூறு ரூவா தருவாக. நா ரூவா அனுப்புறப்ப, நானூறை கழிச்சுட்டு வாங்கு."

"தருவாகளா?"

"நா போன் பண்ணிச் சொல்லிருதேன்."

நாளை மறுநாள் காலை முகூர்த்தம். நாளைச் சாயங்காலம் 4 மணி பஸ்ஸுக்குப் போக வேண்டும்.

பாதமும் பாவாடையும் புழுதி அப்பிக்கிடக்க, முகமெல்லாம் வேர்வைக்கோடு நெளிய ஓட்டமாய் ஓடிவந்த மகள் ராசாத்தி.

ஊருக்கு கல்யாணத்துக்குப் போகிற தகவல் தெரிந்தவுடன், ராசாத்திக்கு ஒரே ஆதாளி. குதூகலக்

கும்மாளம். "ஐய்ய்க்... ஐய்ய்க்... நா ஊருக்குப் போறேன்" என்ற உற்சாகக் கூப்பாடு. முகமெல்லாம் சிரிப்பு.

'பஸ்லே போகலாம். மரம் பின்னோக்கி ஓடுவதைப் பார்க்கலாம். புஞ்சைகள் வட்டமடித்து ஓடுவதைக் காணலாம். சிவகாசியைப் பார்க்கலாம். நாலுவகை கூட்டு சாம்பார் பாயசத்தோடு வாய்க்கு ருசியாக சோறு சாப்பிடலாம்.'

அந்தச் சின்னச்சிட்டு சந்தோஷம் தாளாமல் தத்தளிக்கிறது. நிலைகொள்ளாமல் ஓடியாடிப் பாடுகிறது.

ராசாத்தியின் துள்ளல்களையும் உற்சாகக் கூச்சல்களையும் பரிவுடன் பார்க்கிற முத்துலட்சுமிக்குள் கூடு கட்டுகிற சோகம்.

நல்ல சோத்துக்குக்கூட ஆலாய்ப் பறக்கிற சிறு பூச்செண்டு. தனது இல்லாமையைத் தானே உணர்கிற அவலம். 'கதிகெட்ட ஏழைச்சிறுக்கி' என்று நெஞ்சே அறைந்து சொல்லிக் கொள்கிற மனவலி.

நாலுமணி பஸ்ஸுக்கு வந்துவிட்டாள், முத்துலெட்சுமி. பஸ் வருவதற்காகக் காத்திருக்கிறாள். ஓரிடத்தில் நிலை கொள்ளாமல், அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருக்கிற ராசாத்தி. அதில் ஏற... இதில் குதிக்க... இங்கு குதிக்க அங்கு ஓட என்று ஒரே ஆட்டம்.

இருப்பதிலேயே ஒரு நல்ல சேலையைக் கட்டிக் கொண்டாள். கூலிக்காரியாக இருந்தாலும்... ஒரு சீமான் வீட்டுக்கல்யாணத்துக்குப் போகிறாள். கெத்து விடாமல், விட்டுக் கொடுக்காத தன்மானத்துடன் இருக்க வேண்டும். யாரும் ஏளனமாகப் பார்க்கிறதுக்கு இடம் தந்துவிடக் கூடாது.

காலை முகூர்த்தத்துக்கு உடுத்துவதற்கான பட்டுச் சேலையும், ராசாத்திக்கான பாவாடை சட்டையும், பைக்குள் மடித்து வைத்திருக்கிறாள்.

நாலுமணி பஸ் வந்து, வட்டமடித்து நின்றது. வந்த வேகத்தில் எழும்பிய புழுதி மண்டலம் காற்றின் போக்கில் நகர்ந்தது.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பஸ்ஸுக்குள் துள்ளலும் துடிப்புமாக றெக்கை அடிக்கிற ராசாத்தி. ஒவ்வொரு சீட்டாக மாறி மாறி உட்கார்ந்து பார்க்கிற விளையாட்டு.

விளையாடட்டும்... இஷ்டம்போல விளையாடட்டும். காசா, பணமா? மனசுபோல சந்தோஷப்படட்டும்.

கல்யாண மண்டபத்தின் முன் வாசலில் - வண்ணக் கோலத்துக்குப் பக்கத்தில் நின்றார், பெரியவர். சொன்னது மாதிரியே எதிர்பார்த்துக் காத்து நிற்கிறார். சொல்லில் பொய்யில்லை. பாசமும் பொய்யில்லை.

இவளைப் பார்த்து நாலெட்டு முன்னால் வந்து, முகமெல்லாம் பூவாக மலர்ந்து சிரிக்க..." வாம்மா, வாம்மா... ஒனக்காகத்தான் இங்க நிக்கேன்... வந்துட்டே.... நல்லவேளை... எனக்கு, மனசே நெறைஞ்சிருச்சு."

மகிழ்ச்சியின் தத்தளிப்பில் சிறுபிள்ளைமாதிரி சொன்னதையே சொல்லிச் சொல்லி பூரிக்கிறார்.

அரண்மனை மாதிரி பெரிய மண்டபம். ஜேஜே என்று கூட்டம். கழுத்து நிறைய நகைகளுடன் பெண்கள். இவள் கழுத்தைத் தடவிக் கொண்டாள். ஒற்றைச் செயின் கிடக்கிறது.

ஏகப்பட்ட கார்கள். வாகனங்கள் அலங்காரம். கல்யாண களேபரத்தில் அத்தனை மும்முரத்திலும் இவளை அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்கிற மாரியப்பன். விசாரித்துக் கொள்கிற பாச அக்கறை.

"சாப்புடும்மா... நல்லா சாப்புடும்மா..." பந்தியிலும் இவளைத் தேடிக் கண்டுபிடித்து, பார்த்து உபசரிக்கிற பரிவு.

"ஏம்மா... இது ஒம்புள்ளையா? ஒன்னைமாதிரியே அச்சு அசலா இருக்கா... ஒம் மாப்புள்ளே வரல்லியா? எங்க?"

"திருப்பூருக்கு வேலைக்குப் போயிருக்காரு."

"சரி சரி... நீ நம்ம வீட்டுப்புள்ளை மாதிரி. நிச்சயதார்த்தத்துக்கு சீர்வரிசைத் தட்டு தூக்குறப்ப... நீயும் ஒரு தட்டைத் தூக்கிக்கணும். என்ன?"

"ஆட்டும்யா..."

இவள்மீது அவர் காட்டுகிற அக்கறை. அவர் ஓடி ஓடிவந்து உபசரிக்கிற மரியாதை. பாசத்தைப் பொழிகிற பாங்கு.

இவளுக்குள் நெருடிக் கொண்டிருந்த அந்நிய உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறது. அவரது அன்பின் - பாசத்தின் அசல்தன்மையை அவளது ஆழ் மனசு உணர உணர... அவளுக்குள் ஓர் அந்நியோன்யம் அரும்புகிறது. மன ஒட்டுதல்.

அந்நேரம் அங்கே வந்த அவரது மனைவி, கழுத்து நிறைய நகைகள். பட்டுப் புடவையின் சடசடப்பு.

"ஏய்... இங்க வா." அதிகாரத் தொனி.

"என்னங்க.."

"இதுவும் நம்ம வீட்டுப் புள்ளைதான். நம்ம மகா மாதிரி."

"அப்படியா?"

"நிச்சயதார்த்தத்துக்கு சீர்வரிசை தட்டு தூக்குறப்ப... இவா கையிலேயும் ஒரு தட்டு இருக்கணும். நீதான் அதுக்குப் பொறுப்பு." அவரது உத்தரவில் ஒரு கடுமைத் தொனி.

"சரி சரி..." அவளது பார்வையில் ஒரு வித்தியாசம். அவளையும் அவரையும் பார்க்கிற நெருடலான பார்வை.

மாரியப்பனின் பாசமும் அக்கறையும் இவளுக்குள் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. மன நெருக்கம் கொள்கிறது.

'இந்த ஏழைச்சிறுக்கிகிட்டே பாசம் காட்டுகிறதுக்கு இப்படியொரு சீமானா?'

அவளுக்குள் உடைந்து நொறுங்குகிற இறுக்கம். பாசத்தை ருசிப்பதன் - மரியாதையை அனுபவிப்பதின் - பரவசப் பெருக்கு. உள்மனசின் உணர்ச்சி அலைக்கழிப்பு. கண்ணோரங்களில் மனசின் ஈரக் கசிவு.

அந்தக் கணத்திலும்-

அடிமனசில் அந்தப் புதிரிருட்டு. தோட்ட முதலாளியின் அன்புதானா? வெறும் இரக்கம்தானா? அதையும் தாண்டுகிற பாசத்துடிப்புக்கு என்ன காரணம்? என்ன காரணம்?

எல்லாம் முடிந்தது. காலையிலும் உண்டு முடித்து, முகூர்த்தம் முடித்து, நகர்வலம் உடன்போய்... மதிய உணவும் முடித்து கூட்டமாய் மொய்த்து, மொய் செய்கிற இடத்தில் இவளும் நின்று முன்னூற்றி ஒன்று மொய் செய்து... நோட்டில் தன் பெயர் குறிப்பிடுவதைக் கண்காணித்து... திரும்பியவள் கையில் தாம்பூலப்பை.

அவரைத் தேடி... 'போய்ட்டு வாரேன்' என்று சொல்லி விட்டுப் போய் விடலாமே என்று யோசிக்கிற கணத்தில்,

அவளை நோக்கி வருகிற அவரின் கையில், புடைப்பான மஞ்சள் நிறப்பை.

"யம்மா... நீ வந்தது, எனக்கு ரொம்ப ரொம்பப் பெருமை."

"இருக்கட்டும்யா."

"நீ தட்டுத் தூக்கி ஊர்வலத்துலே வந்தே. நீயும் எம் மகா மாதிரித்தான். மகளுக்கான செய்முறையை நா செய்யணும்லே."

"என்னதுய்யா?"

"இந்தாம்மா" என்று ரெண்டு கையாலும் ஏந்தித் தருகிற மஞ்சள் நிறப்பை.

"இதுலே ஒனக்கு புதுச் சீலை. மாப்பிள்ளைக்கு வேட்டி சட்டைத்துணி, சின்னப்புள்ளைக்கு டிரஸ் எல்லாம் இருக்கு. மாட்டேன்னு சொல்லிராம, நீ வாங்கிக்கிட்டாத்தான்... கல்யாணமான புள்ளையை வாழ்த்துற மாதிரி."

குழைந்துகனிந்த பாசச் சொற்களின் கெஞ்சல். அவரது வார்த்தையில், மீற முடியாத ஒரு தளை இருக்கிறது. 'பெற்றுக் கொள்வதே, வாழ்த்துவதாகப் பொருள்' என்கிற வார்த்தை விலங்கு.

"நீங்க இந்த மரியாதை செய்ஞ்சிருந்தா... நா மோதிரம் எடுத்திருக்கணுமே... அப்பத்தானே சரிக்குச் சரியாகும்...?"

"அந்தச் சம்பிரதாயமெல்லாம் நமக்குள்ளே வேண்டாம்மா. தட்டு தூக்கச் சம்மதிச்சமாதிரி, இதையும் தட்டாம நீ வாங்கிக்கணும்" மருகிக் கெஞ்சுகிற அவரது முகக் குழைவு.

சுற்றிலும் ஏழெட்டுப் பேர்கள். இதையே நின்று வேடிக்கை பார்க்கின்றனர். உற்றுக் கவனிக்கின்றனர்.

முத்துலட்சுமிக்கு தர்மசங்கடமாக இருக்கிறது. உள்ளுக்குள் ஒரு மனப்போராட்டம். இரு மனசு. தடுமாற்றப் பேதலிப்பு.

மறுத்துட்டு வாங்காமப் போறது சுயமரியாதை. ஆனா, அது ரசாபாசமா இருக்கும். இந்தக் கூட்டத்துலே இவரு முகத்துலே கரியைப் பூசுனமாதிரி. பாசத்தைக் கொட்டுகிற முகத்தில் காறித் துப்புறமாதிரி. தாலி வாங்கின புள்ளையை வாழ்த்தாமப் போனமாதிரி...

அவளுக்குள் மனத்தவிப்பு.

"எல்லாரும் பாக்காகம்மா... வாங்கிக்க... நல்ல மனசோட வாங்கிக்கிட்டு, வாழ்த்திட்டுப் போம்மா..."

ரெண்டு கையாலும் ஏந்தி நிற்கிற அவரது முகக் கெஞ்சல். இவளும் இருகையால் கும்பிட்டு விட்டு, ஏந்தி வாங்கிக் கொண்டாள்.

அவருக்கு முகமெல்லாம் பூமலர்ச்சி. கண்ணில் சந்தோஷ நீர்த்துளி. முகத்தில் ஒரு பெருமிதம்.

"நல்லதும்மா... நீ எம்புள்ளைமாதிரி... எம்மானத்தைக் காப்பாத்திட்டே. வாங்கின மனசோட, நெறைஞ்ச மனசோட வாழ்த்துவே. எனக்கு மனசு நெறைஞ்சிருச்சும்மா..."

பூரிப்பின் தத்தளிப்பில் பெரியசாமி. அந்நேரம் அங்கே வந்த கிழவி, காதுகளில் தொங்குகிற பாம்படம்.

"என்னப்பா... பெரியசாமி, இது யாரு? அச்சு அசலா ஒன்னைப்போலவே முகலட்சணம் இருக்கு... யாரப்பா, இந்தப் புள்ளே?"

"ஊர்லே நம்ம தோட்டங்க இருக்குல்லே?"

"ஆமா?"

"அதைப் பராமரிச்சுக்கிட்டிருந்த பார்வதியோட புள்ளை."

"அந்தப் பார்வதி மகளா? அப்படியே அச்சுல வார்த்தமாதிரி... ஒன்னையே உரிச்சி வைச்சமாதிரி... இருக்காளப்பா... கல்யாணத்துக்கு வந்தாளா? வரட்டும் வரட்டும்."

பாம்படம் ஆட தலையாட்டி விட்டு நகர்கிற கிழவி.

இவளுக்குள் நெருடிக் கொண்டிருந்த புதிருட்டு சட்டென்று துடைத்தெடுத்த மாதிரியிருந்தது. கிழவியின் சொல் வெளிச்சம்.

"உரிச்சு வைச்ச மாதிரி...', 'அச்சு அசலா ஒன்னைப் போலவே முகலட்சணம்...' கிழவியின் வார்த்தைகள்.

'நீயும் எம் மக மாதிரித்தான்.' அடிக்கடி நெகிழ்ந்து போய் அவர் சொன்ன சொற்கள்.

முத்துலட்சுமிக்குக் கையில் ஏந்திய துணிப்பாரம், கற்பாறையாகக் கனக்கிறது. அவளுக்குள் ஆயிரமாயிரம் சாட்டையடிகளின் சுழற்சிகள். அடிமனசின் உயிர்ச்சதையைக் கிழிக்கிற சாட்டைச் சுழற்சிகள்.

காடுகரைகள் சொந்தமாக வைத்திருக்கற சீமான்கள், தோட்டத்தில் அடிமைகளைப்போல கூலி வேலை செய்கிற பெண்கள் ஒரு சிலரிடம் அத்து மீறி நடப்பார்களோ?

வரம்புமீறி ஆக்கிரமித்து அனுபவிப்பார்களோ?

'இவுக அம்மா நல்லவா... எம்மேலே ரொம்ப மதிப்பு. மனங்கோணாம நடந்துக்குவா. நானும் ரொம்ப பாசமாயிருப்பேன்..."

பெரியசாமி குழைவும் பாசமுமாக சொன்ன சொற்களின் அடிமடிக்குள் இந்த அத்துமீறலும், ஆக்ரமிப்பும்தான் ஒளிந்திருந்ததா...?

முத்துலட்சுமிக்குத் தன் பிறப்பின்மீதே கசப்பு வந்தது. 'ச்சேய்... அடிமைகிட்டே அத்துமீறலா நடந்துக்கிட்ட ஒரு பணக்கார நாயின் வித்தில் முளைத்தவளா, நான்? ச்ச்சீச்சீய்...'' அவள் மனசெல்லாம் கசப்பு.

தன் கிராமத்துக்குப் போகிற டவுன் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்திருந்தாள், முத்துலட்சுமி. அவள் பக்கத்தில், ராசாத்தி.

மாரியப்பன் கொடுத்த மஞ்சள் நிறப் பைப் பொட்டலம், அதோ... தூரத்தில் போய்க்கொண்டிருக்கிற பிச்சைக்காரக் கிழவியின் தோளில்.

ராசாத்தி கேட்கிறாள்.

''ஏம்மா இதை வாங்குனே? என்னத்துக்கு அந்தப் பாட்டிகிட்டே குடுத்துட்டே?''

''போயொழிஞ்ச காலத்துலே நடந்ததைத் திருத்தி எழுதவும் முடியாது. அதுக்காக... நாம நம்ம, மானமரியாதையைப் பறிகுடுத்துட்டு... சூடு சொரணையத்து வாழவும் முடியாது.''

எதுவும் புரியாத குழப்பத்துடன் அம்மா முகம் பார்க்கிற ராசாத்தி. அவள் சொன்னது, அவளுக்குப் புரியாத குழப்பத்தில் தூரத்து வெளியை வெறிக்கிற முத்துலட்சுமி.

-ஓம் சக்தி, தீபாவளி மலர், 2009

4. சூரியத்தாய்

சந்தனத்தாய், கிளிச்சனியன்களைத் துரத்துகிற போராட்டத்தில் மூச்சிரைத்தாள். காலடிச் சீலையைத் தூக்கி இடுப்பில் செருகிக்கொண்டு, கம்பம் பயிரைக் காப்பாற்ற பொழிகளில் ஓடுகிறாள். கல்லெடுத்து எறிகிறாள். "ச்சூசூ... ச்சூச் சூச்சூ... ஏய்ய்யக் ஹோ... ய்ய்க்" என்று காட்டுக்கூப்பாடு போடுகிறாள்.

இவளுக்கு பயப்படுகிறமாதிரி பாவ்லா காட்டுகிற கிளிகள், இங்குட்டு பறந்து அங்குட்டு உட்கார்ந்து கொள்கின்றன. இவள் கல்லெறிகளுக்கும், சொல்லெறிகளான வசவுகளுக்கும் கிளிகள் அஞ்சுவதாக இல்லை.

அகல விரித்த பச்சை ஜமுக்காளம் காற்றில் மிதந்து வருகிற மாதிரியிருக்கிறது, கிளிப்படையின் கூட்டு வருகை. ஆயிரக்கணக்கில் வந்து, கதிரில் முற்றுகை. உட்கார்ந்தவுடன் வளைந்தாடுகிற கம்பம் பயிர்கள். அசராமல், பதறாமல் கதிருக்கொரு கிளி. பாலன்ஸ் செய்துகொண்டு கொத்திக் குதறுகின்றன.

நாய் வாயில் சிக்கிய சர்க்கரைச் சாக்காக குதறப்பட்டு உதிர்கின்றன கதிர்கள். சந்தனத் தாய்க்கு குலை கொதிக்கிறது. "ஐயோ... ஐயோ..." என்று பதறிப் பதைக்கிறது, மனசு. அலைபாய்கிற உணர்வு.

"அடப் பாதகத்திகளா... இம்புட்டு அழிமானமா?" ஓயாமல் கத்துகிறாள். அதட்டலாகக் கூச்சலிடுகிறாள்.

சித்திரைக் கடைசி. சாரல் மேகம், மேற்குத் தொடர்ச்சி மலை முதுகுகளில் படுத்துக் கிடக்கிறது. அவற்றைச் செங்குழம்பாகக் காட்டுகிறது, அடைகிற பொழுது. 'கருகரு' என்று ஆகிறது, காலத் தேவதையின் இறக்கை நிழலாகப் பரவுகிற இருட்டு. கிளிகளின் ஆட்டம் சற்று அடங்கியது. தூரத்துப் பனைகளில் அதன் கூப்பாடு. அவை அதன் வீட்டை அடைகின்றன.

'இன்னிக்கு மல்லுக்கட்டு முடிஞ்சது' என்று சோர்ந்து துவள்கிறது மனசு. 'இனிமேத்தான்... சோத்துப்பாட்டுக்கு வழி பார்க்கணும்' என்று நினைக்கிறபோது... மலைத்துப் போகிறது நினைவு. தளர் நடையாக வீடு வந்து சேர்ந்தாள் சந்தனத்தாய்.

'பொட்டச்சியா ஜெம்மமெடுத்ததுக்கு... இம்புட்டுச் சீரழிவா' என்ற சோர்வுணர்வு. 'உஸ்ஸ்' என்று உட்காரச் சொல்கிற கால்கள். 'நீட்டி நிமிர்ந்து படு' என்கிற குறுக் கெலும்பு.

"யம்மா... சோறு வை" என்று ஓடி வருவானே சின்னப் பயல். "என்ன சாப்புடலாமா?" என்று வந்து நிற்பானே சின்னக்கனி.

வாழ்க்கையின் சாட்டையடிச் சுழற்சியில் முடுக்கப்படுகிற சந்தனத்தாய், அடுப்பை மூட்டுகிறாள். உலை கொதிக்கிறது. அரிசியை அலசி அள்ளிப்போட்டு கைக்கணிசமாக உப்பும் போட்டு காய்கறியை நறுக்குகிறாள். ஒரே புளிக்குழம்பாக வைத்துவிட்டால், நாளை மதியம் வரைக்கும் சரிக்கட்டிவிடலாம்.

இன்னொரு அடுப்பில் டீத் தூளைப் போட்டுக் கொதிக்க விட்டாள். கடையில் வாங்கி வைத்த காராச்சேவு, திண்பண்டத்தைப் பார்த்துக் கொண்டாள். வந்து நிக்கிற மகனும் சரி, சின்னக்கனியும் சரி... "பசிக்குது, என்னமாச்சும் இருக்கா?" என்பார்கள்.

காராச்சேவையும் டீத்தண்ணீரையும் தந்தால் பசி தணியும். அதற்குள், அடுப்பு வேலை முடிந்துவிடும்.

அலுத்து வியர்த்த உடம்பு, குளித்தால்தான் உயிர்த் திரும்பி வரும். சின்னக்கனி, எப்ப தொடுவான் என்று சொல்ல முடியாது. தொட்டால் மறுக்க முடியாது. குழைந்து இடம் தரணும். உடம்பும் மனசும் தயாராக இருக்கணும்.

சின்னக்கனி, என்றால் சந்தனத் தாய்க்கு ஒரே கிறுக்கு. இந்த ஊரிலேயே டக்கர் டிரைவரான முதல் இளவட்டம், இவன்தான். டக்கர் சீட்டில் ஏறி உட்கார்ந்து, சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால்... ராஜாமாதிரி கம்பீரமாகத் தோன்றுவான்.

"அவன்தான் வேணும்" என்று ஒற்றைக்காலில் தவமிருந்து கட்டிக் கொண்டவள், சந்தனத்தாய். அவன்மீது அம்புட்டு கிறுக்கு. தேனில் விழுந்த எறும்பாகத் தித்திப்போடு திணறுகிற மனமயக்கம். உயிர்த்திளைப்பு.

இவள் ஆசைப்பட்ட கணத்தில் "இப்ப வேண்டாம்" என்று உறக்கத்தில் சின்னக்கனி கண்ணைச் செருகியதுண்டு. இவன் தொட்டு அவள் மறுத்த நாளே கிடையாது. அவன் தொடுகிற நேரமெல்லாம் உயிர்க்குழைய மனம் சிலிர்ப்பாள்.

அவன் தொட்டால், பூ வந்து விழுந்த மாதிரி உணர்வாள். தொடுதலில் ஒரு நளினம். ஓர் இனிய வருடல். இதமான ஸ்பரிசம். நெஞ்சு குளிரும். உணர்வுலகில் மிதப்பாள்.

சின்னக்கனியும் வந்துவிட்டான். பம்ப் செட் மோட்டாரில் குளித்துவிட்டு ஈரத்துணிகளோடு வந்திருந்தான்.

"என்ன சந்தனம், கிளி வரத்து ரொம்ப இருந்துச்சோ?"

"அதை ஏன் கேக்கீக...? உசுர் அ(று)ந்து போச்சு."

"வனத்துல இருக்குற மரங்களையெல்லாம், கண்மாயின் உள்வாய் மரங்களையெல்லாம் வெட்டிக் காலிபண்ணப் பண்ண இருக்க எடமில்லாம மயில்காடும், கிளிக் காடும் இங்க வந்து உசுரை வாங்குது."

"கருது பெறக்குற வரைக்கும் இந்தச் சீரழிவுதான்..."

"அதுக்குள்ளேயே ஏதாச்சும் ஒரு வழி பார்க்கணும்" என்று தொண்டைக்குள்ளேயே சத்தமாக முணுமுணுத்துக் கொள்கிறான் சின்னக்கனி. அது, அவளுக்குக் கேட்கவில்லை.

"விடியக்காலம் மயில் சனியன்களும் உங்களைப் பாடாய்ப்படுத்திருதோ?"

"அதையேன் கேக்கே? மந்தைமந்தையா மயில்கூட்டம். கருதைச் சீரழிக்குற விதமே, ர்ரொம்பக் கொடுமையாயிருக்கு."

"என்ன செய்ய! வெளைய வைக்குற சம்சாரி, சூரியனைப் போல. சூட்டையும் வெய்யிலையும் தானே வைச்சிக்கிட முடியுமா? பகிர்ந்து குடுக்கணும்லே?"

சந்தனத்தாயை எரிச்சலுடன் பார்க்கிறான் சின்னக்கனி.

தாய் மனசோடு பேசுகிறாள் தொடர்ந்து,

"எல்லா ஜீவராசிகளுக்கும் இரைகுடுக்குற கடமையும் நமக்கு இருக்குல்லே?"

"எல்லாருக்குமே இரையாகுறது சம்சாரிகதானே?"

அவனது குரலில் ஓர் இறுக்கமான நையாண்டி. பகைமை உணர்வின் குத்தல்.

அன்றைக்கு அவன் தொடவுமில்லை. மூர்க்கம் கொள்ளவுமில்லை. ஏதோ கனத்த யோசனையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டே உச்சி முகட்டையே பார்த்துக் கொண்டிருக்கிறான், சின்னக்கனி.

மறுநாள் சாயங்காலம் கிளிப்படை வந்துருக்குமோ என்ற பதைப்பில், சந்தனத் தாய் கதவைச் சாத்திவிட்டு, 'அவக்தொவக்' என்று பரபரப்பாகப் பாய்ந்தாள். நடையை எட்டிப்போட்டாள்.

புஞ்சையை நெருங்கினாள். அடர்த்தியான கம்பம் பயிர்கள். சமஉயரத்திலான பயிர்களின் அணிவகுப்பு. பசிய வெண்மை நிறக்கதிர்கள். காற்றுக்கு ஒன்றுபோல் தலை வணங்கி கையசைக்கிற கம்பம் பயிர்கள். கதிர்களின் கூட்டசைவுகள், கோடிக் கைகளின் முழக்கங்கள்போல தோன்றுகிறது. கதிர்களின் அசைவுகளில் காற்றின் உருவம் தெரிகிறது.

கிளிகளைக் காணவில்லை. என்னாச்சு?

பேராச்சரியத்தில் தத்தளிக்கிறாள் சந்தனத்தாய்.

ஆங்காங்கே செத்துக் கிடக்கிற கிளிகள். அதன் அடி வயிற்று வெண்திட்டு. கிளிகளை மொய்க்கிற எறும்புகள். சற்று தள்ளிப் பார்த்தால் பெண் மயில்கள் விறைத்துக் கிடக்கின்றன. விஷம் தின்று மாய்ந்திருக்கிற கிளிகள், மயில்கள்.

சந்தனத் தாய்க்குள் தீவைத்த மாதிரியான பகீர் உணர்வு. உயிரின் ஆணி வேர் வரைக்கும் அதிர்ந்து நடுங்கினாள். பதற்றத்தில் சட்டென வாய் உலர்ந்தது. மழலையின் மரணத்தைப் பார்த்த மனப்பதைப்பு.

''ஐயய்யோ... அடப்பாதரவே... இந்த அப்புராணி ஜீவராசிக்கும் வெஷம் வைச்சு கொல்றதுக்கு, எந்தப் பாவிப்பயலுக்கு மனசு வந்துச்சு? அவன் மனுசப் பயதானா? அவன் வாய்லே மண்ணுவுழ!''

கொதிப்பும் குமுறலுமாகக் கொந்தளித்துச் சீறுகிறாள் சந்தனத்தாய்.மனச்சீறலாக தெறிக்கிற சாபச் சொற்கள். தாய் மனசு தாங்காத உயிர்க் கொலைகள். தாய் ரௌத்ரம்.

''இந்த மயில் சனியங்களோட இனிமே என்னாலே மாரடிச்சு மாய்ஞ்சு போக முடியாதும்மா...'' சின்னக்கனியின் அயர்ச்சியான குரல், நினைவுக்குள் உரசியது.

அவளுக்குள் குலை கொதித்தது.

சாப்பிடும்போது.

''மயிலுகளும் கிளிகளும் செத்துக் கெடக்குதுக. பாத்தீகளா?''

''எப்படியும் வெளைஞ்ச வெள்ளாமையைக் காப்பாத்தணும்லே?''

குனிந்து சோற்றையள்ளிக் கொண்டே அவன் சொன்ன பதிலில்... சந்தனத்தாய் அதிர்ந்து நடுங்கிவிட்டாள்.

'இந்த ஈனப்பயலையா... இம்புட்டு பெருசா நெனைச்சு சொக்கிப்போய்க் கெடந்தேன்?'

மலத்தை மிதித்துவிட்ட மாதிரியோர் அசூயையில் ஒடுங்கிப் பம்முகிறது ஆன்மா.

இரவில்-

புஜத்தில் கைபோட்டான் சின்னக்கனி. இவன் தொடுதலில், உயிர்குழைய வில்லை; விறைத்தது.

தொட்ட கையை ஆங்காரமாய்த்தட்டி விடுகிறாள் சந்தனத்தாய்!

-மங்கையர் மலர், ஜூலை, 2009

5. காதல் வேர்வை

சுந்தரம் பஸ் ஸ்டாண்டு மைதானத்தில் சோம்பலுடன் உட்கார்ந்திருக்கிறான். புஞ்சையில் வேலை ஜோலி நிறைய கிடக்கிறது. தெக்காட்டுப் புஞ்சையில் மிளகாய்ப் பழம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பார்வதியுடன் சேர்த்து ஏழாட்கள். போனால், சாக்கு பிடித்து, பழப் பெட்டிகளை வாங்கித் தட்டலாம்.

''சாக்குக் கட்டை நீங்க கொண்டு வாரீகளா?''

பார்வதி அர்த்தத்துடன் கேட்டாள். கேள்விக்குள் கேள்வி ஒன்று உட்கார்ந்திருக்கிறது. 'வேலைக்குக்கூட வாரீகளா?' என்ற கேள்வி.

''மாட்டு டாக்டரு வந்தாலும் வந்துருவார்லே? பசு மாட்டுக்கு ஊசி போட்டுரலாம்லே? மொடை அடிச்சுக்கிட்டே இருக்குல்லே?''

''அப்ப... அவரை எதிர்பார்த்து வீட்லே இருக்கப் போறீகளா?'' சர்வ சகஜமான குரலில் அமைதியாகக் கேட்கிறாள். ஆனால், 'வீட்டிலே சும்மாவே இருக்கப் போறீகளா?' என்ற குற்றச்சாட்டு முள் ஒளிந்திருந்து உறுத்துவதாக இவன் உணர்ந்தான். அவளது பார்வைக் கடுப்பில் அந்த முள் இருந்தது.

''சாக்குக் கட்டை நீயே கொண்டு போயிரு'' என்று தாழ்ந்த சுருதியில் சொல்லிக் கொண்டே தலைகுனிந்த சுந்தரம்,

அவள் வைத்துக் கொடுத்த சோற்று முன் உட்கார்ந்தான். புளிக்குழம்பு. நறுக்கிய முருங்கைக்காயும் கத்தரிக்காய்த் துண்டுகளும் கிடந்தன.

''அப்ப... சரி... சாப்ட்டுட்டு வட்டிலைக் கழுவி வைச்சிருங்க. பொழுதாகுது. நா பொறப்படுறேன்'' சாக்குக் கட்டை தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாள். குடத்துத் தண்ணீரை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டாள். சோற்றுத் தூக்குச் சட்டியையும் எடுத்துக் கொண்டாள்.

உண்டு முடித்து, எல்லாவற்றையும் 'ஒதுங்க' வைத்துவிட்டு கதவைப் பூட்டினான். தொழுவத்தில் எட்டிப் பார்த்தான். சிவலைப் பசு நின்றது. வாலைத் தூக்கி சுழற்றியடிக்கிறது. மூத்திரச் சாணக் கலவை 'சளா'ரென்று தெறிக்கிறது. இவனைப் பார்க்கிறது. கழுத்தைத் திருப்புகிறது. கரிய கண்ணில் ஒரு வெளிச்ச மின்னல். அடிவயிற்றிலிருந்து புறப்பட்டு உருண்டெழுந்து வெளிப்படுகிற நீள கனைப்பு. இடிமுழக்கம்போன்ற நீள்கனைப்பு. ஆசன வாசலில் பிசுபசுப்பான திரவக் கசிவு.

புல்லையள்ளிக் காடியில் போட்டான். முற்றிய கன்றாக நிற்கிற பழைய பொட்டைக் குட்டிக்கும் புல்லைப் போடுகிறான்.

''இரு... மாட்டு டாக்டரைக் கூட்டியாந்துருதேன்'' என்று பசுவின் முதுகில் தட்டிக் கொடுத்து பாசத்துடன் வருடுகிறான். இவனது வாய்மொழி தெரியாவிட்டாலும், வருடல் மொழியின் உணர்வை அது தெரிந்து கொள்ளும். அதன் வாயிலிருந்து நூலாம்படைமாதிரி நீள்கிற எச்சில்.

பஸ் ஸ்டாண்டு டீக்கடை 'ஜே... ஜே...' என்றிருந்தது. காலை நேர வியாபாரம். அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி படத்துக்குக் கீழே கலர் டி.வி.-யில் 'சிரிப்பொலி' கலகலக்கிறது.

வடைகளைப் பிய்த்து வாயில் போட்டுத் தண்ணீர் குடிக்கிறவர்கள். "டீ போடப்பா. 'ஜோலி கெடக்கு' என்று துரிதப்படுத்துகிறவர்கள்.

சுந்தரம் போய் நின்றான்.

"ஒரு டீ போடு தம்பி..."

"வடை சாப்புடலியா?"

"வேண்டாம் தம்பி."

அவன் டீயாற்றுகிற போதே, இவன் கேட்டான்.

"மாட்டு டாக்டரு இங்கிட்டு வந்தாரா?"

"வந்த மாதிரி தெரியலியே..."

"வருவாரா...?"

"அதெப்படி எனக்குத் தெரியும்?"

டீ வாங்கினான். உறிஞ்சிக் குடித்தான். பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு வேப்பமரத்தடியில் போய் உட்கார்ந்தான். பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறவர்கள்... வருகிற பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறவர்கள்... மினி பஸ் டிரைவர், கண்டக்டர்... எல்லோருமாக ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றனர். அவரவருக்கு ஆயிரம் பிரச்னைகள். இவனும் அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்தான்.

"மாட்டு டாக்டரு இன்னிக்கு வருவாரா?" இன்னும் நாலைந்து பேர்களிடம் விசாரித்துப் பார்த்தான்.

"வரச் சொல்லி யாராச்சும் சொன்னாத்தான் வருவாரு... நீங்க சொல்லி விட்டீகளா?"

"ரெண்டு மூணு பேருகிட்டே 'வரச் சொல்லி டாக்டர்கிட்டே சொல்லிருங்க'ன்னு சொல்லியனுப்பிச்சேன்."

"அவங்க போய்... சொன்னாங்களா, இல்லியான்னு தெரியுமா?"

"தெரியலே..."

"அப்ப வர்றது சந்தேகந்தான்."

இவன் விசாரித்துப் பார்த்த நாலைந்து பேரும் இதே மாதிரித்தான் சொன்னார்கள்.

பார்வதி நினைவுக்குள் வந்தாள். மிளகாய்ப் பழம் எடுக்கிற பார்வதி. வேனலாகக் கொதிக்கிற வெயிலில் வேகிறவள்.

தனது நிரையிலும் மிளகாய்ப் பழம் பொறுக்க வேண்டும். இருட்டுக் காடாகக் கிடக்கிற மிளகாய்ச் செடிகளின் கொழைகளைப் புரட்டி... கிளைகளில் ரத்த மினுமினுப்பாகத் தொங்குகிற மிளகாய்ப் பழங்களைத் தேடிப் தேடிப் பொறுக்க வேண்டும். தப்பவிடாமல் பொறுக்க வேண்டும். மற்றவர்கள் பொறுக்குகிற பழங்களையும் வாங்கி சாக்கில் தட்ட வேண்டும். தண்ணீர் கேட்கிறவர்களுக்கு செம்பில் கொண்டு போய்த் தர வேண்டும்.

பாவம்... ஒற்றை மனுசி. புஞ்சைக்காரி என்பதால் சகல வேலைகளையும் ஓடி ஓடிச் செய்ய வேண்டும். ஏறு வெயிலின் தகிப்பில் ஓடி ஓடி வேலை செய்கிற பார்வதி.

இவன் வேப்ப மரத்து நிழலில் சும்மா உட்கார்ந்திருக்கிறான். மாட்டு டாக்டரை எதிர்பார்ப்பதாக ஒரு காரணம். சாக்கு.

நிஜமாகவே அவனுக்குள் கவலையும் குற்ற உணர்ச்சியும் கிடந்து அழுத்துகிறது. தர்மசங்கடப்படுகிறான்.

ஆனால்... இதுவும் முக்கியம். பசு, முடை அடிக்கிற நாட்களிலேயே ஊசி போட்டு விட வேண்டும். போட்டால் தான், சினை தங்கும். கரு வளரும். கன்று போடும், பால் தரும். இதுவும் முக்கியமான வேலைதான்.

ஆனால்... வருவார் என்ற நிச்சயமில்லாத நிலையில் சும்மாவே உட்கார்ந்திருக்கிறோமே... பார்வதி அங்கே வெயிலில் கிடந்து வேகிறாளே...

அலைபாய்கிற மனசின் நினைவோட்டம். உளைச்சலும் வருத்தமுமான நினைவு ஈக்களின் மொய்ப்பு.

'பார்வதி மேல் இரக்கப்பட்டு... புஞ்சைக்குப் போன நேரத்தில்... மாட்டு டாக்டர் வந்துவிட்டுப் போய் விட்டால்...'

அப்படியும் ஒரு நினைவுத் தடை. மனப் பதைப்பு. அங்கிட்டும் இங்கிட்டுமாக ஓடித் தவிக்கிற இரு மனசு.

பார்வதி தங்கமானவள்தான். அவளுக்கென்று ஒரு குணமும் இருக்கும். விவசாயக் குணம். விவசாயக் குடும்ப

மரபுக் குணம். சோம்பலைச் சகிக்க மாட்டாள். சும்மாயிருப்பதைப் பொறுத்துக் கொள்ள மாட்டாள்.

அதற்கான நியாயமான காரணங்கள் ஆயிரம் இருந்தாலும், அவள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டாள்.

''மண்ணுலே பாடுபடுகிற மனுசர் தண்ணிமாதிரி, காத்து மாதிரி ஒடிக் கிட்டே இருக்கணும். கல்லு மாதிரி ஒய்ஞ்சி கெடக்கக் கூடாது'' என்று வார்த்தைகளால் விளாசுவாள்.

''ரத்தம் ஒய்ஞ்சு ஒரிடத்துலே நின்னா.. மனுசரு உசுரோட இருக்க முடியுமா?'' என்று ஆவேசப்படுவாள்.

''கல்லு ஒடைஞ்சு நொறுங்கி மண்ணாகுது. மண்ணு மனுசருக்கு சோறு தருது... கல்லு, மண்ணாகுற போது... சோறு திங்குற மனுசரு கல்லாகக் கெடக்கலாமா?''

என்றெல்லாம் வார்த்தைச் சாட்டைகளை வீசுவாள். சுழற்றியடிப்பாள்.

''என்னத்துக்கு இப்படி அலப்பரை பண்றே? மனுசரை சும்மா இருக்க விடேன்'' என்று சொல்லிவிட்டால்... அம்புட்டுத்தான். அன்னிக்குப் பூராவும் வார்த்தை விளாசல்களும், சாட்டைச் சுழற்சிகளும்... ஆளை 'உண்டு இல்லை' என்று பண்ணிவிடும்.

அதோடு நின்றால் பரவாயில்லை. சோம்பலுக்கான தீர்ப்பு ராத்திரியில் தான் கிடைக்கும்.

ஆசையோடு உரிமையோடு தொடப்போகிற கையை வெறுப்புடன் தட்டியெறிந்து விடுவாள். செருப்பால் அடித்து, காலால் மிதித்துத் தள்ளின மாதிரி அவமானமாக இருக்கும்.

"வேலையத்த மனுசருக்கு இதுமட்டும் வேணுமாக்கும்? இதுக்கு மட்டும் ஏலுமோ...?"

இப்படி சுந்தரத்தை ஏகப்பட்ட தடவைகள் பார்வதி அவமதித்து 'காயப்' போட்டிருக்கிறாள்.

பலதையும் யோசிக்கிற சுந்தரம், பின்புறம் ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். கங்கின் முன்னேற்றத்தில் நெறு நெறுத்து சடசடக்கிற பீடி இலை. காந்தலான புகை, தொண்டைக்குள் மோதிவிட்டு, நாசி வழியாக வெளியேறுகிறது. அங்கிட்டும் இங்கிட்டுமாக அலை பாய்ந்து வருகிற நினைவுகள்.

பெருமூச்சோடு எழுந்தான். அவனுக்குள் மங்கலாக ஒரு நினைவு. ஒரு முடிவுபோல... ஒரு வேலைத் திட்ட வரைபடம்.

டீக்கடைத் தம்பியிடம் வந்தான்.

"யப்பா... எட்டு பேருக்கு டீ சாப்புடுகிறமாதிரி பார்சல் டீ போட்டுத் தர முடியுமா?"

"ஏன்... முடியாது? அதானே... எங்க ஜோலி? தூக்குச் சட்டி எங்க? எதுலே டீ போட?"

"ஏதாவது ஒரு தூக்குச் சட்டியிலே போட்டுத்தா. சாயங்காலம் சட்டியைத் தாரேன்."

"ஞாபகமா தந்துரணும்? அயத்துரக் கூடாது?"

"அதோட.... எட்டு வடை பார்சல் கட்டு... எல்லாத்துக்கும் சாயங்காலம் காசு தரேன்."

தூக்குச் சட்டி நிறைய டீயுடனும், வடைப் பார்சலுடனும், பிளாஸ்டிக் கிளாஸ்களுடன்... நடையை

எட்டிப் போட்டான். புதிதாக வாங்கிய பீடிக் கட்டும், தீப்பெட்டியும் மடியில் இருந்தது.

வீட்டுத் தாழ்வார நிழலில் சாய்த்துப் போட்டிருந்த சைக்கிளை எடுத்தான். டயர்களில் காற்று இருக்கிறதா என்று நசுக்கிப் பார்த்தான். 'கிண்ண்'ணென்றிருந்தது.

அகலக்கேரியலில் நூல் கயிறு சுற்றியிருந்தது. தோள் துண்டில் வடைப் பார்சலையும், கிளாஸ்களையும் கட்டி தோளில் போட்டுக் கொண்டு, ஒரு கையால் ஹாண்டில் பாரைப் பிடித்துக் கொண்டு, மறு கையில் டீத் தூக்குச் சட்டியுமாக...

பெடலை மிதித்தான். தெக்காட்டுப் புஞ்சையை நோக்கி நகர்ந்தது, ஏறு வெயிலின் உச்சம். சித்திரை மாசத்து அக்கினி நட்சத்திரத்து வெயிலின் தீச்சூடான காந்தல்.

வேனலாகக் கொதிக்கிற வெயில் தீயைப் பொருட்படுத்தாமல்.. ஊர்ப் பொரணிகளும், உள்வீட்டுச் சோகக் கதைகளுமாகப் பேச்சும் பெருமூச்சுமாக நடக்கிற வேலை.

எல்லாப் பெண்களும் தலையில் நுனித் துண்டைக் கட்டி மிச்சத் துண்டை முதுகில் பரத்திவிட்டிருக்கின்றனர். இயற்கையை எதிர்த்து ஜெயிக்கிற மனித உழைப்பின் சமயோசித உத்தி.

வெயிலில் முகம் குறாவிப் போயிருக்கிற மிளகாய்ச் செடிகள். எலிக்காது போன்ற சிறிய இலைகளும் முகம் வாடித் தொங்குகின்றன. சிவப்பு நிறப் பழ ரத்தங்கள். வாய்க்கால் வரப்புகளில் அகத்தி வரிசைகள்.

எல்லோருக்கும் வடை உபச்சாரம். ஆளுக்கொரு வடை. டீ பரிமாறல். அவனை எல்லோரும் சந்தோஷமாகக் கொண்டாடுகின்றனர்.

"நேரமறிஞ்சு, கரெக்டா கொண்ணாந்துட்டீக."

"பசியறிஞ்சு போட்ட சோத்துப் புண்ணியம், மகாராசாவுக்கு."

"இந்த வடையும் டீயும் தர்ற உசுருப் பலத்துலே சாயங்காலம் வரைக்கும் வேலையை முடிச்சிரலாம்."

அவரவர் நிரையை விட்டு யாரையும் நகர விடாமல்... இவனே ஓடி ஓடி... வரப்புகளில் பாய்ந்து வடை, டீ செலவு செய்து... வேலை தடைபடாமல் தாமதப்படாமல் பார்த்துக் கொண்ட சுந்தரத்தைப் பெருமிதத்துடன் பார்க்கிற பார்வதி. இவள் வடையை வாங்குகிறபோது பார்த்த பார்வை. பார்வையின் பூத்தூவல்.

"அட... என் செல்ல ராசா" என்று கொஞ்சுகிற பார்வை.

இவனுக்குள் குளிர்க்கரங்களால் வருடுகிற அந்தப் பார்வை.

"குனிஞ்ச தலை நிமிராம பழத்தை எடுங்க... வெருசா வூட்டுக்குப் போயிரலாம்."

ஒவ்வொருத்தரிடமிருந்தும் பழப் பெட்டிகளை வாங்கிச் சாக்கில் தட்டினான். ஏற்கனவே நிறைந்திருந்த பழச் சாக்குகளைக் குலுக்கி... தூக்கி... குலுக்கி... சாக்கின் வாயை சணலால் கட்டி...

ஈரப் பழச் சாக்கு. கனத்த பாறைபோல உருட்டாக இருக்கிற சாக்கு. பிரேதக்கனம். மூச்சு பிடித்து, 'தம்ப்' பிடித்து

தூக்கி தோளில் வைத்து... அப்படியே சைக்கிளுக்குக் கொண்டு வந்து கேரியலில் குறுக்காகப் போட்டு... நேர் செய்து... நூல் கயிறால் கட்டி...

பெடலை மிதித்து ஏறுகிறபோது... அலை பாய்கிற சைக்கிள். கனம் தாளாமல் தத்தளிக்கிற சைக்கிள். கை பலத்தால் ஹாண்டில் பாரைப் பற்றி... இறுக்கி... ஃபாலன்ஸ் செய்து...

அவனது வெற்று முதுகு வியர்வையில் பட்டு ஒளித்தெறிப்பாகிற மதிய வெயிலைப் பார்க்கிறாள் பார்வதி.

உழைப்பு மும்முரத்தில் வெயிலின் உறைப்புத் தெரியவில்லை. சைக்கிள் ஊர் நோக்கி முன்னேறியது.

ஏழு சாக்குப் பழங்களையும் வாங்கி வாங்கிப் போட்டு மூடையாக்கி... சைக்கிளில் வீடு கொண்டு வந்து சேர்த்து...

ஏழாவது சாக்கை சைக்கிளில் ஏற்றுவதற்கு முன் அகத்திக் கொழை ஒடித்து... ஒரு கட்டாகக் கட்டி... அதையும் பழச்சாக்கு மேல் வைத்து... நூல் கயிறால் கட்டி...

புருஷனையே பெருமிதமும் பூரிப்புமாகப் பார்க்கிற பார்வதி. 'விடியக் காலம் வேற வெட்டிக் கதை ஏதேதோ பேசி கோணக்கால் சாத்துன மனுசரு... இப்ப இம்புட்டு வேர்வை வடிக்கிறாரே... என்ன மந்திர மாயம் இது?'

அவளுக்குள் மகிழ்ச்சியுடன் ஓடிய நினைவுகளின் புதிராட்டம்.

"பார்வதி குடுத்து வைச்ச மகராசி. ஒத்தை மனுசியா கெடந்து சீரழியுதாளேன்னு எரக்கப்பட்டு ஒத்தாசை பண்ண

ஒடியார்ற ஆம்பளைகளைப் பார்க்க கெடைக்காத காலத்துலே... இப்படியொரு தங்கக்கட்டி.''

மேலத் தெரு மூக்கம்மாவின் வெள்ளந்தியான பாராட்டுச் சொறக்கள், பார்வதிக்குள் பூச்செண்டுகளாக விழுந்தன. பெருமையாக இருந்து கடைசி நிரைக்கு வந்துவிட்டனர்.

மூன்று மணிக்குப் பிறகு-

பசுவைப் பத்திக் கொண்டு, மாட்டாஸ்பத்திரிக்கு கலிங்கப்பட்டி போகிற சுந்தரம்.

''மாட்டு டாக்டரு நம்ம ஊருக்கு வருவார்லே?''

''வர்றது நிச்சயமா தெரியலியே... இதை நம்பிக்கிட்டு நாளைக்கடத்துறது நல்லதுல்லே. ரெண்டு மைல்தான். நாம நடந்தா... கொறைஞ்சா போயிருவோம்...?''

பார்வதிக்கு பதிலைச் சொல்லி விட்டு, கலிங்கப்பட்டி நோக்கி பசுவை நகர்த்துகிற சுந்தரம். பசுவின் மெது நடை. அதற்கேற்ப இவனது இணை நடை.

மாட்டாஸ்பத்திரியில் பசுவுக்குச் சினை ஊசி போட்டுவிட்டு... ஓட்டலில் நாலு இட்லி ஒரு தோசையைச் சாப்பிட்டு விட்டு... பார்வதிக்கும் ரெண்டு ரவா தோசை பார்சல் வாங்கிக் கொண்டு...

''ரவா தோசைன்னா... அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்று முணுமுணுத்துக் கொண்டபோது... ஆத்ம பங்காளியின் உயிரை உரசுகிற உயிரின் பரவசம், அவனுக்குள்.

பசுவோடு வீடு வந்து சேர்வதற்குள்-

மணி எட்டாகிவிட்டது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறது. அவனது முதுகு வியர்வையை வலது உள்ளங்கையினால் வழித்து நுகர்ந்து பார்க்கிற அந்தப் பாட்டாளி பார்வதி.

''குளிச்சிட்டு வாங்க... சாப்புடலாம்.''

''இரு... இந்தப் பழச் சாக்குகளைக் களத்துலே போட்டுட்டு வந்துருதேன்...''

நடந்த நடையில் தொடை எலும்புகள் யாவும் உருவியெடுத்துவிட்டமாதிரி இருந்தது. 'உட்கார், உட்கார்' என்று கெஞ்சுகிற குறுகெலும்பு. முதுகெல்லாம் ரணமெடுக்கிற வலி.

தாழ்வாரத் திண்ணையில் கிடந்த பழச்சாக்குகளை ஒவ்வொன்றாக பார்வதி தூக்கிவிட... தலைச்சுமையாகவே களம் கொண்டு போய்ச் சேர்த்தான். பார்வதி மனப்பூரிப்பு.

அவன் நெஞ்சு ரோமங்களுக்குள் வியர்வைக் கோடுகள். அதில் அப்பிக் கிடக்கிற சாக்குத் தூசிகள். நெஞ்சு ரோம வியர்வையில் முகம் புதைத்து... உதடுகளைப் பதிக்கிற பார்வதி. கிறங்கிச் சொருகுகிற கண்களுடன் தன்னுடன் உடல் படிகிற அவள்.

''ஏய்ய்... ஏய்ய்... இதென்ன கூத்து? நாத்தமெடுக்குற வேர்வைக் கசகசப்பு.''

''வேர்வை, நாத்தமில்லே. வாசம். ஒலகத்துலே உள்ள எல்லாத்தையும் உண்டாக்குகிற வாசம்.''

உழைப்பைக் கொண்டாடுகிற அந்த சம்சாரிக் குடும்பத்துப் பெண்ணை அதிசயமாகப் பார்க்கற சுந்தரம்.

அன்றைக்கு இரவில்...

அவனை அவள் கொண்டாடித் திணறடித்தாள். திணறலுக்கு மத்தியில் மூச்சிரைப்புடன் அவன் சொன்னான், போதையில் மிழற்றுகிறவனைப்போல.

"உண்மையைச் சொல்லட்டா? நீ... 'காய'ப் போட்டுருவீயோன்னு பயந்து போய்த்தான் அரை மனசோட வேலையை செய்ய ஆரம்பிச்சேன். வேலை செய்யச் செய்ய... மனசு ஒடம்பும் வேலையாலே முழுசா இழுக்கப்பட்டுருச்சு. இதுக்கு இருக்குற அதே கவர்ச்சி, உழைப்புக்கும் இருக்கு..."

-ஓம் சக்தி, ஜூலை, 2009

6. மகள் முகம்

"யய்யா."

வெளித்திண்ணையில் கவலை படிந்த நினைவுகளின் மொய்ப்புக்குள் மூழ்கிக் கொண்டிருந்த சங்கர பாண்டியை லௌகீக வாழ்வின் கையாகப் பற்றியிழுக்கிறது, மகளின் குரல். தயக்கமான பயந்த குரல்.

"என்னம்மா?"

ஏழு வயதுச் சிறுமி. ஒரே மகள். தலைப்பிள்ளையாக வந்து பிறந்தவள். அம்மா பெயரை வைத்திருக்கிறான். ராஜம்மா. நீல நிறப் பாவாடையின் அடிப்பகுதி தையல் விட்டு நூல்நூலாகத் தொங்குகிறது. வெள்ளை மேல் சட்டை. அவளாகவே எண்ணெய் தேய்த்து, சீப்பால் இழுத்துக் கட்டி, 'தத்தக்கா, புத்தக்கா' என்று கற்றுக்குட்டித்தனமாகப் போட்டுக்கொண்ட சடைப் பின்னல்.

"சொல்லும்மா, ராஜம்."

"பள்ளிக்கோடம் போவட்டா...?"

"ம்... போய்ட்டு வா.."

தயங்குகிறாள். மருட்சியில் அங்கும் இங்குமாக அலை பாய்கிற கண்கள்.

"என்னமும் வேணுமா... ம்மா?"

"ம்... துட்டு."

"எதுக்கும்மா?"

''அம்மா, தீம்பண்டம் ஒண்ணும் வாங்கி வைக்கலே. ஸ்கூல் போவணும்.''

''சரி... கடையிலே என்னாச்சும் தீம்பண்டம் வாங்கிக்க.''

''துட்டு?''

''போய் வாங்கிக்கோ. குடுத்துட்டு கடைப்பாக்கியிலே எழுதிக்கிடுவாரு...''

கனிவும் குழைவுமான குரலில் மென்மையாக சொல்கிற சங்கர பாண்டி.

கனத்த பைக்கட்டை அய்யா பக்கத்திலேயே வைத்துவிட்டு, அனுமதி கிடைத்துவிட்ட மகிழ்ச்சியிலும் குதூகலத் துள்ளலிலும் ஓடுகிற ராஜம். பாவாடையின் அடிப்பகுதி, காலில் 'சட், சட்' டென்று அடித்து தடுப்பதால், பாவாடையின் முன் பகுதியை ஒரு கையால் உயர்த்திப் பிடித்துக் கொண்டு குதித்துக் குதித்து ஓடுகிறாள். அவளுக்குள் மனச்சிறகடிப்பு, 'என்ன தீம்பண்டம் வாங்கலாம்' என்ற யோசனையில் ஆசைப் பரபரப்பு.

அவள் ஓடுவதையே பார்க்கிற மனசின் நெகிழ்வு.

மனைவி லட்சுமி வயிற்றில் பிறந்த அம்மா. தனது உதிர நிழல். உயிர்களை உருவி வருடிக் கொண்டு பிறந்த உயிர்.

துள்ளலாக ஓடிய அந்த வண்ணத்துப் பூச்சி, அடிபட்ட அவமான இருட்டின் அழுகையோடு திரும்ப வருகிற ராஜம். குறாவிப் போன சிறுமுகம். அறுத்துப் போட்ட பசுங்கொடியின் முகவாட்டம். கண்ணின் நீர்த்துளிகளில் மனச்சிதறல்.

இவன் மனசு கிடந்து துடித்தலறுகிறது. பதறிப் பதைக்கிறது. 'தடாபுடா' வென்று எழுந்தான்.

''என்னம்மா...? என்னாச்சு?''

''கடன் தரமாட்டாராம்.''

''அப்படியா... சொன்னாரு?''

''பெரியாளுகளைக் கூட்டிட்டு வான்னு சொல்லிட்டாக.''

கோபமும் கொதிப்புமாக சங்கரபாண்டி. ஏமாற்றத்தால் அறையப்பட்ட பூச்செண்டு. ஆசை ஆசையாய் ஓடி, அரண்டு துவண்டு வருகிற தனது ஒரே மகள்.

இவனுக்குள் சண்டாளமாகப் பொங்கிக் குமுறிய ஆத்திரம். போய்... கடை வாசலில் நின்று, தாறுமாறாக வைது, பேசி, கத்திக் கூப்பாடு போட வேண்டும் என்று தகிக்கிற மனசு. கடைக்காரரை 'கிழி, கிழி' யென்று வார்த்தைகளால் கிழித்து, நார் நாராகத் தொங்கவிடத் துடிக்கிற மனக்கொதிப்பு.

''ஏங்கூட வாம்மா.'' அந்தப் பிஞ்சுக்கையைப் பற்றிக் கொண்டு வேகவேகமாய் நடக்கிற சங்கரபாண்டி.

''இன்னைக்கு அவருக்கு இருக்கு, வசவு. இப்ப குடுக்குற கொடைமானத்துலே அவருக்கு எப்பவும் நெஞ்சுலே பயமிருக்கணும். எம்புள்ளையை முகம் வாட வைச்சுப் பாக்குற நெனைப்பே வரக் கூடாது'' என்று வன்மம் கூறிக்கொண்டே, மூச்சிரைக்கிற கோபக் குமுறலோடு கடைபோய்ச் சேருகிற சங்கர பாண்டி.

றெக்கை ஒடிந்த பறவையின் வலியுடனும், அவமான அவஸ்தையுடனும் பின் தொடர்கிற ராஜம்.

"ஏம்புள்ளைக்கு கடன் இல்லேன்னு ஏன் சொன்னீரு? என்னத்துக்கு திருப்பியனுப்புச்சீரு?"

"கடன் இல்லேன்னு யாரு சொன்னது? பெரியாளுக வரட்டும்னு சொல்லத்தான் செய்ஞ்சேன்."

"தீம்பண்டம் வாங்குறதுக்கெல்லாம் பெரியாளுக வந்துக்கிட்டிருக்க முடியுமா? பச்சைப் புள்ளை கேக்குறதை குடுத்துட்டு, கணக்குலே எழுதிக்கிட வேண்டியதுதானே?"

"சின்னஞ்சிறுசு கேக்குற தீம்பண்டத்தை குடுத்துட்டு கணக்கு எழுதி வைச்சா... நம்பணும். ஓம் பொண்டாட்டி ஏழு நாளு கழிச்சு வந்து, 'அது என்ன... இது என்ன'ன்னு நம்பாம ஆயிரத்தெட்டு கேள்வி கேக்கா. 'இது, இதுதான் நா வாங்குன கணக்கு, மத்தெதல்லாம் கள்ளக் கணக்கு'ன்னு சண்டை போடுதா. கடைச் சரக்கு குடுத்துட்டு கடன் எழுதி வைச்ச பாவத்துக்கு, 'கள்ளக்கணக்கு'ன்னு பேரா? இது எனக்குத் தேவையா?"

கடைக்காரரும் பேய்ச்சீற்றம் சீறுகிறார். நெடுநாள் கோபக் குமைச்சலை கொட்டித் தீர்க்கிற மனவெக்கை.

திகைத்துப் போகிற சங்கரபாண்டி. அவரது எதிரடியில் கலகலத்துப் போகிற மனத்தடுமாற்றம்.

அவரது சிடுசிடுப்பிலும் நியாயம் இருக்கிறது. 'கள்ளக் கணக்கு' என்று குற்றம் சாட்டினால், மனசு கொதிக்காதா? கோபம் வராதா? லட்சுமி என்னத்துக்கு அப்படிப் பேசுகிறாள்?

விறைப்பும் வேகமும் அடங்கி, நிதானத்துக்கு வருகிறான். தாழ்ந்த குரலில் சொல்லுகிற சங்கர பாண்டி.

“சரி சரி... கோபப்படாதீரும். நா லட்சுமிகிட்டே பேசுறேன். இப்ப... எம்மகள் கேக்குறதை குடுத்தனுப்புங்க.”

கடைக்காரர் ராஜத்தைப் பார்க்க, அவள் ஏதோ ஓர் இனிப்புப் பண்டத்தை கை நீட்டி, “அது வேணும்” என்றாள்.

“அது ரெண்டு ரூவா, தரவா?”

“தாங்க.”

அதைக் கையில் வாங்கியவுடன், பூத்துச் சிரிக்கிற பூச்செண்டாக அவள் முகமலர்வு. கண்ணில், மனத்துள்ளலின் மின்னல்.

அந்தச் சின்னஞ்சிறுசின் அதீத மகிழ்ச்சி இவனுக்குள் ஆழ்ந்த சோக இருட்டாகப் படிகிறது.

‘இம்புட்டுச் சாதாரண தீம்பண்டத்துக்கு இம்புட்டுச் சந்தோஷமா? அப்படி... ன்னா, எம்புள்ளை என்னமும் கிடைக்காம ஏங்கிப் போயிருக்கா. நாக்குக்கு ருசியான பலகாரம்... நல்ல நல்ல பதார்த்தம் கண்ணுலே பாக்காம... மனசுக்குள்ளே ஏங்கி ஏங்கி மருகிக்கிடந்துருக்காள். ஒத்தைப்புள்ளே. அதுக்கு ஆசைப்பட்டதை வாய்க்கு ருசியானதை வகைவகையா வாங்கித் தரணும்னு நானும் நெனைக்கலே. நெனைக்குற மாதிரி... மடியிலேயும் கனம் இல்லே.”

வருத்தக் கருமையுடன் அவனுள் படர்ந்து விரிகிற அவலமான நினைவு நிழல்.

“சரிம்மா... நீ பள்ளிக்கோடம் போறியா?”

“ஆட்டும்யா.”

லட்சுமி விடிந்தும் விடியாத வைகறைப் பொழுதிலேயே கூலி வேலைக்குப்போய் விட்டாள். காலைக் கரண்டு. ஆறுமணிக்குத்தான் த்ரீபேஸ் கரண்டு வரும். பம்ப்செட் மோட்டார் ஓடும். புழுதிப் பாத்திக்குள் தண்ணீர் பாயப்பாய... பருத்தி விதை ஊன்றணும். அதுக்குத்தான் லட்சுமி போயிருக்கிறாள்.

இவன் விடியற்காலம் டீ குடித்துவிட்டு சொந்தப் புஞ்சையான தெற்காட்டுப் புஞ்சைக்குப் போயிருந்தான். பூப்பருவத்தில் நிற்கிற கம்பப்பயிர், நெஞ்சுயரத்துக்கு வளர்ந்திருக்கிறது. பூட்டை வாங்கிவிட்டது. முழுக்க பூ பூத்து மொய்த்திருக்கிறது. உருக்கிய தங்கமென செங்கழித்த நிறத்தில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக நிறைகிறது. கதிர்கள் மாதிரியே இருக்கிற பூம்பூட்டை. காற்றுக்கு ஆடுகிறது. ராணுவ அணிவகுப்புத் தலையசைப்புபோல ஒரே சீரான அசைவலை. ஒரு சீரான அதன் அசைவலையின் நளினத்தில் காற்றின் உருவம் கண்ணுக்குத் தெரிகிறது.

'இன்னும் ஒரு தண்ணி பாய்ஞ்சிட்டா போதும். கருது மணிபுடிச்சு பால்கோதிரும்' என்று நினைத்துக் கொள்கிற சம்சாரி மனசு. மேலப்புஞ்சைக்கும் போய்விட்டு, வெள்ளாமையை சுற்றிப் பார்த்தான்.

பொழி நிறைய அருகம்புல் செழித்துக் கிடந்த பசுமையைக் கண்ட கணத்தில் வந்த முனைப்பு. கையாலேயே பர்ருச் பர்ருச் சென்று பற்றிப் பற்றி பறித்தான். உடுத்தியிருந்த இடுப்புவேட்டியை அவிழ்த்து, அதிலேயே பறித்துப் போட்ட அருகம்புல்லை பெரிய பொதியாகக் கட்டிக் கொண்டான். மேல் துண்டை இடுப்பில்கட்டி, அண்டிராயரை மறைத்துக் கொண்டான்.

தலையில் புல்சுமையுடன் வீடு வந்தான். பசுவுக்கு புல்லையள்ளிப் போட்டான். ஆடுகளுக்கு அகத்திக் கொழை கட்டினான். உஸ்ஸென்று அயற்சியோடு திண்ணையில் உட்கார்ந்த போதுதான்,

''யய்யா...'' என்று கூப்பிட்ட ராஜம்.

அவளாகவே குளித்து, துணிமாற்றி, சோறு வைத்து, உண்ட வட்டிலைக் கழுவி வைத்து, எண்ணெய் தேய்த்து, சடைபின்னி... எல்லாமே அவளாகவே 'விடியக்கால வேலைக்கு அம்மா போயிருக்கா. நம்ம வேலையை நாமதான் பார்த்துக்கணும்' என்கிற அக்கறை. பொறுப்புணர்வு. பெண்பிள்ளைக்குரிய மனச்சுபாவம்.

'எல்லாம்... எங்க அம்மா மாதிரிதான். அதே அச்சு. அப்பேறப்பட்ட தங்கப்புள்ளையை வாய்க்கு ருசியா வாங்கிப் போடாம... காயப்போட்டு ஏங்க வைச்சுட்டோமே...' என்கிற முள்குத்தலான நினைவுகள். அவனுள் குடைந்து ஊடுருவுகிற குற்ற உணர்வு.

தொழுவத்தில் எட்டிப் பார்த்தான். இவனைப் பார்த்ததும் ''ம்ம்ம்ம் க்க்க் ம்ம்மேய்ய்ய்க்'' கென்று அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து கனைக்கிற பசு. இடிமுழக்கத்தின் அதிர்வும் உருள்வுமாகத்தோன்றுகிற அதன் கனைப்புச் சத்தம்.

'புஞ்சைக்குப்போன எடத்துலே பசுவை நெனைச்சு புல்லைப் பறிக்கத் தெரியுது. பெத்தபுள்ளையோட ஆசை அறிஞ்சுக்கிடத் தெரியலே. நமக்கு.'

அலுமினிய வாளியில் இருந்த கழிவு தண்ணீரைத் தூக்கிக் கொண்டு போய்ப் பசுவின் முன் வைத்தான். அருகம்புல்லை அசை போட்டு அசைபோட்டு அதன் கடைவாயில் பச்சைநிற

நுரைகள் ஒழுகியது. பசித்தாகத்தில் ஆவல் பறப்போடு வாளிக்குள் வாய்வைத்த பசு, தண்ணீரைக் காலி செய்து விட்டுத்தான் தலையை நிமிர்த்தியது. தன் கரிய கண்ணில் மகிழ்ச்சி மின்னல்.

மறுபடியும் புல்லையள்ளிப் போட்டு விட்டு, அதன் முதுகில் ஒரு தட்டு தட்டி, பாசத்துடன் வருடிவிட்டு, காலைக் கஞ்சி குடிக்க வீட்டுக்குள் நுழைந்தவன் மனசுக்குள் கவலை இருட்டு. புண்ணை மொய்க்கிற ஈக்களாக வருத்த நினைவுகள். நினைவெல்லாம் மகள்.

'மண்ணைக் கட்டி மாரடிக்கிற சம்சாரி... கால நேரம் கணக்கு பார்க்காம பொழுதுக்கும் பாடுபட்டு உசுரை வேர்வையா வடிச்சாலும், பெத்தபுள்ளை ஆசைக்கு ஒரு நல்ல பலகாரம் வாங்கித் தர முடியலே. காலைக் கஞ்சிக்கு ஒரு கடிச்சிக் கிடை இல்லே... ம்ள்ச்சூ! என்ன பய பொழைப்பு!

விரக்திவசப்பட்ட மனசெல்லாம் பரவுகிற கசப்புணர்வு.

உண்ட மயக்கம் அவனுக்குள் ஒரு கிறுகிறுப்பை ஏற்படுத்துகிறது. தாமதமாகக் காலைக்கஞ்சி குடித்த ஆயாசமும் சேர்ந்து கொண்டது.

டீக்கடை போனான். "ஒரு டீ போடுப்பா."

அவன் பக்கத்திலிருந்தவனிடமிருந்து வந்த பிராந்தி வாடை. நல்ல மப்பில் இருந்தான்.

'ஏழு மாசமாச்சு. முத்துக்காளை கல்யாணத்தன்னிக்கு நடந்த பார்ட்டியிலே தண்ணியடிச்சது' என்று சம்பந்த மில்லாமல் நினைத்துக் கொண்டான்.

பத்து நாட்களுக்கும் மேலாயிற்று. ஒவ்வொரு நாளிலும் பல்வேறு சம்பவங்கள். பல்வேறு நினைவுகள். அந்தந்த நாளுக்குரிய நிகழ்வுகளின் சுவடுகளும், தழும்புகளும் பழைய தடங்களை அழித்துச் செல்கின்றன.

அன்றைக்குச் சாயங்காலம். காலடிநிழல் கிழக்காக நீள்கிறது. தெற்காட்டுப் புஞ்சையில் வேலையை முடித்துவிட்டு, பசுமாட்டைப் பத்திக்கொண்டு ஊருக்குள் நுழைகிற சங்கரபாண்டி. தன் நடையாக மெது நடை போடுகிற பசு. இவன் தலையில் புல்கட்டின் கனத்த பாரம்.

"சங்கரபாண்டி.... ஏப்பா... சங்கரபாண்டி."

பலத்த சத்தத்தின் அழைப்பு, முத்துமாமாவின் உரத்த குரல். நின்றான். அவரும் கிட்டத்தில் வந்தார்.

"என்ன மாமா.?"

"இந்தாப்பா... ஏரநூறு ரூவா. சரியாயிருக்கான்னு பார்த்துக்கோ."

"என்னத்துக்கு?"

"சங்கரன் கோவில் போயிருந்தப்ப... ஒங்கிட்டே வாங்குன கைமாத்து ரூவா. ஒனக்கு அயத்துப் போச்சா?"

"அது... ரெண்டு மாசத்துக்கு முந்தியில்லே?"

"எப்ப வாங்குனாலும்... கடன் கடன்தானே? வாங்குன கடன் அடைஞ்சாகணும், வழி நடந்தாகணும்."

அவர் போய்விட்டார். அந்த ரூபாயை நாலாக மடித்து, அண்டிராயர் பைக்குள் வைத்துக் கொண்டான்.

இந்தப் பணம் கொடுத்ததுவும் லட்சுமிக்குத் தெரியாது. வந்ததுவும் தெரியாது. லட்சுமியிடம் கணக்கு சொல்ல வேண்டியதில்லை. பதில் சொல்ல வேண்டியதில்லை.

அவனுக்குள் ஏதோ ஒரு கதவு திறந்துகொண்டது.

பசுவைத் தொழுவில் கட்டினான். கொண்டு வந்து போட்ட புல்கட்டிலிருந்து, புல்லையள்ளிப் போட்டான்.

அண்டிராயர் பைக்குள் உறுத்துகிற ரூபாய் மடிப்பு.

வைக்கோற் படப்புக்குப் பக்கத்தில் கிடந்த சைக்கிளை நிமிர்த்தினான். தூசியும் துப்பட்டையுமாக இருந்தது. பழைய துணியால் வண்டியைத் துடைத்தான். டயரில் நசுக்கிப் பார்த்தான். காற்று கிண்ணென்றிருந்தது.

"எங்க... தூரவா...?"

லட்சுமி கேட்டாள்.

"திருவேங்கடம் வரைக்கும்."

"என்ன ஜோலி."

"வந்து... சொல்லுதேன்."

அவனுக்கு ரகசியமான குறுஞ்சிரிப்பு, பெடலில் காலை வைத்தான். சைக்கிள் திருவேங்கடம் நோக்கிப் பறந்தது.

பைக்குள் ரூபாய் மடிப்பு. நூறு, நூற்றைம்பதில் ஒரு புதுச் சேலை எடுத்துக் கொண்டு வந்து, திடுதிப்பென்று நீட்டினால்... அவள் முகம் எப்படி விரியும்? எப்படி மலர்ந்து பூரிக்கும்? சந்தோஷத்தில் எப்படி திக்குமுக்காடி, திணறித் தவிப்பாள்?

அதை மனசுக்குள் நினைத்துப் பார்த்தால்...மீண்டும் அவனுக்குள் வெடிக்கிற குறுஞ்சிரிப்பு.

சைக்கிள் சாமிநாதபுரம் தாண்டியது. அந்திவெயிலின் தங்கமின்னல். கரிசல்மண்ணெல்லாம் வெயிலின் தங்கக் கரைசல்.

திருவேங்கடம் ஊருக்குள் போகிறவரை... எந்த ஜவுளிக்கடையில் சேலை எடுக்கலாம்... என்ன கலரில் எடுக்கலாம், என்று நினைவுகளில் மிதந்து வந்த சங்கரபாண்டி, திருவேங்கடத்துக்குள் நுழைந்தான். அவன் சைக்கிளை ஓரம்கட்டி நிறுத்தி, ஸ்டாண்டு போட்டு கிளிப்பை தட்டி நிமிர்ந்து பார்த்தால்–

டாஸ்மாக் கடை அரசின் ஒயின்ஷாப். அவனே எதிர் பார்க்கவில்லை. திகைத்துப்போய். சைக்கிளை எடுக்கப்போனவனுக்குள் திடுதிப் பென்று வந்த சபலபுத்தி. குரங்குத் தாவல்.

லட்சுமிக்குத் தெரியாத பணம். கணக்கு சொல்ல வேண்டியதில்லை. வந்தது தெரியாது. இஷ்டப்படி செலவழிக்கலாம்.

'அடிச்சு... ஏழு மாசமாச்சு. லேசா... அடிச்சுப் பார்த்தா... என்ன...'

சபலப்பட்ட மனசின் சரிவு. நிறமாறிய நினைவுகள். கடைப்படி ஏறினான்.

"எம்பது ரூவா பாட்டிலு ஒன்று."

பக்கவாட்டிலிருந்த பாருக்குள் நுழைந்து, உட்கார்ந்து, தண்ணீர் பாக்கட் வாங்கி, பிளாஸ்டிக் கிளாஸ் வாங்கி...

கையில் நடுக்கம். மனப்பரவசம். ஏதோ தப்பு செய்கிற மனசின் பதற்றம். மனப்பரபரப்பு. காய்ச்சல் கண்ட மாதிரியோர் குதுகுதுப்பு. உல்லாச விசிலடிப்பு.

இது புது அனுபவம். நல்லது, பொல்லது நிகழ்வுகளில் வேண்டப்பட்ட ஆட்களோடு ஆளாக தண்ணியடித்த பழக்கம். இப்படி காசு கொடுத்து வாங்கி, தனியாக அடிப்பது புதுசு.

அவனுக்குள் ஏதோ ஒரு குற்றக் குறுகுறுப்பு. ஆர்வப் படபடப்பு. பரவசச் சிலிர்ப்பு. முரண்பட்ட மனமுறுக்கு.

நாக்கில் மதுரத் தித்திப்பு, நெஞ்சுக்குள் ஒரு காந்தலான ருசிப் பரவல்.

வெளியே வந்தான். பக்கத்தில்தான் புரோட்டாக் கடை. "மூணு புரோட்டா" என்று ஆர்டர் கொடுத்துவிட்டு உட்கார்கிற போது... மிதப்பது போன்றதோர் பிரமை.

தொண்டை கமறியது. அடிக்கடி செருமுகிறான்.

புரோட்டாவையும் சால்னாவையும் பிசைகிறபோது... மனசில் ஓர் ஆவல் பறப்பு. பிய்த்துப் போட்ட புரோட்டா இணுக்குகளைப் பரவலாக நனைக்கிற சால்னா குழம்பு. அவனது கண்ணுக்குள் ஏதோ ஒரு நிழலாட்டம். எங்கோ பறப்பது போன்றதோர் மயக்கம்.

அடிவயிற்றிலிருந்து வருகிற பசி. ஆசைஆசையாக சாப்பிட்டான். நாலுவாய் சாப்பிட்டிருப்பான்.

கடைவாசலில் கல்லாப் பெட்டி முன்னால், காய்ந்த தலையுடன் ஒரு சிறுமி. அவள் கையில் சிறிய தூக்குச் சட்டி,

"ரெண்டு புரோட்டா பார்சல் குடுங்க. சால்னா கூடுதலா குடுங்க."

பார்சலுக்காகக் காத்திருக்கிற அந்தச் சிறுமியின் பார்வை, உள்ளுக்குள் மேய்கிறது. மேஜையில் மிதக்கிற பார்வை. சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிற சிறுமியின் கண்ணில் எச்சில் ஊறுகிறது. ஏக்கப் பார்வை.

இவனையும் பார்க்கிறாள். இவனும் பார்க்கிறான். ராஜமே அங்கு வந்து நின்று, ஏக்கமும் ஆசையுமாகப் பார்க்கிற மாதிரியோர் பிரமை. அவனுக்குள் அதிர்வலை.

அவ்வளவுதான்.

அவனுக்குள் குமட்டல் எடுக்கிற மாதிரியோர் உணர்வு. அடிவயிற்றின் புரள்வு. குடலின் சீர்குலைவு.

தன் மகளையே 'பார்க்க வைத்து' சாப்பிடுகிறேனா? அவனுக்கே அவன் அசிங்கமாகி... உள்ளுக்குள் பரவுகிற அருவருப்புணர்வு.

நல்லவேளை... வாந்தியெடுத்துவிடவில்லை. சாப்பிடவும் முடியவில்லை. சாப்பிடாமல் அப்படியே எடுத்துப் போட்டு விட்டு கைகழுவுகிற சங்கர பாண்டி,

"பெத்த புள்ளையோட ஆசையையும் ஏக்கத்தையும் காயப்போட்டு விட்டு... நான் மட்டும் ஆசைப்பட்ட படி குடிச்சு... வளைச்சுத் திங்கிறேனா...? நா... ஒரு தகப்பன்தானா? ஈரமுள்ள மனுச ஜெம்மந்தானா?"

செருமிச் செருமி காறித்துப்புகிற சங்கரபாண்டி காறித்துப்புகிற எல்லா எச்சிலும் அவன் முகத்திலேயே தெறிப்பது போன்றதோர் பிரமை. அசூயை.

''எனக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசம்? ச்சேய்... ச்சேய்...'' வாய்விட்டே முணுமுணுத்துக் கொள்கிற சங்கரபாண்டி.

லட்சுமிக்கும், ராஜத்திற்கும் புரோட்டா பார்சலும், கால்கிலோ இனிப்புப் பூந்தியும், கால்கிலோ அல்வாவும், கால்கிலோ பக்கோடாவும் வாங்கி... ஹாண்டில் பாரில் தொங்க விட்டு... சைக்கிளை எடுக்கிற போது,

அவனே அவனை மன்னிக்கத்துவங்கியிருந்தாலும், தன்னைத்தானே வைது கொள்வதை நிறுத்தவில்லை.

-திரிசக்தி, தீபாவளி மலர், 2009

7. அக்னி வாசம்

'பஞ்சாயத்துலே குத்தவாளியா தலை தொங்கிப் போய் நிக்குற மகனோட பேரப்பயலுக்கு என்ன தீர்ப்பு கிடைக்குமோ' என்பதில், எல்லாரைவிட கூடுதலான ஆவலோடு காத்துக் கிடக்கின்றாள், அங்காளம்மாள்.

"எடுக்காத எடுப்பை எடுத்துட்டான், மகனோட பேரன். தேவையில்லாத வேலைதான். என்ன செய்ய...? செய்ஞ்சுட்டான். அதுக்காக தண்டிச்சிர்றதா? மடியிலே 'ஆய்' இருந்துட்டா... பச்சைப் புள்ளையை என்ன செய்யறது? ஆசனவாயை அறுத்துர முடியுமா? இல்லே... தொடையைத்தான் அறுத்துர முடியுமா? மடியைக் கழுவித் துடைச்சிட்டு, புள்ளையைக் கொஞ்சத்தான் செய்யணும்... அதானே, மனுசத்தன்மை?"

அங்காளம்மாளின் மன நினைவுகள், வாய் முணுமுணுப்புகளாக வெளிக்கசிகின்றன. மகனும், மருமகளும் பதறித் தவித்துப் புலம்புகின்றனர். அவர்களின் மகனும் மருமகளும் 'கோ, குலை'யென்று கதறியழுகின்றனர்.

"மணிக் கொத்து மாதிரி... ஒத்தைப் புள்ளே பெத்து வளர்த்தோம்... அதையும் ஊர்ப்பஞ்சாயத்துலே தொலைச் சிரணுமா? அட, ஆயிரங் கண்ணுடையாளே... அங்காள பரமேஸ்வரியம்மா... நீதான் எங்க புள்ளையை காப்பாத்தணும்மா..."

அவநம்பிக்கையும் விரக்தியுமாக அழுது அங்கலாய்க்கிற பேரனின் பெஞ்சாதியின் கண்ணீரைப் பார்க்கிற அங்காளம்மாள்,

"என்னத்துக்கு அழுகுதே? கண்ணைத் தொடைச்சுக்கோ. ஒம்புள்ளைக்கு நல்லதுதான் நடக்கும்!" தைர்யம் சொல்கிற அங்காளம்மாள்.

குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிறாள், அங்காளம்மாள். தொண்ணூறத்தைந்துக்கும் மேலே வயது. எப்போதோ, உதிர்ந்திருக்க வேண்டிய நெற்று. இன்னும் பூமியில் தொங்கி உட்கார்ந்திருக்கிறது, அழுகின பழமாக.

குவித்து வைத்த கூடைச் சாணிமாதிரி இருக்கிறாள். குத்துக்கால் உயரத்துக்குள் மொத்த உடம்பும் துவண்டு சரிந்து கிடக்கிறது. கழுத்தில் நிற்க மாட்டாமல் ஆடுகிற தலை. சதையெல்லாம் காலமுதுமையில் கரைந்து போக... ஈரத் துணியாக சுருக்கங்கள் நிறைந்த தொலி ஒட்டிக் கிடக்கிறது. குழிக்குள் கிடக்கிற பீளை நிறைந்த கண்ணில், குன்றாத ஒளி. நடுங்கித் தொங்குகிற உதடுகளுக்குள், சிதைவு படாத வரிசைப்பறகள். இப்பவும், பட்டாணியை 'கொண்டா, கொண்டா எனக்கும்' 'கடூர், கடூரென கடித்து மெல்லும், பாம்படமில்லாத வெறும் காது, கயிறாகத் தொங்குகிறது.

"பஞ்சாயத்து பண்ணுற நாட்டாமை யாரு...?"

தலையாட்டம், கையாட்டம், கழுத்தாட்டம். கேட்கிற கேள்வியில் குரலும் நடுங்கியாடுகிறது.

"ரெங்கசாமிதானா?" அவளது தொடர் கேள்வி.

நிதானமும் சீர்குலையாத தைரியமுமாக கேள்வி கேட்கிற அவளிடம் யாரும் பேசத் தயாரில்லை. பதற்றமும் திகிலுமாக

பேயறைந்து நிற்கின்றனர். 'வரப்போகிற தண்டனை எத்தனை கடுமையாக இருக்குமோ' என்ற கிலி. பீதி படிந்த, கண்ணீரும் கதறலுமாக அவர்கள்.

அங்காளம்மாளின் நிதானமும் தைர்யமும் காலச் சூழலுக்குப் பொருந்தாமல் தனித்து நிற்கிறது, தண்ணீரில் எண்ணெயாக. 'கெழட்டு முண்டம்... நெலைமை தெரியாம கொஞ்சிக் குழாவுது' என்று வெறுப்பாகப் பார்க்கிற அவர்கள். அங்காளம்மாவுக்குள் மேளச்சத்தம், தவிலின் முரட்டதிர்வுகள். உறுமி மேளத்தின் உறுமல்கள், நெஞ்சுக்குள் ஆழத்தில் அறுக்கின்றன... பின்னோக்கி பின்னோக்கி... காலப் பெருவெள்ளம் பாய்ந்து பெருக்கெடுத்தோடி வந்த வாழ்க்கை நதியின் பழைய கதியில் நினைவு.

அங்காளத்துக்கு அப்ப வயது முப்பதுக்கும் மேல். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் காங்கிரஸ் பார்ட்டி லீடர் வைத்தியநாத அய்யர் தலைமையில் நாடார்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஆலயப்பிரவேசம் பண்ணி சாமி கும்பிட்டது, ஒரே பரபரப்பாகப் பேசப்பட்ட காலம். எங்கு திரும்பினாலும் இதுதான் பேச்சு.

"அப்பவும் அய்யருக்கு எதுக்கு இம்புட்டுச் சேட்டை?"

"எல்லாம்... முத்துராமலிங்கத் தேவரு குடுத்த தைர்யம். அவரு பக்கபலமா இருக்குற தெம்பு. சாமியைப் பார்க்கப் போய் வெட்டுப்பட்டுச் செத்த மூக்க நாடாரு கதையெல்லாம் நடந்த மதுரையிலே... இப்ப எல்லாத் தாழ்ந்த சாதிகளும் சாமி முன்னாலே."

"கலிகாலம்பா... காலம் செய்ற கூத்து."

“சுயராஜ்யம் மட்டும் கேட்டுக்கிட்டிருந்த காங்கிரஸ் பார்ட்டிக்கு, இதெல்லாம் என்னத்துக்கு?”

“சுயராஜ்யம் கேக்குறதுக்கு தங்களோட எல்லா சாதிசனமும் வரணும்லே? அதுக்குத்தான் இந்தச் சமூகச் சீர்திருத்தம்.”

“இருந்தாலும்... இது கடவுளுக்குப் பொறுக்காது.”

“எல்லா ஊர்களிலும் இதே பேச்சு. ஆதரித்தும் எதிர்த்துமாக பல்வேறு தொனியான பேச்சுகள். நாடு நகரமெல்லாம் இதன் அதிர்வுகள். சிறிய சிறிய அளவிலான ஆலயப் பிரவேசங்கள். சிறு தெய்வ சன்னதிகளுக்குள்ளும் துணிச்சலான கலவர நிலவரத்துடன் பிரவேசிப்புகள்.

இந்த ஊருக்குள்ளும் அதன் அதிர்வுகள். அதன் மங்கலான சத்தங்கள். ரெங்கசாமி அப்ப முழுத்த இளவட்டம். இருபத்திரண்டு வயது. துடிப்பான காங்கிரஸ்காரன். ரெங்கசாமி, நாடார். அவனுடன் கூடச்சேர்ந்த காங்கிரஸ் பார்ட்டி நண்பர்கள், பொன்னையா பிள்ளையும்... பெருமாள் சாமி நாயக்கரும்...

ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு ஊர்க் கிணறு. வட்டக் கிணறு. நாயக்கர், தேவர், நாடார் மூன்று சாதியினருக்கும் கிணறுகள். வட்டச்சுவர். உருளை மாட்டப்பட்டிருக்கும். கயிறும் வாளியும் போட்டு ‘கீச்சு, மூச்சீ’ என்று இழுப்பார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிணறுகள் கிடையாது. ஊரை ஒட்டியுள்ள விவசாயக் கிணறுகளின் வாய்க்கால் தண்ணீர்தான்... அவர்களுக்கு. அதுவும் கெஞ்சிக் கூத்தாடி

'ஐயா, சாமி' என்று கூழைக்கும்பிடு போட்டுத்தான் தண்ணீர் மோக்க முடியும்.

ரெங்கசாமி வந்து அங்காளம் வாசலில் வந்து நின்றான்.

''என்ன சாமி...?''

''நானும், பெருமாள் சாமி நாயக்கரும், பொன்னையா பிள்ளையும் கூடி, ஒரு முடிவுக்கு வந்துருக்கோம்.''

''என்னன்னு?''

''எங்க காங்கிரஸ் பார்ட்டி தலைமையிலே நாயக்கமாரு கெணத்துலே நீ போயி... தண்ணி இறைச்சு எடுக்கணும்..''

''நானா? எங்க சாதியாளுக அந்தக் கிணத்துக்கிட்டேயாச்சும் நெருங்க முடியுமா? நெருங்கிட்டு, உருப்படியா திரும்பிர முடியுமா?''

அங்காளத்தின் நெஞ்சம் பகீரென்றது. பதற்றத்தில் ஈரல் குலை நடுங்கியது. கண்ணில் அச்ச வெலவெலப்பு.

''என்னை வுட்ருங்க சாமி...''

ரெங்கசாமி சிலிர்ப்போடு கொந்தளித்தான்.

''சாமி, கீமிங்கிறதை மொதல்லே நிறுத்து. மனுசனுக்கு மான மரியாதை வேணும். சூடுசுரணை வேணும். ஈனத்தனமான சாதி, என்னத்துக்கு? எல்லாரும் ஒண்ணுதான். சரிநிகர் சமானம்தான்... இதான், காந்தியோட கொள்கை''

''ஒங்க கொள்கையெல்லாம் உங்களோட இருக்கட்டும். பெரிய சாதியாளுக பகையிலே என்னை இழுத்துத் தள்ளாதீக... பட்டிக்காடு. இங்க... நாங்க தாங்க மாட்டோம்.''

"உங்க சாதியிலேயே நீதான் துணிச்சலானவன்னு நாங்க ஒன்னை முடிவு பண்ணுனோம். நீயே இப்படிச் சொன்னா... எப்படி? நாங்க பக்கபலமா இருக்கோம். எங்க காங்கிரஸ் பார்ட்டி இருக்கு. மண்டலக் காங்கிரஸ் அக்ராசனர் வரப்போறாரு..."

ரொம்ப நேரம் பேசினான். துடிப்பான லட்சியப்பற்றுறுதியோடு, எச்சில் தெறிக்க, அனல் பறக்கப் பேசினான். கரைப்பார் கரைத்தால், கரையாததும் கரைந்துவிடுமே. எறும்பு ஊர ஊர... கல்லும் தேயுமே. அங்காளமும் சம்மதித்தாள், ஆகக்கடைசியில்.

"தாழ்ந்த சாதிப் பெண்ணை நாயக்கருமாரு கெணத்துலே தண்ணியெடுக்க வைக்கப் போகுதாம், காங்கிரஸ் பார்ட்டி, பெருமாள் சாமி நாயக்கரே இதுக்கு பக்கபலமாம்..."

நாயக்கமார் ஆட்கள் கொந்தளித்தார்கள். அரிவாள், கம்புகள் தயாரித்தார்கள்.

"இன்னிக்கு நாயக்கமார் கெணறு. விட்டுட்டா... நாளை நம்ம கெணறு" என்ற கொந்தளிப்பில் பிற சாதியினரும் கொதித்தனர்.

ஊரின் தட்பவெப்பமே மாறிற்று. 'வெட்டணும், குத்தணும். வேல் கம்பைச் சொருகணும்" என்று வீரச்சவடால்கள். வெப்ப அலைகளின் வேனல் தகிப்புகள்.

குறித்த நாளில்...

ஜில்லா காங்கிரஸ் பிரமுகர்கள் வில்வண்டிகளில் வந்து இறங்கினார்கள். கொடியும் நடையுமாக ஏகப்பட்ட தலைக்குல்லாக்கள். எல்லாரும் சேரியில் வந்து சேர்ந்தனர்.

சமபந்தி போஜனத்துக்கு பொன்னையா பிள்ளை வீட்டில் தடபுடலாக சமையல் நடந்துகொண்டிருந்தது.

ஆள் மாறி ஆளாக நாயக்கமார்கள் அங்காளத்தை வந்து பார்த்தனர். ''தொலைச்சிருவோம்...'' தொலியை உரிச்சிடுவோம்'' என்று நெருப்புச் சீறல்கள். மிரட்டல் வார்த்தைகளின் அரிவாள் வீச்சுகள்.

ஊர்த்திருவிழாவுக்கு வருகிறமாதிரி மேள கோஷ்டி வந்து சேர்ந்தது. ஒயிலாட்டக் கோஷ்டியும் வந்தது.

ஊரே... 'ஜேஜே' என்றிருந்தது. கோலாகலமும், கொந்தளிப்புமாக... குதூகலமும் கொதிப்புமாக... சந்தோஷ உற்சாகக் களி துள்ளலும், சண்டை மூள்வதற்கான மனத்திமிறல்களுமாக முரண்பட்ட ஜேஜேஜே...''

ஜில்லா அக்ராசனர் கோஷம் போட்டார். எல்லோரும் பின்பற்றி கூட்டுக் குரல்கள் எழுப்பினர்.

''பாரதமாதா கீ... ஜே...''

''சுயராஜ்யம் அடைந்தே தீருவோம்.''

''வந்தே மாதரம்.''

''காங்கிரஸ் பார்ட்டி ஜிந்தா பாத்.''

''சாதி எனும் அரக்கனை ஒழிப்போம்.''

கோஷம் முழக்கியவாறு அவர் முன் நகர... பின்னால் அணிவகுக்கிற ஊர்வலக் கொடித் தொண்டர்கள். பின்னால்... உயரத்தில் ஏந்திப் பிடித்த சமுக்காளப் பந்தல். அதன் நிழலில் மூவர்ணச் சேலையும், குடமும், கயிற்று வாளியுமாக வருகிற வீராங்கனையாக அங்காளம்.

அவளைச் சுற்றி பக்கபலமாக பெருமாள் சாமி நாயக்கர், ரெங்கசாமி, பொன்னையா பிள்ளை, மற்றும் உள்ளூர் காங்கிரஸ் தொண்டர்கள். அவர்களுக்குப் பின்னால், நாதஸ்வர முழக்கத்துடன் கொட்டுமேளப் பேரிடிகள். அடுத்து வருகிற ஒயிலாட்டக் குழு. லயம் தப்பாத தாளகதியுடன் கூடிய ஒயிலாட்டம்.

சேரியை விட்டுப் புறப்பட்ட ஊர்வலம், ஓடையைக் கடந்து ஊருக்குள் நுழைந்து... நாடார் தெரு, தேவர் தெருவைக் கடந்து, நாயக்கமார் தெருவுக்குள் பிரவேசிக்க...

ஊர்வலத்துக்குப் பக்கபலமாக ரெங்கசாமியின் உறவுக்காரர்கள். எல்லாரும் சிலம்பாட்ட மாவீரர்கள்.

உணர்ச்சிமயமான கொள்கை முழக்கங்கள். சுயநலமில்லாத லட்சியப் பெருக்கு. ஊர்வலத்தின் தொண்டர்கள் படை ஏகமாயிற்று. சிலம்பாட்ட வீரர்களின் இரும்புக் கம்பிகள் ஆகாயத்தில் சுழன்று சாகசம் செய்ய...

அரிவாள், கம்பு பம்மிற்று. வேல் கம்புகள் ஒதுங்கிற்று. அங்காளம் நாயக்கமார் கிணற்றில் நீரிறைத்து, குடம் நிரப்பி, இடுப்பில் தூக்கி வைக்கிறபோது...

அவளுக்கு ஒரு புதிய பரவசப் பெருக்கு. ஆனந்தத் துள்ளல். இடுப்பில் உலகையே தூக்கி வைத்த மாதிரியோர் கம்பீரப் பெருமிதத் ததும்பல்... சமத்துவத்தின் மதுர ருசி.

அந்த ரெங்கசாமிதான் எண்பத்தைந்து வயது நாட்டாமை. அங்காளம்மாளுடைய மகனின் பேரனுக்கு தீர்ப்பு சொல்லப் போகிற ஊர்த்தலைவர்.

உயர்சாதிக் குடும்பத்துப் பெண்ணைக் காதலிக்கிற பேரன். காதலில் பிடிவாதமாக நிற்கிற வாலிபன்.

''கட்டினால், அவளைத்தான் கட்டுவேன்'' என்று ஒற்றைக்காலில் நிற்கிறான்.

அவன் துணிச்சலுக்குக் கொஞ்சமும் குறையாமல் அந்தச் சிறு பெண்ணும். பயமறியாத இளங்கன்றுகள்.

ஊர்க்கூட்டம், பெருங்கூட்டமாகியிருந்தது. மனித வெக்கையின் அலை வீசுகிற அளவுக்கு, பெரும் கூட்டம். விசாரணையெல்லாம் முடிந்து விட்டது. ரெங்கசாமி தீர்ப்பு சொல்லப் போகிறார்.

''சாதியைத் தாண்டி காதலிச்ச பாவத்துக்கு நாலாயிர ரூவாய் அபராதம். அத்துடன் இந்தக் காதலன், 'யாதொரு சம்பந்தமுமில்லை' என்று கையெழுத்திட்டுவிட்டு, ஊரை விட்டே ஓடிப்போய் விட வேண்டும்...''

உயர்மட்டக்குழுவின் கூட்டு முடிவாக தயாராகி விட்ட தீர்ப்பை விளக்கிப் பேசுவது, ரெங்கசாமி பொறுப்பு.

வார்த்தைகளை உள்ளுக்குள் தயாரித்துக் கொண்டிருந்தார். 'தத்துவம் மாறலாம். கட்சி மாறலாம். மதம் மாறலாம். ஊர் மாறலாம், நாடு மாறலாம். எது மாறினாலும் தடையில்லை, சாதி மட்டும் மாற முடியாது. ஏனெனில் பிறப்பினால் வருவது, அது, பாயிண்டுகளை உள்ளுக்குள் அடுக்கிக் கொண்டிருந்தார். வரிசை மாற்றி அடுக்கிப் பார்த்தார். யோசனையின் அழுத்தத்தில் முகத் தீவிரம். தளர்ந்த உடம்பில், தாராளமாக விளையாடியிருக்கிற முதுமை. காலப் பயணத்தின் ரேகைகளாக முகச் சுருக்கங்கள். சத்தம் உயர்த்தி... தொண்டையைச் செருமினார்.

''எது வேணும்னாலும் மாற்றிக் கொள்ளலாம். சாதி மட்டும் மாற்றிக்க முடியாது...''

அப்போது..

கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னேறுகிற இரண்டு பேர், அவர்களால் தூக்கி வரப்படுகிற சதைப் பொட்டலமாக அங்காளம்மாள்.

"எளிய சாதிப் பொண்ணுகளை நேர்மையேயில்லாம கள்ளத்தனமாக மேய்ற மேல் சாதி ஆம்பளைக. அவுக வீட்டுப் பெண்ணை எளிய சாதிப் பையன் நேர்மையா ஆசைப்படக் கூடாதா? அதுதப்பா? மேல் சாதிக் கெணத்துலே எளிய சாதிப் பொண்ணு தண்ணி எடுக்கலாம். பொண்ணு எடுக்கக் கூடாதா? இது என்னய்யா? ஞாயம்? காலமும் வயசும் ஏற ஏற மனுசனுக்கு அறிவு பக்குவப்பட வேண்டாமா? ஒடம்பு கெழடான மாதிரி... மனசுமா கெழடாகணும்?"

அங்காளம்மாளின் பல் போகாத வாயிலிருந்து நடுக்க அதிர்வுகளோடு தெறித்த அனல் துண்டுகள். துணிந்த மனசின் சத்தியச் சீறல்கள்.

ரெங்கசாமி தர்மசங்கடமானார். கூட்டம் குணமிழந்து, திசை தவற... குழப்பமும் சண்டை சச்சரவுகளுமாக பூசல் புயல் கிளம்ப... இரு கூராக கூட்டம் பிளவுபட...

வீராங்கனையாக முழங்குகிற அந்தக் கிழவி.

சுயராஜ்ய தேசத்தில்... இரண்டாம் சுயராஜ்யப் போராட்டத்தின் அக்னி வாசம்.

-கல்கி, நவம்பர், 2009

8. வாரந்தோறும்

ஒன்பதாம் வகுப்பில் முழுப் பரீட்சை எழுதி முடித்து விட்டு, கோடை லீவில் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தான், தாழைச்சாமி. அக்கினி நட்சத்திர வெயிலெல்லாம் அவனால் கண்டு கொள்ளப்படாத எறும்புக் கடி மாதிரி. உச்சிமதிய வெயிலில் கிரிக்கெட் விளையாடுகிற மகிழ்ச்சி உக்கிரம். புருவ வியர்வையைக் கட்டை விரலால் வழித்தெறிந்து கொண்டு.... பேட்டை ஓங்கியடிக்க... ஓடி வந்த பந்து இரைச்சலுடன் ஆகாயத்தை நோக்கிப் பறக்க... ஃபீல்டர்ஸ் அண்ணாந்து பார்த்துக்கொண்டே பின்னோக்கி ஓடி, தடுமாறி விழுவதைப் பெருமிதமாக ரசிக்கிற தாழைச்சாமி. பூரிப்பும் களிவெறியுமாகக் குதிக்கிறான். நெஞ்சு விம்முகிறது.

''சிக்ஸ...ர், சிக்ஸ...ர்... சிக்ஸ...ர்'' என்று இவர்கள் போடுகிற கூப்பாடுகளிலும் கூச்சலிலும் சித்திரை மாத வெயில் நடுங்கியதிர்கிறது. தூரத்தில், மின்கம்ப உச்சியில் தோகை தொங்க உட்கார்ந்திருந்த ஆண்மயில், பயத்தில் திடுக்கிட்டு வீறிட்டலறுகிறது.

அந்த உற்சாக போதையிலும் மனசில் ஓடுகிற ஒரு நினைவு மின்னல். 'ஐயாகிட்டே ரூவா கேக்கணும். நைட்லே சினிமாவுக்குப் போகணும்.''

மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போகிறபோது, மணி மூணரையாகிவிட்டது. விளையாட்டு மும்முரத்தில் பசியும் நேரமும் போயிற்று.

ஊர்ப் பொங்கல் வருகிறது. அருள்மிகு சக்தி மாரியம்மன் கோவில் திருவிழா. 'வெள்ளையடிக்கணும், துணிமணி யெடுக்கணும், கறியெடுக்கணும், பலகாரம் தோசைக்குப் பணம் வேணும்... பொங்கல் வரி குடுக்கணும். இதுக்கெல்லாம் பணத்துக்கு எங்க போறது' என்ற மனச்சஞ்சலத்திலும், கவலையிலும் சோர்ந்து துவண்டு கிடந்த சாமிநாதன், திண்ணையில் உட்கார்ந்திருந்தான்.

ஆடி முடித்த களைப்பும், ஆனந்தத் திளைப்புமாக புழுதியும் வேர்வையும் படிந்து அழுக்கான தோற்றத்தில் வீடு நுழைகிற தாழை.

"என்ன... தொரைக, இப்பத்தான் வீடு தெரியுதா?"

"ம்ம்ம்... வெளையாடப் போயிருந்தேன்."

"சோத்தை திங்கவும் தொரைகளுக்கு நேரமில்லியோ?"

ஐயாவின் எகத்தாளமும் பரிகாசமுமான ஏளனக் கேள்விகள். இவனுக்குள் செருப்பால் அடிபட்ட மாதிரியிருக்கிறது.

மனசெல்லாம் முள் குத்தின வலி. பூரிப்பில் மலர்ந்து அகல மாகியிருந்த அந்தச் சிறிய முகம், உயிர்க்களையிழந்து, குறாவிப் போய்விட்டது.

"ரூவா... இப்பக் கேக்க முடியாது. நேரம் சீரில்லே" என்று வலியுடன் முணுமுணுத்துக் கொள்கிற தாழை.

இவனே... கையைக் காலைக் கழுவி, வட்டிலை எடுத்துக் கழுவி உதறி... பானைச் சோற்றில் கைவைத்துப் பெயர்த்து எடுத்தான். குழம்பு இருந்தது கொஞ்சமாய்.

பசி மந்தித்து விட்டது. ஆயினும். சாப்பிட்டான், தாழை. அவனுக்குள் முகம் காட்டுகிற இங்கிலீஷ் வாத்தியார். மீசையில்லாத முகம். ரத்தச் சிவப்பான கண்கள். அவர் வகுப்பு தான் ஒரே அச்சலாத்தி. ஓர் இழவும் புரியமாட்டேன் என்கிறது. அதிலும் அவர் நடத்துகிற கிராமர் பாடம். சுத்தமாக விளங்க மறுக்கிறது. கண்ணைக் கட்டி முள்காட்டில் விட்டமாதிரி இருக்கும். அவரிடம் பட்ட அடிகள் கொஞ்சமில்லை.

இங்கிலீஷில் நிச்சயம் பெயில்தான். சந்தேகமில்லை.

அம்மா வருகிறபோது ஐயா போய்விட்டார். நல்லவேளை.

"யம்மா..."

"என்னடா?"

"ஃப்ரெண்ட்ஸெல்லாம் சினிமாவுக்குப் போறாங்கம்மா..."

தொண்டைக்குள் சத்தமாகப் பேசுகிறான். குழைவான கெஞ்சல் குரல்.

"போவட்டும்... அதுக்கென்ன?"

"என்னையும் கூப்டுறாங்கம்மா."

"அதுக்கு?"

"பத்துரூவா வேணும்மா... ஐயா... கிட்டே கேக்கலாம்னா... அவரு நல்ல மூட்லே இல்லேம்மா."

"கூட்டாளிக போறப்ப... நீ போகாம இருந்தா, நல்லாயிருக்காது. நீ ஆசைப்படுறது ஞாயந்தான்."

"ரூவா குடும்மா..." ஆவல் பறப்பில் காற்றடித்த பலூனாக அவன்.

"அதானடா... ஏங்கிட்டே இல்லே... சல்லிக் காசுகூட இல்லே."

வெட்டுப்பட்டு வெயிலில் கிடந்த கொடியாக முகம் வாடிப்போன தாழை.

"ஏம்மா... ஒரு பத்து ரூவாகூட தரமாட்டீயாம்மா? அதுக்கும் விதியத்துப் போச்சா?"

அவன் குரலில் மனக்கொதிப்பின் வெப்பம்.

"ஊர்ப்பொங்கச் செலவுக்கு வழி தெரியாம கண்ணு முழி பிதுங்கிப் போயி நிக்குது, வீடு. நீ என்னடான்னா... சினிமாச் செலவுக்கு ரூவா கேட்டு கிணுங்குதே? தாய் தவுட்டுக்கு தவிச்சாளாம், புள்ளே இஞ்சிப்பச்சடி கேட்டுச்சாம்."

காட்டமில்லாத அம்மாவின் கோபக் குரலில், ஒருவித சோக நிழலே படிந்திருக்கிறது. இவனுக்குள் உணரமுடிகிறது.

'ஒரு சினிமாவுக்கு போறதுகூட.... இம்புட்டுப் பெரிய மலைப்புரட்டா இருக்குதே...'

மலையைப் புரட்டவே முடியவில்லை, கடைசி வரைக்கும்.

"ஏலேய்... தாழை, வாரீயா... வரல்லியா?"

"காசு இல்லேடா... நா வல்லேடா..."

இந்த வார்த்தையைச் சொல்லுகிறபோது, இவனுக்குள் ஓர் உடைவு. ஏமாற்ற அறையால் நிகழ்கிற மனச்சரிவு. அழுக

வேண்டும்போல ஒரு நெஞ்சுவிம்மல். பீறிட்டுப்பாய்கிற சோகத்தின் முட்டலில் கண்ணோரக்கசிவு.

இவனுக்குள் தாங்க முடியாத ஏக்க பாரம்.

ஊர், தன்னைத்தானே அலங்கரித்துக் கொண்டிருக்கிறது, பொங்கலுக்கு. கடன் உடன் வாங்கி... வீடு வெள்ளையடிப்புகள் தோரணப் பின்னல்கள், டிஜிடல் பேனர்கள். ஒரு தடவை அன்னதானத்துக்குப் பொறுப் பேற்று, பக்த கோடிகளை வரவேற்கிற 'அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி வகையறாக்களின்' வண்ண டிஜிடல் பேனர்.

மதுரை, சென்னை, கோவை, திருப்பூர், கேரளா என்று தொலைதூரத்திலிருந்து வந்து சேருகிற இந்த ஊரின் முன்னாள் வாசிகள். கோவில் திருவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு பிறந்த ஊர் மண்ணை வந்து மிதிக்கிற பரவசத்தை ருசிக்கிற வெளியூர் வாசிகள். கொண்டாட்ட குதூகலம். கூடி மகிழ்கிற மனப் பரவசம்.

பேருந்துகளிலிருந்து கூட்டம் கூட்டமாக பேக்கும் சூட்கேஸுமாக இறங்குகிற ஆட்கள். வெள்ளையும் வெளிச்சமுமாக ஆட்கள்.

பஸ் ஸ்டாண்டிலேயே காத்திருக்கிற தாழை. பஸ்ஸிலிருந்து இறங்குகிற ஒவ்வொரு முகத்தையும் உற்று உற்று கவனிக்கிறான்.

ஏழாப்பு வரைக்கும் இவனுடன் படித்த ஆறுமுகம், இப்போது சென்னையில் மளிகைக்கடையில் வேலை பார்க்கிறான். பொங்கலுக்கு ஊர் வருவதாகச் சொல்லியிருக்கிறான்.

அவனைப் பார்த்து ரெண்டு வருஷமாகிவிட்டது. அவனுக்குப் பட்டப் பெயரே... கந்தலு. என்றைக்குப் பார்த்தாலும் கிழிந்த டவுஷரோ... கிழிந்த சட்டையோ தான் போட்டிருப்பான். கிழியாத சட்டை போட்ட நாளே கிடையாது. எண்ணெய் காணாமல் செம்பட்டையாகிப்போன தலைமுடி. சொங்கு பற்றிய தேகம்.

"ஏலேய் கந்தலு... ஏலேய் கந்தலு"ன்னுதான் அவனைக் கூப்பிடுவார்கள். ஆறுமுகம் என்ற அழகுப் பெயர் யார் நினைவிலும் இருக்காது.

பாதி வெள்ளையும் மீதி சாம்பலுமாயிருந்த ஜீன்ஸ், கட்டம் போட்ட முழுக்கைச் சட்டை, கருப்பாக இல்லாத கூலிங் கிளாஸ் பெரிய பேக்குடன் வந்து இறங்கிய ஒருவன்.

அடையாளமே தெரியவில்லை.

"ஏலேய் தாழை" என்கிற பரிச்சயக் குரல். திடுக்கிட்டான். "யாரு... இது? ஆறுமுகமா?" ஆச்சரியமும் வியப்புமாகத் திகைக்கிற தாழை.

அதற்குள் சிணுங்குகிற செல்போன். முழங்கால் பையிலிருந்து எடுத்துப் பேசினான்.

"வந்துட்டேன்... இப்பத்தான்... ஆட்டும்... ஆட்டும்... தேடிப் பாக்குறேன்... சரி... சரி... ட்ரை பண்றேன்... கெடைக்கும்... கையோட கூட்டிட்டு வந்துருதேன்..."

போனை அணைத்து பைக்குள் போட்டான். தாழைச்சாமியின் தோளில் கை போட்டான்.

"என்னடா... தாழை நல்லாயிருக்கீயா?"

“இருக்கேன்... என்னத்தையோ” சோர்வும் அயற்சியுமாக தாழையின் குரல்.

“ஒனக்கென்னடா, ராசா. அம்மா அய்யா கூட சாப்பிட்டுக்கிட்டு... வீட்லே இருக்கே. ஸ்கூலுக்குப் போறே. என்னை மாதிரி மளிகைக் கடையிலே... தூரந்தொலைவுலே... அறியாத ஜனங்களோட... சீரழியுறே?”

“இப்பப் பாத்தா... நீதான் ஆபீஸர் மாதிரி டிப் - டாப்பா இருக்கே... ஆள்... ‘ஜம்ம்’ முன்னு இருக்கே...”

“இது ஊருக்கு வர்றதுக்காக போட்ட வேஷம்டா. அங்க உண்ண நேரமிருக்காது... ஒறங்க நேரமிருக்காது. கக்கூஸ் போக பொழுதிருக்காது. பொழுதுக்கும் கடைக்குள்ளே கெடந்து வேகணும், சாகணும்டா.”

அவன் இவனைப் பார்த்து பொறாமைப்பட... இவன் அவனைப் பார்த்து பிரமிக்க... பரஸ்பரம் பேசிக் கொள்ள வண்டிவண்டியாக விஷயம் இருக்கிறது. டீக்கடையில் இருவரும் டீயடித்த பிறகு, ஆறுமுகம் அவன் வீட்டுக்குப் போனான்.

தாழையும் ஆறுமுகமும் மூன்று நாளும் கூடவே அலைந்தார்கள். கோவிலில் அன்னதானம். தெருவில் நடை. வண்டி வண்டியாக பேச்சு. பேச்சு... பேச்சுகள்.

ஆறுமுகம், ஞாயிற்றுக்கிழமையின் மாலைப் பொழுதைச் சொன்னான். கொஞ்சம் விட்டு விடுதலையாகிற தப்பித்தல் நேரம். பீச்சுக்குப் போய் கடல் மணலில் கால் புதைய நடந்து விட்டு... வாய்க்கு ருசியாக ஒட்டலில் சாப்பிட்டு விட்டு... சினிமாவுக்குப் போய்விட்டு, வீடு வந்துசேர ராத்திரி மணி பன்னிரண்டாகி விடும்.

அவன் பார்க்காத சினிமாவே இல்லை. 'பசங்க'கூட பார்த்து விட்டான். 'கல்லூரி'யை மட்டும் மூன்று தடவை பார்த்திருக்கிறான். 'பூ'படம் நாலு தடவை பார்த்தானாம்.

புத்தம் புதுப் படங்களையெல்லாம் சுடச்சுட பார்த்து விடுகிறான். பார்த்த சினிமாக்களைப்பற்றி ஆறுமுகம் சொல்லச் சொல்ல... இவனுக்குள் வருகிற ஏக்கம். மெல்லிய பொறாமை.

"ஆயிரந்தான் இருந்தாலும்... ஒன்னைமாதிரி யோகம் யாருக்கும் அமையாதுடா... அம்மா, ஐயாகூட இருப்பு. வீட்டுச் சாப்பாடு. பாசமான பேச்சு. பள்ளிப் படிப்பு. கிரிக்கெட் விளையாட்டு." என்று ஆறுமுகம் சொல்கிற போது, அதை இவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. இவனுக்குள் ஒட்டாத குரலாக அது இருந்தது.

தாழைக்குள் சினிமா அரங்குகள். வாரா வாரம் புதுப் படம் ஒவ்வொரு ஞாயிறும் சினிமா சொர்க்க தரிசனம்.

அவனுக்குள் விரிகிற மாய உலகம். அதன் ஈர்ப்பு, காந்தக் கவர்ச்சி. அந்த மயக்கத்தில்... அவன்.

"டேய்... தாழை, நா போறப்ப... ரெண்டு பையங்களோட போகணும். கடைக்குத் தேவைப்படுது. நம்ம ஊர்லே யாரும் வருவாங்களாடா?"

"என்னடா சொல்றே?"

"எங்க கடை ஓனர் பத்தாயிரம் ரூவா குடுத்து வுட்டுருக்காரு."

"எதுக்கு?"

''பையன் கெடைச்சா... வீட்டுக்கு ஐயாயிரம் ரூவா முன் அட்வான்ஸ் குடுத்து, கூட்டிட்டு வரச் சொல்லியிருக்காரு...''

ஆறுமுகத்தை நின்று நிதானித்துப் பார்க்கிற தாழைச்சாமி. சற்றே யோசிக்கிற அவன்.

மிரட்டுகிற இங்கிலீஷ். வரப்போகிற பெயில் என்கிற ரிசல்ட். பழைய சினிமா பார்க்கக்கூட பணம் கிடைக்காத நிலைமை. வறட்டிழுப்பு வாழ்க்கை. தவிட்டுக்கு தவிப்பு.

''பேசாம... நாம போய்ட்டா... என்னா?''

''என்னடா தாழை?''

''நா வாரேண்டா...''

''எங்க?''

''கடைக்கு?''

அதிர்ச்சியில் பதறித் துடிக்கிற ஆறுமுகம்.

''ஒனக்கென்ன கிறுக்கு பிடிச்சிருச்சா? மடத்தனமா பேசுறே?''

ஆறுமுகத்தின் மறுப்புகள், தடுப்பு முயற்சிகள்... கோப வார்த்தைகள், மிரட்டல்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு 'வாரந்தோறும் சினிமா' என்ற மயக்கத்தோடு தன்னுடன் பஸ்ஸில் பயணம் செய்கிற தாழையைப் பரிதாபமாகப் பார்க்கிற ஆறுமுகம்.

''பொங்கலுக்கு வெட்டுப்படாத கிடா, மளிகைக் கடைக்கு வருது' என்று நினைக்கிறபோது, அவனுக்குள் ஒரு சோக இருட்டு கவ்வுகிறது.

-ஓம்சக்தி, அக்டோபர், 2009.

9. ஆகாய விரிவு

ஆடி அமாவாசை ரொம்ப விசேஷம். தமிழ் கிராமத்து ஜனங்கள், லாரிலாரியாகப் புறப்படுகிற கோலாகலம். ஏகப்பட்ட லோடுவேன்களில் கூட்டம் கூட்டமாக ஜனப் பெருக்கு. ஆணும் பெண்ணும்... கிழடுகளும் இளவட்டங்களுமாக உற்சாகக் கூப்பாடுகள். எல்லாம் கிராமத்தாள்கள். எண்ணெய் வழிகிற கருப்பு முகங்கள், கண்ணில் அடிக்கிற வண்ணச் சேலைகள்.

தென் மாவட்டம் பூராவும் ஒட்டுமொத்தமாகப் படையெடுக்கிற ஜனத் திருவிழா. தாணிப்பாறை சுந்திரமகாலிங்கம் கோவில், மலைமேல் ஏழுமைல் உயரத்தில் இருக்கிறது. தரைமட்டம் பூராவிலும் ஜனத்தலைகள். ஆற்று மணல் பூராவும் மாட்டு வண்டிகள்... லாரிகள்... வேன்கள். வாகன நெரிசல்கள்.

அதிலும்... இந்த வருஷ ஆடி அமாவாசை, சரியாக வெள்ளிக்கிழமையாக அமைந்துவிட்டது. ஜனங்களுக்கு சாமியே அருள் இறங்கிய மாதிரி... பக்திப் பெருக்கில் ஆடித் திளைக்கின்றனர்.

சிவகாசி பஸ் ஸ்டாண்டில் எல்லா பஸ்களிலும் 'தாணிப்பாறை' என்ற காகித போர்டுகள்.

வெவ்வேறு ஊர்களுக்குப் போய்க் கொண்டிருந்த பஸ்களெல்லாம்... பக்தர்கள் நலம் நாடி... 'ஸ்பெஷல்' அடிக்கின்றன. 'தாணிப்பாறை' என்ற காகித போர்டை ஏந்துகின்றன, நெற்றிப் பொட்டாக.

இன்றைக்குப் பார்த்து... நான் இந்தப் பயணத்தில் மாட்டிக் கொண்டேன். ஒரு முக்கியமான கூட்டம். ஆடி அமாவாசை வெள்ளியன்று... தமிழ் ஜனமே, சுந்தர மகாலிங்கம் கோவிலுக்கு இடம் மாறும் அளவுக்கு கூட்டம் திமிலோகப்படும் என்று எனக்குத் தெரியாது.

ஆடியைக் கண்டேனா... அமாவாசையை நினைத்தேனா... வெள்ளியை யோசித்தேனா... ஒண்ணடியும் மண்ணடியுமாக வாழ்கிற சாமான்ய மக்களின் உணர்வுகளை உணர்ந்தேனா? ஓர் இழவும் இல்லை.

எனக்குத் தெரிந்ததெல்லாம்... ஒப்புக்கொண்ட தேதி, ஒப்புக் கொண்ட கூட்டம். அதில் பேச வேண்டிய உரை. அதன் தலைப்பு. அதைச் சுற்றியே யோசிப்பு. யோசிப்புகள்.

என் உலகமே, இதுதான்...

சிவகாசி பஸ் ஸ்டாண்டில்... அலை மோதிப் பார்க்கிற ஜனக்கூட்டமும், எல்லா வண்டிகளிலும் அப்பிக் கொண்டு போகிற ஆவேசமும்... 'தாணிப்பாறை... தாணிப்பாறை' என்ற சத்தப் பேரலைகளும் தான்... எனக்கு 'பொது உலகம்' ஒன்று இருப்பதை உணர்த்துகிறது.

சிவகாசிக்கு பஸ்ஸில் வருகிறபோது... எதிரில் வருகிற லாரிகளில் நெருக்கமாக நின்று கொண்டு போகிற கிராமத்தாட்களைப் பார்க்கிறேன். வேன்களில்... லோடு வேன்களிலெல்லாம் ஜனப் பேரலைகள். கிராமத்து வியர்வைக் கருப்பு மனிதர்கள்.

நான் வந்து கொண்டிருந்த டவுன் பஸ்ஸில்கூட... வழக்கமான போர்டை எடுத்து ஓரங்கட்டிவிட்டு,

'தாணிப்பாறை' என்கிற அட்டையை சொருகுகிற கண்டக்டர்.

'அடுத்து... நம்ம ரூட்டுக்கு டயமெடுக்கலியா?''

''இல்லே சார்... தாணிப்பாறை ஸ்பெஷல் அடிக்கச் சொல்லி... ஆர்டர்.''

சிவகாசி பஸ் ஸ்டாண்டில்... மக்கள் அலை மோதிப் பரபரக்கிற ஆவேசத்தையும். வருகிற எல்லா பஸ்களையும் சுள்ளென்று ஓடிப்போய் அப்புவதையும்... ஓடுகிற பஸ்களிலும் ஓடிப்போய் ஏறுகிற சாகசங்களையும் பார்த்ததுமே மிரண்டுவிட்டேன்.

இந்த பயங்கர உக்கிரத்துலே... நா எந்த பஸ்லே ஏறுவது? எப்படி ஏறுவது? நடக்கிற காரியமா?

மலைப்பும் மருட்சியுமாக நான் திகைத்து நிற்கிறேன்.

''கூட்டத்திற்கு வர இயலாது'' என்று செல்போனில் சொல்லி விடலாமா என்றொரு மின்னல். கூட்டப் பேரலைகளின் சுனாமி ஆர்ப்பரிப்பு கண்டு 'டர்ர்ர்' ராகி விட்டேன்.

சொல்லியும் பிரயோசனமில்லை. இனிமேல்... ஊர் திரும்பவும் பஸ்ஸில்லை. 'என்னடா வம்பாப் போச்சு' என்று திண்டாடித் தவிக்கிறேன். மலைத்து மருகுகிறேன்.

என் முகத்தையே பார்க்கிற ஒருவர். வெள்ளை வேட்டி. காலில் ஷு போன்றதொரு செருப்பு. சந்தனக் கலர் சட்டை. சற்று பெரிய சட்டை. கனிந்த சிவப்பிலான முகம். புன்னகைக்கிற இனிய கண்கள். உதடுகளின் ஈரமின்னலாக அன்புணர்ச்சி.

பதைப்பும், திகைப்புமாக... மருட்சியும் புலம்பலுமாக... முள்மேல் நிற்கிறவனைப்போல தத்தளித்துப் போயிருக்கிற என்முகத்தில்... என் மன இருட்டு. கவலைநிழல். குழப்ப ரேகைகள்.

“என்னங்க...” என்கிறார் தயக்கமாக. என்னை என்ன சொல்லி அழைப்பது என்ற திகைப்பு, அவருக்கு.

“என்ன?” என்கிறேன்.

“பஸ்லே ஏற முடியுமான்னு பயப்படுறீகளா?”

அசட்டுத்தனமாக சிரிக்கிற என் உதடுகள்.

“பயப்படுறதா? நடுங்குதேன்...”

“எங்க போகணும்?”

“ராஜபாளையம் போகணும்.”

“முக்கியமான விஷயமா?”

“ரொம்ப ரொம்ப முக்கியமான கூட்டம்.”

“நானும் பஸ்ஸுக்குத்தான் வந்தேன்... பஸ்லே ஏறமுடியும்னு தோணலே. எங்க வீட்டுக்குப் போன் பண்ணி, காரை வரச் சொல்லியிருக்கேன்...”

“அப்படியா?”

“நீங்க விரும்புனா... எங்கூட வரலாம்.”

எனக்குள் மூச்சுமுட்டிக் கொண்டிருந்த மனக் கதவு பளாரென்று திறந்து கொண்ட மாதிரியோர்... ஆசுவாசம். சளாரென்று வெளிச்சமும், காற்றும் உள் பாய்ந்த பரவசம்.

"ரொம்ப, ரொம்ப நல்லதாப் போச்சு... ரொம்ப தேங்க்ஸ்... எனக்கு இப்பத்தான் உயிரே வந்த மாதிரியிருக்கு..."

எனது மகிழ்ச்சியையும், மன நெகிழ்ச்சியையும் வார்த்தைப்படுத்த முடியாமல் தத்தளிக்கிற நான் தடுமாறுகிறேன்.

"நீங்க எங்க போறீக?"

"தென்காசி. நீங்க ராஜபாளையம் தானே?"

"ஆமா..."

நானும் அவரும் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு நடுவயதுக்காரர் "நாங்களும் சீல்த்தூர் (ஸ்ரீவில்லிபுத்தூர்) வரைக்கும் கூட வரலாமா?" என்று பதைப்புடன் கேட்கிறார்.

"நாங்கன்னா...?"

"நானும் என்னோட மச்சினரும். ரெண்டு பேரு."

"எங்க போறீக?"

"தாணிப்பாறைதான் போகணும். ஆடி அமாவாசை வெள்ளி. நல்ல நாள். சாமி கும்பிடப் போறோம். சீல்த்தூர் போய்ட்டா... அங்க இருந்து பக்கம்தான்."

"சரி... வாங்க. சீல்த்தூர் பஸ் ஸ்டாண்டுலே எறக்கி வுட்டுடுறேன்..."

"நீங்க... தெய்வம்போல. நல்லாயிருக்கணும். நாங்க கும்புடுற சாமி ஒங்களையும் காப்பாத்தணும்."

நடுவயதுக்காரர் நெகிழ்ந்து குழைந்த மனசுடன் வாழ்த்துகிறார். அவர் நன்றி சொல்கிற பாங்கே... ரொம்ப இயல்பாக இருந்தது. 'ரொம்ப தேங்க்ஸ்'லேயிருக்கிற உயிரற்ற சம்பிரதாயம் - உணர்வில்லாத யந்திரத்தனம் - இல்லாமல், வாழ்த்தாக அமைகிற நன்றி. மனசின் குழைவே, வார்த்தை வடிவம் எடுத்த மாதிரியிருக்கிறது.

சந்தனச் சட்டைக்காரரின் பெருமிதப் புன்னகையில் சிறிய மீசை விரிகிறது.

அடுத்த சில நிமிஷங்களில் வெளி வாசலோரம் வந்து நின்ற அம்பாஸிடர்கார். பால்நிற வெள்ளை. முன்பக்கம் அவர். பின்சீட்டில் நாங்கள் மூவர். ஓசி டிக் கட்கள்.

டிக்கட்டேயில்லை. ஓசிகள்.

நடுவயதுக்காரர், நடுவில். அந்த ஓரம் அவரது மச்சினர் இந்த ஓரம், நான். எனது மடியில் எனது பேக்.

கார் புறப்பட்டவுடன்,

எனக்குள் ஏற்பட்ட ஆசுவாசம், பக்தி விமர்சனமாக வெளிப்பட்டது.

''யப்ப்ப்பா...ஆ! தப்பிச்சாச்சு. அப்பவும், சாமி கும்புடுறதுங்குற பேர்லே இம்புட்டுக் கூட்டமா? இம்புட்டு நெருக்கடிகளா? இம்புட்டு சீரழிவுகளா?''

நடுவயதுக்காரர் சுர்ரென்று கோபத்துடன் குறுக்கிட்டார். சீண்டப்பட்டு விட்ட ஆத்திரம்.

''கல்யாணம் காட்சி முடிச்சாலும் கூட்டம் இருக்கும். நெருக்கடி இருக்கும். சங்கடம் இருக்கத்தான் செய்யும்.

அதுக்காக... கல்யாணம் மூய்க்காம இருந்துர முடியுமா? சாமி கும்புடாம இருந்துர முடியுமா?''

அவர் கேள்விக்கு என்னுள் பதிலற்று, வெறுமையாகியிருந்தேன். பதிலைத் தேடி, வாக்குவாதம் வளர்க்கவும் விருப்பமில்லை. ஓசிப் பயணத்தில்... ஒரேயடியாக உரிமை எடுத்துக் கொள்வதா? தோற்றுவிடவும் சம்மதமில்லை.

''ஆடி வெள்ளிங்குறது வருஷத்துலே ஒருநாள். ஆடி வெள்ளியிலேயே அமாவாசை அமையுறது, அதைவிட அதிசயம்... இப்படிப்பட்ட நாள் பொருத்தம் அமையுமா?''

நெகிழ்ந்து போகிற அவரைச் சீண்டிப் பார்க்கிற ஆசை, என்னுள் முள்ளாக நீள்கிறது. வாக்குவாதமாக நீண்டாலும் பரவாயில்லை.

''ஆடி மாசமே, ஆட வைக்குற மாசம். அமாவாசையும் இருட்டு. நல்லதுல்லே. இதுலே அமங்கலம் தானே, ரொம்ப இருக்கு?''

''மண்ணுலே பாடுபடுற மனுசருக்கு ஆடிப்பட்டம் தேடிக் கிடைக்குற அபூர்வம். ஆடிமாசம், நஞ்சைக் காரனுக்கும், புஞ்சைக்காரனுக்கும் அள்ளிக்குடுக்குற விதைப்பு மாசம். முந்திக்காலத்துலேயெல்லாம் புதுசா கல்யாணமான தம்பதிக்கு, தலைதீவாளியெல்லாம் கிடையாது. தலையாடிதான், ரொம்ப ரொம்ப விசேஷம். ஆடி மாசம், ஆட வைக்குற மாசம்னு இடையிலே யாரோ எப்படியோ ஆக்கிட்டாக...! ஆடித்தபசு... ஆடிவெள்ளி...ன்னு ரொம்ப

ரொம்ப முக்கியமான பண்டிகையெல்லாம் இந்த மாசம்தான் வருது, சிவனை, முருகனை, அம்மனைக் கும்புடுறவுகளுக்கு.''

''சாமிகும்புடுறதே... மன அமைதிக்குத்தானே? இந்த இடிபாடுலேயும், தள்ளு முள்ளுலேயும் மன அமைதி எங்குட்டு வரும்?''

''மன அமைதிக்காகப் பூஜைபண்றதெல்லாம் அறிவாளி, ஒசந்த சாதியாளுக செய்யறது. நாங்க சாமி கும்புடுறது, எங்க சொகத்துக்குத்தான். காடுகரை வெளையணும்; மாடுகன்னு செழிக்கணும்; மனுச மக்க நோய் நொடியில்லாம, நொம்பலமில்லாம... செல்வசுபிட்சத்தோட வாழணும்னுதான்.''

''ஒழைச்சாத்தான் இதெல்லாம் நடக்கும். சாமியை கும்புட்டுட்டா... நடக்குமா?''

''ஒழைக்காம சாமி கும்புடுறவன்தான், முட்டாப்பயக. உடல் நிறைய ஒழைக்கவும் செய்யணும். மனசு நிறைய சாமி கும்புடணும். பொழைப்பை நேராக்க மல்லுக்கட்டுற மனசுக்கு தைர்யம் தர்றது, சாமி.''

கார், ஸ்டேட் பாங்க் தாண்டி.... பள்ளி, கண் ஆஸ்பத்திரி, தண்ணீர்த்தொட்டி என்று விரைகிறது. காருக்குள் காற்று மோதுகிறது.

''காரை நிறுத்தப்பா... ஒரங்கட்டு...''

சந்தனச் சட்டைக்காரர் இளநீர்க் கடையில் இருக்கிற இளைஞரை அழைக்கிறார்.

''தம்பி...''

''என்னங்க?''

''அஞ்சு எளநி வெட்டு...''

நான் பதறுகிறேன். ஒரு வேகத்தில் குறுக்கிடுகிறேன்.

"கார்லே ஏத்துனதே... பெரிய புண்ணியம். இது வேற செலவா? வேண்டவே வேண்டாம். தம்பி, எளநி வெட்டாதே..."

"நீ, வெட்டு" என்கிற சந்தனச் சட்டை.

"வீட்டுக்கு வர்றவுகளை ஆகாரம் குடுத்து உபசரிக்கணும். இது மனுச நாகரிகம். என்னோட காருக்குள்ளே வந்துருக்குற உங்களை... வெறும் வயிற்றோடா... எறக்கி வுடுறது?"

அவரது புன்னகையும், முகவிரிவும் பெருந்தன்மைப் பூமலர்வுபோல ஒளி வீசுகிறது.

பக்கத்தில் ஒரு வெற்றிலை பாக்குக்கடை. தொங்குகிற புத்தகங்கள். பெட்டிக்கு முன்னால் தொங்குகிற நாளிதழ் போஸ்டர்கள்.

"பெங்களூருவில் தொடர் குண்டு வெடிப்பு. பதற்றம் தொடர்கிறது."

"குஜராத்தில் சங்கிலித் தொடர் குண்டு வெடிப்பு. சாவு எண்ணிக்கை உயர்கிறது."

"மீனாட்சியம்மன் ஆலயத்துக்கு ஆபத்தா?"

விதம் விதமான வாசகங்கள். ரத்த பயங்கரமான வாசகங்கள். சதைச்சிதறல்களையும் மனித உயிர்கள் துடிப்புகளையும் நினைவூட்டுகிற ரத்த வாசகங்கள். திகிலூட்டுகிற வாக்கியங்கள்.

நடுவயதுக்காரரின் மச்சினர், எரிச்சலும், கடுப்புமாக முணுமுணுக்கிறார்.

வண்டி புறப்பட்டு, ரெயில்வே கேட்டைத் தாண்டி, ரிசர்வ் லைனுக்குள் பிரவேசிக்கிறது.

“என்ன முணுமுணுக்குறீக?”

“ராவுத்தமாருக்கு இதே சோலியாப் போச்சு. குண்டு வைச்சு கொலை பாதகம் செய்றதே பொழைப்பாய்ப் போச்சு...”

எனக்குள் பிரமிப்பாக இருக்கிறது. அமெரிக்கா, ஆசைப்படுகிறது, அனைத்து இஸ்லாமியர்களையும் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்த.

அதை வெற்றிகரமாக ஊடகங்கள் நிறைவேற்றி விட்டதே... ஒரு கிராமத்தாளைக்கூட.... ஒட்டு மொத்த ராவுத்தமாரையும் திட்ட வைப்பதில் வெறுக்க வைப்பதில். ஜெயித்து விட்டதே...

“டெல்லியிலே குண்டு... குஜராத்லே குண்டு... நாடு பூராவும் குண்டு வெடிப்புகள். குண்டு வைக்குற கொடுமையெல்லாம், குல்லாக்காரங்க செய்றாங்க. அப்புராணி சனங்க செத்து மடியுது...”

சந்தனச் சட்டைக்காரர் கழுத்தை இடது பக்கமாகத் திருப்பி... அந்த இளைஞரைப் பார்க்கிறார். பார்த்து விட்டு என்னைப் பார்க்கிறார். அப்புறம், டிரைவரிடம் சொல்கிறார்.

“வண்டியைப் பாத்து ஓட்டுப்பா...”

“தாணிப்பாறை போற லாரி, வேன்களாலேதான் டிராபிக் சிக்கலாகுது.”

“எல்லாம்... இன்னைக்கு ‘ஒருநா’த்தானே? நீ பொறுமையா... ஒதுங்கிப் போ...”

நான் அந்த ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் இளைஞரை எட்டிப் பார்க்கிறேன். எனக்குள் பொங்கிப் பெருகும் கோபத்தை... சற்றே மென்மைப்படுத்த யத்தனிக்கிறேன்.

"அல்லாவைக் கும்புடுற எல்லா ராவுத்தர்களையும் ஒட்டு மொத்தமா... சகட்டுமேனிக்கு... திட்டாதீக. அவுக எல்லாருமே பாதுகாப்பற்ற பயத்துலே யோக்கியமா... மனுச ஈரத்தோட இருக்காக..."

"அப்ப... குண்டு வைக்குறதெல்லாம் தீவிரவாதிக இல்லியா? அவுக ராவுத்தமாரு இல்லியா?"

"ஒண்ணு ரெண்டு தீவிரவாத இயக்கங்க இதே சோலியா இருக்குறது, உண்மைதான். இல்லேங்கல்லே... ஆனா... எல்லா குல்லாக்களும் குண்டு வைக்குதுன்னு சகட்டுமேனிக்கு சொல்லக் கூடாதுல்லே?"

"எல்லா குல்லாக்களும் குண்டு வைக்காட்டாலும்... குண்டு வெடிச்சு சாவுற மனுச உயிர்களைப் பாத்து... ரகசியமா ரசிக்கத்தானே செய்றாக?"

"பாபர் மசூதியை இடிச்சது யாரு...? இந்துக்களா, இடிச்சாக? இல்லே... இந்து மதத்தைப் பயன்படுத்தி தீவிரவாதம் வளர்க்க நினைக்குற பயங்கரவாதிகதானே, இடிச்சது?"

"ஆமா..."

"அதேமாதிரிதான்... எல்லா ராவுத்தர்களும் குண்டு வைக்கலே. மதத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதம் வளர்க்குற ஒண்ணு ரெண்டு இயக்கங்கதான் குண்டு வைக்குதுக."

இளைஞர் சற்றே திகைக்கிற தருணம். நான் தீவிரமாக முன்னேறுகிறேன். தேடாமலேயே ஓடி வருகிற வார்த்தைகள். சீறிப் பாய்கிற வாக்கியங்கள்.

“பெரும்பான்மை பயங்கரவாதம் மூர்க்கமா முன்னேறுறதாலேதான், சிறுபான்மை பயங்கரவாதம் வளருது. பாபர் மசூதியை இடிக்குற மூர்க்கம் நடந்ததை யாரு தடுக்க முடிஞ்சது? ஆப்கானிஸ்தானை நாசப்படுத்துன அமெரிக்கா ராணுவத்தை யாரு தடுக்க முடிஞ்சது? ஈராக்கை சீரழிச்ச ஐ.நா. ராணுவத்தை யாரு தடுக்க முடிஞ்சது? தடுக்க முடியாத இயலாமையினாலேதான்... சிறுபான்மை பயங்கரவாதம் முளைக்குது.”

நான் பேசுகிற உணர்ச்சிவேகத்தில் எச்சில் தெறிக்கிறது.

கார், மல்லியைத் தாண்டி விட்டது.

இளைஞர் புரியாமையில் திகைக்கிறார். நான் கூறிய வேகம் அடர்த்தி அவருக்குப் புரியவில்லை. ஆனால், எதிர்வாதம் செய்வதற்கான வார்த்தைகளற்ற வெறுமையில் மௌனமாகிறார்.

அதே கணத்தில்-

செல்போனில் சிணுங்கல் இரைச்சல். சந்தனச் சட்டைக்குத்தான். எடுத்துப் பேசுகிறார்.

“யாரு...? கதீஜாவா? நாந்தான் மீரான் மைதீன் பேசுறேன்... ஆமாமா... தாணிப்பாறைக் கூட்டம் ரொம்பத்தான். அதான்... பஸ்லே வராம, கார்லே வர்றேன்... கட்டாயமா வந்துருவேன்... இதோ, சீல்த் தூரை நெருங்கிட்டேன்... வந்துகிட்டேயிருக்கேன்.”

இளைஞர் முகம் கறுத்து விட்டது.

பெருமிதமும், அன்பும், உபசரிப்புப் பண்புமிக்க ஒரு ராவுத்தரின் வாகனத்தில் வந்து கொண்டே... ராவுத்தர்களைத் திட்டித் தீர்த்த... குற்ற உணர்வில் தடுமாறித் தத்தளிக்கிற அவர்...

என்ன சொல்ல... ஏது சொல்ல... என்றறியாத குழப்ப இருட்டு. 'என்ன வார்த்தையில், மன்னிப்புக் கோருவது' என்று புரியாத திகைப்பு.

அந்த இளைஞரின் மனத்தவிப்பை நான் பரிவுடன் பார்க்கிறேன்.

அதற்குள்-

ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையம் வந்து விட்டது. அங்கும் ஜனத்தலைகள். கூட்டப் பரபரப்புகள். பஸ்களை மொய்க்கிற மனிதப் பேரலைச் சமுத்திரம்.

"எறங்குறீகளா?"

டிரைவர், காரின் கதவைத் திறக்க... நடுவயதுக்காரரும், அந்த இளைஞரும் இறங்க... இளைஞர் சந்தனச் சட்டையைக் குனிந்து நோக்குகிறார். மனக் குனிவு.

"தெரியாம... பேசிட்டேன்... பாய், தப்பா... நெனச்சிக்கிடாதீங்க..."

"தப்பா நெனைக்க என்ன இருக்கு? தப்புத்தப்புகளா நாட்டுலே நடக்கு. அதைத்தப்புத்தப்பா புரிஞ்சுக்கிடுற நாம... தப்புத்தப்பாத்தானே பேசுவோம்? தப்பு, உங்க மேலே இல்லே..."

“அமெரிக்க ஏகாதிபத்தியமும், உலக ஊடகங்களும் பண்ணுறதுதான்... தப்பு.”

நடுவயதுக்காரரும் குழைந்த குரலில் தளுதளுக்க ‘நல்ல வார்த்தைகள்’ சொல்ல... கார் புறப்பட்டது.

நான், மீரான் மைதீனை ஆச்சரியமாகப் பார்த்தேன்.

“நெசமாவே... உங்களுக்குக் கோபமில்லியா?”

“நம்மகிட்டே கோபமும் இருக்கு. அன்பும் இருக்கு. எதை வெதைக்குறோமோ... அதுதான் வெளையப் போகுது? நாம... அன்பையே வெதைப்போமே...! அதுதானே... எல்லாம் வல்ல இறைவனுக்கு இன்பமாக இருக்கும்?”

அவரது பெருந்தன்மையிலும், அன்பிலும், உபசரிப்பிலும் பிரமித்துக் கிடந்த நான், இப்போது... அவரது ஆன்மாவின் ஆகாய விரிவைப் பார்த்துப் புல்லரித்துப் போயிருக்கிறேன்.

-ஓம் சக்தி, செப்டம்பர், 2008

10. கதகதப்பு

அருஞ்சுனைக்குள் ஒரு சூன்ய உணர்வு. யாரையோ எதிர்பார்த்து ஏமாந்துபோகிற ஏக்க வேதனை.

ஏறிட்டு ஏறிட்டுப் பார்க்கிறார், தெருக்கோடியின் கிழக்கு நுனியை. ராவுத்தர் வருவதாக இருந்தால், இந்தப் பாதையில்தான் வருவார். கிழக்கு முக்கு திரும்புகிறபோதே அவரது சைக்கிள் அடையாளம் தெரிந்துவிடும்.

கோடிக்கணக்கான சைக்கிள் மணிகளிலும் ராவுத்தர் சைக்கள் மணியின் ஒலியைத் துல்லியமாக அடையாளம் கண்டுபிடித்து விடுவார், அருஞ்சுனை. சைக்கிள்மணியின் விசையை அவர் கட்டைவிரல் அழுத்துகிற விதம், 'மணிக்கு வலிக்குமோ' என்ற பதைப்பில் பூப்போல அழுத்துகிற விதம். அந்த வித்தியாசமான விதத்தில் வேறுபடுகிற மணியோசை அதிர்வின் துல்லியத்தில் கண்டுபிடித்துவிடுவார்.

''மைதீன் பாய் வாராரோ?'' என்று முணுமுணுத்தபடி ஏறிட்டுப் பார்த்தால், சைக்கிள் தூரத்தில் தெரியும். கிட்ட வரவர... குல்லா தெரியும். கச்சிதமாக நறுக்கி வடிவமைக்கப்பட்ட சிறு தாடி தெரியும். சந்தனக் கலர் முழுக்கைச் சட்டை தெரியும்.

சிரிப்பார். பளிச்சென்று மின்னலடிக்கிற வெண்ணிறப் பற்கள்.

''என்ன அருஞ்சொனை, எப்படியிருக்கீரு?''

சைக்கிள் ஹாண்டில்பாரில் ரெண்டு பக்கமும் கனத்த ரெண்டு பைகள் பெரிதாகத் தொங்கும். கேரியரில் ஒரு

கனத்த பை. கேரியரின் இரு பக்கமும் ரெண்டு பைகள். எல்லாமே கனத்த கனத்த புடைப்பு, எல்லாமே பத்திக் கட்டுகள். ஊதுபத்திகளின் வாசனை, மயிலிறகாக நாசியையும் மனசையும் வருடும். பன்னீர் பாட்டில்கள், வாசனைத் திரவியப் புட்டிகள், தலைவலித் தைலங்கள்.

வெள்ளை வேட்டியையே வட்டத் தையல் போட்டுக் கட்டியிருப்பார். முழங்காலுக்குக் கீழ் வரை முக்கால் காலைத்தான் வேட்டி மறைக்கும்.

''இதென்ன பாய், வேட்டியை இப்படி வட்டத் தையல் போட்டுருக்கீரு?''

''சைக்கிள்லே ஏறுறப்ப, எறங்குறப்ப வேட்டி ஒதுங்காம இருக்குறதுக்குத்தான். ஒழுக்கமா இருக்கணும்ல?'' என்பார்.

வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு, கிளிப்பைத் தட்டி விடுவார். அப்பவும் பார வித்தியாசம் காரணமாக வண்டி எந்தப் பக்கமாவது சாய்கிறதா என்று கவனித்து, அப்படிச் சாய்கிற பக்கத்துக்கு ஸ்டாண்டுக்கு அடியில் ஒரு சிறு கல்லை கால் விரலால் நகர்த்தி முட்டுக் கொடுத்துக் கச்சிதப்படுத்துவார்.

''என்ன... நாங்கேட்டதுக்கு பதில் வரல்லியே?'' என்று மென்சிரிப்போடு வந்து, திண்ணையில் உட்கார்வார் மைதீன்பாய்.

''ஏதோ... சாக மாட்டாம... வீண் கஞ்சி குடிச்சுக்கிட்டு, வயசான கெழட்டுச் சனியனா மண்ணுக்குப் பாரமா ஒக்காந்துருக்கேன்...''

சலிப்பையும் விரக்தியையும்கூட மென்சிரிப்போடு வெளிப் படுத்துகிற அருஞ்சுனை. அவருக்கு வயது எழுபதுக்கு

மேலிருக்கும். சதையெல்லாம் காலத்தில் கரைந்தோடிவிட, எலும்பும் தோலும் சுருக்கங்களுமாய் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருப்பார். பின் மண்டையில் மட்டும் பிறை நிலா மாதிரி அஞ்சாறு வெள்ளை ரோமங்கள். மழுங்கச் சிரைத்த முகத்தில் தொங்குகிற கன்னச் சதைத்தொலி.

"அல்லா படைப்புலே எதுவுமே வீணில்ல. நீரு மட்டும் எப்படி வீணாவீர்? ஒம்ம பேத்திகளுக்குக் கதை போடுவீர்ல? வீட்டு வாசலுக்கு காவலாயிருப்பீர்ல? ஒம்ம மகனுக்கு நல்லது கெட்டது எடுத்துச் சொல்லுவீர்ல?"

"அது போதுமா?"

"வீட்ல ஒரு பெரியாளு இருந்தா... பெருமாளு இருந்த மாதிரி. வீட்டுக்கே தனி மரியாதை. நீரில்லேன்னா... நா யாரைப் பாக்க வரப்போறேன்?"

அருஞ்சுனையின் மருமகள் வாசலில் வந்து நின்றாள். இன்முகம் காட்டிச் சிரித்தாள். "வாங்க ராவுத்தரைய்யா..."

"ஆமாம்மா... நீ நல்லாயிருக்கீயா?"

"ஏதோ... கடவுள் புண்ணியத்துல காலமும் கதையும் நடந்துக்கிட்டுப் போகுது." கனிந்த சொற்களில் அடக்கமாகச் சொல்லிவிட்டு, உடம்பை உள் இழுத்துக் கொள்வதற்கு முன்பு "மாமாகிட்டே பேசிக்கிட்டு இருங்க... தண்ணி கொண்டாரேன்" என்றாள்.

"ஒமக்கு வாய்ச்ச மருமகா... தங்கமான புள்ள. கொணத்துல நெறைகொடம். எனக்கும் வாய்ச்சாளே... ஒரு ராட்சஸி."

"தங்கச்சி மகா. தாய்மாமாங்குற பாசம்."

''அதைச் சொல்லும். நீரு குடுத்து வெச்ச புண்ணியவான். வீண் கஞ்சி, மண்ணுக்குப் பாரம்னு வெறுஞ்சலிப்பு சலிச்சுக்கிடுறீரே.''

சின்னத் தட்டில் கருப்பட்டி மிட்டாயும், காராச்சேவும் எடுத்து வந்து ராவுத்தர் பக்கத்தில் வைக்கிறாள். தண்ணீர் ததும்புகிற செம்பையும் வைக்கிறாள். அருஞ்சுனைக்கு ஒரு சின்னத் தட்டு அதில் அவித்துத் தாளித்த பாசிப்பயறு.

''மாமா ஒடம்புக்கு இதுதான் ஒத்துக்கும். நீங்க வித்தியாசமா எடுத்துக்கிடாதீக. சாப்புடுங்க ராவுத்தரய்யா.''

''இருக்கட்டும்... இருக்கட்டும்'' என்ற மைதீன்பாய் சம்பிரதாயபூர்வமான மறுப்பு, போலியான பிகு எதுவுமில்லாமல்... சொந்த வீட்டில் போல சகஜமான உரிமைப் பாவனையில் கருப்பட்டி மிட்டாயை எடுத்துக் கடித்தார். மனசின் அத்தனை நரம்புகளிலும் இனிப்பின் பரவல்.

சங்கிலிப் பின்னலான வளைவோடு நீள்கிற கருப்பட்டி மிட்டாயைக் காட்டிக்கொண்டே சொன்னார், மைதீன்பாய். ''இந்த பலகாரம் நம்ம ஏரியாவுல மட்டுந்தான் கெடைக்குது. மதுரையிலகூட இருக்குறது இல்ல.''

''ஆனா... இதோட ருசி... லட்டுலகூட வராதுல்லே?''

''முந்தி கருப்பட்டியிலே போடுறப்ப இதைவிட ருசியாயிருந்துச்சு. இப்ப மண்டைவெல்லத்துல போடுறாக. அப்பவும் இதோட ருசியை பீட் பண்ண ஒலகத்துல ஒண்ணுமில்ல...''

''ஒங்க சங்கரன்கோவில் பிரியாணி உலக பேமஸ்ல?''

"ஆமாமா... அது நெசந்தான்."

அருஞ்சுனை பாசிப்பயிறை அள்ளி வாயில் போட்டார். ஒன்றிரண்டு மிளகாய் வத்தல் துண்டுகளைப் பொறுக்கி வெளியே போட்டார். பாசிப் பயிறை மென்று கொண்டே பேச்சு கொடுத்தார். ரெண்டு பேருக்கும் அள்ளிவிடவும், வாங்கிக் கட்டவும் விஷயங்கள் இருந்தன. சங்கரன் கோவிலில் நடந்த சிறுசிறு சம்பவங்கள், விபத்துகள், குடும்ப உறவுக்குள் நடந்த நிகழ்வுகள், அழுகைகள், மோதல்கள் என்று மைதீன்பாய் பேச... பழைய காலத்து விவசாய முறைகளையும் உரத்துக்காகக் கொழை அறுத்துக் குப்பையாக்கியதையும், பாம்புக் கடிபட்டு வைத்தியம் பார்த்த கதையுமாக அருஞ்சுனை பேச... மருமகள் எவர்சில்வர் கிளாஸில் ஆவி பறக்கக் கொண்டுவந்து வைத்த டீத் தண்ணீர்.

தங்குதடை இல்லாமல் உருண்டோடுகிற உற்சாகமான பேச்சுக் கச்சேரி. இதை ரொம்ப ருசித்து ரசித்தது அருஞ்சுனைதான். இப்படி மதித்துப் பேசி... மனசைப் பகிர்வதற்கு ஆளற்ற தனிமைச் சூன்யத் தகிப்பில் வெந்து வெம்பிக் கிடப்பவருக்கு, மைதீன்பாய் வருகிற நாள், ஒரு திருவிழாமாதிரி. மனசு கிடந்து கொண்டாடும். ஒரு குழந்தை மனசைப்போல குதூகலிப்பார்.

பேச்சு வேகத்தில், அஸ்ஸாம் குண்டுவெடிப்புகளும் மனித உயிர் மாண்டதும் அருஞ்சுனை மனசில் உறுத்தும். 'அதைப் பத்தியும் பேசுவோமா?' - நுனிநாக்கு வரைக்கும் வந்துவிட்ட அந்த நினைவு. உள்ளேயே அமுக்கி விட்டார். 'வேண்டாம் இவருகிட்ட அதைப் பேச வேண்டாம்.'

அதே மாதிரி... மைதீன்பாய் மனசுக்குள்ளும் அமர்நாத் விஷயம் வந்து உரசியது. நாவுக்குள் வந்து முட்டி முண்டியது. 'அதைப்பத்தி இவர்கிட்டே பேசுவானேன்' என்று உள்ளுக்குள்ளேயே மென்று விழுங்கிக்கொண்டார்.

'மனுசருக்கு மனுசரான பழக்கத்துல... சிநேகிதத்துல... பொது விஷயங்களாப் பேசிட்டுப் போறதுதான் நல்லது. மத விஷயம் என்னத்துக்கு?' என்று மைதீன்பாய் மனசுக்குள் ஓடுகிற நினைவுகள். அருஞ்சுனை மனசிலும் அதே.

"லயனையெல்லாம் பாத்து முடிச்சாச்சா?"

"சங்கரன்கோவில்ல சைக்கிளை எடுத்தா... இந்த ஊருதான் எல்லை. எல்லாக் கடைகண்ணிகளையும் பார்த்தாச்சு?"

"இந்த ஊர்ல எல்லாக் கடைகளையும் பார்த்தாச்சா?"

"பார்த்தாச்சு."

"பத்தி ஏவாரம் நல்லாப் போகுதா?"

"சாமியை நம்பிக் கும்புடுற ஜனங்க இருக்குறவரைக்கும், சாம்பிராணி, பத்தி ஏவாரத்துக்குக் கொறை வராது."

"எல்லாமே ஒம்ம தயாரிப்புதானா?"

"நம்ம குடும்பத்துக்கே இதுதானே தொழிலு."

காராச்சேவையும் தின்று முடித்துவிட்டு, செம்புத் தண்ணீரையும் வயிறு முட்டக் குடித்துவிட்டு டீத் தண்ணீரையும் சாப்பிட்டார். வயிறும் மனசும் நிறைந்து ததும்பியதை "ஹே அல்லா" என்று வஞ்சனை இல்லாமல் வெளிப்படுத்திய மைதீன்பாய் எழுந்து சைக்கிள் பக்கம் போனார்.

ஓர் ஊதுபத்திக் கட்டையும், சிறிய செண்ட் பாட்டிலையும் எடுத்து வந்தார். இது நீங்காத வாடிக்கை.

"எம்மா..." என்று அழைத்தார். எட்டிப் பார்த்த மருமகளிடம், "இந்தா... தாயி" என்று நீட்டினார். அவளும் மறுப்போ, பிகுவோ பண்ணாமல், சகஜமான உரிமையோடு சிரித்துக்கொண்டே வாங்கிக்கொண்டாள். வாங்குவதில் ஓர் அடக்கம், பவ்யம்.

"எங்க மாமா சிநேகிதத்தால... எங்க வீட்டுச் சாமிக்கு கமகமன்னு பத்தி வாசம்" என்று பெருமிதத்துடன் சொல்லிக்கொள்கிற மருமகள்.

"அப்ப நா வரட்டா தாயி?" என்று விடை பெறுகிற மைதீன்பாய், "நீ குடுத்த டீத் தண்ணியிலயும் பலகாரத்துலயும் சங்கரன் கோவில் போயிரலாம். அம்புட்டு நிறைவு."

அருஞ்சுனையிடமும் விடைபெற்றுக் கொண்டு... சைக்கிள் பக்கம் போய் கிளிப்பைத் தட்டுவார். வண்டி வட்டமடித்துத் திரும்பி உருளும். தெருக்கோடியின் கிழக்கு முக்கு வரைக்கும் அவரையும் சைக்கிளையும் இமை தட்டாத மனத் தாகத்தோடு பார்த்துக்கொண்டு இருப்பார் அருஞ்சுனை.

அவருக்குள் ஒரு பரவச உணர்ச்சியின் பீறிடல். ததும்பி வழிகிற மகிழ்வின் தத்தளிப்பு. ராவுத்தரிடம் பேசிப் பழகிக் கழித்த நிமிஷங்களின் இனிமை. மனப் பகிர்வில் நிகழ்கிற மன விசாலம். சந்தோஷம். மனத் ததும்பல்.

ராவுத்தர் பதினைந்து நாளைக்கொரு தடவை வந்துவிடுவார். ஒரு நாள், ரெண்டு நாள் பிந்தினாலும்,

வராமல் இருக்க மாட்டார். அவர் வருகிற அந்த நாள், இவருக்கு மகிழ்ச்சித் திருநாள். ஏதோ ஊருக்குப் போகிற சிறுவனுக்கான பரவசமும் குதூகலமும் அவருள் முட்டி மோதும். மைதீன்பாய் வருகையை ரொம்ப ஆவலாக எதிர்பார்த்தார்.

'நாளை மறுநாள் ராவுத்தர் வருவாரோ?', 'நாளைக்கு வந்துருவாரா?', 'எந்நேரம் வரப்போறாரு?' கணந்தோறும் எதிர்பார்ப்பு. காதலும் தாகமுமான ஆவல் துடிப்பு. அருஞ்சுனை நாடார் குட்டி போட்ட பூனையாக முனங்கித் தவிப்பார்.

'இன்னும் ராவுத்தரைக் காணலியே...' வந்து ரெண்டு மாதத்துக்கு மேலாகிவிட்டது. ஆளே வரவில்லை. 'ஒடம்புக்கு கிடம்புக்குச் சொகமில்லியோ?'

'குடும்பத்துலே ஏதாச்சும் பிரச்சினையோ?' வேற ஏதாச்சும் சிக்கலோ?' எனப் பலவாறாக எண்ணி மருகித் தவிக்கிற இவர் மனசெல்லாம் மைதீன் பாய்தான்.

தெருக்கோடியின் கிழக்கு முக்கையே திரும்பத் திரும்பப் பார்க்கிறார். ஏக்கமும் ஏமாற்றமும் ஒரு வேதனையான மனசை வருத்துகிறது. வதைக்கிறது. ஏமாற்றமும் ஏக்கமும் விரக்தி விளிம்பைத் தொட்டு, எதிர்பார்ப்பு வற்றி வடிந்துவிட்ட ஒரு நாளில்... அதே சைக்கிள் மணியோசை. மைதீன் பாயின் பெல் சத்தம். 'அழுத்தினால் மணிக்கு வலிக்குமோ' என்று மென்மையாக பூப்போல அழுத்தியடிக்கிற மணியின் நாதத் துல்லியம்.

அருஞ்சுனையின் உயிர்த் துள்ளல். மனப் பரவசம். கிழக்கு முக்கை ஏறிட்டுப் பார்த்தார். அங்கே...

மைதீன்பாயின் சைக்கிள். அதே குல்லா. அதே சந்தன கலர் முழுக்கைச் சட்டை. அதே ஊதுபத்தியின் 'கமகம' வாசனையின் மென்வருடல். சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு வருகிறார்.

"வாரும்... வாரும்... மைதீன்பாய் வாரும். ஒம்மைக் காணாம... மனசெல்லாம் கெடந்து ஏங்கிப் போய்ட்டேன். வழியைப் பார்த்து பார்த்து கண்ணு பூத்துப்போச்சு" பாவனையற்றுக் குதூகலத்தைக் கொட்டுகிற அருஞ்சுனையைப் பார்க்கிற மைதீன்பாய், கழற்றிய குல்லாவை மடியில் வைத்துக் கொண்டு திண்ணையில் உட்காருகிறார். முகத்தில் ஓர் அசாத்திய வாட்டம். வெட்டி வெயிலில் எறிந்த பூங்கொடியின் முகவாட்டம்.

"ஏன்... முகம் வாடியிருக்கு? குடும்பத்துல ஏதாச்சும் பிரச்சினையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல."

"ஒடம்புக்கு?"

"அதெல்லாம்... குத்துக்கல்லுமாதிரி இருக்கு."

"பெறகு என்னத்துக்கு வரல்ல?"

"லயனுக்கு வர்றதுக்கே மனசுல்ல. மனசே கெடந்து கசந்து அழருது."

"ஏன்... அப்படி? என்னாச்சு?"

அருஞ்சுனையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிற மைதீன்பாய். அவரது கண்ணில் வெட்டுண்ட பல்லி வாலின் துடிப்பு. முகமெல்லாம் வருத்த நிழல்.

“சொல்லும் பாய்... என்னாச்சு?” அருஞ்சுனையின் மனப் பதைப்பு. ‘என்னவோ ஏதோ’வென்று தவிக்கிற தவிப்பு. “அருஞ்சொனை, நீரே சொல்லும். எவன் எவனோ எங்க எங்கேயோ குண்டு வெச்சா... நா என்ன செய்வேன்? என்னமோ... நானே குண்டுகளை வெச்சுட்டு... சைக்கிள்ல லயனுக்கு வந்த மாதிரி... எல்லாக் கடைகள்லயும் ஏங்கிட்டேயே விசாரிக்காங்க, ‘என்ன பாய், இப்படி குண்டுக வெடிக்கு?’ன்னு. நான் என்ன பதில் சொல்ல? எப்படிச் சொல்ல? எனக்கு மனசே கெடந்து வேகுது. ‘ஏன்டா... இந்த மண்ணுல வந்து பொறந்தோம்’னு மனசு வெறுத்துப் போகுது” - சோகமும் குமுறலுமாகக் கைகளை விரித்துப் பேசுகிற மைதீன்பாயின் ஆவேசம். கண்ணில் வந்து முட்டுகிற நீர்த் துளி.

திக்கற்றுத் தவிக்கிற அவரது கைகளை வலது கையால் பற்றி, ஆதரவாக வருடி, அரவணைப்பான சொற்களால் இதமாகப் பேசுகிற அருஞ்சுனை, “ஒம்ம வேதனையும் வெறுப்பும் எனக்குப் புரியுது.”

“என்ன புரியுது?” கலக்கமான அவரது குரலின் உடைவு.

“ஒம்மை மனுசரா மட்டுமே பாக்கணும். அதான், மனுசப் பண்பு. ஒம்மை ராவுத்தரா நெனைக்குறதே தப்பு. அதுலேயும் குண்டுகளை வெச்சுக் கொல்லுகிற பயங்கரவாதியா நெனைக்குறது அதைவிட கொடூரத் தப்பு.”

அருஞ்சுனையின் பாசக் குழைவான சொற்கள், அவரது ஆன்மாவையே வருடிவிட்டன. கண்ணில் வந்து முட்டிய நீர்த்துளி, உடைந்து சிதறித் தெறிக்கிறது. அருஞ்சுனையின் உள்ளங்கைக்குள் மைதீன்பாய் கைகள் கதகதப்பை உணர்ந்தன!

-ஆனந்தவிகடன், 7.1.09

11. களவுக்கலை

கிருகருவென்று மயங்கிக் கொண்டு வந்தது, பொழுது. பொழுது அடைந்த மேலடி வானத்து மேகங்கள், சாம்பல் பூத்த தீக்கங்காகக் கனன்று கொண்டிருந்தது.

ஆடுகளையெல்லாம் தொழுவத்துக்கு முன்னால் உள்ள பட்டியில் அடைத்துப் படல் கதவைச் சாத்தினான், முத்தன். சுற்றிலும் மஞ்சணத்திக் கம்புகளை ஊன்றி, அகத்திக் குச்சிகளைக் குறுக்காகக் கட்டி, இலந்தை முள்களைப் பரத்திக் கட்டி... அமைக்கப்பட்ட பட்டி, திறந்தவெளி அடைப்பு.

தரையெல்லாம் பச்சைப் பசேலென நிறத்தில் உலர்ந்து கிடந்தது. சாணமும் மூத்திரமும் விழுந்து சகதியாக்கப்பட்டு, பருத்தி மார்க்குச்சிகளால் வழித்து அள்ளப்பட்டது. தினம் தினம் நாலுகூடை குப்பை சேரும். அந்தப் குப்பை மணம் இவனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

இப்ப அடைத்திருக்கிற செம்மறிகள், நிலைகொள்ளாமல் ஓடித் தவிக்கின்றன. 'சுதந்திரமாக விடமாட்டீகளா' என்பது போல ஏக்கமாகக் கனைக்கின்றன. கத்துகின்றன. ஒரே கூவல்காடு.

பட்டிக்குள்ளேயே சுற்றுவதும், ஒன்றையொன்று துரத்துவதும், புகார் தொனியில் கனைப்பதுவுமாக ஆடுகள். செவலையும், வெள்ளையுமான ஆடுகள்.

எல்லா ஆடுகளையும் பரவலாகப் பார்த்தான். 'எல்லா செம்மறிகளும் வந்து விட்டனவா' என்ற பருந்துப் பார்வை.

கள்ளக்கண்ணு, ஒட்டை மூக்கு, கிழிந்த காது, வவுறு வெள்ளை, வால் கறுப்பு, உடைந்த காது, கோணக்கால்... முன்னங்கால் செவலை... தொடைக் கறுப்பு...

'ம்ம்ம்... எல்லாம் இருக்குதுக' என்று நினைத்துக் கொள்கிற முத்தனுக்குள் ஒரு சின்ன திருப்தி. தொழுவத்திற்குள் குப்புறக் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த ஆட்டுக் கூட்டைத் தூக்கி, முட்டுக்கம்பால் முட்டுக் கொடுத்து நிறுத்தினான். ஆட்டுக் கூட்டுக்குள் கிடந்த குட்டிகள், இளங்கனைப்புகளுடன் வெளியேறி... தத்தம் 'தாய்'களைத் தேடிற்று.

தொழுவத்துப் பரணைப் பார்த்தான். காய்ந்த கொழைகூட இல்லை. குட்டிகளுக்கு கொழை வேணும்.

'எங்காச்சும் போய் களவாங்கணும். எங்க போகலாம், எந்தத் திக்குலே போகலாம்?' குறுக்கு யோசனைக்குள் நிறைய புஞ்சைகள் வந்து போயின.

கந்தைய நாயக்கர் புஞ்சையில் அகத்திக் கொழையும், ஆமணக்கங் கொழையும் ஒடிபடாமல் மொதப்பாகக் கிடக்கிற ஞாபகம். இருட்டுக்குள் ஒடித்தாலும், ஒரு நிமாண்ட் நாழியில் ஒரு முழுத்த கட்டு சேர்ந்துவிடும்.

குட்டிகள் தாய்கள் மடியில் முட்டி முட்டி மோதுகின்றன, ஆவல் பறப்புடன். பாசக் குழைவு.

கொழையைக் கட்டுகிற நூல் கயிறை இடுப்பில் கட்டிக் கொண்டான். 'தீ'படத்துலே ரஜினி மாதிரி இருக்கும்' என்று நினைத்துக் கொள்வதில், ஒரு பெருமிதம்.

கோனார் வீட்டுக்கு வந்தான். கோனார் வீட்டம்மா வட்டில் நிறைய சோறும் குழம்பும் ஊற்றி வைத்தாள். உண்டு

முடித்த கையோடு பால் ஊற்றின தேயிலைத் தண்ணீர். குடித்து முடித்து விட்டு... "கொழைக்குப் போறேம்மா" என்றான்.

'தீ' படம் இப்பத்தான் பார்த்திருந்தான். துறைமுகத் தொழிலாளியாக ரஜினி. பாரம் தூக்குகிற கயிறை இடுப்பில் கட்டியிருக்கிற ரஜினி. மடித்து தோளில் போட்டிருக்கிற ரஜினி. மாமூல் கேட்பவர்களை அடித்து, விளாசுவதுவும்... நூல் கயிற்றினால்தான்.

கிழிந்த கைலிக்குமேல் இவனும் நூல்கயிறு கட்டியிருப்பதைத் தடவிப் பார்த்துக் கொண்டான். அதை மறைக்கிற பச்சை நிற பனியன். அதுக்குமேல் அரைக்கைச் சட்டை.

கந்தைய நாயக்கர் புஞ்சை, ஊருக்கு மேற்கில் இருக்கிறது. ரொம்பத் தூரத்தில் இருக்கிறது. தென்னந்தோப்புக்கும் அந்தப் பக்கம். வழிநெடுக சீமைக்கருவேல மரங்கள். முள்புதர். பாம்புகள் நடமாட்டம் ஜாஸ்தி.

இருட்டு என்பது ஆட்டுக்காரனுக்கு பகல் மாதிரி. மூச்சு விடுகிற மாதிரி, பழகிப் போனது. டயர் செருப்பு காலுக்குக் காவல். காலுக்குக் கண் இருக்கிறமாதிரி, முள்காட்டு ஒற்றையடிப் பாதையில் தடுமாற்றமில்லாமல் நடக்கிற நடையின் துரிதம்.

இவன் மனசெல்லாம், நேற்று பார்த்த சினிமா ஓடிக் கொண்டிருக்கிறது. ரஜினியின் பாய்ச்சல். ஜெய்சங்கருடன் மோதுகிற வேகம். காளையை மடக்குகிற வீரம்.

பார்வதி "கதை சொல்றா... கதை சொல்லுறா... கதையைச் சொல்லுறா..." என்று இன்று பகல் முழுக்கக் கெஞ்சித் தவித்தாள். சின்னப்பிள்ளைமாதிரி, விடாமல் நச்சரித்தாள்.

"இப்ப... பெறவு... இந்தா... அந்தா' என்று இழுத்தடித்து ஏமாற்றி விட்டான். அவளை அப்படி ஏங்க வைத்து, தவிக்க வைப்பதில் இவனுக்கொரு திருப்தி. ஆண்கர்வ நிறைவு.

பக்கத்து ஊர்க்காரி, பார்வதி. வெள்ளாடுகளையும் ஒரு பசுவையும் பற்றிக் கொண்டு வருவாள். முழுத்த குமரி. இருபதுக்கும் மேலே நாலைந்து வயது. பதினேழு வயது, முத்தனுக்கு.

'ஏலேய், போலேய்' என்றுதான் சொல்லுவாள்.

"ஏலேய்... நீ கதை சொன்னா... அப்படியே அச்சு அசலா இருக்குடா. நேர்லே சினிமா பார்க்குற மாதிரியே இருக்குடா" என்று அவள் ரசித்த பரவச மகிழ்ச்சியில் திணறித் தவிப்பாள். ஆர்வக்கிளர்ச்சியுடன் ரசிப்பாள்.

இவனது செம்மறிகளையும் அவள் பார்த்துக் கொள்வாள். தப்புகிற கள்ள ஆடுகளைக் கண்காணித்து, கல்லெறிந்து மடக்குவாள்.

இவனைக்கூட எப்பவாச்சும் உறங்கச் சொல்வாள்.

"ஏலேய்... நீ சினிமா பாத்து கண்ணு முழிச்சிருக்கே. நா பாத்துக்கிடுதேன். நீ சித்தே ஒறங்கு."

தின்பண்டம் கொண்டு வந்திருப்பாள். தெரியாமல் மறைத்து வைத்திருப்பாள். சாயங்கால நேரம், வயித்துப்பசி உயிரைக் கிள்ளும். மனசும் வயிறும் கிடந்து தாகத்தால் தவிக்கிற அந்த நேரம் பார்த்து...

"ஏலேய்... இந்தா... காரச்சேவும், தேங்காச்சில்லும்... தின்னு, பசி அடங்கும்."

"ஒனக்கு?"

"வேண்டாம்."

"ஒனக்கும் பசிக்கும்லே?"

"இல்லே..."

அவள் பொய் சொல்கிறாள் என்பது தெரியத்தான் செய்யும், அதைக் கிண்டிக்கிளறத் தோன்றாது. இவனது பாலக வயது. வயிற்றுப் பசி. மடக்கிப் பிடித்து சேவை நொறுக்கித் தின்பான். சின்னவனுக்குரிய தின்பண்ட மோகம்.

அவனது பாலக முகம். நாசிக்கு அடியில் செவலை படிந்த பூனை ரோமங்கள். சேவை அரைத்து மெல்லுகிற உதடுகளுடன் சேர்ந்து மீசை ரோமங்கள்.

'இவன்... சின்னப்பயலா, விடலைப்பயலா?'

அவளுக்குள் மெல்லிசாக அரும்புகிற புதிய குறுகுறுப்பு. அதற்கும் காரணமிருக்கிறது.

முத்தன் கதை சொல்வதில் மகா பெரிய கில்லாடி. ரசிக்கிற மாதிரி சொல்லுவான். ரசித்துச் சொல்லுவான். ரசனையுடன் சொல்வான்.

"எழுத்து (டைட்டில்) போட்டு முடிஞ்சவுடனே... ஒரு பாதம் ஓடியாரும். சின்னப்புள்ளையோட பாதம். அவனை வெரட்டிக்கிட்டு வர்ற பெரியாளுக பாதங்கள். இவனோட பாதத்துலே, கல்லு எத்தும். ரத்தம் வரும். கசியுற ரத்தத்தோட ஓடுற பாதம். அவன் கால். அவன் டவுஷர். ஓடியார்ற சிறுவன்

கையிலே, ஒரு பன்ரொட்டி, அவனை வெரட்டி வர்ற பெரியாளுக. 'திருடன், திருடன்'னு அவங்கபோடுற கூச்சல்.

உச்சி மேடா உயரமா ஒரு ரோட்டுலே ஏறுறான். அவுங்களும் துரத்துறாங்க... உச்சிமேடான ரோட்டுலே ஏறுற போது... அவனோட சின்னப் பாதங்கதான் தெரியுது.

இறங்கு ரோட்டுலே ஓடுறப்ப... அந்தச் சின்ன பாதம், பெரிய பூட்ஸ் காலாகுது. பேண்ட் ஓடுது. பெல்ட் ஓடுது. சட்டை ஓடுது. கையிலே பன்ரொட்டியில்லே. சூட்கேஸோட ஓடிக்கிட்டிருக்கிற எம்.ஜி.யார்.''

இப்படிச் சொல்லுகிறபோது பார்வதி மனசுக்குள் எம்.ஜி.யார் தெரிவார். அவள் மனசுக்கும் எம்.ஜி.யாரின் பெருமூச்சு கேட்கும். அவன் கதை சொல்கிற தீவிரம். அவனே ரசித்துச் சொல்கிற உக்கிரம். அப்படியே காட்சியை அணுஅணுவாக வார்த்தைகளாலேயே விவரிக்கிற வேகம்.

சில சமயம் நடித்தே காட்டுவான். சண்டைக் காட்சியில் எம்.ஜி.யார். மாதிரியே பாவனை செய்வான். குதிப்பான். தாவுவான். கைபாய்கிற வேகம். எதிரில் வரும் கையைத் தட்டிவிட்டு, குத்துவிடுகிற கை.

தத்ரூபமாக செய்து காட்டுவான். எம்.என். ராஜம், சரோஜாதேவிகளுடன் எம்.ஜி.ஆர்... காதலாக உரையாடுகிற காட்சிகள், எம்.ஜி.ஆர் டூயட் பாடுகிற ஸ்டைல். காதல் வசனங்களைப் பேசுகிற பாணிகளை - கெஞ்சலாக - கொஞ்சலாக நடித்துக் காட்டுவான். அச்சு அசலாக அப்படியே.

''சரோஜாதேவி நெஞ்சுலே இப்படி தலைவைச்சு சிரிப்பாரு.'' இவன் பார்வதி மார்பில் முகம் புதைப்பான். சற்றே கூடுதலாக அழுத்துவான்.

காட்சிக்கும் அப்பால்... அவனது நாடி கூடுதலாக அழுத்தப்படுவதாக ஓர் உணர்வு. அவனது உதடுகள் கூடுதலாகப் பதிவதாக ஓர் உணர்ச்சி, இவளுக்குள் ரகசியக் குறுகுறுப்பில் மனசு.

வசனமும், கொஞ்சலும் முடிந்து விட்டது. முகத்தை எடுக்காமல் வைத்திருந்த நொடிகள். நெஞ்சில் புதைத்த முகத்தால், ஓர் அழுத்து அழுத்தியதில் ஒரு விடலைத்தனம்.

எல்லாம்... இவளது ஆழ்மன உணர்வுக்கிள்ளல். அவனிடம் மாற்றமா? தனது ஏக்கமே, அவன் அப்படிச் செய்வதாகக் கற்பிதம் செய்கிறதா?

முகத்தை எடுத்த கணத்தில்... அவன் கண்ணில் ஒரு கபட நிழல் தெரிந்து மறைந்ததை கவனித்து விட்டாள்.

இவளது மனப்பிரமையல்ல...

அவனது மீசை ரோமச் சேட்டைதான். சந்தேகமில்லை. விடலைக் குறுகுறுப்புதான்.

இவனது மனசின் கபட நிழலை... கண்ணில் அவள் பார்த்து விட்டாள் என்பதை முத்தனும் உணர்ந்து கொண்டான்.

இப்போது அதை நினைத்து நினைத்து குறுநகை செய்து கொள்கிற முத்தன். அவள் நெஞ்சில் முகம் வைத்து அழுத்தியபோது, இவனுக்குள் ஒரு நடுக்கமும், சிலிர்ப்பும்

ஓடிப் பரவியதை இப்போதும் நினைத்து சிரித்துக் கொள்கிறான்.

கந்தைய நாயக்கர் புஞ்சையை விட்டு வெளியேறுகிறபோது, கொழைக் கட்டின் பாரம் தாங்காமல் அவனது கழுத்து நடுங்கியது. நெஞ்சுக்குள் மூச்சு முட்டியது. நடையை எட்டிப் போட்டு... குட்டோட்டமாக ஓடினான். வியர்த்துக் கொட்டியதில், பனியன் 'தொப், தொப்' பென்று நனைந்து விட்டது.

அந்த மூச்சுத் திணறலிலும் நினைத்துக் கொண்டான், 'சினிமாவுக்குப் போகணும்' என்று.

ஒரே போஸ்டர்தான் அந்த ஊரில் ஒட்டியிருந்தது. அது வண்ணச்சுவரொட்டி. போதையேற்றுகிற படம். கனத்த மார்பகத்தில் பாதி வெளித் தெரிய, ஒருக்களித்துச் சாய்ந்திருக்கிற பெண்ணின் உதட்டுக் கடிப்பில் காமவெறி. பக்கத்தில் வெற்று முதுகுடன் ஒரு வாலிபன். முறைகேடான படமென்று சொல்கிற சுவரொட்டி.

இவனுக்குள் ஆர்வப்படபடப்பும், பயப்பரபரப்புமாக ஒரு மனத்திணறல். 'பார்த்தேயாக வேண்டும்' என்கிற விடலைத்தன ஆசை. இனம் புரியாத மர்ம உலகத்து ஜன்னலைத் திறந்து பார்த்துவிடத் துடிக்கிற ஆழ்மன மீசைக் குறுகுறுப்பு.

கொழைக்கட்டைத் தொழுவத்திற்குள் போட்டான். வெளிப்பானைத் தண்ணீரில் ஒரு காக்காக் குளிப்பு போட்டான். வேறு கைலியையும், சட்டையும் போட்டுக் கொண்டான்.

கோனார் வீட்டம்மாவிடம் தலையைச் சொறிந்தான்.

"என்னலே?"

"துட்டு வேணும்."

"என்னத்துக்கு?"

"வாங்கித் திங்க."

"சாப்புட்டேல்லே?"

மௌனக் கபடமாக தலைகுனிந்தான் முத்தன். வீட்டம்மா தந்த ரூபாய் நோட்டை மடித்து, பைக்குள் வைத்துக் கொண்டான். வாடகைச் சைக்கிளை எடுத்துக் கொண்டான்.

எட்டு கிலோ மீட்டர் தூரம். நினைத்தால், மலைப்பாக இருக்கிறது. மலைப்பை அடித்து விரட்டுகிறது, கனத்த மார்பகத்தின் மதர்ப்பு. கள்ளச் சினிமா கள்ளக்கலை.

இப்படிப் படம் இவன் பார்த்ததேயில்லை. எம்.ஜி.யார் படம் ரஜினிபடம், அஜீத் படம், விஷால் படம் பார்த்திருக்கிறான். சிவாஜி, கமல் படங்களும் பார்த்திருக்கிறான் நிறைய்ய.

தைர்யமாகப் போய் உரிமையோடு படம் பார்த்து, வெளிப்படையாக வெளியே வந்த படங்கள். இது 'வேறு' மாதிரிப் படம், போவது தெரியாமல் போகணும். ரகசியமாக முகம் மறைத்துப் போகணும். திருட்டுத்தனம் வேணும். கபடம் வேணும். கள்ளப்புத்தி வேணும். கள்ளப்பண்பாடு.

ரெண்டாவது ஷோ. அந்த டூரிங் தியேட்டரில் அடித்துப் பிடித்து நெருக்கியடிக்கிற கூட்டம். ஒரு பெண்கூட கிடையாது. எல்லாம் ஆண்கள் கூட்டம். அலைமோதுகிற கூட்ட ஆரவாரம்.

முத்தன் மணல் கூட்டி, உயரமாக்கி உட்கார்ந்து கொண்டான். நா உலர்கிறது. மனசின் நடுக்கம். குற்ற உணர்வின் உறுத்தல். பதற்றம். அவன் கண் பூராவும் திரையில்.

எழுத்து ஓடியது. ஏதோ வேற்று மொழி எழுத்து.

கடற்கரை, மணல்பெருவெளி. ஒற்றையாக நடந்து வருகிற பெண்மணி. ஜட்டியுடன் கடலலையில் குதித்து விளையாடுகிற இளைஞர்கள் இருவர். அவர்களையே... அவர்களது ஒவ்வொரு அழகின் வனப்பையே... நின்று ரசிக்கிற அவள்.

அவர்கள் அழைக்க... சேலையைக் களைகிற பெண்மணி. ஜட்டியும் பிராவும் மட்டுமே மிஞ்ச... வெட்கப்பட்டு தயங்க... அவர்கள் அழைக்க... அலைக்குள் இறங்கும் அவள். அவர்களது காமக்களியாட்டம். பார்த்தால்... அது வீடியோ காட்சி. அதையே பார்த்து மனம் கிறுகிறுக்கிற வேலைக்காரி. அவளை நெருங்குகிற பணக்கார இளைஞன்.

இப்படியே படம் முழுக்க... முறைகேடான மோகத்தினவுகள். முத்தனுக்கு மூச்சுத்திணறல். அவன் உடம்பெல்லாம் வெப்பப் பரவல். தகிக்கிற மனசு. பணக்காரன் மேய்கிற வேலைக்காரி. சிறுவனை மயக்குகிற நடுவயசுக்காரி... கிழவன் மடியில் ஓர் இளம்பெண்... வாலிபனுடன் சல்லாபிக்கிற அரைக்கிழவி. முறைகேடுகளைத் திரைப்படமாக்கி... திரைப்படமே முறைகேடாகி...

ஒரு மணி நேரத்தில் படம் முடிந்துவிட்டது. இவன் பேய் பிடித்தவனைப்போல உயிரறுந்து போயிருந்தான்.

சைக்கிளில் ஊர் வந்தான். சினிமாவையே நினைக்கிற மனசு. அந்தக் காட்சிகளையே திரும்பத் திரும்ப நினைத்து திளைக்கிற சந்தோஷம். மனப் போதை. லாகிரி கிறுகிறுப்பு. கள்ள உணர்வுகள்.

மறுநாள்.

கரிசல்காட்டில் செம்மறியாடுகள் மேய்கின்றன. பார்வதியும் வெள்ளாடுகளும் பசுவுமாக வந்தாள்.

பார்வதி வழக்கம்போலத்தான் இருக்கிறாள். சாயம் போன நைலக்ஸ்சேலை, சேலைக்குச் சம்பந்தமில்லாத கலரில் ஜாக்கட். எண்ணெயில்லாத செம்பட்டையான தலைமுடி. மனசைத் திணறடிக்கிற இளமைக்கட்டுடல்.

ஆனால்... இவன் வழக்கம் போலில்லை. காய்ச்சல் கண்டவனைப்போல ஒரு முக மாற்றம். நெஞ்சையே 'குர்ர்'ரென்று பார்க்கிற மனநிற மாற்றம். தடுமாற்றம்.

''என்னடா... தூக்குச் சட்டியும், தண்ணிப் பாட்டிலும் எங்க இருக்கு?''

''மஞ்சணத்தி மரத்துலே... தொங்க விட்டிருக்கேன்.''

''நானும் மாட்டிருதேன்.''

மரத்தை நோக்கிப் போகிற அவளது இடுப்புச் சதை. பின்புறத் தோற்றம். அவளை அப்படியே துணியில்லாமல் நினைத்துப் பார்க்கிற மனக்குரூரம்.

''ச்சீச்சீ... அசிங்கம்... தப்பு... பாவம்...''

அவனுக்குள் அவனையே காறித் துப்பிக்கொள்கிறான். குரூர மனத்தாவலை செருப்பால் அடித்துக் கொள்கிறான். பார்வதி கிட்டத்தில் வருகிறாள்.

“என்னலே... நேத்து சினிமா பாக்கப் போனீயா?”

அவனுக்குள் திணறல். தவிப்பு. நா உலர்வு.

“இல்லே... போகலே... சினிமாவுக்குப் போகலே.”

“ஏண்டா... பொய் சொல்லுதே?”

“பொய்யா?”

“ஆமா. நீ சைக்கிள்லே போனதை எங்க ஊர்க்காரரு பாத்துருக்காரு. வந்து சொன்னாரு...”

“ம்ம்ம்...”

“என்ன படம் பாத்தே? கதை சொல்றா... எப்பவும்போல, பாத்த சினிமாவைச் சொல்லுடா... சொல்றா...”

சிறுபிள்ளை மாதிரி கெஞ்சுகிற அவளைப் பார்க்கிற முத்தன், ஒரு சாயலாக ஊன்றிய கம்பில் உடம்பின் பாரத்தைப் போட்டு நிற்கிற அவனிடம் கிட்டத்தில் வந்து நிற்கிறாள், உரசுகிற மாதிரி.

“சொல்றா... படத்தைச் சொல்றா.”

அவளையே குறுகுறுவென்று பார்க்கிறான். அவளது உறுப்புகளையே வெறிக்கிறான். வேறு எங்கோ பார்வை. நகர்த்துகிறான். கள்ளச்சினிமாவால் கரைந்து, குலைந்துபோன முத்தன்.

“இந்தப் படத்தைச் சொல்ல முடியாது...”

“ஏம்லே?”

“சொன்னா... நீ என்னை அடிப்பே. வைது திட்டுவே.”

“அதெல்லாம் சொல்ல மாட்டேன்லே. திட்ட மாட்டேன்லே.”

"மாட்டேன். சொல்ல மாட்டேன்... அசிங்கமாயிருக்கும்."

"பாத்த சினிமாவ,வத்தானே சொல்லப் போறே? ஊரு ஒலகம் பூராவும் பாத்த படத்தைத்தானே சொல்லப் போறே? சொல்றா..."

"என்னாலே முடியாது. தப்பு. பாவம், அசிங்கம்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. சும்மா சொல்லு... எதாயிருந்தாலும் பரவாயில்லே... பாத்த படத்தை, அப்படியே சொல்லு..."

அவனது தயக்கமும், மறுப்பும் போலி. பொய், சொல்லத்தான் ஆசை. சொல்லி... அவளை மயக்கத்தான் ஆசை.

அவனது தயக்கத்திலும், மறுப்பிலும் உள்ள போலித்தனத்தையும் பொய்மையையும் அவளும் உணராமலில்லை.

"சொல்றா... சொல்றா... பார்த்ததை அப்படியே சொல்றா..."

"சொல்லியிருவேன்...?" மிரட்டும் பாவனையில் அவன். சம்மதச் சிரிப்பாக அவள் புன்னகை.

வழக்கம்போல... நடிப்பும் பாவனையுமாக சொல்ல ஆரம்பித்தான். கைலியைக் கீழே நழுவவிட்டான்.

கம்பை மரத்தில் சாய்த்து வைத்தான். சட்டை, பனியன், டவுஷரைக் கழற்றினான். ப்ரவுன்கலர் ஜட்டியுடன் அவன்.

"என்னாலே... இந்தக் கூத்து? ஏம்லே முண்டமா நிக்கே?" விகல்பமில்லாதவளைப்போல இயல்பாக பார்வதி.

"படத்தைச் சொல்லணும்லே?"

"ம்... சொல்லு... சொல்லு"

"சொல்லவா... நிறுத்திக்கிட வா?"

அவனது பார்வை. கூரிய பார்வை. அவளைக் குடைந்து ஊடுருவுகிற பார்வை. விடலைப்பார்வை.

வார்த்தையின் அர்த்தத்துக்கும் அப்பால் ஒன்றை உணர்த்தி... கேட்கிற கேள்வி.

கேள்விக்கும் அப்பாலுள்ள அந்தரங்கத்தை அவளும் உணர்ந்தாள். உதட்டின் உலர்வு. கண்களின் அலை பாய்வு. மனநடுக்கத்தை மீறிய திரேக மொழி.

"சொல்றா."

"நைஸான வெள்ளைத்துணியை மட்டும் சுத்திக்கிட்டு பாத்ரூமுக்குள்ளே வாரா. வேற துணி எதுவுமில்லே. பூத்தூவலா அவா மேலே தண்ணி வுழுது. நைஸ் துணி நனைஞ்சவுடனே... எல்லாம் அப்படியே தெரியுது..."

"எப்படி தெரியுது?"

அவள் பார்வை, அவனது மீசையில் நிற்கிறது. உதட்டுக்கு மகுடமாக உட்கார்ந்திருக்கிற பூனை ரோமங்கள். வாலிபமாக மாறிக் கொண்டிருக்கிற சிறுவனின் உருமாற்றம். அவளது கேள்வியிலிருந்த அவளது புதிர்மனசு.

"இப்படித்தான் தெரியுது."

என்று சொல்லிக்கொண்டே அவளது சேலையை விலக்குகிற அவனது வலதுகை.

மதிய வெயிலின் தகிப்பு தெரியாமல், கரிசல் தரிசில் மேய்கிற ஆடுகள். புற்களை 'பர்ருச், பர்ருச்' சென்று கடிக்கிற செம்மறிகள். பசியும் பதைப்புமான மேய்ச்சல்.

வேப்பமரத்து நிழலில் வேலிமரத்துப் புதர் மறைப்பில் பரஸ்பரம் ஒருவரையொருவர் மேய்கிறதைப் பார்க்க இயலாமல் மேகத்துக்குள் ஒளிகிற சூரியன்.

-வடக்குவாசல், ஜூலை, 2009.

12. மனப்பாரம்

அம்மா காட்டு வேலைக்குக் கிளம்புகிற பரபரப்பில் இருந்தாள். மெலிந்த கூன் விழுந்த உடம்பின் துரிதச் செயல்பாட்டில், முதுமைத் தளர்வின் அயற்சி.

கூலி வேலைக்கு அம்மா கிளம்புவதற்குள், அவசரம் அவசரமாகக் கஞ்சி குடிக்கிற பார்வதி. வெறும் ஊறுகாயும், பழைய கஞ்சியும். வெறுப்பும் முகச்சுளிப்புமாக சிடுசிடுக்கிற அவளுள் கடுப்பு.

'வக்கத்தவ வவுத்துலே வந்து பெறந்து, வவுத்துக் கஞ்சிக்கும் 'லோலோ'ன்னு அலைய வேண்டியிருக்கு.'

ஊறுகாய்க்குப் பதிலாக துவையல் இருந்தாலாவது நாவுக்கு ருசியாக இருக்கும். பொறிகடலையும், தேங்காய்ச் சில்லும் வைத்து - ரெண்டு இணுக்கு பூண்டும், உப்பும், அரை மிளகாயும் சேர்த்து- அம்மியில் சேர்த்து அரைத்தால்... வாசம் நாசியைத் துளைக்கும், மனசுக்குள் ஒரு மகிழ்ச்சி பரவும். துவையலை முன்னே வைத்து சுட்டு விரலால் தொட்டு நாக்கில் வைத்தால்... கஞ்சியை 'கொண்டா கொண்டா' என்று இழுக்கும். வயிறு நிறைவதோடு மனசும், நாவும் நிறைந்து ததும்பும்.

இது என்னடாவென்றால்... ரெண்டும் புளிப்பு. 'உள்ளே போவேனா?' என்று அடம்பிடிக்கிறது. மல்லுக்கட்டி, தெல்லு தெறித்துதான் உள்ளே இறக்க வேண்டியிருக்கிறது.

பார்வதி மனசு கிடந்து கசந்தது. 'இல்லாத வீட்லே பொறந்து... காட்டுவாசல்லே, அத்துவானத் தனிமையிலே

ஆடு மேய்ச்சு... வேனாக் கொதிக்கிற வெயில்லே வெந்து கருகுனாலும்... வவுத்துக் கஞ்சிக்கு அல்லாடிச் சாக வேண்டியிருக்கு... ச்சேய்... என்ன பய பொழைப்பு இது?'

கோணல் எழுத்தாகிவிடுகிற ஏழைகளின் தலையெழுத்தை எண்ணி மனசு வெறுத்து சலிக்கிறது.

"தூக்குவாளியிலே சோறு வைச்சுட்டீயா?"

"ம்... வைச்சிருக்கேன் பார்வதி."

"சுடுசோறும், தயிருமட்டுந்தானா?"

"பெறவென்ன? பதினாலு வகைக் கூட்டோட பந்திச் சோறு கேக்குதோ?"

"தொட்டுக்கிட... கடிச்சிக்கிட என்ன வைச்சிருக்கே?"

"தனியா ஒண்ணும் வைக்கலே. வாய்க்கு வகைவகையா ருசி கேக்குதா...? வாக்கப்பட்டுப் போற வூட்டுலே, ஒன்னோட ராஜ்ஜியந்தானே? ஆசைப்பட்டபடியெல்லாம் ஆக்கி அவிச்சு வாய்லே கொட்டிக்க..."

"வாக்கப்பட்டுப் போற' என்ற வார்த்தை, பார்வதியின் நெஞ்சுக்குள் நரம்புகளை அறுத்தது. சொருகிக்கிடக்கிற முள்ளை அசைக்கிற மாதிரி. மனசெல்லாம் ரண அதிர்வுகள்.

அம்மாவை ஏறிட்டுப் பார்க்கிறாள். அந்த முதுமை முகமெல்லாம் சிரிப்பின் வெளிச்சம். மனமகிழ்ச்சியின் மலர்ச்சியில், தோல் சுருக்கங்களே மறைந்த மாதிரியொரு மினுமினுப்பு.

ரொம்ப நாளாக ஏதும் செய்ய முடியாமல், பெத்த மகளுக்கு ஒரு 'நல்லது' பண்ணிப் பார்த்து, கன்னி கழிக்க

முடியாமல்... அந்தக் கிழவி தவித்த தவிப்புகள், பட்ட கவலைகள், விட்ட ஏக்க பெருமூச்சுகள் எக்கச்சக்கம்.

''இப்பவாவது பொழுது விடிந்ததே... மாலைபூத்து கல்யாணம் கைகூடிவந்ததே' என்ற மனநிறைவின் ததும்பல். சிறுபிள்ளைமாதிரி மகிழ்ச்சியை மறைக்காமல் துறுதுறுத்து அலைகிற அம்மா. குட்டி எலியாக குடுகுடுவென ஓடித் திரிகிற அம்மாவை ஒரு முகவாட்டத்துடன் பார்க்கிற பார்வதி. மனசை அழுத்துகிற நினைவுப்பாரம். கொட்டியழ முடியாத ஊமை மனக்குமைச்சல். திணறடிக்கிற மனப்பாரம்.

''தீம்பண்டம் என்னமாச்சும் வைச்சிருக்கீயா?''

''சோளப் பணியாரமும், காரச்சேவும் வைச்சிருக்கேன். சாயங்கால நேரப் பசிக்கு தின்னுக்கோ...''

தரையில் அறைபட்டிருக்கிற சிறுசிறு குச்சிகளில் கட்டப்பட்டுக் கிடந்த வெள்ளாடுகளையும் வெள்ளாட்டங் கிடாய்களையும், தொழுவத்தில் நின்ற மூணுமாசச் சினைப்பசுவையும் அவிழ்த்துவிட்டாள். ஆட்டுக் கம்பையும் எடுத்துக் கொண்டாள். தின்பண்டங்களை சேலையின் அடிமடிக்குள் வைத்துக் கொண்டாள். தூக்குச்சட்டியையும், ரெண்டு லிட்டர் பாட்டில் தண்ணீரையும் இடது கையில் தொங்கவிட்டிருக்கிறாள். வெப்பமில்லாத காலை வெயில். ஊரைக் கடந்து வண்டிப் பாதையில் நடக்கிற ஆடுகளும், கிடாய்களும் நின்று நிதானித்து மூத்திரம் பெய்கிற காட்சிகள். ஆடுகள் போடுகிற சாணிகள்.

தலையில் எண்ணெய் தேய்த்து இழுத்துக் கட்டி இருக்கிறாள். வயது இருபத்தேழு இருக்கும் பார்வதிக்கு. வாளிப்பான திரேகக்கட்டு.

இப்பத்தான்... நிச்சயமாகியிருக்கிறது. இதுவரைக்கும் மாலை பூக்கும் என்ற நம்பிக்கையே வரவில்லை. வெறும் வீடு. வறுமையில்லாத வறுமைப் பெருக்கு.

கம்மல், மூக்குத்தியைக் கனவில்கூட பார்க்க இயலாத குடும்பம். கல்யாணத்துக்கு எங்க போக? காசு பணமில்லாமல், கல்யாணத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியுமா?

கரிசல்காடுகளை நோக்கிப் போகிற ஆடுகள். செவலை நிறப் பசுவும் நிதான நடைபோடுகிறது. அதன் வால்நுனி முழுவதும் சாணி - மூத்திரக் கரைசல். ஒட்டுகிற ஈக்களைத் துரத்துவதற்கு வாலைச் சுழற்றுகிறபோது, இவள்மீது தெறிக்கிற மூத்திரத் துளிகள். சாணியும் கரைந்திருப்பதால், சந்தனக் கரைசல்போல கெட்டித் திரவமாக இருக்கிறது. ஆடுகளும், கிடாய்களும் கரிசல் தரிசுகளில் சுதந்திரமாக மேய்கின்றன.

‘முத்தன் வர்றதுக்கு இன்னும் ரொம்ப நேரம் கெடக்கு.’

செம்மறியாடுகளை எழுப்புவதற்கே பத்து மணிக்கு மேலாகிவிடும். அவன் பக்கத்து ஊர்க்காரன். சின்னப்பையன், பதினேழு வயது.

அத்துவானக் காட்டில், வாய்த்துணைக்குக்கூட ஆளில்லாமல்... வெட்டவெளியில் மேய்கிற ஆடுகளையும், காய்கிற அனல் அலைகளையும் பார்த்துக் கொண்டே கால்கடுக்க நின்றாக வேண்டும். இடுப்பெலும்பு வலித்தாலும், ‘உஸ்ஸ்’ ஸென்று உட்கார்ந்துவிட முடியாது.

கள்ள மேய்ச்சலுக்கு நழுவத் துடிக்கிற ஆடுகளைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணிக்க வேண்டும். நழுவுகிற

ஆடுகளை நோக்கிக் கல்லெறிந்து, வசவுச் சொல்லெறிந்து அதட்ட வேண்டும். மடக்கி நிறுத்த வேண்டும். கெட்ட வார்த்தைகள், மூச்சுக்காற்றுமாதிரி சர்வசகஜமாகத் தெறிக்கும்.

'சின்னப் பயல்தானே... துணைக்குத் துணையாக கூட இருக்கட்டுமே' என்ற நினைப்பில், அவனோடு சேர்ந்து கால் நடைகளை மேய்க்க ஆரம்பித்தது, அவனுக்கும் அதே மாதிரியான மனத்துணை தேவைப்பட்டது. இரு பக்கத் தேவையில்தானே, ஓர் உறவு பூக்கிறது. ஏழு மைல் சைக்கிள் மிதித்து, திருவேங்கடம் 'டூரிங் டாக்கீஸுக்கு' புறப்பட்டு விடுவான். ஆண்பிள்ளை. அடிக்கொரு தடவை சினிமாவுக்குப் போவான், முத்தன்.

'கதை சொல்றா... கதை சொல்றா'' என்று கெஞ்சி மன்றாடுவாள் அவள். அவனும் 'எழுத்து (டைட்டில்) போடுறதுலேர்ந்து' கதையை ஆரம்பித்து... அணுஅணுவாக... அச்சு அசலாக விவரிப்பதில் முத்தன் சமர்த்தன். பார்வதிக்கு சினிமாப் பார்க்கிற மாதிரியே இருக்கும். காட்சிகள் மனசுக்குள் விரியும். படரும். நடித்துக் காட்டுவான். ரஜினி ஸ்டைல்களை அப்படியே செய்து காட்டுவான். காதல் காட்சிகளை லயிப்போடு நடித்துக் காட்டுவான். ரசிப்போடு... அவனுக்கே ஓர் ஆர்வக் கிளர்ச்சியோடு கதை சொல்வான். ரசிக்கிற மாதிரி ரசனையோடு சொல்வான்.

முத்தன் கதைசொல்லும் கலைக்கு இவள் தீவிர ரசிகை. தின்பண்டமெல்லாம் கொடுப்பாள்.

காட்டுவாயிலில் கரையும் பொழுது. அத்துவானத் தனிமை. ஆடுகளைக் கெட்ட வார்த்தைகளால் திட்டிதிட்டி

மரத்துப் போன மனசு. தனிமை நீட்சியில் தாறுமாறாக நினைவு வக்கிரம். திரேகப் பாதையில் சறுக்கி விழுகிற மனத்தினவுகள்.

சினிமா பார்த்து... சினிமா பார்த்து... உருவாயிருக்கிற அவனது ரசனை. மன ருசி, விடலை வயசாக மாறிக்கொண்டிருக்கிற பாலகன். உதட்டுக்கு மேல் பூனை ரோமங்கள்.

ஏதோ ஓர் ஆபாசப் படம். மாற்று மொழிப்படம். வழக்கம்போல கதைகேட்டு நச்சரித்த பார்வதி. வழக்கம்போல பாவனையோடு நடிப்போடும் செய்துகாட்டி கதைசொன்ன முத்தன்.

“பாத்ரூம்லே நனைஞ்சுக்கிட்டே சீலையை வெலக்குறா. ஜாக்கெட் ஊக்கை கழத்துறா...”

இவளது தோள் சீலையை விலக்கி... ஜாக்கெட் ஊக்கை அவன் கழற்றியபோது... அனுமதித்து விட்டுவிட்டாள்... விடலைப் பையனாகிவிட்ட அந்தச் சின்னவனின் மேய்ச்சல் நிலமாகிவிட்ட அவள்.

கறுத்தூரணிக் காட்டுக்கு வந்துவிட்டாள். பார்வதி சுற்றிலும் சமுத்திரம்போல் கரிசல்காட்டு மக்காச்சோள வெள்ளாமை, ஆளுயரத்துக்கு வளர்ந்த பயிர்கள்... கிள நிற பச்சை சமுத்திரமாய்.

கறுத்தூரணித் தரிசு நிலம் நாலைந்து ஏக்கர். அங்குதான் ஆடுகளை நிறுத்தி... மடக்கி... மேயவிட்டாள். பசுவின் மூக்கணாங் கயிறோடு சேர்த்துக் கட்டிய நீளமான கயிறை ஓர் ஆதாளையில் கட்டிப் போட்டாள். கயிறு நீள்கிறவரை சுற்றிலும் பசு மேயும்.

இங்கேதான்... முத்தனும் செம்மறிகளை பத்திக் கொண்டு வந்து சேருவான். தரிசுகள் முழுக்க செழித்த புல்.

'சின்னப்பயல் சகவாசம், குட்டிநாய் சகவாசம்' என்று சொலவடை சொல்வார்கள். அது வாஸ்தவம்தான்.

காலநேரம் தெரியாமல், இடம் பொருள் பார்க்காமல், அவன் பாட்டுக்கு மேலே கைபோடுவான். கண்டகண்ட இடத்தில் கைமேய்ச்சல், மனச் சில்மிஷம். காமக்கிடாய் மாதிரி, நிதானமில்லாத பரபரப்பு.

இலந்தை முள் புதர் மறைப்புக்கு "வா... வா... வா..." என்று ஒரே நச்சரிப்பு. விடாமல் இச்சிலாத்திப்படுத்துவான்.

அப்படித்தான் அன்றைக்கு...

பதினோரு மணி இருக்கும். இலந்தை முள் புதர் மறைப்பிலிருந்து... சேலை துணிமணியை சரிபண்ணி, இழுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டு மீண்டு வருகிறாள்.

வெயிலில்... வெட்டவெளியில் - இவளைத் தேடிக்கொண்டு, அங்கிட்டும் இங்கிட்டுமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவர். இவளைத்தான் தேடுகிறார்.

வெள்ளை வேட்டி. சந்தன நிற சட்டை. காலில் செருப்பு. கையில் கடிகாரம், விரலில் மோதிரம், கைக்குள் மடித்து வைக்கிற மஞ்சள் பை. முப்பதையடுத்து வயது இருக்கும். ஆள் நல்ல லட்சணம்.

இவளுக்குள் பதற்றமும், பதைப்பும். பின்னந் தலையில் ஒட்டியிருந்த கரிசல் மண்ணை உதறித் தட்டிவிட்டாள். திகைப்பும், திகிலுமாகக் கேட்டாள்.

"யாரு நீங்க...? என்ன வேணும்?"

"சும்மாதான்... ஆடு பாக்க வந்தேன்."

"பாக்குறதுக்கா?"

"பாத்து, வாங்குறதுக்குத்தான்."

"அதெல்லாம் வீட்லே. அம்மாகிட்டேதான் பேசணும்!"

"அவுககிட்ட பேசுனேன். அவுகதான் ஆடுக இங்க மேயுது... போய்ப் பாருங்க'ன்னு அனுப்பி வைச்சாக."

"எத்தினி ஆடுக வேணும்?"

"ஒண்ணே ஒண்ணுதான்."

அவன் ஆடுகளை சிறு பார்வையாகவும், இவளைப் பெரும் பார்வையாகவும் பார்த்தான். இவளையே மாறி மாறிப் பார்க்கிறான். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை... பாதத்திலிருந்து தலைமுடி வரை மேலும் கீழுமாய்ப் பார்க்கிறான். இவளுக்கே பதறி வந்தது. மனநடுக்கம்.

"அம்மாகிட்டே போய்... வீட்லே பேசிக்கோங்க..."

இலந்தைப் புதருக்குள் எட்டிப் பார்த்திருந்தால், கேவலப்பட்ட பாடாகி இருக்கும். வெட்கக் கூத்தாகிப் போயிருக்கும். எட்டு ஊர்க் கேவலம்.

அன்றைக்கு... ராத்திரி.

குளித்துவிட்டு - மாற்றுச் சேலையைக் கட்டிக்கொண்டு - சாப்பாட்டில் உட்கார்ந்து கைவைக்கிற பார்வதி.

அம்மா... குழைவும், கனிவுமாகக் கேட்டாள்.

"ஆடு பாக்க ஒருத்தரு வந்தாரே...?"

"ஆமா."

"அவரை ஒனக்குப் புடிச்சிருக்கா?" அம்மாவின் குரல் குழைவும், தணிவும் இவளுக்குள் அதிர்வாக இருந்தன. விக்கிய மாதிரி துணுக்குற்றாள். பதற்றமாக நிமிர்கிறாள்.

"என்னம்மா... சொல்லுதே?"

"அவரு... ஆடு பாக்க வரல்லே. ஒன்னைப் பொண்ணு பாக்க வந்துருந்தாரு. ஒன்னைப் புடிச்சிருக்குன்னு சொன்னாரு..."

அவள் மறுபடியும் அந்த ஆளை மனசுக்குள் கொண்டுவந்தாள். ஆள்... நல்ல லட்சணம்தான். எடுப்பான தோற்றம்தான். முகக்களையான மாப்பிள்ளைதான். கையில் வாட்சும், மோதிரமும் அவரது செழிப்பைக் காட்டின.

"ஆளு... வசதியோ?"

"நல்ல வசதி. சொந்த ஏழெட்டு குறுக்கம் (ஏக்கர்) புஞ்சை. பம்புசெட் மோட்டாரு. மெத்த வச்ச (மாடி) வீடு. அம்மா இல்லே. வயசான அய்யா மட்டும்தான். ஒத்தைப்புள்ளே. நீ வாக்கப்பட்டுப் போனீன்னா... அந்த ராஜ்ஜியத்துக்கு நீதான் ராணிப் பட்டம்."

"நகை நட்டுக்கு எங்க போறது?"

"ஆடுக, கிடாங்க, பசுவை வித்து வர்றதுலே செய்ய முடியுற நகை போட்டாப் போதும்னுட்டாரு... தங்கமான மனுஷராத் தெரியுது..."

அவளுக்கு முதன்முதலாகத் திறக்கிற வாசல். கனாவில்கூட கம்மல் - மூக்குத்தி பார்க்க முடியாத இவளுக்குத் தெரிகிற ஒற்றைப் பாதை. ஒரே ஒரு ஒளித்தடம். அரிதாக கண்ணில் தென்பட்டிருக்கிற அருஞ்சுனை. இதில் இவள் நனையாவிட்டால்... வாழ்க்கை முழுவதும் பாலைவனம்தான்.

''என்னம்மா... ஒனக்கு அவரைப் புடிச்சிருக்கா?''

அடிவயிற்றிலிருந்து வந்த நீளமான பெருமூச்சை இரைச்சலுடன் வெளிவிட்டாள். நாணமோ... பாவனையோ இல்லாமல், காடே கதியென்று ஒற்றையில் திரிகிற பெண்ணுக்கேயுரிய துணிச்சலுடன் சொன்னாள்.

''புடிச்சாலும், புடிக்காட்டாலும்... வர்ற வாய்ப்புக்கு கழுத்தை நீட்டித்தானே ஆகணும்...''

இரவின் விரலைப் பற்றிக்கொண்டு பகலும், பகலின் காலடி தொட்டு இரவுமாக... நாட்கள், மாயமென நகர்ந்து மறைய...

'கல்யாணச் செலவில் காசைக் கரியாக்க வேண்டாமே' என்ற யோசனைப்படியே அம்மன் கோவிலில் மாலை மாற்றிக்கொண்டு, திருநீறு பூசி... நாலைந்து உறவுக் காரர்களுக்கு மட்டுமே சோறு போட்டு எளிமையாக நடந்தேறியது.

அவளுக்குள் சொருகப்பட்ட முள்ளாக முத்தன். சின்னப்பயல் சகவாசம். சிறுபிள்ளை விளையாட்டுபோல, கல்மிஷமில்லாத காட்டுவெளி விளையாட்டு.

இந்த அப்புராணி மாப்பிள்ளையிடம் அதை மறைப்பதா? கபடமில்லையா? தவறல்லவா? சொன்னால்...

ஏற்றுக்கொள்வாரா? புரிந்துகொள்வாரா? முகம் சுளிக்காமல் ஒப்புக்கொள்வாரா?

அவளுக்குள் ஊசலாட்டம். மாலை பாறையாகக் கனக்கிற மாதிரியோர் பிரமை. திருநீறு, நெற்றியை சுட்டுத் தகிப்பது போன்ற உணர்வு. அவள் முகவாட்டம், மனத்தத்தளிப்பு.

சொன்னால் என்ன ஆகும்?

'தாலியைக் கழற்று' என்பாரோ...? நெஞ்சுக்குள் கட்டையாக நின்றழுத்துகிறது. மனசாட்சியின் அலைபாய்வு. மனசுக்குள் இருள் திட்டுகள்.

அன்றைக்கு இரவில்...

தோளைத் தொட வந்த அவனிடம் ஒரு தாகம் - தவிப்பு.

இவளுக்குள் ஏதோ ஒரு தடுமாற்றம். மனத்தத்தளிப்பு. உள்மனம் கிடந்து கூசியது.

தயக்கத்துடன் - "நாளைக்குப் பார்ப்பமே" என்றாள்.

சட்டென்று கையெடுத்துவிட்டான். 'ஏன் எதுக்கு?' என்று குடையாதது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

ரொம்ப நேரம் பேசினர் - பேசிக்கொண்டிருந்தனர். அவனும் பேசினான். அவளும் பேசினாள். நாக்கு நுனிவரை வந்துவிட்டு உள்ளே போயிற்று அந்த முள்.

உறங்குகிற அவன் முகத்தில் நிலவுகிற நிம்மதி. இந்த வெள்ளையான மனுசரை ஏமாற்றுவதா? அப்புராணி மனுசரிடம் கபடமாக மறைப்பதா?

அவளுக்குள் மனஉளைச்சல், சஞ்சலம்.

மறுநாள்...

மாப்பிள்ளையின் ஊர்க்கிழவி வந்திருந்தாள். பார்வதியைப் பார்த்து முகமலர்ச்சியோடு வாழ்த்தினாள். அவளது முகத்தை இரு கையாலும் வருடி, தடவி, தன் கைகளை முத்தமிட்டு ஆசீர்வதித்தாள்.

"வயசு முத்துன கழுதைகளோட சகவாசம் வைச்சு கெட்டழிஞ்ச பய. மாட்டேன்னு திரிஞ்ச பயலை, கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்குறதுக்குள்ளே, அவுக

அய்யாவுக்கு திண்டாடிப் போச்சு. மகராசி, புண்ணியவதி... நீதான் சாமர்த்தியமா அவனோடு குடும்பம் நடத்தி, அவனை நல்ல வழிக்குக் கொண்டாரணும் தாயி...'' என்று கனிவும், குழைவுமாக புத்திமதி சொன்ன அந்தக் கிழவி நம்பிக்கை மிகுந்த குரலில் கூறினாள்.

''ஒன்னாலே முடியும் தாயி... திருத்திக் கொண்ணாந்துருவே. இம்புட்டு ஆடு... குட்டிகளை வசக்கி, அதட்டி மேய்க்க முடிஞ்சவளுக்கு... இவனை வசக்குறது பெரிய மலையா?''

போய்விட்டாள் அந்தக் கிழவி. அவள் முதுகையே பார்க்கிற பார்வதி. அவளுள் கசப்பும், வியப்புமாக யதார்த்த வாழ்க்கை தோன்றுகிறது.

'இந்த வெள்ளை மனுசருக்கும் ஒரு முதுகு இருக்கு. அப்புராணி மனுசருக்குள்ளேயும் ஆயிரத்தெட்டு விஷயமிருக்கு. இவருக்குள்ளும் இம்புட்டு இருட்டா?'

அன்றைக்கு ராத்திரி...

அவன் தோளைத் தொட்டான்.

சுத்தமான மனசோடு - மனைவியாகிய உணர்வோடும், இசைவோடும் அவள் ஆசையாய் குழைந்தாள். 'இந்த ஆளைத் திருத்தி சரி பண்ணணும்' என்ற பொறுப்பும், கவலையும் மனப்பாரமாக ஏறிக்கொள்ள... அந்தப் பெருமூச்சோடு அவனது உயிருடன் கலக்கிறது அவளது உயிர்.

-ராணி, மார்ச். 2009

13. அரியகணம்

இப்பத்தான் நடந்தது மாதிரி... புத்தம் புதியதாக அப்படியே ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. புரட்டிய பக்கங்கள் கண்ணில் மோதுகிற மாதிரி... மனசில் நிற்கிற அந்த நாள்.

'அது நடந்து... பன்னிரெண்டு வருஷமாயிற்று' என்பதை நினைக்கிறபோது, அவருள் வந்து கனக்கிற ஆயாசம்.

'தனது வாழ்வும், கடந்த காலமும் அடையாளமற்ற நிலையிலேயே கரைந்து மாயமாகிவிட்டதே' என்கிற சோர்வுணர்வுக்காளான சுந்தரவதனம். அவர் முகவாட்டத்தில் அவரது மனவோட்டத்தின் நிழலிருட்டு.

யாரிடமும் பேசப் பிரியமில்லை. 'ஹலோ' சொல்கிற முகங்களுக்கு, ஒருவித அசட்டுமுகச்சலனமே பதிலாகிறது.

''என்ன நல்லாயிருக்கீங்களா?'' என்ற கேள்விக்கு ''இருக்கேன்'' என்பதுதான் பதில்.

''என்ன டல்லாயிருக்கீக...?'' சகபத்திரிகையாளரின் அக்கறையான விசாரிப்புகள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நா நல்லாத்தானேயிருக்கேன்.'' யந்திரத்தனமான சொற்களின் சமாளிப்பு.

கூட்டம், ஒன்றும் இரண்டுமாக தலைகள் வருகிறது. அரசாங்க விருது பெற்ற எழுத்தாளருக்குப் பாராட்டு விழா. மேடையலங்காரத்தில் இன்னும் ஈடுபடுகிற ஆட்கள். வருகிற பார்வையாளர்களையும், பத்திரிகையாளர்களையும்

உபசரிக்கிற அக்கறை. சகபத்திரிகையாளர்கள் பரஸ்பர விசாரிப்புகளில் உற்சாகம் பெற்றுக் கொள்கிற மாலைப் பொழுது. சுந்தரவதனம் என்கிற பெயர் நிறையப் பேருக்குத் தெரியாது. ஆனால் இவரைத் தெரியாதவர்கள் யாரும் பத்திரிகை உலகில் இருக்க மாட்டார்கள். அவர்கள் அனைவரும் அறிந்திருக்கிற பெயர், ஆர்.எஸ்.வி. ஏகப்பட்ட வருஷ அனுபவம், பத்திரிகையில்.

ஆர்.எஸ்.வி. என்றால்... பத்திரிகை உலகம் முழுக்க அறியும். பன்னீர்ப் புகையிலை போடுகிற அறுபது வயதுக்காரரிலிருந்து, யமகாவில் வந்திறங்கி, பில்டர் சிகரெட்டை நசுக்குகிற இருபது வயதுக்காரர் வரைக்கும் அத்துபடி.

ரொம்ப ரொம்ப பிரபலமான, பாரம்பர்ய பெருமைகள் நிறைந்த - வார இதழின் சப்-எடிட்டர். துணை ஆசிரியர்.

'பிரஸ்' என்ற அட்டை தொங்க விடப்பட்ட பகுதியில் உட்கார்ந்திருக்கிற ஆர்.எஸ்.வி. விருதுபெற்ற எழுத்தாளர் வருகைக்குக் காத்திருக்கிற கூட்டத்துடன் அவரும் காத்திருக்கிறார். இந்த விழாவின் நிகழ்வுகளைக் கவர்பண்ணுவதாக இவருக்கு அசைன்மெண்ட்.

ஓய்வு பெற்ற நீதிபதி பாராட்டுகிறார். பல விருதுகள் பெற்ற எழுத்தாளர் சிங்கம் பாராட்டுகிறார். திரை உலகப் பிரபலங்கள் நால்வரின் வாழ்த்துரைகள்.

இறைவணக்கம் பாடுவதற்கான தயாரிப்புடனும், முழுநிறை மேக்கப்புடனும், லிஃப்ஸ்டிக்கின் சிவந்த உதடுகளுடன் காத்திருக்கிற நான்கு பெண்கள். மறந்து விடாமலிருப்பதற்காக... பாடல் வரிகளை மனனம் செய்து

கொண்டும், விடாமல் முணுமுணுத்துக் கொண்டுமிருக்கிற அவர்கள்.

"ஆர்.எஸ்.வி. நல்லாயிருக்கீங்களா?"

"ஓ! இருக்கேனே..."

"ஃபங்ஷன் ஆரம்பிக்க... இன்னும் டயமாகும் போலிருக்கே வாங்க... வெளியே போய்... டீ சாப்புட்டு வரலாமே."

"இங்கேயே டீ தர்றாங்களே..."

"சர்க்கரை போட்ட ட்ரம் டீதான். வாங்க... வெளியே காலார நடந்துபோய், வித் அவுட் சுகர் டீ சாப்புட்டுட்டு வரலாம்."

கூப்பிடுகிறவரும், இவர் வயதுதான். வேறொரு வார இதழில் துணை ஆசிரியர். ஏகப்பட்ட வருஷங்கள் அனுபவம்.

"சரி, வாங்க போவோம்."

"என்ன... இந்த இஷ்யூவில 'குசேலன்' படத்தோட மேட்டரும் வருதா?"

"அது... பழைய செய்தியாகலியா?"

"பழையதுதான்... அதுக்குள்ளேயே புதுத் தகவல்கள், மேக்கப் ரகசியங்கள்..."

"நயன்தாரா மேட்டர் ஏதாச்சும் வருதா?"

"ம்... வருது. அதோட.... மர்மயோகி சம்பந்தப்பட்ட மேட்டர்ஸும் வருது."

கத்தரிக்கப்பட்ட காகிதத்தில் ரெண்டு சமோசா வைத்து நீட்டுகிற டீக்கடைக்காரர்,

ஆர்.எஸ்.வி. தயங்குகிறார்.

"ஏன் சார்?"

"சமோசாவுக்குள்ளே உருளைக்கிழங்கா... பல்லாரியா?"

"பல்லாரி வெங்காயம்தான். சாப்புடுங்க சார். ஒண்ணும் செய்யாது."

அழைத்துவந்த சபரி சாரின் தைர்யமூட்டல். வாங்கிப் பிய்க்கிற ஆர்.எஸ்.வி.

"ரெண்டு டீ."

"சுகர்...?"

"வித் அவுட் சுகர்."

சபரி ஆர்டர் கொடுத்து முடித்துவிட்டு, இவரை நோக்கித் திரும்புகிறார்.

"என்ன சார், முந்தியெல்லாம் உங்க பத்திரிகையிலே அழுத்தமான ஷார்ட் ஸ்டோரிஸ் வரும். இப்பவெல்லாம் ஏனோ தானோன்னு... உப்புச்சப்பில்லாத ஷார்ட் ஸ்டோரியா வருதே..."

"அதுமட்டுமில்லே சபரி சார், முன்னாடியெல்லாம் ஒவ்வொரு இஷ்யூவிலேயும் நாலு ஷார்ட் ஸ்டோரிஸ் வரும், நாலும் நாலு தரத்துலே இருக்கும். அதுலே ஒண்ணு கிளாஸிகலா இருக்கும்..."

"ஆமாமா... இப்ப ஒண்ணே ஒண்ணு வருது. அதுவும் உவர் மண்ணாயிருக்கே."

"என்ன பண்ணச் சொல்றீக? புது நிர்வாகம். புதுசுபுதுசா ஆர்டர்ஸ். அமெரிக்காவுலே படிச்ச ஜர்னலிஸத்தை....

அப்படியே நம்மூர்லே அப்ளை பண்றாங்க. நம்ம நாடு... நம்ம கல்சுரல்... நம்ம மண்ணோட மரபு... நம்ம ரசனை... இதைப்பத்தியெல்லாம் அமெரிக்காவுலே ஜர்னலிசம் படிச்சவருக்கு என்ன தெரியும்?''

''ஒண்ணும் தெரியாதவன் கையிலே ஒலகம் இருக்கு. மண்ணு, மரபு தெரிஞ்ச நம்மகிட்டே என்ன இருக்கு?''

சபரி சாரின் பேச்சும், சலிப்பும், ஆர்.எஸ்.வி.க்குள் நிரம்பியிருந்த ஆயாசத்தை அதிகப்படுத்தியது. கிளறிவிட்டு, கிண்டியெடுத்து, நுரை பெருக்கியது.

நம்ம வாழ்வும், கடந்துபோன நாளும் வீண் விரையமாகவே கரைஞ்சு போச்சோ...? எவ்விதப் பதிவுகளுமில்லாமல், வெறும் பத்திரிகையாளனாகவே இருந்து கழிந்துவிட்டோமோ? மகா பெரிய அச்சு யந்திரத்தின் சிறிய நட்டுமாதிரி... மகா பெரிய பத்திரிகையின் ஒரு சின்னப் புள்ளியாக இருந்து மறைந்து விட்டோமோ?

இண்டர்நெட்டைத் தட்டி, அதில் வருகிற தகவல்களை இறக்கி. உல்டா பண்ணி... பொருளாதார ஆய்வுக் கட்டுரைகளும்... உலக அரசியல் வரலாற்று நூல்களும் எழுதி லட்சம் லட்சமாக சம்பாதிக்கத் தெரிந்த சகபத்திரிகையாளர்கள் போலவும் இல்லாமல்...

மரணத்திற்குப்பிறகும், பேரனின் பேரன் காலத்திலும் பேசப்படத்தக்க இலக்கியம் படைத்து, அரசாங்க விருதுகளும், சலுகைகளும் பெறுகிற எழுத்தாளர்கள் போலவும் வாழாமல்-

வாராந்திர நிகழ்வுகளை செய்திகளாக எழுதுகிற... சிறுகதை, கவிதைகளைத் தேர்வு செய்து, டி.டி.பி. செக்ஷனுக்கு

அனுப்புகிற... வெறும் பத்திரிகையாளனாகவே சம்பளத்துக்கு மாரடித்து ஓய்ந்து விட்டோமோ?...

இந்த ஆயாசம், இன்றைக்குத்தான் இவரை மிகவும் பிடித்தாட்டுகிறது. பீடித்த நோயின் நேரடித்தாக்குதலைப் போல, அவரை அலைக்கழிக்கிறது. அச்சுறுத்துகிறது.

அதுவும்... பனிரெண்டே வருஷங்களில் வளர்ச்சிபெற்று, உச்சம் தொட்டு, அரசு விருதுகள் பெற்று, பாராட்டு பெற இருக்கிற இந்த எழுத்தாளரின் விழா நாளில்... அந்த ஆயாசம், அவரை மிகவும் உக்கிரமமாகப் பீடிக்கிறது.

... பன்னிரண்டு வருஷமாயிற்று. இப்பத்தான் நடந்த மாதிரியிருக்கிறது.

அன்றைக்கு... காலையில் அவரது சேரில் வந்து உட்கார்ந்திருந்த சுந்தரவதனம். டெஸ்பாட்ச் பையன் கற்றையாக வந்து வைத்துவிட்டுப் போகிறான்.

எல்லாமே... கவர்கள், கர்ப்பிணிப் பெண் போன்று வயிறு பெருத்த கவர்கள். சிறுகதைகள் ஏதேதோ நகரங்களிலிருந்தும், தொலைதூர மாநிலங்களிலிருந்தும் வந்திருக்கிற சிறுகதைகள்.

எல்லாவற்றையும் பதிவு செய்தாக வேண்டும். பேரேடு மாதிரியான பெரிய நோட்டை எடுத்து முன் வைத்து விரித்தார். சிறுகதையின் தலைப்பு - சிறுகதையாளர் - அவரது முகவரி என்று கலம் பிரிக்கப்பட்ட நோட்டு.

அஞ்சலில் வந்திருந்த எல்லாச் சிறுகதைகளையும் உடைத்து, விலக மறுத்து அடம்பிடிக்கிற மடிப்புகளை நீவி நேர் செய்து... வருகை நோட்டில் பதிவு செய்து விட்டு... ஃபைலில் போடுகிறார்.

கடைசிக் கவர்... ரொம்ப வித்தியாசமாக - பாமரத் தனமாக - இருந்தது. சாதாரண செய்திக் காகிதத்தில் செய்யப்பட்ட கவர். ஒட்டிய பசை, கம்மஞ் சோறு என்பது உலர்ந்த சுரசுரப்பில் தெரிகிறது. செய்திக் காகிதத்தில் துண்டு வெள்ளைக் காகிதம் ஒட்டி, அதில் எழுதப்பட்ட முகவரி.

கவர் வாங்க முடியாத வக்கற்ற ஆள். கவர்கூட வாங்குவதற்கு கிடைக்காத கிராமம். இதை யூகிக்க முடிகிறது.

அலட்சியமும் ஏளனமும், இளக்காரமுமான எண்ணத்துடன் ஓர் ஆர்வக் குறுகுறுப்பு.

'கற்பனைக்கெட்டாத அளவுக்கு பாமரத்தனமானதாக... கேனைத்தனமானதாக இருக்குமோ? அப்படி என்னதான் இருக்கும்?'

உடைக்கிறார். உள்ளே... கற்றையான காகித மடிப்பு. மேலும் ஆச்சரியம். மூச்சு முட்டுகிற மலைப்பு.

உள்ளே-

வெள்ளைக் காகிதம் கூட இல்லை. அரசியல் கட்சியின் சுவரொட்டித்தாள்களை... கிழித்து, வடிவமைக்கப்பட்டு... அதன் பின்பகுதியில் எழுதப்பட்டிருக்கிற சிறுகதை. சுவரொட்டியின் அச்செழுத்தின் நிழல், மறுபக்கம் கறை நிழலாகத் தெரிகிறது. அதன் மேல் ஓடும் நீலமை யெழுத்துக்கள்.

கவருக்கு வக்கத்தவன் மட்டுமில்லே... ஒயிட் பேப்பருக்கும் கதியத்தவன் போலிருக்கு...

மடிப்புகளின் பிடிவாதத்தை நீவிவிட்டு, நேர் செய்து, சமனப்படுத்தி...

'முதல்லே வாசிச்சுப் பார்த்துட்டு... குப்பைக் கூடையிலே டிஸ்போஸ் பண்ணிரலாம்' என்ற முன் முடிவோடு... வாசிக்க ஆரம்பித்த சுந்தரவதனம்.

"வண்டிக்கார நாயக்கரின் மனசு, அவர் வசத்தில் இல்லை. முள்குமிக்குள் சிக்கிய கல்லெறிப்பட்ட குஞ்சாக திசையற்றலைகிற மனசு."

சுந்தரவதனத்தையே சுழற்றியடிக்கிற வாக்கியங்கள். புதிய மொழி. புதிய வார்த்தைப் பிரயோகிப்பு... புதிய உவமைகள்... புதிய நடை.... புதிய கோணம். எல்லாமே 'புதிய' மயம்.

வாசித்து முடிக்கிறபோது, அவர், அவராக இல்லை. வண்டிக்கார நாயக்கராகியிருந்தார். வண்டிக்கார நாயக்கரிடமிருந்து மீள்வதற்கே... ஒரு யத்தனிப்பு தேவைப்பட்டது.

அவர் பிரமிப்பின் உச்சத்தில் திகைத்துக் கிடந்தார். ரொம்ப நேரம், அந்த மலைப்பிலிருந்து விடுபட முடியவில்லை...

நேராக... எடிட்டர் அறைக்குள் பாய்ந்தார். லேசாகத் தள்ளினார்.

"சார், வரலாமா?"

"யாரு? ஆர்.எஸ்.வி. யா? வாங்க."

"சார்... ஓர் அதிசயம்."

"சொல்லுங்க..."

"காணக்கிடைக்காத மூலிகைமாதிரி... அபூர்வமான ஷார்ட் ஸ்டோரி... சார்."

"அனுபவப்பட்ட ஆளு, நீங்க... ஏகப்பட்ட வருஷ சர்வீஸ். நீங்களே அபூர்வம்னு சொல்றப்ப... அதுக்கு அப்பீலே கிடையாது... 'கிளாஸிகலான கதை'ன்னு போட்டுரலாமா?"

"போடலாம் சார்... ஆனா..."

திகைத்து இழுக்கிற ஆர்.எஸ்.வி.

"சொல்லுங்க... என்ன ஆனா?"

"அதைவிடவும் கூடுதலான தகுதியுள்ள சப்ஜெக்ட்."

சற்றே யோசிக்கிற ஆசிரியர். இவரை தீர்க்கமாகப் பார்க்கிறார். சலனமற்ற உறுதியில் நிலைத்திருக்கிற இவரது மனத்தீவிரம்.

"ம்ம்... அப்போ... நம்ம 'முத்திரைக் கதை' ன்னு ஸ்பெஷல் சீல் குத்திருங்க..."

"ஓ.கே... சார்... ரொம்ப தேங்க்ஸ்."

"எதுக்கு தேங்க்ஸ்?"

"என்னோட தேர்வுக்கு, வாசிச்சுப் பார்க்காமலேயே ஓகே சொன்ன உங்க நம்பிக்கைக்கு."

"உங்க அனுபவம்... அப்படிப்பட்டது ஆர்.எஸ்.வி."

எழுதிய முதல் சிறுகதையே... தமிழகத்தின் பிரபலமான வார இதழில்- பாரம்பர்யப் பெருமைமிக்க பத்திரிகையில் - முத்திரைப்பரிசுக்குரிய சிறுகதையாகத் தேர்வு செய்து, வாதாடி பிரசுரித்து வெளிச்சம் தந்தவர், ஆர்.எஸ்.வி.

அப்படி வெளிச்சம் பெற்று, வளர்ச்சியின் உச்சம் தொட்டு, அரசு விருதுகள் பெற்று... இன்றைக்குப் பாராட்டு பெற இருக்கிற இந்த எழுத்தாளர்தான்... அந்த எழுத்தாளர்.

அவர், பன்னிரெண்டு வருஷத்தில் நாடறிந்த ஒளிமிக்க எழுத்தாளர். இன்றைக்கும், செய்தி சேகரிக்க வந்து காத்திருக்கிற பத்திரிகையாளராக... ஆர்.எஸ்.வி. இடம் மாறாத... வளராத... அதே இடம். அதே களம்.

'நாம விரையமாயிட்டோமா... வாழ்நாளை வீணாக்கிட்டோமோ... அடையாளமற்ற சம்பள மாடிப்பாக நாட்களைப் பாழடிச்சிட்டோமோ...'

அவருள் அலைக்கழிக்கிற கவலைகள். அரித்தெடுக்கிற ஆயாசம். மனச்சோர்வுக்குள் புதைக்கிற சோகம்.

டீயைக் குடித்து முடித்து விட்டு... பிளாஸ்டிக் கப்பை கூடையில் போடுகிற ஆர்.எஸ்.வி. சபரி சார்... கணக்கு முடித்து விட்டுத் திரும்புகிறார்.

"என்ன சார்... இந்த எழுத்தாளர், உங்களாலே வெளிச்சம் பெற்ற ஆளு. அந்த விசுவாசம்... மிச்சம் மீதியா ஏதாச்சும் இருக்கா?"

அவர் கேட்கிற தோரணையே... 'இல்லை' என்ற பதிலை எதிர்பார்ப்பது போலிருந்தது. ஆனால், உண்மையில்...

'இல்லை' என்ற பதில் இல்லை. 'உண்டு' என்ற பதில்தான். விசுவாசம் குறையாத எழுத்தாளர். எந்த இடத்தில், எந்தச் சூழலில், சந்தித்துக் கொண்டாலும்... பாசத்துடன் கையைப் பற்றிக் கொள்வார்.

அந்நியத்தன்மை துளியுமில்லாமல்... சகஜமான பாச உளத்துடன்... உரிமையான சுமுகத்துடன் - கையைப் பற்றிக் கொண்டு... குலுக்குவார்.

“அன்னிக்குமட்டும்... அந்தக் கணத்துலே... என்னோட காகிதத்தையே அலட்சியமா குப்பைக் கூடையிலே போட்டிருந்தா... நா, இன்னிக்குள்ள நா இல்லே. கிராமத்துக் கூடையிலே குப்பையாகக்கூட அல்ல... வெறும் கந்தல் கூளமாகக் கெடப்பேன். நா இன்னைக்கு... எழுத்தாளன், இலக்கியவாதி... இலக்கியச் சூரியன்... ஞான விளக்கு... எல்லாமே ஆதிகாரணம், நீங்கதான். இது நீங்க தந்த வாழ்வு.”

“எண்ணெய்... திரி... எல்லாம், உங்களுக்குள்ளே இருக்கு. சுடராக நிமிர்றீக...”

“இருந்தாலும்... நீங்க ஏற்றி வைக்கலேன்னா... சுடராகப் பற்ற வைக்கலேன்னா... எண்ணெய், திரியெல்லாம் ஒண்ணுமில்லாமப் போயிரும்லே?”

நெகிழ்ச்சியும் வெளிப்படையுமாகப் பேசுகிற எழுத்தாளர். விசுவாசம் குன்றாத விளக்கு. நன்றியுள்ள ஆத்மா. சந்திக்கும் தருணத்திலெல்லாம்... சுற்றிலும் எத்தனை பெரிய வி.ஐ.பி.கள் நின்றாலும்... ஈகோ இல்லாமல், பந்தா இல்லாமல்... வெளிப்படையாக விசுவாசம் காட்டி நெகிழ்கிற அந்த இதயம்.

இவருக்குள் பத்திரிகைப் பணியில் பெருமிதம் ஏற்படுத்துகிற இனிய கணம், இது. தான் அடையாள மற்றுப்போய் விட்டாலும்... சில நல்ல படைப்பாளிகளுக்கு அடையாளம் தந்தது, தனது பணி. அடையாளம் பெற்றவர்களின் அன்பையும், நன்றியையும் பெற்றுத் தந்திருக்கிற பணி.

“என்ன சார்... நா கேட்டேனே...” சபரிதான் விடாமல் கேட்கிறார். பெருமையிலும் பூரிப்பிலும் மலர்ந்து விரிகிற இவரது முகம்.

"இந்த ரைட்டர் ரொம்ப விசுவாசமான ஆளு. விசுவாசத்தை வெளிக்காட்ட கூச்சப்படாத ஆளு. நாலு பேரு கூடியிருக்குற சமயத்துலேயும், விசுவாசத்தை வெளிப்படையா சொல்ற ஆளு... தங்கமான ஆளு..."

"பரவாலே சார்... இந்தக் காலத்துலே இந்த மாதிரி ரைட்டரா? ஆச்சரியம்தான். பாப்போமே... இன்னைக்கு ஏற்புரையிலே உங்க பேரைச் சொல்றாரான்னு பாக்கத்தானே போறோம்?"

இறை வணக்கத்துடன், துவங்கிய விழாக் கூட்டம். தமிழ் வணக்கத்தை இசைத்தட்டு பாடியது. வாழ்த்துரைகள்... பாராட்டுரைகள்... சால்வையணிவிப்புகள்... நினைவுப் பரிசளிப்புகள்...

'கூட்டம் கலைவதற்கு முன்பே...' என்ற முன்னுரையுடன் சொல்லப்பட்ட நன்றியுரைக்குப் பிறகு... எழுத்தாளரின் கம்பீரமான ஏற்புரை.

மேடைக்கேற்ற ராஜதோரணை. கம்பீரமான ஆண்மைக்குரல். இருபுறமும் முகம் காட்டிக் கொள்கிற சமயோசிதம். தமிழைப் புகழ்ந்து... இலக்கியம் பேசி... ஏதோ ஒரு வகையான இலக்கியப் போக்கை நார் நாராகக் கிழித்து தொங்கப் போட்டு விட்டு... எல்லோருக்கும் இனிமைக் குரலில் நன்றி கூறிவிட்டு...

சபரி... இவரைப் பார்க்க... ஆர். எஸ்.வி. தவியாய்த் தவிக்க... தான் உச்சரிக்கப்பட இருக்கிற கணத்தை எதிர்பார்ப்பின் துடிப்பு.

"என்னையீன்ற தாயைப் போன்றதொரு பாசமிகு பேருரு ஒன்று உண்டு. அதற்கு நான் நன்றி சொல்லாமல் போனால்... நான் மனிதனேயல்ல.

“கிராமத்தின் இண்டு இடுக்கின் கீறலுக்குள் சிக்கிக் கிடந்தவன்... நான் அங்கிருந்து... மகாமட்டரகமான காகிதத்தில், கதை எழுதி... மட்டரகமான கவரில் போட்டு அனுப்பி வைத்தேன். அக்கவரையே குப்பைக் கூடையில் போட்டிருந்தால்... யாரையும் குற்றம் சொல்ல முடியாது...”

சபரியை ஓரப்பார்வை பார்க்கிற ஆர்.எஸ்.வி. அவரது விழியோரத் துளிகளில் மனப்பரவசம். தன் பெயர் நாடறிய, விழாப் பெருங்கூட்டத்தில் உச்சரிக்கப்பட இருக்கிற கணம்.

“அப்படித் தரமற்ற காகிதத்தில் வந்த கதையில், வாழ்வின் தகிப்பு இருந்தது. ஆகவே... அந்தக் கதையின் அருமை அறிந்து... உணர்ந்து... எனது முதல் கதையையே முத்திரைக் கதையென...”

ஆர்.எஸ்.வி.யின் பார்வையில் ஒரு கம்பீரம். சபரியைப் பார்த்து கண்சிமிட்டுகிற ஆர்.எஸ்.வி... “பிரசுரித்து என்னை வெளிச்சப்படுத்திய பாரம்பர்யப் பெருமை மிகு அந்த வார இதழின் ஆசிரியரைப்பற்றி நன்றியோடு இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அவர்தான், இந்த ஞான விளக்கை ஏற்றி வைத்தவர். அவர்தான் இலக்கியச் சுடரை நிமிர வைத்தவர். அவருக்கு எனது நன்றிகள்...”

ஒட்டுமொத்த சபையே கைதட்டி ஆரவாரிக்க... அந்த மண்டபமே அதிர்வலைகளில் நடுங்கியது. சுழற்றி யெறியப்பட்ட ஆர்.எஸ்.வி.யின் முகக் கறுப்பு. அவமான அவஸ்தை.

சபரி, ஆர்.எஸ்.வி.யைப் பார்க்க... அவர் வேறு எங்கோ பார்க்கிறார். அவருள் ஏமாற்றக் கற்றையின் தாக்குதல்கள். முகம் கறுத்துப் போயிற்று.

ஆயாசம், அவரை நிலைகுலைய வைக்கிறது. அவர், அவராக இல்லை. மனசளவில் பிரேதமாகி உயிரற்ற நடையில் வெளியேறுகிற ஆர்.எஸ்.வி. எனும் சுந்தரவதனம் என்கிற அச்சுயந்திரம்.

-கலைமகள், தீபாவளி மலர், 2008

14. மனத்தாய்மை

பொழுதடைந்து இருட்டி விட்டது. இவன் செம்மறிகளை கருங்கல் கிடங்குத் தண்ணீருக்குள் இறங்கி நனைய விட்டு, நீந்த விட்டு குடிக்கவிட்டு... பற்றிக் கொண்டுவந்து திறந்தவெளிப் படலுக்குள் அடைத்து, படல் கதவை இழுத்து மாட்டும்போதே இருட்டிவிட்டது. குட்டிகளை அடைத்து வைக்கிற ஆட்டுக்கூடு. கும்பாவைக் குப்புறக் கவிழ்த்தினமாதிரி, பெரியகூடு. அதைத் தூக்கினான், விடுபட்ட குட்டிகள் ''ம்ஏஏங்க... ம்ம்ம்ஏஏஏங்ங்க்'' கென்று கத்தலும் கனைப்புமாக வெடித்துச் சிதறினமாதிரி ஆவல் பறப்பில் தெறித்தோடிற்று. அதனதன் தாயாடுகளை நோக்கிப் பாய்ந்தன. பால்குடிக்கிற ஆசைத்துடிப்பு. மடிமுட்டி மோதுகிற பாசத் தவிப்பு. வழியவழிய பால்குடிக்கிற மனப் பசி.

குட்டிகளுக்கான இளங்கொழை இல்லை. பெரிய கிடாய்களுக்கான கொழையும் இல்லை. வாடிவதங்கின இலை இணுக்குகளைக்கூட கறும்பித் தின்றிருக்கின்றன. துடைத்தெடுத்த மாதிரி சுத்தம்.

''ராப்பாட்டுக்கு கொழை வேணும். யாரு புஞ்சையிலே 'கை' வைக்கலாம்'' என்று உள் மனயோசனை உதட்டு முணுமுணுப்புகளாக வெளிப்படுகிறது முத்தாண்டிக்குள் ஒவ்வோரு புஞ்சையாக வந்துபோகிறது. அகத்தி கொழை கொப்பும் குலையுமாக யார் புஞ்சையில் 'மொதப்பாக'க் கிடக்கிறது?

முத்தாண்டி மனசுக்குள் ராமசுப்பு புஞ்சை நினைவில் சிக்கி நின்றது. இணுக்குக் கொழைகூட ஒடிக்கப் படாமல் அலுங்காமலிருக்கிற செழிப்பு. கொழை மோதிக் கிடக்கிற அடர்த்தி. நல்ல கொழுத்த கொப்புகள்.

நல்ல அகத்திக்கொழை. செழித்த வேட்டையாக இருக்கும். ரொம்பத்தூரம். இடுகாட்டுக்குப் பக்கத்திலிருக்கிற புஞ்சை. இடுகாட்டுப் புதைமேடுகளைத் தாண்டித்தாண்டித்தான் போகணும், அது ஒண்ணும் சிரமமில்லை.

முத்தாண்டிக்கு பயமில்லை. இடுகாடு எல்லா இடத்தையும்போலவே இதுவும் ஒரு மண்திட்டு. பேய், பூதம், பிசாசு, பற்றிய பயமில்லை. இருட்டுக்குப் பயமில்லை. முள்ளுமுடலுக்குப் பயமில்லை. பாம்பு பூச்சிக்குப் பயமில்லை. செத்த ஆவிக்கு பயமில்லை. சாகாமல் சுற்றுகிற காற்றுகருப்புக்கும் பயமில்லை.

இதுக்கெல்லாம் பயந்தால் ஆடுகுட்டி மேய்க்க முடியாது. வாயில்லா பிராணிகளுக்கு வயிறு நிறைய வைக்க முடியாது. கொழை தழைகள வாங்க முடியாது. முத்தாண்டி படலுக்குள் நின்றுகொண்டும் உலவிக்கொண்டுமிருந்த ஆடுகளை ஒவ்வொன்றாக கண்ணால் மேய்ந்தான்.

"மேய்ச்சத்தளத்துலே ஏதாச்சும் தப்பிருச்சா? எல்லாம் வந்துருச்சா?" என்ற எண்ணத்தோடும் எச்சரிக்கையோடும் சுற்றி மேய்கிற பார்வை. காதுவெள்ளை, கிழிச்சகாது, கண்ணுபுள்ளி, கருப்புக்காது... கருநாக்கு... கோணக்காது, வவுறுவெள்ள, அறுந்தவால், நுனிக்கருப்பு, சளிஒழுகி, ஓட்டைமூக்கு, ஓட்டைக்காது... என்று ஒவ்வொரு

ஆடுகளையும் இனம் பார்த்து, இவன் வைத்த பெயர் நினைத்து... தேடித்தேடி சரிபார்த்துக் கொண்டான்.

“ம்... எல்லாம் வந்துருச்சு, ஒண்ணும் தப்பலை” என்று திருப்திப்பட்ட மனத்ததும்பலோடு... ஆட்டுக்கம்பைப் படலில் சாய்த்து விட்டு, கொழைகட்டுகிற நூல்கயிறை எடுத்து மேல்துண்டு மாதிரி தோளில் போட்டுக் கொண்டான்.

‘இன்னிக்கு ராமசுப்பு புஞ்சையிலேதான் வேட்டை’ என்று மனசுக்குள் குறித்துக் கொண்டான்.

முத்தாண்டி... படலைவிட்டு விலகி கோனார் வீட்டு முற்றத்தில் நின்று... “எம்மா... எம்மா... எம்மா... ங்” என்று கத்தினான். வீட்டம்மா எட்டிப் பார்த்தது. “என்னால வந்துட்டியா?”

“ஆமம்மா...”

“கூட்டை தெறந்து வுட்டுட்டீயா.”

“வுட்டுட்டேன், கொழையில்லே போவணும்.”

“இந்தாடா... இங்கேவா. பழையகஞ்சியும், குழம்பும் இருக்கு. குடிச்சிட்டுபோ.”

அவனுக்கும் சாயங்காலமே பசி உயிரைப் பிடுங்கியது. அடி வயிறெல்லாம் காந்தியது. காந்தலெடுத்து பசியே இப்போது மந்தித்துவிட்டது. வாசலுக்கு இருபக்கமுள்ள திண்ணையின் காலடியில் குத்துக்கால் வைத்து உட்கார்கிற முத்தாண்டி. கரைகஞ்சியும் குழம்பும் ருசியாக இருந்தது. வயிறுமுட்டக் குடித்துவிட்டு, ஏப்பம் போட்டான். மனசும், நாவும் வயிறும் நிறைந்துவிட்ட மனத்ததும்பல். வீட்டம்மா

உலவுகிற திசையை மனநிறைவோடு பார்க்கிற முத்தாண்டி. தாய்ப்பறவையை நோக்குகிற குஞ்சின் மனக்குழைவு.

"அப்ப... நா போவட்டா... ம்மா?"

"இருலே... இந்தா வாரேன்." குரலாக மட்டும் வருகிற மாய அன்பு. காற்றென வந்து மோதுகிற கருணை.

"இந்தாடா... மடியைப் பிடி"

என்று அலுமினியத் தட்டு நிறைய காரச்சேவும் தேங்காய்ச்சில்லும் கொண்டு வந்து இவனிடம் நீட்டினாள். மேல் துண்டை ஏந்தி வாங்கிக் கொண்டான். வாயில் போட்டு 'நெறு, நெறு,' வென்று மெல்லுகிற சேவு. அதன் காரருசி. சேவு இவனுக்கு எப்பவும் பிடிக்கும். ஆசைப்பட்டு ரசனையோடு தின்பான். காரசேவு என்றால், குடியிருந்து, மாட்டி வளையப்பன்.

"பாவம்... தாய்தகப்பனத்த புள்ளே... நாதியத்து ஏதுமத்து அத்தலைஞ்சு திரியுத புள்ளே... வாய்க்கு ருசியா திங்கட்டும்," என்று நடந்துபோகிற அவனின் முதுகை பாசமும் பரிவுமாக பார்க்கிற வீட்டம்மா.

தாழ்வாரத்துக்கு முன்னாலுள்ள முற்றத்தில் வந்து உட்கார்ந்து தின்று முடித்தான்.

"தண்ணி வேணுமா டா?"

"சேவுதுன்னுட்டு தண்ணி குடிக்காம இருக்க முடியுமா?"

"இந்தாடா... தண்ணி" என்று செம்பை நீட்டுகிறாள்.

"போயிராதே. இரு... காப்பிதண்ணி இருக்கு. குடிச்சுட்டுபோ."

வீட்டம்மாவின் குரலில் தாயைத் தேடுவான், முத்தாண்டி. வீட்டம்மாவின் பார்வையில் பரிவுக்குழைவில் - அம்மாவின் நிழல் தெரியும். அம்மா கோனார் வீட்டில் பதிவாக கூலி வேலை பார்த்தவள். இவன் ஆறுவயதாகிற போது அம்மா நோயில் விழுந்து மாண்டுவிட்டாள். இவன் ஒரு வயதாகிற போதே அப்பனை விழுங்கியவன்.

படலில்தான் கிடப்பான். ஒரு சின்ன சாய்ப்பு இருக்கிறது.

அதில்தான் படுத்திருப்பான். வீட்டம்மா கஞ்சியில்தான் வயிறு குளிர்ந்தது. எட்டுவயசிலேயே கம்பு தூக்கிவிட்டான், ஆடுமேய்க்க.

ஆட்டுவாசம்... அதன் மூத்திரவாசம்... அதன் சளிவாசம்... ஆட்டுரோம நெறு நெறுப்பு எல்லாமே இவனுக்குப் பிடிக்கும். ஆட்டுவாலின் துடிப்பே அவனது தலையெழுத்தின் திசையாயிற்று.

இதோ... இப்பவும் வயது பதினெட்டாயிற்று. கன்னத்தில் சின்ன சின்ன பருக்கள். உதட்டுக்குமேல் பூனை ரோமங்கள். வாலிப வாசலைத் திறக்கிற நெஞ்சுக்குழி ரோமங் கள்.

வெங்கடேசுவரிக்கு இவனது நெஞ்சுக்குழியில் வாய்வைக்க ரொம்பப் பிடிக்கும். அவள் சுவாசச்சூடு நெஞ்சில் பட்டுத்தகிக்க... நெஞ்சுக்குழியில் உதடுகளைப் பதித்து... நாவால் நனைத்து... ரோமத்தைப் பற்களால் பற்றிக்கடிக்கிறபோது... சுகத்தின் உச்சத்தில் திளைத்து... கண் சொருகுவாள்.

''ஏலேய்... சிங்கக்குட்டி... சிங்கக்குட்டி...'' என்று முக்கலும் உணர்ச்சித் திணறலுமாக முனங்குவாள். அந்த முனங்கல், இவனுக்குள் வெறியைத் தீயாக மூட்டும்.

வீடு வீட்டுக்கு டி.வி.சத்தம். தெருவெல்லாம் மனிதத் தடமோ, சந்தடியோ அற்ற வெறுமை. வெட்டவெளியில் தெருவிளக்கின் ஒளிப்பரவல். கொசுவின் ரீங்கரிப்பு.

''இதா...ன், டயம். இப்பப் போனாத்தான் சீராக இருக்கும்'' என்ற முணுமுணுப்போடு புறப்படுகின்ற முத்தாண்டி தெருவைக் கடந்து, ஊரைவிட்டு விலகி... வண்டிப்பாதை இருட்டில் எட்டை எட்டிப்போட்டு... தெருவிளக்கின் எல்லை முடிந்த இடத்திலிருந்து கற்றையாக வந்து சூழ்கிற இருட்டில் பார்வையைத் துளைத்து...

ஆகாயத்தில் சிதறிய பருக்கைகளாக வெள்ளி பூத்துக் கிடக்கிறது. வளர்பிறை கீற்று நிலா மேகமுதுகுக்குள் ஒளிந்து கொண்டது.

ஆட்டுகாரனுக்குரிய பயமறியாத துணிச்சல். பாதங்களில் முளைத்த கண்கள். வேலி முள் குத்தாமல், பூச்சிபொட்டில் கால்படாமல் கற்பாறையில் விரல் எற்றாமல், இருட்டில் தெளிவாக நடக்கிற முத்தாண்டி. பாதங்களுக்குப் பரிச்சயமான பாதை. இருட்டுக்குப் பழகிய பாதங்கள். சிள்வண்டுகளின் இரைச்சல். பனங்காடையின் வீறிடல். பனைமரத்து மயில்களின் நீட்டிமுழக்கிய கூப்பாடுகளில் அதன் பயம்.

மயானக்கரை முழுக்க பொதுபொதுவென்று மணல்காடு. காய்ந்த வாகைக்குச்சிகள். காலில் தட்டுப்படுகிற மண்டையோடுகள். வெள்ளை எலும்புகள் எதையும் பார்க்காமல் நடையை எட்டிப் போடுகிற முத்தாண்டி.

ஓடைக்குள் விழுந்து வேலிமுள் கவைகளைக் கடந்து, கரையேறி, ராமசுப்பு புஞ்சைக்குள் கால்வைத்தான்.

பழகப்பழக... இருட்டும் வெளிச்சமாகத் தோன்றுகிறது. வெள்ளி வெளிச்சம், 'மடக் மடக்' கென்று கொழைக் கொப்புகளை ஒடித்தான். பதறிப்பதறி வேகமாக ஒடித்தான். கால்தடம் பதியாமலிருக்க பாதத்தில் பாலித்தின் பேப்பர் சுற்றியிருக்கிறான். சடக், சடக் கென்று கொப்பு ஒடிபடுகிற சத்தம்.

வாயில்லாச் சீவனுக்கான களவாக இருந்தாலும், களவு களவுதானே! பிடிபட்டால், ஊர்கூட்டம்தான். அபராதம்தான்.

பதற்றமும் பரபரப்புமாக கொழை ஒடித்தான். மூன்று வாய்க்கால் ஒடிப்பதற்குள் பெருங்கட்டாக ஆகிவிட்டது. ஆமணங்கங்கொழையையும் ஒடித்தான். வியர்த்துக் கொட்டுகிறது, சரம் சரமாக.

ஊற்றெடுக்கிற வியர்வை, பனியன் சட்டையெல்லாம், 'சொத சொத', வென்று நனைந்து திரேகத்துடன் அப்புகிறது.

நூல்கயிற்றை விரித்துநீட்டி, கொழைகளை அள்ளிப் போட்டு, இறுகக்கட்டி, தலைப்பாரமாகத் தூக்கிக்கொண்டு மயானத்தைத் தாண்டிய பிறகுதான்,

பயஇறுக்கம் விலகியது. சுவாசம், திணறலற்றிருந்தது. பயப்படபடப்பு சற்று தணிந்தது. பொதுவான வண்டிப் பாதைக்கு வந்தாயிற்று. இனி யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.

தலைச்சுமை கனத்தது, கழுத்து நரம்பு விறைத் துரணமெடுக்கிறது. நெஞ்செலும்பு நெருக்கப்பட்டதுபோல மூச்சுத் திணறுகிறது.

ஆனாலும் மெதுநடையாக நடக்கிறான்.

ஏனோ... அவனுக்குள் வெங்கேடஸ்வரியின் வெற்றுடம்பும் வியர்வைப் பெருக்குமாக ஒருவாசம். ஒதுங்கிக் கிடக்கிற சேலையில் பாதம்பட்டு ஒரு நெறுநெறுப்பு தட்டுப்படும்.

அவளது ஆடுகள் மூன்று இவன் ஆடுகளோடு சேர்ந்து மேயும். ஒருநாள் "இங்க வா முத்தாண்டி" என்று கூப்பிட்டாள்.

"என்னம்மா?"

"எங்கிட்டே ரெண்டு வெள்ளாடு ஒரு கிடா நிக்குதுக; எங்களாலே இரைபார்த்து சமாளிக்க முடியலே, நீ ஆட்டோட ஆடா பத்தி மேய்ச்சிட்டுவா, மாசம் மாசம் ஒரு சம்பளம் போட்டுத்தாரேன்."

அவனுக்குள் சம்பளம் என்றவுடன் ஒரு சலனம். ஒரு சபலம், வவுத்துக்கு கஞ்சிக்கு ஆடுமேய்க்கிறவன். வருமானம் என்று சல்லித்தம்படி கூட கையில் பார்த்தறியாதவன், ஆனாலும்.

"எங்கே கோனாரய்யாகிட்டே சொல்லுங்க. அவருசொன்னா... பத்திட்டுப் போறேன்."

கோனாரிடம் வந்து கெஞ்சிய வெங்கடேஸ்வரி.

"ஏலேய், இவுக ஆடுகளை பத்திட்டுப்போ, வர்றப்ப அவுக வூட்லே வுட்டுட்டு வந்துரு, தர்ற சம்பளத்தை நீ ஒங் கைச் செலவுக்கு வைச்சுக்கோ."

இவனுக்குள் ஊற்றெடுக்கிற அருஞ்சுனைப் பெருக்கு, சந்தோஷக் கும்மாளம், சம்பளம் எம்புட்டுச் சிறிதாக இருந்தாலும் இவனது வருமானம். இவனது உழைப்புக்கான சன்மானம்.

இந்த நாதியத்த ஏதுமத்த பயலும் எதற்கோ தேவைப்படுகிறான் என்ற நினைப்பே, அவன்மேல் அவனுக்கு மரியாதை தருகிறது. மதிப்பு வருகிறது.

இவன் சந்தோஷ உற்சாகத்துடன் ஆடு பத்தப்போனான். முதல் நாளே தோசையும் சட்னியும் கிடைத்தது. ஆடுகளை விடப் போகிறபோது ஏதாச்சும் பலகாரம் கிடைக்கும். பணியாரம், அதிரசம், உளுந்து வடை என்று ஏதாச்சும் பலகாரம்.

இவன் வாழ்வில் பார்த்தறியாத பலகாரங்கள், ருசித்தறியாத இனிப்பு மணங்கள். விதம் விதமான தின்பண்டங்கள். மாப்பிள்ளை விருந்துமாதிரி அனுபவித்தறியாத தடபுடல் உபச்சாரம்.

பண்டிகைக் கொண்டாட்டமாக நாட்கள் வாசமும் ருசியுமாக - மகிழ்ச்சியும், கூத்தாட்டமுமாக... "நாளைக்கு வந்து சம்பளம் வாங்கிக்க."

"எப்பவர?"

"ராத்திரி ஒம்பது மணிக்கு வா."

"ஆட்டும்..."

குழந்தையில்லாத வீடு. பெரிய வீடு. அரண்மனை மாதிரி அகலமும் நீளமும். தானிய மூட்டைகளும் தளவாடச் சாமான்களுமாக பணச்செழிப்பு. உயிர்ப்பில்லாத செழிப்பு. அவளுக்கு ஏழெட்டு வருசமாயிற்று, கல்யாணமாகி இன்னும் குழந்தையில்லை.

'மலடி, மலடி' என்று வேல்கம்பு வார்த்தைகள். யார் மலடு என்று கேட்க முடியுமா? குத்துப்பட்ட ரணத்தில்

துடித்தலறுகிற மௌனப் புண்கள். புண்ணின் சீழ் வழிகிற நாற்றம்.

சம்பளம் வாங்கவந்த முத்தாண்டி, ''யம்மா...'' கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். ஒவ்வொரு இடமாகத் தேடிப் பார்த்தான். யாருமில்லாத வெறுமை. ஆளில்லாத வெறும் வீடு.

''யம்மோ... யம்மோவ்... யம்மோவ்.''

உள்ளே உள்ளே கடந்துபோக...

கடைசி அறையிலிருந்து, ''இங்கே வா'' என்கிற குரல்.

உள்ளே போனால்-

வெங்கடேஸ்வரி வெறும் ஈஸ்வரியாக... சம்பளம் வாங்கப் போனவன், ஈஸ்வரிதரிசனத்தில், திகைக்க... அவனுக்கு அவள் பலகாரமாக... அவளுக்கு அவன் தின்பண்டமாக... அவன் ருசியை அவளும், அவள் வாசத்தை அவனும்...

இழந்தானா... அடைந்தானா? ரெண்டுமா?

பறித்தானா... பறிகொடுத்தானா? ரெண்டும்தான்.

அப்புறம், சம்பளம் வாங்கும் நாளில் மட்டுமல்ல... மற்ற நாட்களிலும் அவள் சிக்னல் தரும் போதெல்லாம் போய் வந்தான்.

சுவரிலிருக்கிற பெரிய போட்டோவில் அவளும், ராம சுப்பும்.

அன்றைக்கு அப்படித்தான்-

வியர்வையும் மூச்சிரைப்புமாக விம்மி விம்மித்தணிகிற இவனது நெஞ்சுக்குழியில் முகம்பதித்து-

ரோமத்தைக் கடித்து இழுக்கிற வெங்கடேஸ்வரியின் அடங்காத்தாபம். குமுறிக் கொந்தளிக்கிற அவளது திரேக முறுக்கு.

“என்னடா சிங்கக்குட்டி... என்னடா தங்கக்கட்டி” என்று மிழற்றுகிற அவளது சிணுங்கல்கள். அவன்மேல் சரிந்து படர்ந்துபடிந்து இழைகிற அவள்...

மறுபடியும் அவளைக் கட்டி இறுக்கி... முத்தமிட்டு... அவளைமடியில் கிடத்தி... அவளை அவன் விரல்களால் மீட்டி அவளை அதிரவைத்து... குளிரவைத்து...

“இது தப்பில்லியா?”

துவண்டு சரிகிற முத்தாண்டி கேட்டான். பூனைக்குட்டி மாதிரி அவனை உரசிக்கொண்டு ஒண்டிக்கிடக்கிற வெங்கடேஸ்வரி.

“தப்புத்தான்....!”

“பெறவு?”

“மலடி மலடின்னு சொல்லுறப்ப... வேல்கம்பாலே குத்திப்புடுங்குறமாதிரி... இருக்கு. நாலுபொம்பளைக கூடற எடத்துலே, மலடுன்னு அவமானப்படுறப்ப, சாகலாம் போலிருக்குது...”

“நாம இப்படி இருக்கிறது அவருக்குத் தெரிஞ்சிட்டா?...”
“சாமிசத்தியமா... நா நாண்டுக்கிட்டு மாண்டுருவேண்டா...”

அவன் ஆணிவேர்வரை அதிர்ந்து நடுங்கிப் போய் விட்டான். அவன் அதற்குப்பிறகு அவள் வீட்டுக்குள் போகவில்லை. அவளும் அவனை எதிர் பார்க்கவுமில்லை.

'அவா சங்காத்தமே வேண்டாம்டா சாமி' என்று இவன் ஒதுக்கினமாதிரியே... அவளும், 'அவன் சங்காத்தம் போதும்,' என்று மனசளவில் வைராக்கியமாகி விட்டாள்.

எப்போதாவது... ஆடுகளை அவிழ்க்கப்போகிறபோது இலேசாக நிமிர்ந்து பார்ப்பான். அவள் வேற்றாளைப் போல வெட்டென பார்வையைத் திருப்பிவிடுவாள்.

ராமசுப்பு... எங்காவது பார்க்கிறபோது... ஒரு தினுசாகப் பார்ப்பான். பார்வையில் புதுத்தினுசு இருப்பதாக இவன் நினைப்பான். மிரள்வான். நடுங்குவான்.

வீட்டுக்குள் போய் வந்த தகவல் தெரிந்து விட்டதோ...? கூப்பிட்டுக் கேட்பானோ...? கட்டி வைத்து அடிப்பானோ?

அவனுக்குள் குற்ற உணர்ச்சியின் முள்குத்தல்கள். பயப்படபடப்பு. உள் பதற்ற நடுக்க அதிர்வுகள்.

கொழைக்கட்டை சுமந்து கொண்டு ஓடையைக் கடந்து விட்டான். இன்றைக்கு ராமசுப்பு புஞ்சை. தினம் ஒரு புண்ணியாளன் புஞ்சை. வாயில்லாச் சீவன்களைப் பட்டினி போடலாமா?

பாவமில்லையா? யார் புஞ்சையாவது ஒரு புஞ்சை. தினம் ஒரு புஞ்சை. ராமசுப்புக்கு இன்னும் மூன்று திசையில் புஞ்சைகள் உண்டு. அங்கும் கை வைப்பது உண்டு.

வாயில்லாச் சீவன்கள் வயிற்றுக்கு இரை பார்த்தாகணுமே... அதைப் பட்டினி போட்டுப் பார்க்கலாமா? அதுகள் பசிபொறுக்காமல் கதறுவதை சகிக்கலாமா?

இப்ப... இப்ப... ராமசுப்பு பார்வையே சரியில்லை. கடுத்த பார்வை. இறுகலான பார்வை. முறைப்பான பார்வை. வன்மப் பார்வை.

'பலகாரச் சங்கிலி தெரிஞ்சு போச்சோ...'

பயத்தில் வெலவெலக்கிற முத்தாண்டி.

கூப்பிட்டுக் கேட்டால், அரட்டிமிரட்டி விசாரித்தால்...?'

ஆயிரம் உருட்டல் உருட்டினாலும் அவளைக்காட்டிக் கொடுத்துரக் கூடாது. பாவம் வவுத்துப் புள்ளைக்காரி.

''சாமி சத்தியமா... நா... நாண்டுக்கிட்டு மாண்டுரு வேண்டா,''

அவளது வைரக்குரல். மானத்துக்கஞ்சிய பெண் குரல், குடும்பம் என்ற தேன்கூடாக வாழுகிற ஒரு பெண்குரல். புண்பட்டு, குத்துண்ட பறவையாகத் துடித்தலறிய ஒரு மானக்குரல்.

ஆயிரந்தான் ராமசுப்பு அதட்டிக் கேட்டாலும்... ''நாந்தான். நப்பாசைப் பட்டேன்... அந்தம்மா. தங்கமான அம்மா... வெளக்க மாத்துட்டு அடிச்சி என்னை வெரட்டிருச்சு''ன்னு ஒரேயடியாக சாதிச்சிரனும், நாதியத்தபய நா. ஏதுமத்தவ நா. எனக்குப் பறிகுடுக்க என்ன இருக்கு? ஒரு மண்ணுமில்லே.

அதுக்கு ஒரு வாழ்க்கை இருக்கு. எதிர்காலம் இருக்கு. ஒரு குடும்பம் இருக்கு. மானமரியாதை இருக்கு.

மலடிங்குற பழி நீங்கி... தாயா புள்ளையா காலகாலத்துக்கும் நல்லாயிருக்கட்டும்...

கொழைக்கட்டைப் படலில் கொண்டு வந்து போட்டான், முத்தாண்டி.

மறுநாள்-

ஆடுகளைப் பத்திக் கொண்டு காட்டுக்குப் புறப்படுகிற போது-

ராமசுப்பு, அதே கடுத்த பார்வை. இறுகலான பார்வை. முறைப்பான பார்வை. வன்மப் பார்வை.

"ஏலேய்... நில்லுடா..."

"என்ன...?" இவனுக்குள் வியர்த்துக் கொட்டுகிறது. பதற்றம். நடுக்கும் குரலின் அதிர்வு. உளறும் வார்த்தை.

"எங்க புஞ்சையிலே கொழை ஒடிச்சுக் கெடக்கு. நீதானா?"

அவனுள் ஓர் ஆசுவாசம். அப்பாடா... என்றிருந்தது. மனசின் இறுக்கம் தளர்ந்தது. சுவாசம் இயல்பாக ஆனது. என்னவோ, ஏதோ என்று பயந்தமாதிரியாக எதுவுமில்லை... அதைக் கேட்டு விடவில்லை.

"என்னடா... நீதானா...?"

"நா இல்லே..."

"நீ இல்லாம... வேற யாரு?"

"நா ஒருத்தன்தான் இந்த ஊர்லே ஆடுமேய்க்கேனா? நா ஒடிக்கவேயில்லை. சாமக்காட்டுலே மயானக்கரை தாண்டி மனுசன் எவனாச்சும் போவானா? நா சத்தியமா... போகவே இல்லே" என்று பாயிண்டாகப் பேசிவிட்டு ஆடுகளைப்பத்திச் செல்கிற முத்தாண்டிக்குள் ஒரு நிம்மதி.

ஒரு அப்புராணியைக் காட்டிக்குடுக்கற பாவம் செய்யலே என்ற நிம்மதி...

-தாமரை, செப்டம்பர், 2009

15. கூலிக்காரன்

துரைச்சாமிக்கு கண்ணுமுழி பிதுங்குகிறது. என்ன செய்வது என்று புரியாத தடுமாற்றம். 'பைனான்ஸ்காரர்' வட்டிக்குக் கடன் கொடுத்தவர். போன வாரம் போக்கு காட்டி ஏமாற்றியாகிவிட்டது. இந்த வாரம் ஏமாற்ற முடியாது. ரெண்டு வாரத்துக்கும் சேர்த்து இருநூறு ரூபாய் கட்டியாக வேண்டும்.

எப்படிக் கட்ட? எதை வைச்சு கட்ட?

துரைச்சாமியின் நடுநெஞ்சுக்குள் பகீரிடுகிற வெறுமை. வயிற்றைப் புரட்டுகிற மாதிரியோர் பிரமை. ஓடையைப் பார்த்து ஓட வேண்டியிருப்பதைப் போன்றதோர் உள்நெருக்கடி.

அன்றைக்கு இருந்த நிலைமை அப்படி! வார வட்டிக்குக் கைநீட்ட வேண்டிய நெருக்கடி. கைமாத்து கேட்டு பலரிடமும் கேட்டாகிவிட்டது. மலையில் முட்டினமாதிரி இருந்தது.

ரெண்டு மூட்டை யூரியாவுக்கும், கரண்டு பில் கட்டவும் ரூபாய்க்கு அவசரம். மொத்தம் தொள்ளாயிரம் ரூபாய் வேண்டும். இப்பவே வேண்டும்.

ராசாத்தியிடம் கேட்டான்.

"ஒன்னாலே ஏதாச்சும் முடியுமா?" தீராக் கடைசியாக அவளிடம் கெஞ்சினான். அவள் திகைத்தாள்.

"என்னாலே எப்படி முடியும்?"

"ஏம் முடியாது? கையிருப்பு உள்ள மகராசிக யாருக்கிட்டேயாச்சும் ஒன்னாலே கேக்க முடியாதா?"

"அப்படி எந்த மகராசி நம்ம ஊர்லே இருக்காக?"

ராசாத்தியின் விரிந்த கண்களில் தெரிந்த குழப்பம். தடுமாற்றத் தத்தளிப்பு. இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்த்திராத ஆச்சரியம்.

"சரி... சரி... வுடு. நா எங்கிட்டாச்சும் பார்த்துக்கிடுறேன்."

ஊருக்குள் ஒரு 'ரவுண்டு' சுற்றினான். டீக்கடையில் வந்து நின்றான்.

"ஏம்பா. ஒரு ஆயிரரூவா இருந்தா குடு. ரெண்டு நாள்லே தாரேன்."

"இருந்தா... நீ காட்டு. ஆயிரரூவாயை பார்த்துக்கிடுவேன். கண்ணாலே பாத்து நாலு நாளாச்சு."

"நா வவுத்துப் பசியோட பதைச்சுப் போய் கேக்கேன். நீ என்னடான்னா... யானைக்காரன் சுண்ணாம்பு நீட்டுற மாதிரி எகத்தாளம் காட்டுதே..."

ஓட்டமாய் பிய்த்துக் கொண்டோடுகிற துரைச்சாமி. இன்னும் ஏழெட்டுப் பேரிடம் தலையைச் சொரிந்தான். பம்மிப் பதுங்கி பம்மாத்து பண்ணிப் பார்த்துவிட்டான். எதுவும் கதையாகவில்லை. சோர்ந்து துவண்ட தருணம்.

அப்பத்தான்... கன்னங்கரேலென்ற முரட்டு மோட்டார் பைக்கில் 'பைனான்ஸ்'காரரர் வந்தார். மடித்துக் கட்டிய வெள்ளை வேட்டி. சட்டை, கண்ணியமான தோற்றம். அலுங்கப் பேசாதவர் போன்ற முகபாவம்.

"வாங்க... அண்ணாச்சி..."

"வாங்க, என்ன வெஷயம்?"

"ஆயிர ரூவா வேணும்."

"வார வட்டிக்கா?"

"ம்..."

"கரெக்டா தவணைப்படி கட்டிருவீகளா?"

"கட்டிருவேன்..."

"ம்... அப்பச் சரி... உங்க பேரு...?"

"துரைச்சாமி."

சிறிய பேரேடு ஒன்றை எடுத்துக்கொண்டே, "வடக்குத் தெருதானே?" என்று விசாரித்துவிட்டு,

"இதுலே ஒரு கையெழுத்து போடுங்க."

கையெழுத்து போட்ட வேகம். முதல் வாரத்தவணையைக் கழித்துக்கொண்டு தொள்ளாயிரம் தருகிறார். பன்னிரண்டு வாரங்களுக்கு, வாரம் நூறு கட்டியாகணும்.

அன்றைக்கு அவரிடம் கைநீட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. இன்றைக்கு என்னடா என்றால்... முரட்டு 'மோட்டார் பைக்'கின் 'என்ஜின்' சத்தம் தூரத்தில் கேட்டாலே, மனசு கிடந்து பயந்து சாகுது. டர்ர்ர்ராராகி கிழிந்து போகிறான்.

வாங்குகிறபோது... 'இருநூறு ரூபாய் வட்டியா?' என்று மனசு கிடந்து கொதித்தது. இப்போது தவணை கட்ட வழியறியாமல் திகைக்கிற துரைச்சாமி.

கீழப் புஞ்சைக்கு வந்தான். தரையில் இழுபடுகிற தோகையுடன் மெதுநடை போடுகிற ஆண் மயில்.

பொழுதுக்கால் உயர்வாக நகரத் தொடங்கி... முக மஞ்சளைக் கழுவி வெள்ளையாகிற வெயில். குட்டைவாலோடு குட்டோட்டம் போடுகிற பெண் மயில். லட்சணமில்லாத பெண் மயிலைப் பின்பற்றி ஓடுகிற மயில் குஞ்சுகள்.

புஞ்சையில் வந்து நின்றான். பாத்திகளின் வரப்புகளில் உலர்ந்த உப்புக் கரைசலின் வெண்கோடுகள். உப்புத் தண்ணீரினால் வந்த உவர்ப்பு. முழங்கால் உயரத்தில் நிற்கிற மக்காச்சோளப் பயிர்கள். 'இம்புட்டுத்தான் நம்ம வளர்த்தி' என்று சொல்கிற மாதிரியான குழைவில்லாத விறைப்பு.

யூரியா உப்பு போட்டும் பிரயோஜனமில்லை. முழங்கால் உயரத்தில் கதிர் வாங்கினால்... கால் வெள்ளாமைகூட தேறாதே.

விதை ஊன்றுகிற போதே பெரும்பாடு. மயில்களின் பேய் மேய்ச்சல். தண்ணீர் பாய்ந்த பகுதிக்குள் தைரியமாக இறங்கி ஊன்றப்பட்ட விதைகளைத் தேடிக் கொத்துகிற மயில்களை துரத்துவதே பெரும் போராட்டம். கல்லெறிந்து ஓடிச் சாகணும். கத்தி, கத்தி தொண்டை கிழியணும்.

விதை முளைத்த பிறகும் மயில்களின் நாசக்காடு. பசிய உயிர்த் துளிகளாக முளைவிட்ட மழலைப் பயிர்களைக் கொத்தி இழுத்தால்... பிளவுண்ட விதையும் சேர்ந்து வரும் என்று மயில்களுக்குத் தெரிந்திருக்கிறது. காலையிலும் மாலையிலும், வந்து மயில் மந்தைகளை விரட்டி விரட்டி ஓடிக் களைத்துதான், இந்த மக்காச்சோளப் பயிர்களைப் பார்க்க முடிகிறது. யூரியா உப்பையும், உழைப்பையும் விழுங்கிவிட்டு வளர மறுத்து அடம் பண்ணுகின்றன.

பொழியில் நின்று பயிர்களைப் பார்க்கிற துரைச்சாமியின் மனக்கவலை. உட்கார்ந்து அழணும் போலிருந்தது. உள்ளிருந்து முட்டிக்கொண்டு வருகிற வருத்தம், கண்ணோரத் துளிகளாக முளைத்தது.

வடகாட்டில் ஒரு புஞ்சை. ஒண்ணேகால் குறுக்கம் (ஏக்கர்) பருத்தி போட்டிருக்கிறது. அதில் மேய்கிற காய்ப் புழுவின் மூர்க்கத்தில் உதிர்கிற பூ - பிஞ்சுகள். செடி வளர்ந்தும் பயன் பூஜ்ஜியம் என்ற பரிதாபம்.

எங்கோ தூரத்தில் 'மோட்டார் பைக்'கின் தடதடப்பு. உள் மனசுக்குள் றெக்கையடிக்கிற பயப் படபடப்பு. 'பைனான்ஸ்' காரருக்கு என்ன பதில் சொல்ல? எப்படி தவணைப் பணம் தந்து, நல்ல பிள்ளையாவது?

இங்கு முக்கால் குறுக்கமும், வடகாட்டில் ஒண்ணேகால் குறுக்கமும் இறைவைப் புஞ்சை வைத்திருக்கிற சம்சாரிக்கு இந்த கண்ணு முழி பிதுங்கல்.

கொறுக்காம்பட்டிக்காரர்கள் சைக்கிள்களிலும், மொபட்டிலும் வரிசை வரிசையாகப் போகிறார்கள். வண்டிப் பாதையில் கேரியலில் வெட்டரிவாள், ஹாண்டில் பாரில் சோற்றுத் தூக்கு வாளியும், தண்ணீர் கேனும்.

வலையப்பட்டி காட்டில் வேலிமரம் வெட்டப் போகிறார்கள். இன்றே வேலை, இன்றே கூலி.

ஏனோ அவர்களை ஏக்கமாய்ப் பார்க்கிற துரைச்சாமி. அடி மனசில் துளிர்விடுகிற பொறாமை.

கனாவில் இருந்து தப்பித்தவனைப்போல 'முழி'த்துக்கொண்ட அவன், 'என்ன இப்படி யோசனை ஓடுது? 'பம்ப் ஷெட் மோட்டார்' போட்ட புஞ்சை ரெண்டு

சொந்தமா வைச்சிருக்குற சம்சாரி, நா. அன்னாடம் ஒழைச்சுப் பிழைக்கிற கூலிக்காரங்களைப் பாத்து என்னத்துக்கு ஏங்கணும்?'' - முணுமுணுப்பில் கசிகிற மனச் சோகம்.

புஞ்சையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, கிணற்றுத் தண்ணீரையும் எட்டிப் பார்த்தான். மைனா, கிணற்று விளம்பில் நின்று பார்க்கிறது. மின் கம்பியில் நிற்கிற கரிச்சான். கிணற்றுச் சுவர் பொந்திலிருந்து 'கர்ர்ர்ர்' ரென்று முரட்டு இரைச்சலுடன் பாய்ந்து பறந்து போகிற நீலநிற பனங்காடை.

ஊருக்குள் வரவே தயக்கமாக இருக்கிறது. நடுக்கத்தில் உதறலெடுக்கிற மனப்பயம். 'மோட்டார் பைக்' வந்துருமோ என்ற திகில்.

வயிறு பசிக்கிறது. காலை வெயில் ஏறு வெயிலாகிறது. சுள்ளென்று உரைக்கிறது. எப்படியும் வீடு போகணும். கஞ்சி குடிச்சாகணும். புஞ்சை வேலைக்கு வந்தாகணும்.

தப்பித்தோட முடியாத வாழ்க்கையின் கயிறு அவனைக் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறது.

மடத்தருகில் ஒரு சிறிய கூட்டம். கீழத் தெருக்காரர்கள், நிலமில்லாத கூலியாட்கள். ஒரு தேடலோடும், ஆவலோடும் பேசுகிற தவிடன்.

''இன்னும் ரெண்டாள் கெடைச்சுட்டா வேலைக்குப் பொறப்புட்டுரலாம்.''

''வேலைக்கு ஆள் கெடைக்குறதுதான் குதுரைக் கொம்பா இருக்கு.''

“மம்பட்டி வேலையாளுக பூரா சிவகாசிக்கு கட்டட வேலைக்குப் போய்ட்டா... இங்க எப்படி ஆளு கெடைக்கும்?”

நின்று கவனித்த துரைச்சாமி, ஏதோ பேசுகிறார்களே என்று விசாரித்தான்.

“என்ன தவிடா... என்ன சமாச்சாரம்?”

“டக்கருக்கு சரள் அள்ளி விடுற வேலை. மம்பட்டி வேலை. கூலியாளுக கெடைக்காம தட்டழிஞ்சி அலையுதோம்.”

“எம்புட்டுச் சம்பளம்?”

“நூத்தம்பது ரூவா. தொடர்ச்சியா... நாலுநா வேலை. அறநூறு ரூவா சம்பளம். இப்பவே... அட்வான்ஸா எரநூறு ரூவா.”

அவனுக்குள் சட்டென்று ஒரு வெளிச்சம். ‘மோட்டார் பைக்’கின் அச்சுறுத்துகிற ‘என்ஜின்’ சத்தத்தை அடைத்துவிடலாம்.

ஆனால், ஒரு மனத்தடை.

‘நிலமில்லாத கூலிக்காரங்க நிலைக்கு. ‘பம்ப் ஷெட் மோட்டார்’ சம்சாரி எறங்கணுமா? எறங்கலாமா? நிலமுள்ள விவசாயி, வெறும் கூலிக்காரனாக இறங்குவதா? பரிகாசம் பண்ணி சிரிக்கமாட்டார்களா?”

‘மோட்டார் பைக்’கின் ‘என்ஜின்’ இரைச்சல் தடதடப்பு.

“நா... வரட்டுமா?”

நம்ப மறுத்து. கேலிக்குச் சொல்லுவதாக நினைத்து... சிரிக்கிற தவிடன்.

"சும்மா இருங்க சாமி... நீங்கல்லாம் காடு கரைக உள்ள சம்சாரிக. நாங்க கூலிக்காரங்க..."

"இதெல்லாம் தெரிஞ்ச விஷயம்தானே? உங்களுக்கு ஆளு வேணுமா, வேண்டாமா?"

"வேணும்."

"நா வந்தா... ஒங்களுக்குச் சம்மதமா?"

"வாங்க... ரொம்பச் சந்தோஷம்."

ரூபாய் கைமாறியது.

"வீட்லே போய் சாப்டுட்டு... மம்பட்டியோட வாரேன்."

இருநூறு ரூபாயை மடியில் வைத்துக்கொண்டு வீட்டை நோக்கி புறப்பட்டபோது... எங்கிருந்தோ கீழ்நோக்கி வீழ்வது போன்றதோர் மனக்கனம்.

-ராணி வார இதழ், 5.7.2009

16. காட்டின் கரை

பெயிலாகி பெயிலாகி நாலாப்பு தாண்டுவதற்குள் பாண்டியின் அப்பா இறந்துவிட்டார். பதினோரு வயதிலேயே ஆட்டுக் கம்பைத் தூக்கி விட்டான். செம்மறியாடுகளின் சின்னவாலின் துடிப்பில் இழுபடுகிறது, இவனது பிழைப்பு.

செம்மறியாடுகள் ஓடைக்கிடங்குகளில் மேய்கின்றன. அகலமான ஓடை. உயரமான ஒழுங்கற்ற கரைதெரியாமல் புற்களின் பசுமை. சீமைக்கருவேலமரங்கள் நீளநீள விளார்களுடன் செழித்திருக்கின்றன.

'கிழிந்தகாது' வேலிக்குள் ஊடுருவி புஞ்சைப் பொழியில் வாய் வைக்கிறது. பாண்டி ''ஏய்ய்க்'' என்று கத்துகிறான். கத்தலுக்கு முந்திப் போகிற கல்லின் 'விர்ர்ர்' ரென்கிற இரைச்சல்.

ஓடைக்கரைகளின் இருமருங்கிலும் தோட்ட வெள்ளாமைகள். மிளகாய்த் தோட்டங்களும், மக்காச் சோள வெள்ளாமைகளும், பச்சைப் பசேலென்று பயிர்கள்.

'மூக்கு வெள்ளை' கள்ளக் கழுதை. எங்குட்டுக் கூடியாச்சும் நைஸாக நழுவிப் பாய்ஞ்சிடும்' என்ற நினைவெச்சரிக்கையில் அதைத்தேடினான். அது ஆவாரஞ்செடித்தூரைச் சுற்றி அடர்ந்திருந்த பசும்புல்லை 'பர்ர்ருச், பர்ர்ர்ருச்' சென்று போட்டு வளைத்து மாட்டிக் கொண்டிருக்கிறது.

மற்றவர்கள் பார்வைக்கு எல்லாம் ஒரே மாதிரியான செம்மறிகள். பாண்டியின் பார்வையில் ஒவ்வொன்றும்

ஒவ்வொரு மாதிரி. ஒவ்வொன்றுக்கும் ஒரு நுட்பமான வித்தியாசம். அதுவே அதன் அடையாளமாக... பெயராக...

கருநாக்கு... கால் வெள்ளை... வவுத்துக் கருப்பு, ஊளைமூக்கு... ஒட்டைக் கால்... கோணக்கால்... குறுக்கு வளைசல்...

'கோணக் காலைக் காணலியே...' பாண்டிக்கு ஒரு சின்ன அதிர்வு. செடி, புதர் மறைவுகளில் பார்வையை எறிந்தான். அங்கிட்டும் இங்கிட்டுமாக அலைபாய்கிற கண்கள்.

'வெள்ளாமையிலே போய் வாயை வைச்சிருச்சா?' வெலவெலப்புடன் முணுமுணுத்த பாண்டி, காய்ந்த முள்கவைக்கு அடியில் படர்ந்து கிடக்கிற கோவைக்காய் கொடியை கறும்பிக்கொண்டிருக்கிற கோணக்கால்.

''யப்பா... டி! நல்லவேளை... இப்பத்தான். உசுரே வந்துச்சு...'' திணறித் தவித்த நெஞ்சின் இறுக்கம், சற்றே தளர்ந்து ஆசுவாசப்பட்டது.

''வேண்டாம் டா... இந்தச் சனியன் புடிச்ச ஓடைக்காடு. பயந்து பயந்து 'கழிய' வேண்டிய துருக்கு.''

ஆங்காங்கே அதுகள் பாட்டுக்கு 'பர்ர்ர்ருச் பர்ர்ர்ருச்'' சென்று ஆவி ஆவி கடித்துக் கொண்டிருந்த செம்மறிகளை...'' ''ஆய்ய்க்... ஆய்ய்க்... ஆய்ய்ய்க்''கென்று அதட்டி திரட்டினான்.

'திரட்டி நகர்த்தி இடம் மாற்றுகிறான்' என்பதைப் பத்தும் தொனியிலேயே உணர்ந்து கொண்ட ஆடுகள். செவிடுகளைப்போல பொருட்படுத்தாமல் மேய்கின்றன. 'பர்ர்ருச், பர்ர்ருச், சிலேயே கவனமாக இருந்தன. பச்சைப்புல். முற்றாத இளம்பசும்பல். பல்லுக்குச் சிக்காமல்

கரைகின்ற இரை. கஞ்சியை மண்டுவதைப்போல திங்கச்சுகமாக இருக்கிற புல். ஈரமிருதுவான கொழுந்துப்புல் வாயின் இரு விளிம்புகளிலும் நுரை தள்ள பிடித்து மாட்டுகிறது. அதுகளுக்கு ஒரே குதூகலக் கொண்டாட்டம்.

பாண்டியின் அதட்டல் சத்தம். கெட்டவார்த்தைகளிலான வசவுச்சத்தத் தெறிப்புகள்.

ஆவல் பறப்பாக மேய்கிற மும்முரத்தில் ஆடுகள். சில ஆடுகளைக் கம்பால் தட்டுகிறான். செல்லமான முதுகுத்தட்டல்.

வேகமில்லாத கைச்சுழற்சியில் கல்வீச்சுகள். சிதறி மேய்கிற ஆடுகளைத் திரட்டுகிறான்.

"ம்ம்ம் மேய்க்க்... ம்ம்ம் மேய்ய்க்க்" என்ற செம்மறிகளின் கனைப்புகள். புழுதித்திட்டுகளாக ஏராள அடர்த்தியான கனைப்புக் கூப்பாடுகள்.

திரள்கிற ஆட்டுக்கூட்டத்தை "ஆய்ய்க், ஆய்ய்க்," கென்று பத்தி நகர்த்துகிறான். உச்சி மதிய வெயில், தகிப்பில்லாமல் அடிக்கிறது. கனத்த கரிய மேகங்களின் பின்னால் மறைந்து கொள்கிற பொழுதுக்காலின் பரிவு. நிழல் வெயில். மச்சுவீட்டையே துளைக்கிற மார்கழிப் பனி, மதிய வெயிலையும் நனைக்கிறது.

இடம்பெயர்கிற ஆடுகள் புழுக்கைகள் போடுகின்றன. செருமிச் செருமி சளியையும், வாசத்தையும் காற்றில் ஏற்றுகின்றன.

அய்யா செத்த மறுமாசம், ஆட்டுக் கம்பைத் தூக்கிக் கொடுத்த அம்மா. அப்போது பாண்டிக்கு ஒரே குதூகலம் மனசுக்குள். ரகசியக் கூத்தாடல், ரகசியப் பரவசம்.

வீடு, தெரு, வகுப்பு என்று முடங்கிக் கிடந்த பாண்டிக்கு, காட்டின் வெளி பெரிய சுதந்திரமாகத் தோன்றியது. காடெல்லாம் சுற்றலாம். ஆறு, ஓடைக் காடெல்லாம் ஓடித் திரியலாம். கட்டற்ற காற்றென அலையலாம். கூடற்ற தட்டான் பூச்சியாக பட்டுச் சிறகடிக்கலாம்.

''ராமையாக் கோனாரு ஒன்னை ஆடு மேய்க்க கூப்புடுறாரு போறீயா..?''

இந்தக் கேள்வியை வெளிப்படுத்த இயலாமல், தவித்த அம்மா. உள்ளுக்குள் கனத்த மனசு. சோற்றுக்கு வழியற்று பெற்ற பிள்ளையை விற்றுப் பிழைப்பது போன்றதொரு உணர்வவஸ்தை. மனத்திணறல்.

தயங்கித் தயங்கி... உயிர் வாடி வதங்கி... முகக்களையிழந்து, கண்கலங்கி, மனசு மருகித் தவிக்க பயந்து பயந்து கேட்டுவிட்ட அம்மா.

மகனின் முகமலர்ச்சி. கண்களில் ஒருதுள்ளலான மனமின்னல். பாண்டியின் முகச்சிரிப்பில் ஆசுவாசப்பட்ட தாய் மனசு 'ஹ... ம்ம் மாடி' என்று மூச்சு, இறுக்கம் குலைந்து வெளிப்பட்டது.

பாண்டியின் சம்மதமும், விருப்பமும் அம்மாவின் சுமையைக் குறைத்து விட்டது. ஆயினும், அம்மா வீட்டுக்குள் போய் உடைந்து அழுதாள். மகனின் வெள்ளை மனசை நினைத்தழுதாள். ''ஆட்டுக்கம்புன்னா, எம்புட்டுப் பெரிய பாரம்னு கூடத் தெரியாம... அப்புராணிப்பயலா சந்தோஷப்படுதானே...'' என்று நினைவுக் குமுறலில் கதறியழுதாள்.

“ஏம்மா... அழுவுதே?” பின்னாலேயே வந்து, முதுகைத் தொடுகிற பாண்டி. “அழாதேம்மா... அழாதேம்மா... என்னத்துக்கும்மா... அழுவுதே?”

“பெத்த புள்ளையை வுத்து வவுத்துக்கஞ்சி குடிக்க வைச்ச கூத்துவன் கொடுமையை நெனைச்சு நெனைச்சு பதறுதுடா... மனசு...”

“எதுக்கும்மா...? என்னை யாருக்கு வித்தே? நீ காச்சுற கஞ்சியைக் குடிச்சுட்டு, ஓம் மடியிலே படுக்கப் போறேன்... ஆடு மேய்ச்சா என்னம்மா? அதுவும் ஒரு வேலை தானேம்மா?”

கேவுகிற அம்மாவின் தோளைப் பரிவுடன் வருடுகிற பாண்டி. அம்மாவின் சிதறிக்கிடந்த தலைமுடிகளைத் தடவி ஒன்று சேர்க்கிற மகன். கன்னத்தில் ஓடிய மனச்சோக நீர்க்கோடுகளைப் பிஞ்சுவிரல்களால் துடைக்கிறான்.

“அழாதேம்மா... அய்யா போய்ட்டா என்னம்மா? நா ஆடு மேய்ச்சு ஒன்னைக் காப்பாத்துதேம்மா...”

அம்மாவுக்கு நெஞ்செல்லாம் நெகிழ்ந்து நெக்குருகி விட்டது. உள்மனப்பீறிடல்.

முதுகுக்குப் பின்னால் உரசிக்கொண்டு நின்ற மகனை இழுத்து மடியில் போட்டுக் கொண்ட பாச வெறி. நெகிழ்கிற ஆரவாரப் பரபரப்பு.

“அடி... எந்தங்கக்கட்டி... எஞ் சிங்கக்குட்டி... எங்கண்ணு... எஞ்செல்லம்...”

கண்ணீரும் கதறலுமாக பரவசப்பெருக்கினால், மகனை முத்தமிட்டாள். வெறிபிடித்த ஆவேச வேகத்தில் முத்தமிட்டாள். பாசப் பெருமிதம்.

அப்போது பாண்டிக்குத் தன்மீதே ஒரு மரியாதை வந்தது. அம்மாவைச் சந்தோஷப்படுத்திப் பார்க்கிற பெரிய மனிதனாகிவிட்ட மாதிரியோர் உணர்வு.

''கழுத்துப் புருஷன் கண்காணாம செத்துட்டாலும், வவுத்துப்புருஷன் கைப்புடிச்சு காப்பாத்திருவான்''

என்று அழுகையும் சிரிப்புமாக உணர்ச்சிப்பரபரப்போடு பேசிக் கொண்டே அவனைப் பார்த்த அம்மாவின் கண்ணில், ஆனந்தச் சிரிப்பு. மனச்சிலிர்ப்பின் ஒளிப்பிரவாகம்.

அப்படி... கம்பு தூக்கியவன்தான், பாண்டி. ராமையாக் கோனாரின் செம்மறியாடுகளை மேய்க்கத் தொடங்கினான்.

பாண்டி ஆசைப்பட்ட மாதிரியேயிருந்தது. வகுப்பு, வீடு, தெரு என்ற வரம்புக்குட்பட்ட வட்டத்துக்குள் அடைபட்டுப் புழுங்கியவனுக்கு, காடு எல்லையற்ற பெருவெளியாக இருந்தது. தடையற்ற சிறகுகளின் பறப்புக்கு வாசலும் வழியும் திறக்கிற வனாகாயம்.

வெட்டவெளித் தரிசுப் பொட்டலில் கிடக்கிற புல்லையும் தழைகளையும் இஷ்டம்போல மேயுங்கள் என்று சுதந்திரமாக ஆடுகளை விட்டுவிட்டு, இவன் சுதந்திரமாகி விடுவான்.

'வெள்ளாமை விளைச்சலில் தப்பித்தவறி வாய்கீய் வைத்துவிடுமோ' என்ற பயமற்ற சுதந்திரம். பலவண்ணங்களில் பறந்து திரிகிற பட்டாம் பூச்சிகளைப் பம்மிப் பதுங்கி றெக்கையை நுனிவிரலால் பிடிப்பான். விரலின் நுனியில் மென்பவுடராக ஏதோ ஒட்டும். அது பூவிதழைவிடவும் மிருதுவாக இருக்கும். பூச்சியை சுதந்திரமாக விட்டுவிட்டு நுனி விரல்களை ரசிப்பான்.

குழியைக் குச்சியால் தோண்டி, ஒற்றையாளாக கோலி விளையாடுவான். ஆவாரஞ் செடித் தூருக்கடியில் ஊசிக்கூடு (நத்தையில்லாத வெறுங்கூடு)கள் கிடக்கும். பம்மிக்கிடக்கிற காடைகளை மேல்துண்டால் அமுக்கிப் பார்ப்பான். பலநேரம் தப்பித்து விடும். முட்டைகளை மட்டும் பொறுக்கி வதக்கித் தின்பான். சிலநேரம் சிக்கி விடும். காடையை அப்படியே ரோமத்தைப் பறித்துவிட்டு, சுட்டுத்தின்பான். ஈரப்பஞ்சை வாயில் வைத்தமாதிரி மிருதுவாக இருக்கும். கருகல் வாசமும், கறிருசியும் மனசுக்குள்ளும் மணக்கும்.

செம்போத்து கூவுவதைக் கேட்டால், குயிலைவிட இனிமையாக இருக்கும். பெண்குயிலைப் பார்த்தால், வெண்புள்ளிகளுடன் கூடிய சாம்பல் நிறத்தில் இருக்கும்.

குயிலின் நிறம் சாம்பல் என்றால், யாராவது நம்புவார்களா? ஆ்னால், அதுதான் நிஜம்.

பாண்டிக்கு ரெக்கை முளைத்தமாதிரி இருக்கும்.

ராமையாக் கோனாரும் சொல்லி விட்டார்.

"ஏலேய் பாண்டி, நீ சின்னப்பயலா இருக்கே. விடியக்காலை ஆடுபத்திட்டு, கருங்கல் கிடங்குத் தண்ணியிலே போட்டெடுத்துட்டு... தொழுவுலே அடைச்சிரு. போதும்டா. மத்ததை நா பார்த்துக்கிடுதேன்" என்றார்.

இவனுக்கும் இது இயலக்கூடியதாகவே இருந்தது.

அப்படித்தான்...

ஒருநாள். காலை ஒன்பது மணி இருக்கும். கஞ்சியைக் குடித்துவிட்டு, மதியக் கஞ்சி உள்ள தூக்குச் சட்டியையும், கயிறு கட்டிய தண்ணீர் பாட்டிலையும் எடுத்துக் கொண்டான். மேல் துண்டு டவுசர் மேல் பெல்ட்மாதிரி

கட்டி, அதில் ரெண்டையும் கட்டித் தொங்க விட்டுக் கொண்டான். கம்பை எடுத்துக் கொண்டான்.

"யம்மா... நா ஆட்டைப் பத்தப் போறேம்மா."

"போய்ட்டு வாடா... கண்ணும் கருத்துமா கவனிச்சு ஆட்டைப் பார்த்துக்கோ."

"ஆட்டும்மா..."

"ரொம்ப வெயில்லே நிக்காதேடா. செடி செத்தை நெழல்லே நில்லு."

டயர் செருப்பு சடக், சடக் கென்று சத்தம் போட... வேகவேகமாக நடந்தான். ராமையா கோனார் தொழுவத்திற்கு வந்தான். இவனைப் பார்த்ததும் 'அவக், தொவக்' கென அவசரமாக எழுந்த ஆடுகள் அசை போடுவதை நிறுத்திவிட்டு, நட்புடன் பார்க்கிற அதன் கண்கள். அடார்த்தியான அதன் கனைப்புச் சத்தங்கள்.

படல்கதவைத் திறந்தான், பாண்டி. சாணியும் மூத்திரமுமாய் சகதியில் படுத்துக்கிடந்த அதன் நாற்றம். உதிர்ந்து கிடந்த அதன் ரோம இணுக்குகள்.

"ஆய்ய்க்... ஆய்க்க்க..." என்று செம்மறியாடுகளை எழுப்பினான். திரட்டினான். படல் திறந்தவுடன் வெளிப்பட்ட ஆடுகள், சுவர்களில் போய் தன் உடம்பால் தேய்க்கின்றன. சிலதுகள் நெட்டிமுறிக்கின்றன. துள்ளிக் குதிக்கின்றன. கூளப் படப்புகளை நோக்கி நழுவுகிற ஒன்றிரண்டு ஆடுகள்.

நாலாதிசைகளிலும் சிதறி ஓடுகிற எல்லாவற்றையும் அதட்டி, சத்தம் போட்டு... ஒன்றுதிரட்டி பத்தினான்.

தெருப்புழுதி புகைப்படலமாக எழுந்தது. சூரிய ஒளியில் புழுதி மண்டலம் ஒளித்திரையாகத் தெரிகிறது.

ஆடுகளை மடக்கிப் பத்தினான். தெருவழியே நகர்த்தினான். விலகியோடப் பார்க்கிற கள்ள ஆடுகளை நோக்கி அவனது கற்கள் சிறகு முளைத்துப் பறந்தன. வசவுச் சொற்களில் காற்றும் வெயிலும் அதிர்ந்தது.

ராமையா அவனையே பார்க்கிறார். அங்கிட்டும் இங்கிட்டுமாய் ஓடிப் பாய்கிற அவனது துரிதம். ஆடுகளை மடக்கி ஒழுங்குபடுத்துகிற லாகவம்.

'சின்னப்பயலாயிருந்தாலும், கெட்டிக்காரப்பயலா இருக்கான்' என்ற நினைப்புடன் மீசையைத் தடவிக் கொள்கிற ராமையா.

"ஏலேய்... பாண்டி, ஆட்டை பாத்து மேய்டா."

"ஆட்டும்."

"ரொம்ப வெளையாடுதீயாம்... ஆட்டை சரியா கண்காணிக்காம காடைகௌதாரி புடிச்சுக்கிட்டுத் திரியுதீயாம்."

"யார் சொன்னா...?"

"ம்க்ம்... ஒனக்கென்ன? யாராச்சும் வந்து தாக்கல் சொல்வாக இல்லே? தெரியாமலா போயிரும்?"

மௌனமாக தலைமடக்குகிற பாண்டி.

"ஏலேய்... ஆடு குட்டிகளை நல்லா கவனிச்சு மேய். ஏதாச்சும் தப்பு கிப்பு நடந்துராம பாத்துக்க."

"ம்..."

பாண்டிக்கு கம்புகனப்பது போலிருக்கிறது.

வனச்சுதந்திரம் களவு போகிற மாதிரியோர் உணர்வு. மிரட்டலும், அதட்டலுமான அவரது எச்சரிக்கை, அவனுக்கு சங்கடமாக இருந்தது.

அன்றைக்கு-

கருகருவென்று மயங்குகிற பொழுதில் ஆடுகளைத் தொழுவத்துக்குள் பத்தினான், பாண்டி. மறிகள் அனைத்தும் வயிறு புடைத்திருந்தது. கருங்கல் தண்ணிக் கிடங்கில் விழுந்து, நீந்தி வந்ததில் ஒரு சுத்தம்.

விலகிய படல் கதவைப் பிடித்துக் கொண்டு ஆடுகளைக் கூர்மையாக கவனிக்கிற ராமையா கோனார்.

பாண்டிக்குப் பசியென்றால்... பசி, அப்படியொரு பசி. மதியம் குடித்த கஞ்சி. வேறு எதுவும் சிக்கவில்லை. குலைபட்டினியாகக் கிடக்கிறான். அம்மாவிடம் ஓடணும்... மடியில் விழணும். அம்மா வாங்கி வைத்திருக்கிற தின்பண்டங்களை ஒரு மாட்டு மாட்டணும்.தண்ணி குடித்து, அம்மா போட்டுத் தருகிற பால்டீயை ஆவி பறக்கக் குடிக்கணும்.

வயிறும் மனசும் கிடந்து தவித்தது. ‘எப்படா அம்மாவிடம் போய்விழுவோம்.’ என்று கிடந்து அடித்துக் கொள்கிற மனத்துடிப்பு.

எல்லா ஆடுகளும் தொழுவத்திற்குள் போய்விட்டன. படல் கதவை சாத்தப் போன பாண்டி,

பதற்றமும் பதைப்புமாகக் கேட்கிற ராமையா,

“ஏலேய் பாண்டி, கோணக்காலை எங்கடா?”

இவனும் எல்லா ஆடுகளையும் உற்றுப் பார்த்தான். கோணக்கால் ஆட்டைக் காணோம்.

என்னாச்சு? எங்க போச்சு? எந்த இடத்துலே நழுவுச்சு?

அவனுக்குள் பகீரிடுகிற எண்ணங்கள். ஓடிப் பாய்ந்து அலைபாய்கிற மனசு. பதற்றமும் நடுக்கமுமாக. வெலவெலப்பாக அவரைப் பார்க்கிற பாண்டி.

"எங்கடா தொலைச்சே, ஆட்டை? பணம் பெத்த ஆடுடா..."

"தெரியலியே..."

"என்னோட மொதலுக்கு (பணத்துக்கு) நீதாண்டா பொறுப்பு. போ... ஓடுடா... ஓடு... ஓடு... ஓடுடா..."

பதறிப்பதறிக் குமுறுகிற பெரியவர்.

தண்ணீருக்குள் விழுந்த சுண்டெலியாக வெலவெலத்து திகைக்கிற பாண்டி.' 'என்ன செய்ய, ஏது செய்ய' என்று எதுவும் புரியாமல்... தவித்த அவன், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரியோர் குழப்பம்.

குடலைப்புரட்டுகிற பசி. தொண்டை வரைக்கும் உலர்ந்து போன நாவறட்சி. அம்மா மடியில் விழ வேண்டும் என்று துடிக்கிற பாலக வயசு. டவுசர் மனசு.

இருட்டப் போற நேரத்துலே எங்க போய்த் தேட?

வேறு வழியில்லாத நிலையில்... ஓட்டமாய் ஓடினான். இருட்டி விட்டது. கோணக்காலைத் தேடி தரிசு முழுக்க வேண்டினான். முள்ளு மொடலில் விழுந்தான். உயிர் வாதையாக இருந்தது. உயிரை வெறுத்து ஓடினான்.

வேலி மரத்தூருக்குள் படுத்து அசை போட்டுக் கொண்டிருந்த கோணக்காலை இவன், ஆட்டின் செருமல் சத்தத்தால் இனம் பார்க்கிற போதுதான்,

அவனுக்கு அவன் உயிரே வந்தது.

கோணக்காலுடன் தொழுவத்திற்குள் வருகிறபோது, மணி பத்துக்கு மேலாயிற்று. உயிர்துவண்ட வாட்டம். உடம்பெல்லாம் வலியும் ரணமும். 'எங்கடா வுழுந்து சாவோம்' என்று சோர்ந்து துவண்ட மனசு.

இப்போதெல்லாம்-

பாண்டிக்கு ஆட்டுக்கம்பு கனக்க ஆரம்பித்து விட்டது. ஆகாயமாக விரிந்திருந்த காடு, ஓடைக் கரையாக குறுகிப்போன மாதிரியோர் நினைவு.

ஆடலாம். ஓடலாம். விளையாடித் திரியலாம் என்ற அவனது நினைப்பைக் கடித்து மேய்ந்த அனுபவ ஆட்டின் அசை. வலி நிறைந்த அனுபவம். அசை போட அசை போட... அந்த நினைவின் பூதாகாரம்.

இப்பத்தான்...

அம்மாவின் அழுகைக்கும் கதறலுக்கும் அர்த்தம் புரிகிறது. பெத்த பிள்ளையை வித்துப் பிழைக்கிற விதியின் கனம், மனசை அழுத்துகிறது.

ஓடைக்கரையை விட்டு தரிசுக்கு வந்த ஆடுகளைத் தேடுகிறான். ஊளைமூக்கு, கோணக்கால், குறுக்கு வளைசல், கால் வெள்ளை, கருநாக்கு, ஒட்டைக் கால், கிழிந்த காது, வவுத்துவெள்ளை எல்லாமே சரியாக இருக்கின்றனவா என்று கண்காணிக்கிற பதற்றம், பயம், எச்சரிக்கை. இன்னும் என்னென்ன பயங்கரம் ஒளிந்திருக்கிறதோ... இந்த ஆட்டுக் கம்புக்குள்.

ஆட்டுக்கம்பு, வாழ்வின் பாரமாக அழுத்துகிறது, பாண்டிக்கு.

-அம்ருதா, பிப்ரவரி, 2009

17. சட்டைத்துணி

தீக்கட்டையால் நெஞ்சுக்குள் சொருகினமாதிரி, மனசெல்லாம் கிடந்து, ‘திகுதிகு’ வென்று காந்தியது. தோள்பட்டையில் வெட்டுக்காயமாகத் துடித்தலறுகிற வலி.

இமைதட்டாத வெறித்த பார்வை எங்கோ குத்திக் கிடந்தது. நிலைகொள்ளாமல் அலைபாய்ந்து வருகிற எண்ணப்பிரளயம். நினைவுக் கொந்தளிப்பு. தகிக்கிற நெஞ்சு விம்மிவிம்மித் தணிய விசும்புகிற சுப்புத்தாய்.

“இனிமே உசுரு வைச்சிருக்கக் கூடாது... நாண்டுக்கிட்டு சாக வேண்டியதுதான்” என்று வாளிக்கயிறை வெறியோடு அவிழ்க்கிறாள்.

முதல் விசும்பலே ஒரு உடைப்பாக மாற... பொத்துக் கொண்டு பீறிட்டுப் பாய்கிற கண்ணீர். அடிவயிற்றிலிருந்து பொங்கிக் கொண்டு வருகிற குமுறல், “ஐயய்யோ... அடியாத்தா” என்ற கதறலாக வெடித்துச் சிதறுகிறது.

‘கோ... குலை’யென்று கத்திப் புலம்புகிற சுப்புத்தாயின் கண்ணீர்ப் பெருக்கு. சாத்திய கதவின் உட்பக்கம் சாய்ந்துகொண்டு, தலையில் அடித்து அழுகிறாள். ரெண்டு கைகளாலும் முன்னந்தலையில் ‘மடேர்’, மடே’ ரென்று அடித்துக் கொள்வதில்... தலைமுடியெல்லாம் பஞ்சு பஞ்சாக அலைகிறது.

சுப்புத்தாய் பத்துநாளாக கூலிவேலைக்குப் போகவில்லை. சூடு சுரணையுள்ளவள். ரோஷமும் மானமுமாக தலைநிமிர்ந்து வாழ நினைக்கிறவள்.

பதிவாக நடராஜன் புஞ்சைகளில்தான் கூலிவேலை. கிணற்றுப் பாசன நஞ்சைகள்; பம்ப்ஷெட் மோட்டார் மாட்டிய இறவைத் தோட்டங்கள் என்று மூலை மூலைக்கு நிலங்கள். போதாக் குறைக்கு சமுத்திரப்பரப்பாக மானாவாரிக் காடுகள்.

தினம் தவறாமல் ஏதாச்சும் விவசாய வேலை இருக்கும். சாயங்காலமானால் சம்பளம். ரெண்டுநாள் தப்பினாலும், மூன்றாம் நாள் மொத்தச் சம்பளம். ஒரே பெண்பிள்ளை. பள்ளிக் கூடம் போய்விடுவாள்.

திருப்பூர் பக்கம் சித்தாள் வேலைக்குப் போன புருஷன். அங்கேயே ஒரு பெண்ணைச் சேர்த்துக் கொண்டு, இவளை நட்டாற்றில் விட்டுவிட்டான். நடராஜன் புஞ்சை வேலையில் வருகிற கூலியில்தான், ரெண்டு வயிறு குளிருகிறது.

அன்றைக்கு... மக்காச் சோளத்துக்குள் களைவெட்டு நடந்தது. இவள்தான் பொழியோரத்து நீரைபிடித்து வெட்டிக் கொண்டிருந்தாள். முழங்கால் உயரம், பயிர்கள்.

நடராஜன் செருப்புச் சத்தம், பொழிப்புல்லில் நடந்துவருகிற அவசரம். இவளருகில் சற்றே தேங்கினான்.

“சுப்பு...”

“என்ன சாமி?”

“வீட்லே போயி.... சாப்பாடு வாங்கிக்கிட்டு... பம்ப்ஷெட் ரூமுக்கு கொண்ணாந்து குடுத்துட்டுப்போ.”

சட்டென்று நிமிர்ந்தாள். ஏறுவெயில், நெற்றியிலும், முகத்திலும் வழிகிற வியர்வையில் பட்டு எரிந்தது. மனசின் அதிர்வு.

"நா... இதுவரைக்கும் போனதில்லியே... என்னை இந்த வேலை சொல்ல மாட்டீகளே?"

"சொன்னதுல்லே. அதனாலேதான் இப்பச் சொல்லுதேன்... சொல்லுற வேலையை நல்ல மனசோட செய்."

"இல்லே சாமி... அதுக்கு வேற ஆளைப் பாருங்க."

அவன் சொற்களுக்குள் பதுங்கியிருந்த கபட அர்த்தம், ஓரப்பார்வையில் வழிந்த ஓநாய் எச்சில். அதையறிந்து இவளும் உள்ளடங்கிய சீற்றத்துடன் உதறிச் சொன்ன மறுப்பு.

வெறுப்பும் கோபமுமாக "வேற ஆளைப் பாருங்க" என்று எகிறிப் பாய்ந்த சொற்களின் செருப்படி, அவனுக்குள் விழுந்தது.

வீட்டில்போய் சாப்பாடு வாங்கி விட்டு வருகிறவள், நிரை பிடித்து களை வெட்ட வேண்டியதில்லை. விலக்கு. பம்ப்ஷெட் ரூமுக்குக் கொண்டு போய் கொடுப்பவள்... சட்டென்று வந்து விட முடியாது. சோறு பரிமாற வேண்டும். தண்ணீர் பாட்டில் திறந்து தர வேண்டும். சாப்பிட்டு முடித்த பாத்திரங்களைக் கழுவியெடுத்து வர வேண்டும்.

சாப்பாடு பரிமாறுவதற்கு முன்பு - கொண்டு வந்தவள், சாப்பாடாக வேண்டும். அவள் ருசிக்குப் பிறகுதான்... அவள் பரிமாறுகிற சோறு தொண்டைக்குள் இறங்கும்.

இது யாரும் பார்க்காத ரகசியம். எல்லாருக்கும் தெரிந்த ரகசியம்.

அதனால்தான்... சுப்புத்தாய் சட்டென்று மறுத்து விட்டாள், சண்டாளக் கோபத்துடன். தன்னிடம் எச்சியைக் காட்டிவிட்டாரே என்ற ஆங்காரம்.

சாயங்காலம்-

சைக்கிளில் வந்து சுப்புத்தாய் வீட்டுமுன் காலூன்றி நின்றான், நடராஜன்.

''சுப்பு... சுப்பு...''

குடிசையின் வாசலுக்கேற்ப குனிந்து வெளியே வந்தாள். முற்றத்தில் உட்கார்ந்து நோட்டுகளையும் புத்தகங்களையும் பரத்தி வைத்து வீட்டுப் பாடம் எழுதுகிற மகள்.

''என்ன சாமி...?'' உயிர் உலர்ந்து வறண்ட குரல்.

''இந்தா... சம்பளம் எத்தினி நா சம்பளம்?''

''இன்னியோட நாலுநா.''

வாங்கினாள். மிச்ச ரூபாயை மேல் சட்டைப்பையில் சொருகிக் கொண்டே இவளை வெறுப்பும் கடுப்புமாகப் பார்க்கிற அவன். அதே அழுகையும் வருத்தமுமாய் நிமிர்ந்து பார்க்கிற சுப்புத்தாய்.

''சாமி... நா நாளையிலேயிருந்து வேலைக்கு வரல்லே.''

''ஏன்...?''

''ஒடம்பை நம்பி ஒழைச்சு... உப்புப் போட்டு கஞ்சிகுடிக்கிற சாதி மான்கன்னு, நா. ஒடம்பை வைச்சுப்

பொழைக்கிற ஈனச் சாதி, நா இல்லே... உழைப்பை நம்புறவளுக்கு தேவுடியாபுத்தி வராது.''

''ம்ம்ம்...''

''என்னைச் சாப்புடுற ஆசை வந்துருச்சு, ஒங்களுக்கு. இனிமே ஒங்ககிட்டே வேலை பார்க்குறது, மரியாதையில்லே. நா, வரலை''

''எப்ப வருவே?''

''என்னச் சாப்புடுற ஆசையை வுட்டுட்டு, வூடுதேடிவந்து கூப்புட்டா... புஞ்சை வேலைக்கு வாரேன்...''

பத்துநாளாக ஆள்வரவில்லை. மற்றவர்கள் புஞ்சைக்கு, யாராச்சும் கூப்பிட்டால் போகலாம் என்றிருந்தாள். யாரும் கூப்பிடவில்லை. வலியப் போய்... 'வரட்டா' என்று கேட்கவா முடியும்? அது அசிங்கமில்லையா? அவமான மில்லையா?

ஒரே ஒருத்திதான் கூப்பிட்டாள். அவளும் சீரில்லாதவள். புஞ்சைவேலைக்கு ஆள்களைப் கூப்பிட்டுப் போய்... புஞ்சைக் காரருக்குக் 'கூட்டிவிடுகிற' வேலையைத்தான் சாமர்த்திய சாகசமாய் செய்கிறவள். ஒழுக்கமில்லாப் பிழைப்பால்... நகைநட்டு... வட்டிவாசி என்று கொழிக்கிறவள்.

''என்ன... சுப்பு, எங்க மோலாளி புஞ்சைக்கு வேலைக்கு வாரீயா?'' கொக்கிபோட்டு இழுக்கிற வலைச் சொற்கள்.

''வேலைக்கு மட்டுந்தானா?'' அர்த்தபூர்வமான வினயக்கேள்வி.

''எல்லாந்தான்'' வெட்கமில்லாமல் வாயிளித்த அந்தச் சண்டாளி. 'உதிர்த்தின கழுதை ஊருக்குப் பெரிய கழுதை' என்கிற மாதிரி செருக்குடன் அதிகாரமாய்ப் பேசுகிற அவள்.

''நா வல்லேம்மா...''

''கஞ்சிக்கு என்ன செய்யப் போறே?''

''என்னத்தையோ ஒரு வழி பாத்துக்கிட மாட்டேன்?''

''புருஷன் இல்லாம நாதியத்துப்போய்... ஏதுமத்துப்போய் நிக்குறே. என்னத்துக்கு இம்புட்டுச் சீரழியணும்? வைக்கப்படப்பா? புடுங்கப் புடுங்க குறையப்போவுது? ஒடம்புதானே? செழிச்சு நிறையும்லே?''

குழைந்து குழைந்து பேசிய அவள். வசியம் பண்ணப்பார்க்கிற சொக்குப் பொடி வார்த்தைகள். இங்கிதமான சொற்கள்.

சுப்புத்தாய்க்கோ கோபத்தில் நாசி நுனி துடித்தது. விரிந்த கண்ணில் நெருப்புக் கீறல். ஆவேசக்குரலில் அவள்.

''இந்தா... போய், ஒஞ்சோலியைப்பாரு, மானமரியாதை யோட சூடுசுரணையோட பொழைக்குறதுதான், மனசுப் பொழைப்பு. வேர்வையை நம்பி வாழ்ற வாழ்க்கைதான், எங்களுக்குத் தெரியும். ஒன்னை மாதிரி ஓடைக்காட்டுப் பன்னிகளுக்கு மானரோஷத்தைப்பத்தி என்ன தெரியும்?'' கல்லெறி வாங்கிய நாயாக ஊளையிட்டுக்கொண்டே போய்விட்டாள் அவள்.

அன்றைக்கு... சுப்புத்தாய் கடைக்குப் போயிருந்தாள். இடுப்பில் சிறிய நார்ப்பெட்டி. சரக்கு வாங்கினாள். கணக்கு முடிக்கிறபோது,

கடைக்காரரின் கடுத்த பார்வை.

''என்னம்மா... கையிலே துட்டில்லியா?''

''பாக்கியிலே சேத்துக்கோங்க...''

''சேத்துக்கிட்டே போனா... நா எப்படி சரக்கு வாங்குறது? எதை வைச்சு கொள்முதல் பண்றது?''

''........''

''ரெண்டொரு நாள்லே கணக்கு முடிக்குற வழியைப் பாருமா.'' குரலின் கண்டிப்புத் தொனியில் ஓர் உறுதி இருந்தது. இவளுக்குள் குலை கிடந்து பதறியது. வரப்போகிற நாளை நினைத்து ஒரு நடுக்கம், பதற்றம்.

கடைக்காரரும் கைவிரித்துவிட்டால்... யாரிடம் எதை வாங்கித் திங்க? வேறு புகலில்லையா? சோற்றுக்கு வேறு வழியில்லையா? சாப்பாட்டுக்காக... நடராஜனுக்கு சாப்பாடாவதா? த்தூ!

மறுநாள்–

வீட்டுமுற்றத்தில் உட்கார்ந்திருந்தாள். ஏறு பொழுது பத்துமணியிருக்கும். தெருவில் ஓர் ஈகுஞ்சுகூட இல்லை. எல்லாரும் காடுகரைகளில் உயிரைவிட்டுக் கொண்டிருக் கின்றனர். ஊருக்குள் நாய், கோழிதவிர ஒரு சுடுகுஞ்சுகூட இல்லை. தனிமையில் முற்றத்து வாகைமர நிழலில் 'உட்காந்திருந்தாள். கடைக்காரரின் கண்டிப்பான தொனி, அடிவயிற்றை அறுக்கிறது. நடராஜனின் ஓரப்பார்வையில் வழிந்த ஓநாய் எச்சில் 'வைக்கப்படப்பா? கொறைஞ்சா போகும்?' என்று வெட்கமில்லாமல் வசியம்பண்ணிய அந்தச் சிறுக்கி.

இன்னைக்கு சோத்துக்கு என்ன செய்ய?

"யம்மா... சோறு வைம்மா" என்று வந்து நிற்கப்போகிற மகளுக்கு என்ன பதில் சொல்ல?

மனசெல்லாம் முள்குத்தல்களாக கேள்விகள். ரணப்படுத்துகிற உணர்வவஸ்தைகள்.

அப்போது-

தடதடத்து வந்த மோட்டார் பைக்கில் வெள்ளைச்சட்டை வெள்ளைவேட்டியாக வருகிற ஃபைனான்ஸ்காரரர். வார வட்டிக்காரர். கண்டிப்பான ஆள்.

"அய்யா... கொஞ்சம் நில்லுங்க."

எழுந்து நின்று கையசைத்தாள். வண்டி வேகம் குறைந்து, மூச்சடங்கியது. காலை ஊன்றிய நிலையில் கேட்டார்.

"என்னம்மா?"

"ஒரு... ஐந்நூறு ரூவா வேணும்."

"அம்பது அம்பதா... பன்னெண்டு வாரம் தரணும். தவணை தப்பாம தந்துருவீயா?"

இருட்டுக்குள் நிற்கிற மனசுக்குள் ஒரு முரட்டுத் தைர்யம். குருட்டு வீர்யம்.

"தந்துருவேன்யா..."

வண்டியின் பெட்டியிலிருந்து சிறிய நோட்டை எடுத்தார். சுற்றுமுற்றும் ஒரு பார்வை. ஆளில்லாத வனாந்திரம்போன்ற தெரு. கேட்க நாதியில்லாத சூழல். இப்படி ஒரு சூழலில் பணம் கேட்கிற ஒரு பெண். வசியம் பண்றாளோ... நம்மளை

வளைக்கப் பாக்குறாளோ... கடன் கேட்கிறமாதிரி கூப்பிட்டு ஆளை உள்ளிழுத்து சொக்குப்பொடி போடுவாளோ...

அவருக்குள் ஓடுகிற ஆம்பளைப் புத்தி. சபல எச்சில், 'நல்ல... திரேகக்கட்டுதான். கட்டுவிடாத திரேகந்தான்.' கையில் நோட்டுடன் முற்றத்துக்கு வந்து, இவளைக் கடந்து வீட்டு வாசலுக்குள் குனிந்து நுழைகிற அவர்.

அவளுக்கு அதிர்வு. திகைப்பிருட்டு.

"வாம்மா... இந்தா... வாங்கிக்க."

"வீட்டுக்குள்ளே என்னத்துக்கு?"

"கையெழுத்துப் போடணும்லே?"

அரைமனசு. தயங்குகிற உணர்வு. திகைப்பும் குழப்பமுமாக வாசலை நெருங்குகிற சுப்புத்தாயின் தோள்பட்டையில் கையை அழுந்தப் பதிக்கிற ஃபைனான்ஸ்.

"வா... வெருசா..."

கைபதிந்த தோள்பட்டையில் வெட்டுண்ட மாதிரியிருந்தது, சுப்புத்தாய்க்கு. உயிரின் ஆணிவேர் வரைக்கும் அக்கினிப் பரவல்.

"காரியத்தை முடிச்சிட்டு... நா கலெஷனுக்குப் போகணும்லே?" துரிதப்படுத்துகிற அவரின் முகப்பதற்றம். கண்ணில் ஓநாய் மூஞ்சி. நா உலர்வில் தடுமாறுகிற சொல்.

தோள்பட்டையில் அழுத்திய கையுடன் சட்டென்று உள்ளிழுத்த வேகம். தடுமாறிய சுப்புத்தாய், சுதாரித்து, திமிறி... தெறித்தோடி முற்றத்துக்கு வந்து விட்டாள்.

"ச்சீ... பொறுக்கி நாயே!... போடா வெளியே... வட்டி வாங்கித்திங்குற நாய்ப்புத்தியை ஏங்கிட்டே வைச்சுக்காதே. விளக்குமாறு பிய்ஞ்சி போகும்."

பெண் வேங்கையாக சீறிச்சினந்த சுப்புத்தாய். ஒடுங்கிய வாயை இடுக்கிக் கொண்டு ஓடிப்போன அந்த நாய். அவளுக்கே அவள் அசிங்கமாக... அருவையாக... தோன்றுகிற அவலம்.

வீட்டுக்குள் வந்து... கதவைச் சாத்திக் கொண்டு சரிந்து உட்கார்ந்தாள். தலையில் தலையில் அடித்துக் கொண்டு கதறுகிற சுப்புத்தாய்.

"இனுமே... இந்தப் பூமியிலே உசுரு வைச்சு இருக்கவே கூடாது... நாண்டுக்கிட்டு தொங்கிர வேண்டியதுதான்." வாளிக்கயிறை ஆவேசமும் வெறியுமாக அவிழ்க்க முனைந்த அவள், பதற்றத்தில் கை பரபரத்தது. முடிச்சவிழ மறுத்த கயிறு. பதறிப்பதறி அவிழ்க்கிற விரல் பதற்றம். வாளியின் பக்கத்தில் மகளின் சட்டைத் துணி. இன்றைக்கு கழற்றிப் போட்டு விட்டுப் போன சட்டைத்துணி.

"யம்மை... யம்மா... யம்மா..." என்று அந்தச் சட்டைத் துணி கூப்பிடுகிற மாதிரியோர் பிரமை.

"என்னை வுட்டுட்டு நீ போறீயாம்மா? நீயே தோத்துப் போய் செத்துட்டா... நா எப்படிம்மா வாழ்றது?" என்று கேட்கிற சட்டைத் துணி. வாழ்வின் அழைப்பு.

அவளுக்குள் வேறுவிதமான உடைப்பு. பாசத்தில் நனைந்த மனவரப்பின் உடைப்பு. பொங்கிப் பெருகி, இவளையும் இழுத்துக் கொண்டு பாய்கிற பாசப்பெருக்கு. ஒன்றைப் பத்தாக்குகிற தாய்மைப் பாசப்பெருக்கு.

“ஐயோ... ஐயய்யோ... ஆத்தா...” என்று வாய்விட்டுக் கதறியழுத அவள், “பெத்தபுள்ளையை ஒத்தையிலே பரிதவிக்க வுட்டுட்டு... புத்தியழிய இருந்தேனே... எனக்கும் இக்கதியா? என்ன பாவம் செய்ஞ்சேன்... நா? அடக்... குருட்டுப்பய தெய்வமே...”

வெடித்துக் கதறியழுதாள். ஒரு பாட்டம் அழுது ஓய்ந்தாள். மனசின் குமுறலெல்லாம் வழிந்து வெளியேறிய அழுகை. தெளிந்த மனசின் நினைவாக வியர்வை வைராக்கியம்.

‘வேர்வையை நம்புறவளுக்கு தேவடியாபுத்தியும் வராது. நாண்டுக்கிடுற புத்தியும் வரக் கூடாது. வேர்வையோட பலத்துலே மல்லுக்கட்டணும். வாழ்க்கையோட கட்டிப்புரளணும். நின்று போராடி ஜெயிச்சுக் காட்டணும்.’

உணர்ச்சியின் வேகமெல்லாம் வடிந்து ஓய்ந்தநிலையில் “எப்படி” என்ற கேள்வியின் மலை மறித்துக் கொண்டு நின்றது.

‘வேர்வை சிந்துறதுன்னு... முடிவாயிட்டா... அது யாரு புஞ்சையாயிருந்தா... என்ன? வந்து கூப்புட்டுறவுகளுக்குத் தான் போகணுமா? யாரும் வரலேன்னா... சாகணுமா? ‘வரட்டா’ன்னு நா போய் புஞ்சைக்காரவுககிட்டே கேட்டா... என்ன! வலிய கேட்டா... கேவலமா? வேர்வை சிந்தத்தானே, வலிய போய் கேக்கப் போறோம்? அதுலே என்ன கேவலம்?’

அழுகைவெள்ளம் வடிந்து ஓய்ந்து தெளிவுகண்ட மனவெளியின் நினைவலைகள், ஒளிப்புள்ளிகளாக நினைவுகள்.

மல்லுக்கட்டுகிற மனவலிமையோடு... சிதறிக்கிடந்த தலை முடியை ஒழுங்குபண்ணி, கோதி முடிந்து கொண்டாள். இறுகி நிதானப்பட்ட பெருமூச்சுடன் வெளியே வந்தாள்.

உச்சிமதிய வெயிலில் நிழல், காலடியில் பதுங்கிக் கிடந்தது, நாய்களைப்போல. வெயிலைத் துணிவுடன் ஏறிட்டுப் பார்த்தாள், சமூகத்தையே பார்க்கிறமாதிரி.

பாதையில் போன ராஜையாப் பெரியவரிடம் வலியப்போய்க் கேட்டாள்.

"உங்க புஞ்சை வேலைக்கு நா வரட்டா?"

-ராணி வார இதழ், 2009

18. அதீதம்

அந்திப் பொழுது. சந்தன வெயில், மிளகாய்ச் செடிகளின் பசுமையை நிறம் மாற்றியிருந்தது. எல்லாச் செடிகளின் தலையிலும் சந்தனக் கரைசலின் ஒளிப் பரவல். பார்க்க அழகாயிருந்தது.

ஆனால் கூதலடிக்கிறது. வெயிலை விழுங்கி விட்டுக் கைநீட்டுகிற பனிக்கூதல். விஷப்பனி. மார்கழி நேற்றுதான் பிறந்திருக்கிறது. இதற்குள் இம்புட்டுப் பனியா? இந்த வருஷப் பருவமே சரியாயில்லை. ஏட்டிக்குப் போட்டியாக இருக்கிறது. என்ன கூத்து கட்ட இருக்கிறதோ....

சோம்பலான யோசனையில் மம்பட்டியோடு அடுத்த பாத்திக்கு நகர்ந்தான் யோகேந்திரன். வாய்க்காலில் தண்ணீர். மண் கரைசலும் நுரைத் துகள்களுமாக கலங்கலாய் வந்தது. மிளகாய்ச் செடிக்கு முதல் தண்ணீர். ஐப்பசி முதலில் மழைத் தண்ணீரில் மிளகாய் நடுவை. கார்த்திகையில் இரண்டு களைவெட்டு. மூன்று மருந்தடிப்புகள். இப்போது வாய்க்கால் வரப்புகளை எடுத்துக்கட்டி சீர் செய்து, முதல் தண்ணீர். சிரமமில்லை. உடையவில்லை. ஒரு சீராய்ப் பாய்கிறது.

விதைத்த யூரியா முத்துச் சிதறலாக செடிகளின் நிழலுக்குள் சிரிக்கின்றன. அந்தச் சிரிப்பைப் பொறுக்காது, போட்டு அமுக்கித் தின்றுவிட்டுப் படர்ந்து நிறைகிற தண்ணீர்.

குமரிப்பிள்ளைகளாய் கொத்தும் கொழையுமா இருக்க வேண்டிய மிளகாய்ச் செடிகள். மாறி மாறி சுருட்டை நோயடித்து, குழைவில்லாத விறைப்பில் நிற்கின்றன. படர்ந்து

அகலமாய் நிற்காமல் ஒடுக்கிப் பிடித்த விளக்குமாறுகளாக - உலர்ந்த கொக்குகளாக -

யோகேந்திரனுக்குள்ளிருந்து பெருமூச்சு. அடுத்த பாத்திக்காக வாய் மடையைக் கொத்தினான். இன்னும் அவனுக்குள் வாடாத துளிர்களாக நம்பிக்கை.

'தண்ணி பாய்ஞ்சுட்டா செடிக உசுர் புடுச்சிரும். புதுத்தளிர் எடுத்துப் படர்ந்துரும். பூ பிஞ்சு எடுக்க ஆரம்பிச்சிரும்.'

அவனுக்குள் கால் முளைக்கும் நம்பிக்கைகள். சட்டையில்லாத திரேகத்தில் பனியின் குளிர்ப் பரவல். கூடுதல் வெயிலைப் பொருட்படுத்தாத பனி. 'ச்சே' என்றிருந்தது.

'பனிக்கண்ணு தொறந்தா.... மழைக் கண்ணு மூடிக்கிடும்னு பெரியாளுக சொல்லுவாகளே.. பனி இப்படி விஷப் பனியா எறங்குதே... அப்ப தைமாச மழை இல்லாமப் போயிருமோ....'

சூழ்கிற கவலை நினைப்புகள். மிளகாய் புஞ்சைக்கு அடுத்த புஞ்சை தரிசாகக் கிடக்கிறது, கலப்பை முனை பார்க்காத விதவையாக.

ஆண் மயில் ஒன்று நீளத் தோகையோடு நடந்து இரை பொறுக்குகிறது. சற்றுத் தள்ளி ஒரு பெண் மயிலும், மூன்று குஞ்சுகளும்.

ஒரு பனங்காடை 'கார்ர்' ரென்று நாரர்சமாகக் கத்திக் கொண்டு பறந்து போகிறது. மைனாவைவிட சற்றுப் பெரிசு. நீலமும் பச்சையும் கலந்த ஒரு நிறம். பார்க்க அழகாயிருக்கும் பனங்காடை.

செம்போத்து எங்கோ ஒரு வேலிக்குள் இருந்துகொண்டு சோகமாய்க் கூவுகிறது. கரிசல்காட்டுக்குயில். குயிலைவிட

இனிமையான கூவல். நெஞ்சுக்குள் ஊடுருவி உரசுகிற உணர்ச்சிக் கூவல்.

'எப்படா... கரண்டு நிற்கும், வீட்டுக்குப் போகலாம்' என்று மனசு கிடந்து பரபரத்தது. அவனுக்கு மகனைப் பார்க்கணும் என்கிற ஆசை முளைத்துவிட்டது. முளைத்த கணத்தில் விருட்சமாகி விடுகிற ஆசை. விருட்சமாகி அவனை அலைக்கழிக்கிற ஆசை.

போன மார்கழி மாசம் இருபத்தி ஒன்றாம் தேதி பிறந்த பயல். ஒரு வருஷம் ஆகப் போகிறது. ஏழு வருஷகாலம் மாய்மாலம் காட்டி, கண்ணாமூச்சி விளையாட்டு நடத்தி... பிறந்த பயல். கல்யாணமாகி, ஏழு வருஷம் கடந்த பின்பு பிறந்த தலைக் குழந்தை.

அடே...யப்பா, ஏழு வருஷ காலத்தில் எத்தனை எத்தனை மாற்றங்கள்... நாசகரமான மோசமாற்றங்கள். சீரழிவுகள். அவஸ்தைகள்.

ய......ம்மா! பயங்கரம்.

இப்ப நினைத்தாலும்கூட மனசு கிடந்து நடுங்குகிறது, யோகுவுக்கு. நடந்தவற்றையெல்லாம் நினைக்கவே தயங்கினான். நரக நாள்கள். மனசைப் பிள்ளைப் பக்கம் திருப்பி, அந்த நரக நினைப்புகளிலிருந்து தப்பிவிட முயன்றான்.

சந்தன மின்னலாய் வந்து பிறந்த பயல். பார்த்த கண் கூசும். அப்படி ஒரு நிறம். தங்கக் குழைவு. 'ததுக், பொதுக்' கென்று இருப்பான். வெண்ணைக் கட்டியாகக் குழைகிற அந்திச் சூரிய ஜொலிப்பு. சுருள் சுருளாய் முடி. ஆனாலும் மெல்லிய ரோமம். கோதிய விரல்களுக்குள் பூவின் மென் உரசல்.

அவன் சிரித்து எச்சில் வடிந்தால்... அதன் அழகே தனி. அள்ளிக் குடிக்கலாம் போலிருக்கும்.

அவனுக்குள் சகலமும் மறந்து போக... முழுவதும் நிறைந்து போன பிள்ளை. அவன் சிரிப்புச் சிணுங்கல். உருண்ட பிஞ்சுக்கைகளின் பூந்தட்டுகள். மிருதுவான அவன் பிஞ்சுப்பாதம் வயிற்றில் பதித்தால்... அதன் சுகமே தேவபோகம்.

'ட...டக்'

பம்ப் ஷெட் குழாயின் அதிர்வுச் சத்தம், கரண்டு நின்று போயிற்று. யோகுவுக்குச் சந்தோஷம். வரத்துத் தண்ணீருக்கு இரண்டு பாத்திகளைக் கொத்திவிட்டு... மம்பட்டியோடு பம்ப்ஷெட் ரூமுக்கு வந்தான். தொட்டித் தண்ணீரில் முங்கி எழுந்தான். அவசரத்தில் காக்கா குளிப்பு. ஈரவேட்டியை நான்காக மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டு, துண்டைத் தோளை மூடிப் போட்டுக்கொண்டான். இப்போது விஷப்பனி ரொம்பக் கூடுதலாயிருந்தது. உதடுகள் நடுங்கி யதிர்ந்தன. நரம்புகள் முழுக்க விறைத்து விறைத்து திரேகம் சிலிர்த்தது.

பொழுது சுத்தமாக அடைந்து விட்டது. ஆகாய வெளிச்சம் தவிட்டு நிற மங்கலாய் மிச்சமிருந்தது. அதையும் விழுங்கித் தீர்க்க இருட்டு, பனியின் உக்கிரத்தோடு சூழ்ந்து வந்தது. யோகு நடையை எட்டிப் போட்டான். மனசுக்குள்... தனது ரத்த நிழல்.

2

"பய இருக்கானா? முழிச்சிருக்கானா, ஒறங்குதானா?" ஆவல் துடிப்பின் கேள்வியோடு உள்ளே நுழைந்த யோகுவை எதிர் கொண்டாள் சரசு.

அப்போதுதான் குளித்திருந்தாள். மஞ்சள் பூசிய சுடர்முகத்தில் மாரியம்மா கோயில் திருநீறு. செஞ்சாயத் திருநீறு. நடுவில் சிறிசாக ஒரு குங்குமப் புள்ளி. ஈரக் கூந்தலைத் துவளவிட்டு நுனியில் முடிந்திருந்தால் அதிலும் சொட்டிக்கிற நீர்த்துளி. சரசு உதடுகளின் பூ மலர்வு. பெருமிதமான புன்னகை. புன் சிரிப்புப் பிரகாசம்.

“என்ன சிரிக்கே? தவமணி எங்கே?”

“அவருக்கு ஏககிராக்கி, பவுடர் போட்டு, கறுப்புப் பொட்டு வைக்கிறதுக்குள்ளே அவனைத் தூக்கிட்டுப்போக ரெண்டு மூணு புள்ளைக வந்துட்டுப் போய்ட்டாக...”

“ம்”

“மேலத்தெரு வேலக்கா மக... தூக்கிட்டுப் போய்ருக்கா.”

“எங்கே... அவுக வீட்டுக்கா?”

“இல்லை. களத்துக்கு.”

கைலியைக் கட்டினான். ஈரவேட்டி துண்டைக் கொடியில் காயப்போட்டான். உச்சித் தலையில் தேங்காய் எண்ணையைத் தேய்த்துக் கொண்டான். தலைசீவிக் கொண்டான். காரியங்களில் தெரிந்த துல்லியமான துரிதம். செயல்களில் ரெக்கையடிப்பு. எங்கோ புறப்பட யத்தனிக்கிற பரபரப்பு.

“என்ன... தூரமா?”

“இல்லை கிட்டத்துலேதான்.”

“அதான்... எங்கே?”

“பயலைத் தேடித்தான்.”

அவள் முகத்தில் சிரிப்பு. சிரிப்பில் ஒரு பரிகாசம். பெருமிதமான பரிகாசம்.

"பத்துமாசப் புள்ளையைத் தேடிக்கிட்டு... முழுத்த ஆம்பளை தெருக்காட்லே திரிஞ்சா... என்ன நெனைப்பாக?"

"நெனைக்கிறவுகளுக்கெல்லாம் பயப்பட்டா... முடியுமா?"

"சரி... காட்லே தண்ணி பாய்ச்சிட்டு வந்திருக்கீக, காப்பி குடிச்சிக்கிருதீகளா...?"

"பயலைத் தூக்கிட்டு வந்து குடிச்சிருதேன்..."

"இந்தப் பறப்பா... பறப்பாக? நல்ல தகப்பன் வந்து வாய்ச்சீக. நம்ப பயலுக்கு..."

அவனைக் கடந்து செல்கிற வாசனைச் சோப்பின் நறுமணம். வெறும் குடத்தை இடுப்பில் வைத்து வாசலைக் கடக்கிற சரசுவைப் பார்த்தான்.

தவமணியைக் கருத்தரிப்பதற்கு முன் அவள் தவித்த தவிப்புகள், போட்ட சண்டைகள்... அழுத அழுகைகள்.... தன்னைத்தானே அவன் மாற்றிக்கொண்ட தலைகீழ் விகிதம்... அவள் சொல்கிறாள். இவன் பறக்கிற ஆவல் பறப்பு பற்றி. நல்ல கூத்துத்தான். பெண்ணின் சாகசம். சூழலைத் தலைகீழாகப் புரட்டிப் போடுகிற அவளது சாகசம்.

முற்றத்தைத் தாண்டி சரசு. தன் முதுகு பார்க்கப் படுவதை பார்வையின் உள் அர்த்தத்தில் மோதிக் கொண்டவள், கண்ணின் கேள்விக்குறி கலைந்து மங்கியது.

அப்பவும்... வார்த்தையில் மட்டும் கேள்வியை நிறுத்தினாள். "என்னவாம்...?"

"ஒண்ணுமில்லே..."

"அட... சொல்லுங்க."

"தவமணியைக் கொஞ்சுறதுக்கு நான் மட்டும் தவிக்கேன் இல்லையா? அதைத்தான் நெனச்சேன்."

"ஏன்... நீங்க பறக்கலியா?"

"ஆமா. நான் மட்டுமா?"

"நானுந்தான் அதுக்கென்ன?"

"அம்புட்டுத்தான்."

அவன் பூரித்துப் போன சிரிப்பில் முகமே பூவாக மலர்ந்தது. பீர்க்கைப் பூவின் மார்கழிக் குளிர்ச்சி. பசிய மஞ்சள் ஒளிச்சிலிர்ப்பு. அவனுள் மோகத்தீயைப் பற்றவைக்கிற ஒளி.

யோகுவுக்குள் வந்து திரண்ட கிறக்கம். அடிவயிறே சூன்யமாகிப் போன ஓர் உணர்வு. மூர்க்கமோகத்தில் முறுக்கேறித் திணறிய மனசு. தடக் தடக்... கென்று அடித்துக் கொள்கிற நெஞ்சுத் தீவிரம்.

சரசு நாலெட்டுத் திரும்பி வந்தாள்.

"ஐயா... ராசா, நான் தவமிருந்து பெத்த ஒங்க புள்ளையைத் தேடித் தூக்கிட்டு வாங்க ராசா... போதுமா, ராசா?"

"ஒங்க புள்ளை" என்ற வார்த்தையில் அவள் தந்த அழுத்தம்.

கேலியும் குழைவும் பரிகாசப் பணிவுமாகக் கனிந்த பேச்சில் மிழற்றிய சரசு, அவனது கன்னத்தை, குவித்த விரல்களால் ஒத்தி முத்தமிட்டாள்.

அவள் விரல்களின் சிலிர்ப்பான குளிர்ச்சி, மென்மையான ஸ்பரிச உணர்ச்சி அவனுக்குள் பிரளயம். அதையெல்லாம்

கடந்து சிரித்துவிட யத்தனித்தான். முடியவில்லை. அசட்டுச் சிரிப்பாக முடிந்தது.

அவள் எதையும் கவனிக்காதவள்போல அவனது உள்நிகழ்வை உணராத அப்பாவிபோல குடத்துடன் போய்விட்டாள்.

யோகு தெருவில் இறங்கினான். மேல வீட்டு வேலக்கா மகளைத் தேடினான்.

வேலக்கா மகளை வீட்டுவேலை கூப்பிட்டது. பிள்ளையை சரசுவிடம் ஒப்படைத்துவிட எழுந்தாள். பக்கத்திலிருந்த சிறுமி... "தவம் டேய் தவம்... இங்கே பாரு..." என்று தூக்குவதற்குக் கைநீட்டினாள்.

"ம்ஹீம்... நான் தரமாட்டேன்... சரசக்காகிட்டே குடுக்கணும்."

"நான் குடுத்துருதேன்..."

"அதெல்லாம் மாட்டேன்... நீ அழுக வைச்சிருவே."

அதற்குள் அந்தச் சிறுமி அவனைத் தூக்கிவிட்டாள். அவனும் எச்சில் சிரிப்போடு தாவினான்.

"நான் சரசக்காகிட்டே பத்திரமா குடுத்துருதேன்."

இப்படியே கைமாறி... கைமாறி... கைகள் மாறி தவமணி அழகு அப்படி சகலரையும் ஈர்க்கிற அழகு.

யோகு விசாரித்து விசாரித்து... நூல் பிடித்துத் திரிந்தான். தெருவில் வீடு வீடாக அலைந்தான்.

கடைசியில் மடம், மடத்துச் சிமெண்டுத் திண்ணை. சுற்றிலும் நாலு சிறுமிகள், கைதட்டுகிற சத்தத்தில் கவனத்தை ஈர்க்கிற முயற்சி.

"கோழி பாரு... குஞ்சைப் பாரு... சைக்கிளைப் பாரு... டக்கரைப் பாரு" என்று ஆள் ஆளுக்குக் கத்த... நடுவில் தங்கப்பழமாகத் தவமணி. திகைப்பும் குழப்பமுமாகத் திணறித் தவித்தான். வந்து வந்து கலைகிற அழுகை. அவனுக்கு ஒவ்வவில்லை. ஆனால் சிறுமிகளுக்கு, தங்க வெண்ணெய்க் கட்டியைவிட மனசில்லை. ஆள் ஆளுக்கு விளையாட்டுக் காட்டினர்.

இவனைத் தூ...ரத்தில் பார்த்தவுடன்-

இவனை நோக்கி பிஞ்சுக்கைகளை அகல விரித்துக் கொண்டு வீறிட்டான். ஓட்டமாய் ஓடிப் போய் தூக்கிக் கொண்டான். மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"என்னப்பா... என்னப்பா... ஏண்டா கண்ணு... அழாதேடா... அழாதேடா."

வினோதமான வகையில் குரலை மாற்றிக்கொண்டு, அவனை நெஞ்சில் வைத்துக் குலுக்கினான்.

"ரோரோ... ரோ... ட்ட்ட்ர்ரு... ட்ட்ர்ரு... ரோ ரோ ரோ..." என்று இசைலயமாய்க் குரல் கொடுத்துக் கொண்டே அவனைக் குலுக்க... குலுக்க... இருந்த இரண்டு பல் தெரிய அழுத தவமணியின் அழுகை, மிகக் குறைந்தது. புறங்கையால் கண்ணைக் கசக்கினான்.

"ஒறக்கம் வருதா? வாடா... அம்மாகிட்டே போவோம்" அந்தச் சிறுமிகளைப் பார்த்தான். இப்போது கை தட்டிச் சிரித்தான் தவமணி.

3

மல்லாக்கப் படுத்திருந்தான், யோகு. அவன் வயிற்றில் குதிரை காரி செய்த தவமணி. தலையைத் தூக்கிக் கொண்டே தவமணி, தலையைக் கவிழ்த்தி... "முட்டு... முட்டு, முட்டு... முட்ட்டு" என்று குனிந்து நெற்றிகள் தொட்டவுடன் தவமணி "கெக்கெக்கே" என்று சிரிக்க...

கொஞ்ச நேரம்தான். அதற்குள் அந்த விளையாட்டு அவனுக்கு அலுத்துப் போயிற்று. நெஞ்சு ரோமத்தைப் பற்றியிழுத்து இறங்கப் பார்த்தான். யோகுவுக்குப் விளையாட்டாசை குறையவில்லை. படுத்த வாக்கில் கால்களை உயர்த்தி... கால்களில் அவனைப் போட்டுக் கொண்டு... ஏற்றவும் இறக்கவுமாய்... கொஞ்ச நேரம்...

அதுவும் சலித்துப் போயிருந்தது. அப்புறம் இவன் கால்மாட்டை மாற்றினான்.

"ஏங்க... நீங்களும் பச்சைப் புள்ளை கணக்கா இப்படியே விளையாண்டா எப்படி?"

"ஏன்... புள்ளையைக் கொஞ்சக் கூடாதா?"

"அதுக்கும் ஒரு அளவு கிளவு கெடையாதா?"

"என்ன அளவு வேண்டிக்கிடக்கு? நீ ஒஞ்சோலியைப் பாரு. எங்களுக்குத் தெரியும்."

"சரி... சரி கொண்டாங்க. அமர்த்தணும்."

பயலும் அவளிடம் ஆவலாய்ப் பறந்தான். அரிசிப் பல் தெரியச் சிரித்தான். அவள் திரேகத்தில் பட்டதும் ஆதாளி தாளாமல் அவள் மடிக்குள்ளேயே குதித்தான்.

ஆமா... நாலுமணிக்கு அமர்த்தனது. பசிக்காது? ஏங்கண்ணு... என் ராசா... என்னடா செல்லம்...! வவுறு பசிக்குதாப்பா? வயக்காடு மோட்டுனியாக்கும்? நாலுகுறுக்கம் வெட்டியிருப்பியா?''

முகத்துக்கு நேராகத் தூக்கிப்பிடித்திருந்தாள். அவள் பாவனையும் நடப்புமாய் முகத்தை ஆட்டி ஆட்டிக் கொஞ்ச... அவனும் பிஞ்சுக் கால்களை உதறி உதறிச்சிரித்தான். அகல அகலமாய் அசைகிற சரசுவின் உதடுகளைப் பிடிக்க கையைக் கையை நீட்டினான்.

காலை நீட்டினாள். மடியில் கிடத்தினாள். அதற்குள் புரிந்து கொண்டு சந்தோஷம் தாளாமல் தத்தளித்தான். ஆவல் ஆவலாய் சரசுவின் நெஞ்சில் அறைந்தான்.

ஜாக்கட் ஊக்கைத் திறந்து, மாராப்புச் சேலையை நன்கு இழுத்து விட்டு, மகனை அணைத்துக் கொண்டாள். ஆசையும் மகிழ்ச்சியும் அவன் கால்களும் கைகளும் ஆட...

மகனின் உள்நாக்கின் அழுத்தமான ஸ்பரிசத்தில் மனம் கிறங்கிப் போய், கண்களைச் சொருகினாள் சரசு. அந்தச் சுகமயக்கத்தில் கை பரபரத்தது. மகனின் பஞ்சு ரோமத்தை வருடினாள்.

சரசுவின் முகம் தாய்மையில் கனிந்து, விம்மி, தெய்வீக நிலையடைகிற முகம். கிறங்கிய கண்களும் பரவச உணர்வுகளுமாய், சுகபோதையில் தத்தளிக்கிற சரசு. தேவசுகம்.

ஒருக்களித்துப் படுத்திருந்த யோகு, சரசுவைப் பார்த்தான். அவள் முகம் கனிந்த உணர்வுகளில் முகக் குழைவு. புருவ அசைவு. பரவசமாய் மலர்கிற மனைவி முகத்தை

நோக்கினான். அவனுள் நீள்கிற நினைவோட்டம். "பெத்த புள்ளைக்குத் தாய்ப்பால் குடுக்குறது எம்புட்டோ நல்லது. புள்ளையை நோய் அண்டாது. நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும். வம்சம் வைரத் தொடர்ச்சியா வலுவாத் தழைக்கும். புள்ளைக்கிட்டே பாச உணர்வை வளர்க்கும். உடம்பையும் பண்பையும் ஆரோக்கியமாக்கும். அது மட்டுமில்லை... தாய்ப் பால் குடுக்கிறது தாய்க்கே ஒரு சுகம். இன்பப் போதை. பரவசம். தெய்விகமா மாறுகிற மனக்கனிவு. இந்தச் சுகத்தை வேண்டான்னு தள்ள ஒரு பெண்ணாலே முடியுமா? முடியுதே... தாய்ப்பால் தந்தா, கவர்ச்சி கலையுமேன்னு பயப்படுதுகளே, பெத்த புள்ளையைவிட கவர்ச்சி முக்கியமா? தாய்ப்பாசத்தைவிட திரேகக் கவர்ச்சி முக்கியமா? தாய்ப்பாசத்தைவிட திரேகக் கவர்ச்சி அழகா? தாய்ப்பால் குடுக்கத் தயங்குகிற கலாச்சாரம் தொடங்கிருச்சு. ராட்சஸத் தொடக்கம். இந்தக் கலாச்சாரம்... எய்ட்ஸ் கலாச்சாரத்துலேதான் போய் முடியும்."

யோகுவுக்குள் யோசனைகள். நேற்று நாளிதழில் தலையங்கத்தைப் படித்த ஞாபகத்தின் விளைவு. தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப்படுவதைப்பற்றிய தலையங்கம்.

தவமணி தூங்கிப் போனான், மடியிலேயே. தூக்கி தொட்டிலில் போட்டாள். லேசாய் சிணுங்கித் திமிறினான். தொட்டிலை ஆட்ட ஆட்ட உறங்கிப் போனான். உறங்கிய பின்னும்கூட, அந்தச் சின்ன உதடுகளில் பால் குடிக்கிற பாவனை. சலனம், ஒரு சின்னத் தூசியை எடுத்து அவன் தலை முடியில் வைத்தாள்.

"எதுக்கு இந்தத் துரும்பு?"

“ஒறக்கத்துலே பேய்க்கனா வராம இருக்கணும்னா... நாம தலை மாட்டுலே வெளக்கமாறு வைச்சுப் படுக்குறோம்லே?”

“ஆமா...”

சரசுவைப் பார்த்தான். மோகப் பார்வை. அள்ளி விழுங்கி விட யத்தனிக்கிற பார்வைத் தீவிரம். அவளைத் தொட்டு ஒன்றரை வருஷமாகப் போகிறது.

சரசு இன்றைக்கு ரொம்ப அழகாய்த் தெரிந்தாள். சுடரொளிப் பிரகாசம். முக வசீகரம். கட்டுவிடாத கனிக்குழைவு. இடுப்புச் சதையின் மினுமினுப்பு. தொட்டுத் தழுவத் தூண்டுகிற சதை மின்னல்.

பெருமூச்சோடு எழுந்தான். தொட்டிலையாட்டிக் கொண்டிருக்கிற சரசு பக்கத்தில் போய் நின்றான். இன்னும் நெருக்கமாய் காது மடலில் அவனது உஷ்ணச் சுவாசம். மன உஷ்ணம். திரேக உஷ்ணம்.

அவளும் திக்... திக்... திக்...

திரும்பாமல், அசிரத்தைப் பாவனையில் அவள். அவளுக்குள் முரண்பாடு. புருஷனின் நியாயமான பசி. மனசறிந்து இங்கிதமாய் நடந்து கொள்கிற அன்புப் புருஷன். இவள் அழுது புலம்பி ஆர்ப்பரித்து அடம் பிடித்த போதெல்லாம்... கோபப்படாமல் குளிர்முகம் காட்டிய ஆத்ம தோழன். அவனது காலடியில் சரணடைந்து கிடக்கிற இவளது ஆத்மா.

அப்பேர்ப்பட்ட அருமை மனிதனின் இயல்பான பசி. நியாயமான பசி. தன்னையே பரிமாற பரவசப்பட வேண்டிய நியாயம்.

ஆனால்... விரதம்...! சாமியிடம் போட்டிருக்கிற நேர்த்திக்கடன். தவமிருந்து பெற்ற தவமணியின் ஆயுள் வலிமைக்காக, அவள் போட்டிருக்கிற தெய்வக் கடன்.

'என்ன செய்ய...?'

அவள் உள்ளுக்குள் மருகித் தவித்தாள். மறுக்கவும் முடியாமல், உடன்படவும் முடியாமல் அவள் துடிக்கிற துடிப்பு...

உரசுகிற அவன், யோகுவின் தீ. அடிவயிற்றில் பரவுகிற அவனது வலக்கை. அந்தக் கையின் நடுக்கம். தகிப்பு. பரவுகிற கை, மலைப் பாம்பாக மேல் ஏறுகிறது. திரும்பினாள்.

திடுக்கிட்டான் யோகு. அவள் கண்ணிமைகளில் முத்துப் புல்லாகத் தொங்குகிற கண்ணீர்த்துளி. "என்ன...?"

"நம்ம புள்ளைக்காக நான் போட்ட வெரதம் தெரியாதா ஒங்களுக்கு?"

"ச்சேய்..." வெறுப்போடு விலகினான்.

4

யோகுவுக்குள் எரிமலைத் தகிப்பு. வெளிப்படுத்த முடியாத ஊமைக் குமுறல். எரித்துவிடுவதைப்போல சரசுவைப் பார்த்து விட்டு... வெளியே திண்ணைக்குப் போய்ப் படுத்து விட்டான்.

துண்டை விரித்துப் படுத்துவிட்டான். விஷப்பனி, நாய் கூட தெருவில் படுக்க முடியாத பனி. திண்ணைச் சிமிண்டு, துண்டை மீறிக்கொண்டு சுரீரென்று குளிர்ந்தது. உடல் நடுங்கியதிர்ந்தது. ஊதல் காற்று வேறு.

எலும்புகளும் உறைந்து விடுகிற கூதல். நரம்புகள் விறைப்பதுபோல ஒரு பிரமை. கன்னக்கதுப்புகளிலும் செவிமடல்களிலும் பனியின் உக்கிரத் தீண்டல். எதையும் உணர முடியாத கோப உக்கிரம். மனசு முழுக்க கசந்து வந்தது. அடிமனசு வரைக்கும் கசப்பின் பரவல்.

“ச்சேய்...” என்று வெறுத்துக் கொண்டான். சரசு மீதா... தன்மீதா... இருவரையும் கட்டுப்படுத்தி கசப்பைத் திணிக்கிற சூழல்மீதா? எதன் மீது வெறுப்பு? அவனுக்கே புரியவில்லை.

தினம் தினம் விரதம்... நிமிஷத்திற்கு நிமிஷம் சாமி கும்பிடல்...

வீட்டுச்சுவர் முழுக்க சாமி போட்டோக்கள், திருப்பதியிலிருந்து உள்ளூர்ச்சாமி போட்டோக்கள்... வரை, வீட்டுச்சுவரே தெரியாது. பூராவும் கண்ணாடியடைப்பு போட்ட கடவுள் படங்கள்.

சரசு.... குமரி மாதிரியிருக்கிறாள். ஆனால் நடைமுறையில் ஆசார அனுஷ்டானம். சாமியாரிணி மாதிரி. காவி உடுத்தாத குறை ஒன்றுதான்.

அப்பவும் இப்படியா? ச்சேய்!

...கல்யாணமான வருஷம். ஏழெட்டு மாதம்தான் ஆகியிருந்தது.

அப்போது நெருங்கிய உறவுக்காரன் ஒருத்தன், தன் குழந்தைக்கு மொட்டையடித்து, காது குத்த ஏற்பாடு. தூரம் தொலைவிலுள்ள அருஞ்சுனைகாத்த அய்யனார் கோவில். திருச்செந்தூர் பக்கம். அம்மன் புரம் அருகில். வேன் பிடித்துப் பயணம். யோகுவையும் கூப்பிட்டான். சரசுவிடம் கேட்டான்.

“போவமா...?”

“நானுமா?”

“ம்.”

“நான் வந்து என்ன செய்ய போறேன்?”

“சும்மா போவம். போயி சாமி கும்பிடு...”

“சாமி மனசுக்குள்ளேயே இருந்தா போதும். நாலு பேரு பாக்க கும்பிடணும்னு தேவையில்லை.”

“சாமி கும்பிடறது... கேவலமா?”

“கேவலமில்லை... ஆனா அதுக்காக... ஊரறியக் கும்பிடணுமா? பெருமைக்கா? நானும் கும்புடுதேன்னு காட்டிக்கிடவா?”

“அட... அதுதான் வேண்டாம். சும்மா சுற்றுலாமாதிரி இருக்கட்டுமே, கோயிலுக்குப் போயிட்டு... ஒறவுக்காரனுக்கு மொய் செய்ஞ்சுட்டு வந்துருவமே...”

“அப்பச் சரி...”

பெரிய பெரிய மருதமரங்கள். ரொம்ப ரொம்ப உயரம். பந்தல் போட்டமாதிரி மரங்களின் அடர்த்தி. வெயில் தரையில் படாது. செம்மணல் ஜில்லென்று குளிர்ச்சியாக இருக்கும். அருஞ்சுனை வேறு. குளம். படிக்கட்டுகள் உள்ள குளம். ஆனால் எந்நேரமும் சுனையிலிருந்து வரும் புதுத்தண்ணீர்மாதிரி... வெதுவெதுப்பு. குளிக்க குளிக்க ஆசையாக இருக்கும்.

பெண்களெல்லாம் குளித்துவிட்டு ஈரச்சேலையோடு கோயிலை மூன்று முறை சுற்றி வந்தனர். ஆனால் சரசு

போகவில்லை. குளித்து விட்டுத் துணி மாற்ற வேனுக்குள் போய்விட்டாள்.

பகல், மணி ஒன்றரையாகிவிட்டது. பூசாரி, பூஜையைத் தொடங்கினார். மணி அதிர்ந்தது, காடெல்லாம் மணியின் வெண்கல நாதம்.

பெண்கள் பக்தி பூர்வமாகக் கும்பிட்டனர். அய்யனாரைத் தரிசித்தனர். பரவசப்பட்டனர். நெக்குருகிக் கசிந்தனர். சொந்த துன்பங்களைச் சொல்லி சொல்லி மனசுக்குள் ஆறுதலைத் தேடினர்.

''ஆளோடு ஆளுகளாகச் சேர்ந்து நீயும் கும்பிடு. ஒதுங்கி நின்னா... ஒன்னை ஒரு மாதிரி நெனைக்கப் போறாக...'' என்று சரசுவிடம் கிசுகிசுத்தான்.

அவள் கூச்சப்பட்டாள். பிணங்கினாள். ரகசியமாக மறுத்தாள். ''சும்மாயிருங்க'' என்று பதற்றத்துடன் கிசுகிசுத்தாள்.

ஆனால்... அதற்குள் ஒரு பெண்.

''சரசு.... இங்கே வா...சாமி கும்பிடு.''

அதற்குமேல் மறுக்க முடியவில்லை. கூட்டத்தோடு கூட்டமாய் நின்று கொண்டாள். கையைக் குவித்திருக்காளா... இல்லையா என்று தெரியவில்லை. தர்மசங்கடமாய் நெளிந்தாள். வயிற்றுக்கு நேர் கைகளைக் கோத்திருந்தாள். சும்மா நின்றாள்.

கும்பிடுகிற மாதிரியும் தோன்றும், இல்லாதமாதிரியும் தோன்றும். கூச்சப்பட்டு நெளிகிற அவளையே பார்த்தான் யோகு. குறும்பாகச் சிரித்தான். அவனது சிரிப்பில் வாடிப்

போன அவள் கோபப்பட முடியாமல் திணறிய சரசு. கண்களில் மட்டும் தீ.

"ச்சேய்... உங்க பேச்சைக் கேட்டு வந்தது தவறாப் போச்சு" என்று சொல்கிற கண்கள்.

அப்படி இருந்தவள்தானே... சரசு.

இப்போது -

சாமியாரிணி மாதிரியாகிவிட்டாளே... காவி உடுத்தாத துறவிமாதிரி மாறிப்போனாளே...

நாளுக்கொரு விரதம்... கிழமைக்கொரு பூஜையென்று... வீட்டையே கோயில் மடம் மாதிரியாக்கி விட்டாளே... இப்படி மாறிப் போனதை நினைக்கிறபோது... யோகுவுக்குக் கோபம் குறைந்தது. கோபத்தின் உக்கிரம் தணிந்தது.

அவள் ஆசைப்பட்டா மாறினாள்? மாற வேண்டும் என்று திட்டமிட்டா மாறினாள்? அவமானமும் துன்பமும் இல்லாமையும் சேர்ந்து, அவள் ஆத்மாவை வதைத்த கொடுமையாலல்லவா... இப்படி மாறினாள்?

அதை நினைக்க நினைக்க... யோகுவுக்குப் பரிதாபமாக இருந்தது.

5

திருமணமாகி இரண்டு வருஷம் ஆகிவிட்டது. அச்சு குலையாமலிருந்தாள். சரசு கல்மாவு போட்டு தீட்டிய வீச்சரிவாள் மாதிரியிருந்தாள், புதுசு மயங்காமல். வாட்டமில்லை. காறித்துப்பவில்லை. ஓங்கரிக்கவில்லை. ஊண் ஒவ்வாமலில்லை.

அதை அவனோ அவளோ பொருட்படுத்தியதேயில்லை. நல்லது பொல்லாது வீடுகளுக்குப் போகிறபோது, நெருக்கமான உறவுக்காரப் பெண்கள் காதுக்குள் சத்தமாய் கிசுகிசுப்பார்கள்.

''கஞ்சி தண்ணி தள்ளலியா?'' என்று உள் அர்த்தம் பொதிந்து கேட்பார்கள். மனக்காயம் எதுவுமில்லை. ''இன்னுமில்லை'' என்று வெட்கச் சிணுங்கலாக முணுமுணுப்பாள், சரசு.

''இருக்கட்டும்... இருக்கட்டும், இப்பத்தானே கல்யாணமாச்சு. சின்னஞ்சிறிசுக... சந்தோஷமா இருங்க. காலமா போயிருச்சு? எப்ப வேணும்னாலும் பெத்துக்கலாம்'' என்று ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் கூறுவார்கள்.

யோகேந்திரனும் சரசுவும் ஜோடி சேர்ந்த முதல் வருஷம், ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தார்கள். அந்தத் தம்பதிக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்த செய்தி வந்தபோது,

சரசுவுக்குள் ஒரு சூன்யம். சட்டென்று இருதயமே கழன்ற மாதிரியோர் உணர்வு. எதையோ இழந்து போன மாதிரி ஒரு வெறுமை. ஏன்... தன் வயிற்றில் மட்டும் ஒன்றும் தட்டுப்படவில்லை?

நெருஞ்சி முள்ளாய் ஒரு குத்தல். உள்ளிறங்குகிற வலி. வலியின் அதிர்வு திரேகம் பூராவும் படர்கிறமாதிரி ஒரு வேதனை.

யோகுவிடம் புலம்புவாள்.

''ஏங்க... நான் மலடியாகத்தான் இருப்பேனா?''

''அதெல்லாம் இருக்காது... கல்யாணமாயி பதினைஞ்சு வருஷம் கழிச்சுக்கூட கொழந்தை பெத்தவுக இருக்காக. நீ ஏன் வீணா மனசைப் புண்ணாக்கிக்கிடுதே?''

''இல்லைங்க... எனக்குப் பயமாயிருக்கு.''

''நீ ஏன் பயப்படணும். வம்சம் தழைக்கணும்னு நான் இல்லே கவலைப்படணும்? நச்சரிக்கணும்? நானே சும்மாயிருக்கேன்...''

ஒருக்களித்துப் படுத்திருப்பாள். அவனும்தான். அவன் கை மேல் தலை வைத்திருப்பாள். அலைபாயும் மனசு. ஆறுதல் பெறாமல் அற்றலைகிற மனசு. அவனது கையில் வெதுவெதுப்பான நீரின் ஸ்பரிசம். அதில் முகம் காட்டுகிற அவளது மனக்கலக்கம்.

''ஏய்ய்... இந்தா, ஒனக்கென்ன கிறுக்கா? என்னத்துக்கு இப்ப அழணும்.''

''வம்சம் தழைக்கணும்னு நீங்க கவலைப்பட ஆரம்பிச்சுட்டா...? என் கதி...?''

''ஒன்னை ஒதுக்கி வைச்சிருவேனா? வேற கல்யாணம் பண்ணிக்கிடுவேனா? அம்புட்டு கல்நெஞ்சா... எனக்கு? ஈரமத்தவனா? ஈரமத்த வம்சம் இருந்தா என்ன, முடிஞ்சா என்ன?''

''இல்லைங்க.''

அவளைப் பேசவிடமாட்டான். உதடுகளை உதடுகளால் அடைத்துக் கொள்வான். அள்ளி நெருங்கிக் கொள்வான். பூவின் மிருது. சுடரின் ஒளி. கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீர்ச்சுவடுகளை நாவால் அழிப்பான். விம்மி

வெடிக்கும் விசும்பலை தன் திரேகக் கதகதப்புக்குள் அமுக்கி விடுவான்.

ஒவ்வொரு மாதவிலக்கின் போதும்... வீடேதுக்க மயமாகிவிடும். அழுகையும் புலம்பலுமாய்த் தவிப்பாள். வீடெங்கிலும் துக்கநிழல் துயரவாசம் நெஞ்சையடைக்கும். அறுத்துப்போட்ட கீரைத் தண்டாக வாடிக் கிடப்பாள். இவன் சொல்கிற ஆறுதல் வார்த்தைகளெல்லாம் முகமழிந்து காற்றில் பறந்து விடும்.

உறவுக்காரப் பெண்ணின் வீட்டில் ஒரு நல்ல காரியம், தம்பதி சகிதமாய்ப் போயிருந்தனர். சரசுவும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தாள். மறுநாள், பகல் பஸ்ஸில் திரும்புவதாகத் திட்டம்.

யோகுவுக்கு ஒன்று விட்ட தங்கையும் வந்திருந்தாள். தங்கையின் மகள் இரண்டு வயசிருக்கும். கறுத்த குழந்தைகள் தான். குழந்தை என்றாலே லட்சணம்தானே...

அந்தக் குழந்தைக்கு என்ன ஈர்ப்போ... யோகுவிடம் ஒட்டிக் கொண்டது. காலை முதல் அவன் மேல்தான் ஏறி விளையாடினாள். யோகுவும் அந்த மழலையிடம் ஒரே விளையாட்டுத்தான். கொஞ்சலும் கும்மாளமும்தான். குழந்தையுடன் விளையாட விளையாட... அவனும் ஒரு குழந்தையாகி... மனமே பூவாகி... ஒளியும் வாசமுமாகி அவன் முகம் பிரகாசமாகி...

சரசுவை சுத்தமாய் ஏறிட்டே பார்க்கவில்லை. ஆனால் சரசு அவனையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தாள். மனசுக்குள் பிரளயம். அச்ச நடுக்கம். தன் புருஷனே தன்னை விட்டு விலகுவதாய்... தூரம் நகர்வதாய்... அவளைத் தொலைத்து விட்டு, மறந்து போன துஷ்யந்தனாய்...

அவளுக்குள் ஏக இருட்டு. கரியரேகைப் பின்னல்கள். பின்னிப் பின்னி முறுக்கேறி, தாறுமாறாகிற நினைவுகள். வன்மமாய்... வக்ரமாய் நிறம் மாறுகிற உணர்வுகள்.

அவனுடன் பேசவில்லை. சரசு, விறைத்துப்போன முகமாய்த் திரும்பிக் கொண்டாள். யோகுவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னத்துக்குக் கோபம் இவளுக்கு?

யோகுவுக்குள் ஒரே திகைப்பு. பஸ்ஸில் வரும்போது, முழுக்க மௌனம். இறுக்கமான மௌனம். மனசு முழுக்க கனத்துப் போகிற மௌனம்.

வீடுவந்துவிட்ட பின்னாலும்... அதே கோபம், விறைப்பு, மௌன இறுக்கம்.

என்ன என்ன என்று கேட்டு மன்றாடினாள். காரணம் தேடி கெஞ்சிக் கூத்தாடினான். காலில் விழாத குறைதான்.

ம்ஹூம்... அவள் அசைவதாக இல்லை.

இவனும் அயர்ந்து போனான். சலித்துப் போய் முயற்சியைக் கை விட்டபோது, "எப்படியும் போ" என்று ஒதுங்கிய கணத்தில்-

வெடித்துச் சிதறி அழுதாள்... சரசு. அவலச் சோகமாய் கசிந்து, அவன் காலடியில் வழிந்தாள்.

6

அன்றைக்கு-

மேலக்காட்டில் ஆட்டுக்கிடை. செம்மறியாடுகள் உழுதுகிடக்கிற புஞ்சையில் வந்து அடையும். அதன் உடல் வெக்கையும், மூத்திரமும், புழுக்கையும் மண்ணை

வளப்படுத்தும். சாண உரம். மண்ணின் உயிரணுக்களைப் பெருக்கும்.

முன்னிரவுக் காவல் புஞ்சைக்காரன் பொறுப்பு. கிடைக்காவல் காரர் அந்திமயங்க வந்துவிட்டார். கம்பளி, சாக்கு, காப்பிச்சட்டி, கம்பு வகையறாக்களோடு.

“தம்பி... ஆடுகளைப் பார்த்துக்கோ. ஒரு மணிக்கொரு தடவை பேர்வையடி. பன்னெண்டு மணிக்கு மேல் என்னை உசுப்பி விட்டுட்டு, நீ வீட்டுக்குப் போ...”

“ஆட்டும்ண்ணாச்சி.”

“சுத்துலே வெள்ளாமைக் காடுக. கள்ள ஆடுக நைஸா நழுவிப் போய்விழும், கவனமாப் பாத்துக்க.”

“சரிண்ணாச்சி.”

அவர் விரித்துப் படுத்து விட்டார். உழவுக் கட்டிளைக் காலால் தள்ளி... தூசி மண்ணில் சாக்கை விரித்து, கம்பளியைத் தலைக்கு அண்டக் கொடுத்து சாய்த்து விட்டார்.

காடுகளில் அலைந்து மேய்ந்த செம்மறியாடுகள். ஓய்வும் உறக்கமும் அதுகளுக்கு வேண்டும். சில ஆடுகள் சுற்றி நடந்து உலவ, பல ஆடுகள் படுத்துவிட்டன.

ஆடிமாதக் காற்று. நெருஞ்சிப் பூக்களாய் ஆகாய நட்சத்திரங்கள். பனந்தோப்பில் மயில் சத்தம். கரிச்சான்களின் “கிரீச், கிரீச்” என்கிற வீறிடல். சுகமான இரவின் இதமான இருட்டு.

சில்வண்டுகளின் சத்தம். ‘ங்ங்ஙீய்ய்” என்கிற இரைச்சல். அவ்வப்போது ஆடுகளின் கத்தல். அதுகளுக்குள் ஏதோ பேசிக்கொள்கிற மாதிரியான மிதமான கத்தல்கள்.

யோகு ஆட்டுக் கம்போடு காலார பொழியில் நடந்தான். ஆடுகளைக் கவனித்துக் கொண்டான். எங்கோ... பஸ்ஸின் என்ஜின் இரைச்சல். லாரிகளின் ''லொட லொட'' சத்தம். ஆலைச் சங்கின் தொலை தூரக் கூவல்.

இவனுக்குள் சோம்பலான நினைவுகள். செத்தவர்களைப் பற்றிய ஞாபகங்கள். சிறு வயசில் கேட்ட பேய்க்கதைகள். உள்ளே வெகு ஆழத்தில் புதைந்து மறைந்து கிடந்த ஞாபகப் பிரதேசங்கள். உயிர் பெற்று மேலெழும்பி வருகிற ராட்சஸப் பயங்கரம்.

இவனுக்குள் இரவுப் பயம். உதறல் எடுக்கிற உள் மனசு. சமாளித்துப் பார்த்தான். நேரம் நகர்ந்தது.

பேர்வையடித்தான். படுத்துக்கிடக்கிற ஆடுகளை எழுப்பி விட்டு... மூத்ரம் பெய்ய அவகாசம் தந்து... அப்புறம் சற்றுத்தள்ளி அதுகளைப் பத்தி... மடக்கி... படுக்க வைப்பதுதான் பேர்வையடிப்பு. பெயர்வு அடிப்போ? இருக்கலாம்.

ஊருக்குப் பக்கத்தில்தான்... இவனது புஞ்சை, இங்கிருந்து பார்த்தால்... கைக்கெட்டும் தூரம்தான் வீடு. அவன் வீட்டைப் பார்த்தான். சின்ன ஜன்னலில் மின்வெளிச்சச் சதுரம்.

''இன்னும் சரசு படுக்கலையோ...''

தேய்பிறை நிலா. பத்து மணிக்கு மேலே மெல்ல வந்து முகம் காட்டுகிற குறை நிலா. நிலா வெளிச்சத்தில் துல்லியமாய்த் தெரிகிற ஊர். தன் வீட்டின், புகைக்கூண்டு மங்கலாகத் தெரிகிறது.

ஊர் அடங்கிவிட்டது. நாய்ச்சத்தம்கூட இல்லாத அசுர அமைதி. அச்சுறுத்தலான அமைதி.

ஊர் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல். குடுகுடுப்பைச் சத்தம் போன்ற ஒரு சத்தம்.

சாமக் கோடாங்கியோ...?

கம்பளத்தார் இப்படி சாமக்காட்டில் வருவார்கள். பூட்டிக் கிடக்கிற வீடுகளைப் பார்த்து குறிசொல்வதுபோல ராகப்பாட்டோடு சத்தம் கொடுப்பார்கள்.

கம்பளத்தார்களுக்கு அருள்நாக்கு. சொல்லும் குறி பலிக்கும் என்று கிராமத்து ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை. பகலில் வீடு வீடாக வருவார்கள். பெண்கள் தானியமோ, துட்டோ... படி தருவார்கள்.

அவர் சத்தத்தைக் கவனித்தான். கூர்ந்து கேட்டான். வார்த்தைகள் சிந்திச் சிதறினாலும்... சொச்சமிச்சமாகக் கேட்டது.

"மசங்க வேண்டாம், மருக வேண்டாம்.
மழலை வரும் தாயீ...
சாமியை நம்பணும், சந்தானம் வந்து சேரும்
சஞ்சலம் வேண்டாம் தாயீ...
காலம் சேர்ந்து வரும், நேரம் கூடி வரும்
கடவுளை வணங்கு தாயீ...
கலக்கம் வேண்டாம், கையெடுத்துக் கும்பிடு
ஜக்கம்மா சொல்றா... தாயீ..."

இந்தச் சத்தம்... தன் வீட்டுக்கு அருகில் கேட்பதுபோல ஓர் உணர்வு. மனசுக்குள் தத்தளிப்பு. சந்தோஷக் கொந்தளிப்பு.

யோகு நாத்திகனுமில்லை. ஆத்திகனுமில்லை. கடவுள் இருக்கு. இல்லை என்கிற தர்க்க நியாயம் எல்லாம் தெரியாது. அவனுக்கு.

காடே கதியென்று கிடக்கிற சம்சாரி. பத்துவரை படித்துவிட்டு மண்ணை நம்பிப் பாடுபடுகிறவன். வியர்வையையும் பூமியையும் நேசிக்கிறவன்.

சாமியே கதியென்றும் கிடக்கமாட்டான். இல்லவே இல்லை என்று கட்சி கட்டி சாதிக்கவும் மாட்டான். ஆனால்... இந்தக் குறியை நம்புவதற்கு ரொம்ப ஆசைப்பட்டான். இந்தக் குறி தன் வீட்டுக்கான அருள்வாக்காக இருக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டான்.

காவல்காரரிடம் கிடையை ஒப்படைத்துவிட்டு... ஆசையும், ஆவல் பரபரப்புமாய் வீடு வந்தான்.

சரசு விழித்திருந்தாள். இவனைக் கண்டதும் ஓடிவந்து சேர்ந்து கட்டிக் கொண்டாள். ஆவிசேரப் பின்னிக் கொண்டு... கோவென்று கதறியழுதாள். கேவிக் கேவியழுதாள்.

''நான் மலடியில்லை... மலடியில்லே... ஜக்கம்மா சொல்லிச்சு... நான் மலடியில்லே...'' என்று ஆவேச மகிழ்ச்சியில் அழுது கரைந்தாள். ஆனந்தக் கூத்தாடினாள். கையெடுத்து சாமி கும்பிடவே கூச்சப்பட்ட சரசு, அதற்குப் பிறகு தலைகீழாக மாறிப் போனாள். அனுதினமும் பூஜைதான். வீடு முழுக்க சாமி படங்கள். பெரிய பெரிய கண்ணாடி போட்ட படங்கள். எந்நேரமும் பத்திவாசம், சாம்பிராணிப் புகையின் நறுமணம். கற்பூரச் சுடர்கள்.

7

சங்கரன் கோவில் கமிஷன் கடை திண்ணையில் உட்கார்ந்திருந்தான் யோகு. இவனது புஞ்சைகளில் விளைந்திருந்த மிளகாய் வற்றல் விற்பனைக்கு வந்திருக்கிறது. டக்கரில் கொண்டு வந்து இறக்கினார்கள்.

கடைக்குள் வரிசைக் குவியல்களாக வற்றல் அம்பாரம், சிவப்புக் குன்றுகளாக, ரத்தமலைகள்.

குவியல்களுக்கிடையே தாட்டுக் கட்டுகள் எல்லைக் கோடுகளாக. இவனது அம்பாரத்தில் பார்த்தான்.

பெரிய குமி. குமியின் உச்சந்தலையில் ஒரு மூங்கில் குச்சியில் செருகிய துண்டுப் பேப்பர்.

யோகேந்திரன், மிளகாய் வற்றல், தாட்டு 6 சாக்கு 2 என்று எழுதப்பட்ட விவரம்.

இரண்டு மணிக்குத்தான் மார்க்கெட் வரும். விலை திகையும், எடை நடக்கும். வற்றல் பணமாகும்.

கமிஷன் கடைக்கு வெளிப்புறத் திண்ணை. பெரிய திண்ணை. சம்சாரிகள் வெள்ளையும் சொள்ளையுமாய்... எண்ணெய் வழியும் முகங்களோடு உட்கார்ந்திருந்தனர்.

நாளிதழ் கிடந்தது. முதல் பக்கத்தில் பிள்ளையாருக்கு பாலூட்டுகிற ஒரு கிராமத்துப் பெண்ணின் புகைப்படம். இன்றைய சூடான செய்தியே... பால் குடிக்கிற பிள்ளையார்தான்.

அற்புதம் குறித்த வியப்பும் மறுப்புமாக நடந்த தர்க்கம். அதில் ஒருத்தர் விபரமானவர்போலத் தோற்றமளித்தார். அவர் கையில் ஒரு நாளிதழ். பிரபலமில்லாத நாளிதழ். அதை விரித்துக் காட்டினார் அதிலும் ஒரு படம்.

அறிவியல் இயக்க விஞ்ஞானி வெங்கடேஸ்வரன் காந்தி சிலைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தார். "உலர்ந்த சிலை பாலை உறிஞ்சுவது தெய்வீக அற்புதமல்ல. இயல்பானதுதான்" என்று நிரூபித்துக் கொண்டிருக்கிற விஞ்ஞானி. அவரைப்பற்றியும், அதுபற்றிய செய்தியையும் பேசுகிற அந்த ஆள்.

அவர் பேசுவதையே உன்னிப்பாகக் கேட்டான், யோகு. சாமியை நம்புகிற மனித மனங்களைக் காயப்படுத்தி விடக்கூடாதே என்கிற நாகரீகக் கனிவோடு பேசுகிற அந்த ஆள். வாழ்க்கையைப் பேசுகிறார், நடப்புகளை இயல்பாகப் பேசுகிறார். இனிமையான பேச்சு. நல்ல மனசின் அன்பான பேச்சு.

யோகுவுக்கு அந்த ஆள்மீது நம்பிக்கை வந்தது. நம்பிக்கை வசப்பட்ட யோகுவுக்குள் வந்த சரசு. தீவிர பக்தையாக மாறிய பின்பு - இரண்டு வருஷம் கழித்து விட்ட பிறகும்- மாதா மாதம் விலக்காகிற சரசு.

பக்தி என்றால் சாதாரண பக்தியில்லை. வெறிபிடித்த பக்தி. சாமியை ஒரு வரிகூட கேலி செய்ய அனுமதிக்க மாட்டாள். சண்டைக்கு வருவாள். தலைவலி, காய்ச்சலுக்குக் கூட மருந்து சாப்பிட மாட்டாள். திருநீறும், தீர்த்தமும்தான் மருந்து.

போகாத கோயிலில்லை. செய்யாத பூஜையில்லை. பார்க்காத ஜோஸ்யரில்லை. சொல்லாத மந்திரமில்லை. யாரோ ஒரு வேற்றுப் பெண்ணின் மன நிலையைச் சொல்வது போல... யோகு அவரிடம் சொன்னான்.

"பேய்க்கும் பாரு, நோய்க்கும் பாருன்னுதான் பெரியாளுக சொல்றாக. அவுக சாமிகளையும் கும்புடட்டும், ஆஸ்பத்திரிலேயும் வைத்தியம் பார்க்கட்டும். எதனாலே

காரியம் ஆனாலும் சரி... குழந்தை பெறந்துட்டா... நல்லதுதானே?'' என்று தீர்வு சொன்னார் - அந்த சாமான்ய மனிதர். அசாதாரணமான தீர்வு. தீர்வுக்கான யுக்திகளையும் கூடச் சொன்னார். அவர் யுக்திப்படியே-

சரசுவை ஒரு சாமியாரிடம் அழைத்துப் போனான். சாமியார் சாந்த சொரூபி. காவியும் தாடியுமாக ஞானப் பழமாயிருந்தார். பக்திப்பூர்வமாக, பவ்யமாக வணங்கி நின்ற சரசுவைப் பரிவும் கனிவுமாக நோக்கினார்.

''புராணக்கதைகள்லே வர்ற மாதிரி பகவான் கிரீடமும் ஒளி வட்டமுமாய் இப்போ காட்சியளிக்கமாட்டாரு. இப்பவும் காட்சியளிக்காரு. ரூபவித்யாசங்களோட அவதாரம் எடுக்காரு.''

அவரது கனிந்த உதடுகளின் அலுங்காத அசைவுகள். கருணையே மனசாக - மனசே மொழியாக - மொழியே - ஓர் உணர்வாக அவளுள் ஒளிபரப்பியது. சரசு மெய்மறந்து, ஆத்ம சரணமாகிப் போயிருந்தாள்.

''உயிர்களைப் படைக்கிற பெற்றோர் கடவுளோட ரூபங்கள்தான். கல்விக் கண்ணைத் திறந்து ஞானவாசலை அகலத் திறந்துவிடுகிற ஆசான்கள், ஆசிரியர்கள் ஆண்டவனோட அவதாரம்தான். வந்த நோய்களுக்கு வைத்தியம் செய்து உயிரைக் காப்பாற்றுகிற டாக்டர்களும் தெய்வ ரூபங்கள்தாம். கடவுள் வெவ்வேறு அவதாரங்களில் வந்து நமக்குள் உலவி லீலைகள் செய்கிறார். நாம கண்டுக்கிடாம ஒதுங்கிட்டு கண்மூடித்தனமா இருந்தா... நட்டம் நமக்குத்தான், அந்த நாயகனுக்கில்லே. ஆண்டவன், ஆத்மாவுக்குத்தான் வைத்தியர். தேகத்துக்கில்லை. தேகத்துக்குத் தேவையான மாற்றத்தை நாமதான்

உருவாக்கிக்கணும். தேகத்துக்குமான வைத்தியரா ஆண்டவனை நினைக்கிறது பாவம். சாம்பாரைக் கொதிக்க வைக்கிறதுக்கு சந்தனக்கட்டையைப் பயன்படுத்தலாமா?''

சாமியார் வாக்குக்கு அப்பீல் உண்டா... சரசுவிடம்?

அதற்குப் பிறகுதான் சரசு மருத்துவமனைக்கு வரச் சம்மதித்தாள். பரிசோதனை நடந்தது. கருப்பைக்கான பாதையில் சதை வளர்ச்சி இருப்பதையும், ஆபரேஷன் இல்லாமலேயே ஊசி, மாத்திரை மூலமாகவே அந்தச் சதையைக் கரைத்துவிட முடியும் என்பதையும் டாக்டர் சொன்னார்.

வைத்தியம் தொடர்ந்தது. விரதம், பூஜையும் தொடர்ந்திருந்தன. மிகக் கூடுதலான நம்பிக்கை ஏற்பட சரசுவின் ஆசார அனுஷ்டம் மேலும் இறுகியது. அடர்ந்தது. வெறிமிக்க அடர்த்தி.

மாதவிலக்கு நின்றது. சோறு ஒவ்வவில்லை. அறுத்துப் போட்ட கொடியாகத் துவண்டாள். காறி காறித் துப்பினாள். ஓங்கரித்தாள். சரசுவின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

தவமணி வந்து பிறந்தான். தவமிருந்து பிறந்தவன் என்பதாலோ... என்னவோ, பூக்களின் அழகுகளையெல்லாம் அள்ளிக்கலந்த பேரழகில் ஜொலித்தான். ஆனால் -

அவன் பிறப்பதற்கு முன்பே... ஒரு புயலை உருவாக்கிவிட்டான்.

நிறைமாச கர்ப்பத்தில், தை மாச மிளகாய்ச் செடியாக காயும் பூவுமாகத் தளதளவென்றிருந்தாள், சரசு. முகத்தில் ஒரு அமானுஷ்ய பொலிவு. சுடரின் ஒளிர்வு. குளிர்வான ஒளிர்வு.

வயிறு, மிகவும் சின்ன வயிறாகத் தோன்றியது. நிறைமாசம்போலவே தெரியவில்லை. ஏதோ ஆறுமாசம் போலத் தோன்றியது.

"ஏன் இப்படி?"

குழந்தைத்தனமாக நச்சரிக்கிற யோகு. சாந்தமாக ஒரு புன்னகை, சரசு முகத்தில் பூக்கும்.

"எனக்கென்ன தெரியும்?" என்றாள். ஆனால் அவளுக்குத் தெரியும் என்பது புன்னகையின் நாணப் பூடகத்தில் புதைந்திருந்தது.

"சொல்லு..." அறிந்துகொள்ள ஆசைப்படுகிற ஒரு மழலை. மீசை முளைத்த மழலை.

"ஆம்பளப் புள்ளையாயிருந்தா... வவுறு சிறுசா இருக்குமாம். பெரியாளுக சொல்றாக."

"அடி சக்கை."

அவளைச் சுற்றிச்சுற்றிக் குதித்து வந்தான்.

"அய்ய்... அய்ய்யக்... அய்ய்... அய்ய்க்."

அவனது உல்லாசக் கூவல்களில் மனசின் விசிலடிப்பு. பூவெடித்து இதழ் விரித்தமாதிரி ஒளியும் வாசமுமாய் அவன் முகம்.

அவனது ஆனந்தக் கூத்தாட்டத்தில் நிறைந்து ததும்புகிற சரசு.

அவளுக்குள் மெல்லிய பயம். அடி மனசுக்குள் அவ்வப்போது எறும்புக்கடியாகத் தோன்றுகிற வலி... சில சமயம் தேள்கடியாக ரணமாகிற உணர்வு. காதில் விழுகிற

பிரசவச் செய்திகள் சிசேரியன்களாகவே நடந்து கொண்டிருக்கிற பெரும்பான்மையான பிரசவங்கள்.

இவளுக்குத் தலைப்பிரவசம், பிரவசம் குறித்த பய உணர்வு. ஆயுதக் கேஸாகிவிடுமோ... பெரிய உயிரைக் காப்பாற்றுகிற விளிம்பில், சின்ன உயிர் பறிபோய்விடுமோ...

ஐயய்யோ... அதுதானே அவளுக்கு உயிர். ஆத்மா. ஜீவாதாரம்.

ஒரு நேர்த்திக்கடன் போடணும். குலம் தழைக்க குலதெய்வத்திடம் வேண்டணும்னா... யோகுவிடம் கேட்கணும். நேர்த்திக் கடன் நிறைவேற்ற... அவனும் வரணுமே... அவன் இல்லாமல் எப்படி?

அவனிடம் எப்படிக் கேட்க? கேட்டால்... பயப்படுவானே... பதறித் துடிப்பானே... மெல்லத் தொடங்கணும். பேச்சைத் தொடங்க, இதுதான் தருணம். கனிந்த தருணம்.

"ஏங்க?"

"ம்."

"நல்லபடியாக பெத்தெடுத்து, நானும் புள்ளையுமா வீடு வந்து சேரணுமில்லையா?"

ச்சட்டென்று வாடிய அவனது முகம், தீக்குள் விழுந்த மொட்டாக மகிழ்ச்சி போன இடம் மாயமாயிற்று. வேதனைத் துடிப்பில் துடிக்கிற கண்ணிமைகள், வெட்டுப்பட்ட பல்லி வாலாக.

"ஏன் இப்படிக் கேக்கே?"

"பதறாதீங்க. நெருப்புன்னா வாய் வெந்தா போகும்?"

"அப்படியில்லை... இருந்தாலும்..."

"இருங்க. நம்ம குலதெய்வத்துக்கு ஒரு நேர்த்திக்கடன் போடலாம்னு... ஒரு நெனைப்பு."

"என்னன்னு... நேந்துக்கிடப்போறே?"

"நல்லபடியாக பிரசவம் முடிஞ்சு... தாயும்புள்ளயும் ஆயுசு பலத்தோட வீடு வந்துட்டா..."

"ம்?"

"புள்ளையோட முதல் பிறந்தநாள் அன்னைக்கு குலதெய்வம் சந்நிதிக்கு வந்திருந்து... மொட்டை போடுதோம்னு."

"நேர்த்திக்கடன் போடணுமா?"

"போட்டா... நல்லது?"

"பாரத்தை சாமிகிட்டே ஒப்படைச்சிட்டு... பயமில்லாம இருக்கலாம். பயம் இல்லாட்டா... மனசுலே ஒரு தெம்பு வரும். நம்பிக்கை வரும். நம்பிக்கையோட பலத்துலே... மலைகூட பனியாப் போயிரும்."

யோகுவுக்கு இது சரியாகத் தெரிந்தது. மனவியல் நுட்பத்தின்படி இது நல்லதுதான் என்று தோன்றியது. சரியென்றான்.

"ஒனக்கு எது சரின்னுபடுதோ... அப்படியே செய்..."

"இன்னைக்கு வெள்ளிக்கெழமைதானே?"

"ம்."

"அப்ப... இப்பவே செய்ஞ்சிருவம்..."

ஒரு வெள்ளைத் துணியை எடுத்தாள். முனை முறியாத மஞ்சள் வைத்து முடிச்சுப் போட்டாள். மூன்று முடிச்சு, உள்ளங்கையில் வைத்துக் கொண்டு சாமி படத்தின் முன் போய் நின்றாள்.

சுவரில்...

முன்பெல்லாம் இவர்களது கல்யாணப் போட்டோ ஒன்று மட்டும்தான் இருக்கும். இப்போது சுவர் முழுக்க போட்டோக்கள் தெய்வப்படங்கள். எல்லாத் தெய்வங்களின் படங்கள்.

குலதெய்வம் முன்பு நின்றாள்.

கையெடுத்து வணங்கினாள். கையில் மனசின் நடுக்க அதிர்வு, கண்களை இறுக மூடினாள். இமை ரோமங்களில் ஈரக்கனம்.

இவன் மனைவியின் முகத்தில் பரவும் உணர்வுகளையே கவனித்தான். சரணடையும் ஆத்மாவே முகத்தில் வந்து நின்ற மாதிரி ஒரு நடுக்கம். உணர்வுக்கிரம். அசையும் சிறு உதடுகள்.

அந்த நேர்த்திக்கடனே... அவர்கள் வாழ்வில் ஒரு பெரும்புயலாக வீசி... சர்வநாசம் செய்யும் என்று நினைக்கவேயில்லை... யோகு.

9

சாமக்காட்டில் யோகுவுக்கு முழிப்புத் தட்டியது. வீட்டுக்குள் தவமணியின் உறக்கச்சடவான சிணுங்கல். தொட்டிலை நனைத்து விட்டானோ... அந்த ஈரச் சிலிர்ப்பில் அழுகிறானோ... உயிரில் கலந்துவிட்ட உயிரின் சிறு சலனம். இவளை உசுப்பி விட்டுவிட்டது.

சரசு எழுகிற சத்தம். மகனைத் தூக்கிக் கொண்டு "ரோ... ரோ.... ரோ... என்னடா கண்ணு... ஒன்னுக்கிருந்திட்டீயா...? வாடா ராசா... வா" என்று கொஞ்சலாய் ராகமிடுகிற சத்தம்.

ஆசுவாசப்பட்டான் யோகு. மார்கழிப் பனி விஷமாய்த் தாக்குகிற பனியின் உக்கிரம். வெறும் துண்டை விரித்துப் படுத்த ஞாபகம், சரசுவின்மீது கொண்ட கோபத்தில்.

"இந்தப் பனியிலா... ஒறங்கிட்டோம்" என்று யோசித்த போதுதான் கவனித்தான். தலையணை வைக்கப்பட்டிருந்தது, தலைக்கு. கனத்த கம்பளி தன் மேல் மூடப்பட்டிருந்தது.

சரசுவை நினைத்துச் சிரித்துக் கொண்டான். பக்திப் பிடிவாதத்தில் கோபமாய்ச் சீறிய சரசு, தொட்டு உரசியவுடன் முத்துமுத்தாய்க் கண்ணீர் வடித்த சரசு, கண்ணீரிலேயே கோபத்தையும், வேதனையையும் உஷ்ணமாய் உணர்த்திய சரசு.

இவனும் கோபித்துக் கொண்டு வெளியே வந்து கொட்டும் பனியில் வெற்றுடம்போடு படுத்தவுடன்-

உள்ளிருந்து வெடித்த விசும்பல் சத்தம்.

அதெல்லாம்... கோபத் தளதளப்பிற்கு அடியில், ஈரமனசின் நீரோட்டம் ஓடுவதற்கான அறிகுறி, அதுதான் சரசு.

அதனால்தான்... உறக்கம் கலையாமல் தலையணையைத் தலைக்கடியில் சொருகியிருக்கிறாள். கம்பளியை மூடியிருக்கிறாள்.

கம்பளியே பனியில் 'தொப், தொப்' பென்று நனைந்து விட்டது. ஈரச்சிலிர்ப்பு. தலையணையும் தண்ணீர் தெளித்த மாதிரி சொத சொதப்பாகிவிட்டது.

இனியும்... பனியில் படுத்திருக்க முடியுமா? கஷ்டம்தான். உள்ளே போகக் கதவைத் தட்டினால்... சரசு சந்தேகப்படுவாள். தான் உன்மத்தம் கொண்டு மூர்க்கமாய் பிரவேசிப்பதாகப் பதறுவாள் பாவம்... சரசு.

இவனுள் ஓடுகிற நீரோட்ட மனசின் ஈரம். ஆத்மதோழியின் மன அவஸ்தையை உணர்ந்து இவன் தவித்தான். ஆனாலும்...

பனியில் படுத்திருக்க முடியுமா? நாய்கூட படுக்க முடியாத பனி, உடம்பின் புல்லரிப்பை அலை அலையாக எழுப்புகிற பனி.

கதவு திறக்கப்படுகிற சத்தம்.

"ஏங்க."

தொட்டு உசுப்பினாள்.

"ம்."

"முழிச்சுத்தான் இருக்கீங்களா?"

"பய அழுதானா? அந்தச் சத்தத்துலே முழிச்சிட்டேன்."

"அப்ப... கட்டைதான் வெளியே படுத்திருக்கு. உசுர் பூராவும் தவமணி மேலதான். ம்?"

"ஆமா. அதுலே என்ன தவறு? சரி... இப்ப எதுக்கு நீ வெளியே வந்தே?"

"நீங்க பனியிலே கெடந்தா... எப்படி? எம் மனசு இரும்புலே அடிச்ச அரிவாளா? ஈரமில்லாம கிடக்க முடியுமா?"

"சரி... சரி... இரும்பு மனசுக்காரின்னு யாரு சொன்னது? இரும்பு பக்திக்காரின்னுதான் சொன்னேன்."

"எனக்காகவா வெரதம் இருக்கேன்? நம்ம புள்ளைக்காகத் தானே...?"

"ரைட், ரைட் பொலம்பாதே. இப்ப என்ன... வம்பு தும்பு பண்ணாம நான் உள்ளே வந்து படுக்கணும். அம்புட்டுதானே?"

"ஆமா, ராசா...!"

"உத்தரவு ராணி."

சமனப்பட்ட சந்தோஷ மனசின் பூக்களின் வெடிப்பாக அவளது சிரிப்பு. கலகலக்கிற சரசுவின் மனசு குழந்தையின் குதூகலத்தோடு இவனை ஒட்டி உரசிக் கொண்டு நடக்கிற சரசு. அவள் தேகக் கதகதப்பான ஸ்பரிசத்தில் உன்மத்தம் கொள்கிற மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

கதவைப் பூட்டினாள். விடிவிளக்கின் மங்கலான பச்சை நிற வெளிச்சம். தொட்டிலில் பார்த்தாள். உறங்காத உணர்வுகளுடன் உறங்குகிற தவமணி. இன்னும் சப்பிக்கொண்டிருக்கிற சின்ன உதடுகளின் மெல்லிய சலனம். உதட்டின் ஓரத்தில் அமிர்தப் பாலின் துளிச்சுவடு.

மேல்துண்டால் அதைத் துடைத்து விட்டான். தொட்டிலுக்குப் பக்கத்தில் விரித்துக் கிடந்த பாயில் படுக்கப் போனான் யோகு.

"கட்டில்லே படுங்க."

"ஏன்?"

"சிமிண்டுத்தரை ஜில்லுன்னு, குளிருது."

"நீ மட்டும்...?"

"புள்ள முழிச்சா... நானும் முழிக்கணுமே. அதுக்குத்தான் நான் கீழே படுத்திருக்கேன்..."

இரும்புக்கட்டிலில் துணிவிரிப்பு. தலையணை. நீட்டி நிமிர்ந்து படுத்தான். பனியில் நனைந்து கிடந்ததற்கு மாறாக... துணி விரிப்பின் கதகதப்பு. வித்தியாசத்தை உணர்ந்த மனசின் சுக லயிப்பு.

பக்கத்தில் வந்து உட்கார்ந்த சரசு, அவனது வயிற்றில் உள்ளங்கையை வைத்து... ரோமங்களுக்குள் விளையாடுகிற சரசு. நெஞ்சோடு ரோமங்களுக்குள் அவளது கை. அதன்மீது நாடியைப் பதித்து... இவன் முகத்துக்குப் பக்கமாக அவள் முகம். கண்ணுக்குள் கண்ணாகப் பார்க்கிற பார்வையின் கனிவு, குழைவு.

ஏதோ கெஞ்சிக் கேட்க முயல்கிற அவளின் யத்தனிப்பு. சரசு சாகசம்.

"என்னம்மா?" மனசின் குழைவோடு கேட்கிற யோகு.

"ஒண்ணுமில்லே."

"மனசுல இருக்குறதைக் கேளுடா... கண்ணு"

'மனசுல இருக்குதுன்னு ஒங்களுக்கு எப்படித் தெரியும்... ராசா?"

"கண்ணுல்லே வந்துதான்... மனசே நிக்குதே... சொல்லுடா... கண்ணு, என்ன?"

"ஒண்ணுமில்லே... மார்கழி பொறந்து தேதி பத்தாச்சு."

"ம் அதுக்கென்ன?"

"நாம போட்ட நேத்திக்கடன் இருக்கே. அவனோட மொதப் பொறந்தநாளுக்கு குல தெய்வத்தோடு சந்நிதிக்குப் போய் மொட்டை போடணும்லே?"

"ஆனா...?"

"என்ன ஆனா?"

"கடுமையான பனியாருக்கே. இந்தப் பனிகாலத்துலே கோயிலுக்குப் போனா... ஒடம்புக்கு ஒத்துக்குமா? தை பொறக்கட்டும், போகலாம்."

"இல்லைங்க, தெய்வகாரியம் பிசகு இருக்கக் கூடாது. சொன்னா சொன்னபடி நடக்கணும். தெய்வ குத்தம் ஆயிட்டா... அதுவே புள்ளைக்கு ஏதாச்சும் ஆயிருமே."

"சும்மாயிரு. நீ நம்புற குல தெய்வம் உன்னைப் புரிஞ்சுக்கிடும். பத்து இருவது நாள் பிந்தினதுக்காக... அதைக் குத்தமா எடுத்துக்காது. பனியிலே போய் பாழாகக் கூடாதும்மா, நாமளும் கொஞ்சமாச்சும் அறிவோட நடந்துக்க வேண்டாமா?"

"பனியோ... மழையோ... நாம சொன்னபடி நாம நடந்துக்கிடுவோம். பனி மழையிலிருந்து நம்ம குல தெய்வம் நம்மளைக் காப்பாத்திடும்."

"எப்படி?"

"எப்படியோ... காப்பத்தும். நம்புனா... நல்லதாகவே இருக்கும்."

"நம்புறதுக்கும் ஓர் அளவு வேண்டாமா? அளவுக்கு மிஞ்சிட்டா... அமிர்தமும் நஞ்சாயிரும். பக்தியோடயும் இருக்கணும், புத்தியோடயும் இருக்கணும் சரசு."

''புத்தி எதுக்குங்க? நம்மாலே. நம்ம புத்தியாலே என்ன நடந்துரும்? எல்லாம் குலதெய்வத்தோட மகிமை. நம்ம குலக்கொழுந்தைத் தந்ததும் சாமிதான். காப்பாத்தப் போறதும் சாமிதான்.''

இப்படித்தான் தொடங்கியது... அந்தப் புயல். பத்து நாளாக அடைமழையாய் நச்சரித்த தர்க்கம், விவாதம், அழுகை. அடம்பிடித்த விசும்பல், விசும்பல்கள்.

''முழுத்த ஆம்பளைக்கே இந்தப் பனியைத் தாங்க முடியலே... பூ மழலை எப்படித் தாங்கும்?'' என்று யோகுவின் பயம்.

பயத்திற்கே இடமில்லாமல் பக்தி வசப்பட்ட முரட்டு நம்பிக்கையில் சரசுவின் அடம், பிடிவாதம்.

பத்து நாள்களாக - வீடு வீடாக இல்லை. சண்டையும் சச்சரவுமாய் நரகமாகிவிட்டது. தாங்க முடியவில்லை யோகுவால். வேறு வழியும் தெரியவில்லை. எப்படியும் நடந்து தொலைக்கட்டும் என்ற வெறுப்பில் சம்மதித்துத் தொலைத்தான்.

இருபதாம் தேதி இரவு. வேன் வந்து சேர்ந்தது. யாருக்கும் எந்தத் தகவலும் சொல்லவில்லை. சாமான் செட்டுகளோடு அந்தச் சின்னக் குடும்பம். பனியின் உக்கிரத் தாக்குதலில் நடுங்கியவாறு... நேர்த்திக் கடன் செலுத்தப் புறப்பட்டது.

ஆயிற்று. எல்லாமே சுலபமாய் முடிந்துவிட்டது. யோகுவுக்கே ஆச்சரியமாக இருந்தது. ரொம்ப நிம்மதியாகவும் இருந்தது.

மொட்டை எடுப்பதற்குள் தவமணி எப்படியெல்லாம் அடம் பிடிப்பானோ... திமிறி, அழுது, ஆர்ப்பாட்டம் செய்வானோ என்றெல்லாம் பயந்து கிடந்தான், யோகு.

ஆனால்... ரொம்பச் சாந்தம். தவமணி அமைதியின் சொரூபமாய், கத்தியோடு நெருங்கி வந்த நாவிதர் முகம் பார்த்துக் கைதட்டிச் சிரித்தான்.

தலைமுடியைக் கோதி தண்ணீர் தெளித்தபோதுகூட... பனியின் குளிரினால் அவனது உடல் சிலிர்த்ததே தவிர... அவன் பயந்து அலறவில்லை. மாறாக... கை தட்டிக் குதூகலித்தான்.

வெயில் முகமே தெரியவில்லை. மார்கழிப் பனியின் உக்கிரம், ஏற்கெனவே... சிலிர்ப்பான குளிர்பூமி. குளத்து நீரின் குளுமை. பனிக் காலத்தில் ரொம்ப பொங்கல் வைத்து முடித்துவிட்டு... இவர்கள் குளித்தபோது, . தாள முடியவில்லை. பல்லோடு பல்லாக மோதிக் கிடுகிடுத்தது. நடுங்கிக் கொண்டு வந்தது. சாமிவந்த மாதிரி உடம்பு தானாக ஆடியது.

மொட்டையடிப்பு முடிந்தது. சரசுவும் யோகுவும் தவமணியைச் சுனைக்கு அழைத்துப் போய்க் குளிப்பாட்டினர். புதுச்சட்டை போட்டனர். மொட்டைத் தலை தங்க நிற உருண்டையாகப் பளபளத்தது. சந்தனக் கரைசலைத் தலையில் பூசினர். சந்தனம் பூசியபோது தலையில் ஒரு கூச்சம் வந்ததோ... என்னவோ... அந்நேரம் தான் மெல்லச் சிணுங்கினான்.

அப்படியே... வேனுக்குள் உறங்கிவிட்டான்.

யோகுவும், சரசுவும் மறுபடியும் குளித்து சாமி கும்பிட்டுவிட்டு... பொங்கல் சோறு சாப்பிட்டுவிட்டு...

எல்லாம் ஆயிற்று.

சாயங்காலம்... வேன் திருச்செந்தூர் வந்தது. டிரைவரிடம் பிள்ளையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு...

இருவரும் நாழிக் கிணற்றில் குளித்து விட்டு... முருகனைத் தரிசனம் செய்துவிட்டு... வேனுக்குத் திரும்பினர்.

வேனுக்குள்...

தவமணி இரண்டு காலையும் அகலமாக விரித்து உறங்கிக் கொண்டு இருந்தான். லேசாக மூச்சுத்திணறல். சுவாசிக்க முடியாமல் சற்றே திணறல். நெஞ்சு திக்திக்திக்... கென்று விம்மி விம்மித் துடித்தது. தொண்டைக்குள் என்றைக்கு மில்லாத ஒரு விநோத சத்தம் "கொரட்... கொரட்" டென்று.

யோகுவுக்கு வித்தியாசம் துல்லியமாகத் தெரிந்தது. சட்டென்று நெஞ்சுக்குள் நெருடிய பயத்தில் அதிர்வு, ஆத்மாவின் ஆணிவேர் வரை பரவியது.

"என்னங்க... என்னங்க..." பதறித் தவித்த சரசு. அழுகையும் புலம்பலுமாய் அவளது அதிர்ச்சி.

"என்னன்னு தெரியலை... மூச்சுத் திணறல்தான்..."

"ஏங்க?"

"சளியாயிருக்கும் போலிருக்கு."

"நேத்து ராத்திரி வரைக்கும் தடுமன் எதுவும் பிடிக்கலையே..."

"வேத்துச் சூழல்... அதிகமான பனி... மொட்டையெடுப்பு... பச்சைத் தண்ணிக் குளிப்பு... பாவம்... சின்னப்புள்ள எப்படித் தாங்குவான்?"

சரசு, வேனுக்குள் ஏறினாள். பிள்ளையை வெறி கொண்டவளைப்போலத் தூக்கினாள்.

கடுமையான தலைவலி போலும்... கண்ணை அரைக் கண்ணாகத் திறந்துவிட்டு மூடிக் கொண்ட தவமணி.

தொட்டுப் பார்த்தாள். காய்ச்சல் எள்ளாய்ப் பொரிந்தது. ''ஐயய்யோ... இப்ப நான் என்ன செய்ய? என்னதான் செய்யப் போறனோ...? அடக் கடவுளே.''

''வீணா... அழுது பொலம்பாதே... சரசு. இப்போதைக்கு ஒரு டாக்டர்கிட்டே பார்ப்போம், அப்புறமா... ஊருக்குப் போவம்.''

டிரைவரும் வெலவெலத்துப் போயிருந்தான். பூமழலையான ஓர் அரும்புக்கு நோய் என்றால்... எல்லார் மனசுக்குள்ளும் ஒரு பதற்றம் தொற்றிக் கொள்கிறது. வண்டியை அவசர அவசரமாக ஸ்டார்ட் செய்தான். அவனே வண்டியை நிறுத்தி எதிரில் பட்ட ஆட்களிடம் விசாரித்தான்.

''குழந்தை ஸ்பெஷலிஸ்ட் இந்தப் பக்கம் யாரு? எங்க கிளினிக்?''

ஒரு ஆஸ்பத்திரி முன் வண்டி நின்றது. மாலை நேரம். வரிசையில் நிறைய ஆட்கள். ஆனால் டிரைவர் இவனையும் சரசுவையும் அழைத்துக் கொண்டு பரபரப்பாக டாக்டரின் தள்ளு கதவைத் தள்ளினான். அவனது பரபரப்பின் வேகம், சகலரையும் அப்பிக் கொள்ள... யாரும் எதுவுமே ஆட்சேபிக்கவில்லை. முணுமுணுக்கவில்லை. மாறாக... எல்லாருமே பதற்றத்துடன் என்ன, என்ன என்று விசாரித்தனர். ஈரமனசுகளின் துடிப்புகள்.

கிளீனர்தான் எல்லாருக்கும் பதில் சொன்னான்.

டாக்டர் இளமையானவர். நாற்பதுக்கும் கீழே வயது. ஆனால் கிழவரின் நிதானம். பதற்றமில்லாத அமைதி. ஞானத் தெளிவு தந்த அமைதி.

மடியில் போட்டுக் கொண்டு யோகு பதற்றப் பரபரப்பில் பேசினான். பேச்சைக் கேட்காமலேயே அல்லது கேட்கும் பாவனையிலேயே... ஸ்டெதஸ்கோப்பால் குழந்தையைப் பரிசோதித்தார்.

குழந்தையின் முதுகு... நெஞ்சு... சோதித்தார். கண்ணிமைகளை விலக்கி, உதடுகளை விலக்கிப் பார்த்தார்.

''என்ன சார்... செய்யுது?''

''பொறுங்க... இன்ஜெக்ஷன் போடுறேன்.''

அதற்குள் தவமணிக்குள் சில நுட்பமாற்றங்கள் ஜன்னி மாதிரி வெட்டி வெட்டி இழுக்கிற கோரம்.

சரசு இந்தக் கொடுமையைக் காணச் சகியாதவளாக... குற்ற உணர்வின் முள்குத்தலைத் தாங்க இயலாதவளாக... வெளியே வந்து விட்டாள். வேனுக்குள் ஏறி உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள். கண்ணை மூடிக்கொண்டாள்.

''பாதகத்தி நான், எம்புள்ளைக்கு நானே எமகாதகியா கிட்டேனே... பனியிலே போட்டுப் பாழாக்கிட்டேனே... 'மலடியில்லை, நீ மாதா'ன்னு சொல்லிக் கண்ணீர் துடைக்க வந்த மழலையை மண்ணாக்கிட்டேனே. அரும்பை எடுத்து அக்கினியிலே வீசிட்டேனே... ஐயய்யோ... ஐயய்யோ...''

யந்திரகதியிலான புலம்பல். மனச் சிதைவுகளாகிப் போன ஒரு கிறுக்கியின் உளறலைப்போல... உணர்வற்ற புலம்பல். உலர்ந்த உதடுகளின் மெல்லிய துடிப்பு.

ஆனால் அழவில்லை. கதறவில்லை. உறைந்து போன சோகத்தின் வடிவமாற்றாக... அவள். புற உலகின் சலனங்களிலிருந்து முற்றாக அறுபட்டு... உள் உலக உணர்வுகளில் உறைந்து மூழ்கிப் போனவளாக... சரசு.

டாக்டர் இன்ஜெக்ஷன் போட்டார். அப்புறம் ஓர் இன்ஜெக்ஷன்.

“பனியும் குளிரும் தாங்கலை. சின்னக் குழந்தை. டிப்தீரியான்னு நோய் அட்டாக் பண்ணியிருச்சு. ரொம்ப காம்ப்ளிக்கேட்டா இருக்கு. வேன் இருக்கில்லே? நீங்க பாளையங்கோட்டை பெரியாஸ்பத்திரிக்குப் போனா... நல்லது.”

“போறவரைக்கும் தாங்குமா... சார்? நீங்களே முயற்சி பண்ணுங்களேன்.”

“என்னய்யா ஆளுக நீங்க? பச்சைப் புள்ளைக்கு இந்தப் பனிக்காலத்துலேயா மொட்டை போடுவாக?”

டாக்டரின் மெல்லிய சிடுசிடுப்பு. யோகுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

தவமணி... நெஞ்சிலும் முதுகிலும் விளையாடிய பிஞ்சு. ஆறு வருஷ தவத்திற்குப் பிறகு பிறந்த பூ. தனது அழகால் தெருவையே கவர்ந்திருந்த தங்கக் கனி. ஆசை ஆசையாகச் சகலரையும் தூக்கிக் கொஞ்ச வைத்த பூ மாலை.

பூவுக்கு ஒரு நாள் ஆயுள். இந்த மழலைக்கு ஒரு வருஷம்தானா? பிறந்த நாளிலேயே அவனது ஆயுளும் முடிந்துவிடுமா?

யோகுவுக்கு யோசிக்கவே முடியவில்லை. கேவிக் கேவி அழுதான். டாக்டர் எவ்வளவோ ஆனமட்டும் முயன்றார். எல்லாவிதமான சிகிச்சைகளையும் அவசர அவசரமாகச் செய்தார்.

இரவு எட்டு மணி இருக்கும்.

யோகு "ஐயய்யோ, எம் மகனே" என்ற கதறலில், அந்த மருத்துவமனையே நடுநடுங்கியது.

வேனுக்குள்ளும், வந்து கேட்ட அந்தக் கதறல். வேனும் ஒரு நடுக்கம் நடுங்கி அதிர்ந்து அடங்கியது.

யோகு வெறி பிடித்தவனைப்போல புறப்பட்டான்.

"எங்கே அவள்? எம்புள்ளையை எமனைப்போல வந்து கொன்ன அந்தச் சண்டாளி எங்கே? அவளையும் கொல்லணும்."

ஆவேசமாய்ப் புறப்பட்டவனை டாக்டர் பிடித்து நிறுத்தினார். சற்றுக் கோபமாகவே அதட்டினார்.

"என்ன செய்யப் போறீக? ஊம்? நடந்தது நடந்து போச்சு. இனிமே நீங்க மனைவியை நல்லபடியாப் பாத்துக்கணும்."

"என்ன சொல்றீங்க?"

"இந்தக் கொழந்தைக்கு இப்படியானதுனாலே ரொம்ப பாதிக்கப்படப் போறது உங்க மனைவிதான். அவங்களுக்கு எதுவும் ஆயிராம ஜாக்கிரதையா பாத்துக்கணும். அவங்க நல்லபடியா இருந்தா... இன்னும் ரெண்டுபுள்ள கூடப் பெத்துக்கலாம்."

அவனது ஆவேசம் அடங்கியது. அடங்கிய ஆவேசம் அழுகையாக வெளிப்பட.... நெஞ்சு முட்டியது.

டிரைவர் நல்ல மனிதர். அதற்குள் ஊருக்குப் போன் செய்து தகவலைச் சொன்னார். வேனுக்குள் வந்து பார்த்தால், உயிருள்ள பிரேதமாக சரசு.

11

சுற்றிலும் இருட்டு, வாழ்க்கையைப்போல கனத்த இருட்டு, கொலைகாரப் பனி வேறு. வேன் இருட்டைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது.

நடுச்சீட்டில்... உயிருள்ள பிரேதமாகக் கிடக்கிற சரசு. குளித்துக் காய்ந்த கூந்தல் காற்றின் சீற்றத்தில் அற்றலைய... கண்ணை மூடிச் சாய்ந்து கிடக்கிறாள். உதடுகள் மட்டுமே உயிராகத் துடிக்கின்றன. ''நான் கொன்னுட்டேன்... நான் கொன்னுட்டேனே'' என்கிற ஒரே முனகல். ஒற்றைவரி முனகல் முடிவில்லாமல் தொடர...

நடுவில்–

புதுச்சட்டையோடு உதிர்ந்துலர்ந்த ஒரு வருடப் பூவாக... அது. அதுவாகிப் போன தவமணி.

இந்தப் பக்கம் யோகு. அவனுக்குள் குத்திப் பிடுங்குகிற சோகம். அடிவயிறே சூன்யமாகிப் போனமாதிரி ஓர் பகீர். நெஞ்சுக்குள் ''கபகப''வென எரிகிறது. மனசின் ஆழத்திலிருந்து திரண்டு வருகிற துயரக்கற்றையை... அவ்வப்போது அழுது அழுது அரற்றுகிற யோகு.

சரசு அழவுமில்லை.... ஆழ்ந்து உறைந்த சவமாக...

யோகுவுக்குப் பயமாக இருந்தது.

சரசு ஏன் அழலை? ஏன் அழ மாட்டேங்குறா? நெஞ்சுக்குள்ளே விழுந்த தீயிலே உள்ளேயே கருகிப் போறாளா? நெஞ்சடைச்சு இவளும் செத்துப் போவாளா? ஐய்யய்யோ...

சரசுவை எப்படியாவது அழவைத்துவிட வேண்டும். அழுது விட்டால் நெஞ்சுப்பாரம் குறையும். உயிர் வாழ்ந்து விடுவாள். இன்னோர் உயிரைக்கூட அவளால் படைத்துவிட முடியும்.

"சரசு... ஏய் சரசு... இங்க பாரு... நம்ம புள்ளையைப் பாரு. செத்துக் கெடக்குற புள்ளையைப் பாரு. ஊரு பூரா நம்ம புள்ளையை தூக்கிட்டுப் போய்க் கொஞ்சுவாகளே... தெருத்தெருவா தேடித்தேடிப் போய் புள்ளையை வாங்கிட்டு வருவேனே... இப்பப் பாரு எமன் தூக்கிட்டுப் போயிட்டானே... இனிமே எத்தனை தெரு சுத்தினாலும் எம் புள்ளையை எப்படி வாங்க? ஐயய்யோ..."

இவளை அழவைப்பதற்காக இவன் புலம்புகிற புலம்பலில், இவன்தான் கதறியழுதான். அவள் அசையவேயில்லை. உயிரே உறைந்து இறுகிப் போனவளாக, ஐம்புலனும் அறுந்து போன அசைவற்ற பிணமாக-வேனின் குலுங்கலுக்கேற்ப ஆடுகிறவளாக...

"நான் கொன்னுட்டேனே... நான் கொன்னுட்டேனே" என்ற ஒற்றை வரிப்புலம்பலின் உணர்வற்ற முனகலாக...

இவனுக்கு பயம் கூடிற்று. உள்ளுக்குள் பகீர் பகீரென்று வருகிற பயங்கரக் கற்பனை. அவளும் நெஞ்சடைத்துப் போய் விட்டாளா? மகனோடு சேர்ந்து மாதாவும் பயணமா? நாம் மட்டும் ஒற்றை மரமா.... பட்டமரமாகத் தனித்து நிற்கப் போகிறேனா...?

சரசுவின் ஒற்றை வரிப்புலம்பலின் உணர்வற்ற உலர்ந்த தன்மை, உடைந்த ரிக்கார்டின் ஈனமுனகலாய் அது.

அவனுக்குள் வேறொரு பயம்.

சரசு நிதானமிழந்து விட்டாளோ... சித்தப்பிரமை பிடித்து விட்டதோ... மூளை குழம்பிக் கலங்கிவிட்டதோ... அதிர்ச்சியைத் தாள முடியாத தாயுள்ளத்தின் மெல்லிய ஜவ்வு கிழிந்துவிட்டதோ...

ஐயய்யோ... அப்படீன்னா... சரசுவுக்கு கிறுக்கு பிடிச்சிருச்சா? பைத்தியமாகிவிட்டாளா?

அவனுக்குள் நிறைய பிசாசுகள். அச்சப் பிசாசுகள். அவனது உள் நரம்புகளைப்பற்றித் தொங்குகிற ஆர்ப்பாட்டப் பிசாசுகள். அவனை அவனுக்குள் அலைக்கழிக்கிற மூர்க்கப் பிசாசுகள்.

தவமணியையும் சரசுவையும் மாறி மாறிப் பார்த்தான் யோகு. அவனுக்குள் பொங்கியெழும் அழுகை.

ஊரே திரண்டு நின்றது, யோகுவின் வீட்டுக்கு முன்னால், தவமணியைத் தூக்கிக் கொஞ்சிய ஊர், தங்கக் குழைவான அவன் உடலின் பூவிதழ் ஸ்பரிசத்தில் பரவசப்பட்ட ஊர். குழிவிழுந்த அந்தச் சிறுகன்னங்களில் முத்தமிடப் போட்டி போட்ட ஊர். அவனது சிரிப்புச் சங்கீதத்தில் மனசை இழந்து மயங்கிய ஊர்.

"தவமணி செத்துப் போனான்" என்ற தீயில் விழுந்து துடிக்கிற ஊர். வந்து நின்ற வேனைச் சுற்றி மொய்த்த அவலக் கதறல்கள். ஜனங்களின் ஒப்பாரிக் கூவல்கள். விசும்பி விசும்பி கண்ணைக் கசக்குகிற பாவாடைச் சிறுமிகள்...

யோகு குழப்பமாய் உணர்ந்தான். வந்து மொய்க்கிற ஒப்பாரியின் முற்றுகை, எப்படி வெளியேற? ஐய்யோ, ஐய்யோ... என்ற கதறல்களின் முற்றுகை.

வேன் வந்து நின்றவுடன்-

யோகு திகைத்து ஸ்தம்பித்து நிற்க - உயிர் பெற்ற ஆவேசமாய் எழுந்த சரசு, இவனையும் கடந்து கொண்டு, வேன் கதவைத் திறந்து கொண்டு, சுற்றி மொய்த்த மனிதக்கற்றையை மூர்க்கமாய் நெட்டித் தள்ளிப் பிளந்து கொண்டு - வெறி பிடித்தவளாக வீட்டுக்குள் பாய்ந்தாள்.

யோகு திகைத்துப் போய், பதற்றமும் பரபரப்புமாய்ப் பின் தொடர்ந்தான்.

இறந்துபோன மழலையை யாரோ ஒரு பெண் தூக்கிக்கொண்டு வந்தாள்.

யோகு பதறிப் பதைத்தான். "சரசு, எதுக்காக இப்படிப் போறா... சாகவா?"

12

மொத்தக் கிராமமும் வாசலையடைக்க - கசபுசாவென்ற பலவிதப் பதற்றப் புலம்பல்கள்.

பின் தொடர்ந்தான் சரசுவை. கொப்பளிக்கும் பகைமை உணர்ச்சியோடு கொதிப்போடு உள்ளே போன சரசு, சுவரிலிருக்கும் சாமி போட்டோக்களையெல்லாம் உக்கிரமாய்ப் பார்த்தாள். பத்ரகாளியின் பார்வை. பத்ரகாளியின் ருத்ரப் பார்வை.

"அடப்பாவிகளா... கும்புட்ட கையை வெட்டிட்டீகளே... நீங்க உருப்படுவீகளா? உங்களைச் சுமந்து நெனைச்ச நெஞ்சை நொறுக்கிட்டீகளே... வெளங்குவிகளா? உங்களுக்கெல்லாம் ஒரு சுவரு... ஓர் ஆணி... ஊதுபத்தி வாசம்... த்தூ!"

ஒரு பெரிய கண்ணாடிப் போட்டோவைப்பற்றி விருட்டென்று இழுத்தாள். பேய்பிடித்தவளைப்போல டமார் என்று கீழே போட்டாள்.

சிலீர் என்று உடைந்து சிதறுகிற கண்ணாடிச் சிதறல்கள், சிமிண்டுத் தரையில் விழுந்து அதிர்கிற தகரச்சத்தம். கண்ணாடிச் சில்லுகள் கையைக் கிழிக்க... மூர்க்கமாய்ப் பாய்ந்து கடவுள் படத்தைப் பற்றி, கிழித்து... கசக்கி...

அவளைப் பிடித்து நிறுத்தப் பாய்ந்த இரண்டு பெண்களைக் கைநீட்டித் தடுத்தான், யோகு.

“விட்டுருங்க... அவ மனம் போல விட்டுருங்க.. மனசுலே இருக்கிற பாரம் பூராத்தையும் கொட்டிடட்டும். விட்டுருங்க...”

பதற்றமும் பரபரப்பும் உள்ளே தளதளக்க... அசையாமல் நின்றான் யோகு. நிதானமாக அவளையே பார்த்தான்.

“சலீர்... சலீர்...” என்று கண்ணாடிகள் டமார்... டமார் என்று விழுந்து நெளிகிற தகரங்கள். கண்ணாடிச் சில்லுகள் மேலே வெறி பிடித்தவளாக பாய்ந்து... பாய்ந்து, படங்களைக் கிழிக்கிற தீவிரம். தீக் குழிக்குள் இறங்குகிற பக்தர்களின் அதே உணர்வுக் கிரமம்.

சரசுவின் உள்ளங்கையிரண்டிலும் ரத்தக் கசிவுகள், கண்ணாடிச் சில்லுகளின் கிழிப்புகள், பாதங்களிலும் ரத்தக் கசிவுகள். சிமிண்டுத் தரையெல்லாம் அவள் பாதங்களின் ரத்தத் தடங்கள். சின்னச்சின்ன மண் சிலைகளையெல்லாம் உடைத்தாள். அறைமுழுக்க அவளது ருத்ரதாண்டவ அடையாளங்கள். குப்பைக் குழியாக கண்ணாடிச் சில்லுகள், காகிதக் கசக்கல்கள், தகர நெளிவுகள், வாய்பிளந்த மரச் சட்டங்கள்.

பேய்பிடித்த அவளது மூர்க்க நர்த்தனத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான், யோகு. எதில் போய் முடியுமோ...? என்கிற மனப்படபடப்பு.

எல்லாமே... அதீதம். நம்பிக் கும்பிட்ட விதத்துலேயும் அதீதம். வெம்பி வெடிச்சு உடைக்கிற வேகத்துலேயும் அதீதம். அமிர்தத்தையும் நஞ்சாக்குகிற அதீதம். அறிவுக்குப் பொருந்தாத அதீதம். அறிவைக் குருடாக்குகிற அதீதம்... அளவையும் நிதானத்தையும் இழந்த அதீதம்.

அதீதத்தின் விளிம்பைத் தாண்டினால்... ஆபத்து. சித்தபிரமை. மனச்சிதைவு. துணியைக் கிழித்துக் கொண்டு ... பிரக்ஞையைக் குழப்பிக் கொண்டு உள் உலகத்துக்குள் முகம் புதைத்துக் கொள்கிற பைத்தியம்... கிறுக்கு...

"ஐயோ... சரசு... சரசு..."

யோகுவின் ஆத்ம அலறல், மொழி உருவம் பெறாத உணர்வின் கதறல். பயத்திலும் பதைப்பிலும் துடிக்கிற நெஞ்சு.

எல்லாப் போட்டோக்களையும் உடைத்துவிட்டாள். கழுவித் துடைத்த முகமாய்... சுவர். சுவரில் ஒரே நெற்றித் திலகமாய்... ஒற்றைப் போட்டோ. இவர்களின் கல்யாணப் போட்டோ மாலையும் கழுத்துமாய் யோகுவும், சரசுவும், கனவுகள் சுமக்கிற இளமைத் தோற்றம்.

வெறிபிடித்த பேய் வேகத்தில் அதையும் கழற்றப் போன சரசு. நடுங்குகிற அவளது கைகள். தாண்டவிடாமல் தடுக்கிற விளிம்பு. அவளைக் கட்டுப்படுத்துகிற விளிம்பு. உணர்வுச்சீற்றத்தை லகான் போட்டுச் சுண்டியிழுக்கிற விளிம்பு.

நடுங்குகிற கைகள், அந்தப் போட்டோவிலும் அவளது உள்ளங்கைகளின் ரத்தத்தடம். அதை எடுக்கவில்லை. அதையே உற்றுப் பார்த்தாள். யோகுவை மட்டுமே உற்றுப் பார்த்தாள் ஒருகணம்.

''பக்தியோடயும் இருக்கணும். புத்தியோடயும் இருக்கணும்மா...'' ஆத்மாவுக்குள் கிசுகிசுத்த யோகுவின் இங்கிதக் குரல். அவளது ஆரவாரம்- அடம் - அழுகை ஆர்ப்பாட்டம், கோப தாபங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அன்பு செலுத்திய ஆத்மதோழன்.

''நீ ஒரு மலடி'' என்று ஆறுவருஷ தாம்பத்யத்தில் ஒரு நாள்கூட உணராத உண்மையான மனிதன். மனித புருஷன்.

இந்நேரம் வரைக்கும்-

இறுகிக்கிடந்த அவளது மன உறைவுக்குள் சிறுகசிவு. கசிந்த கணத்தில் கரையைப் பிளக்கிற உணர்வுப் பீரிடல். ஆத்மபுருஷனை ஆவிசேரத் துடிக்கிற வாழ்வின் வேட்கை. உயிரை நினைத்த உயிரின் ஓங்கார வெடிப்பு.

''கோ'' வென்று வெடித்துக் கதறியழுதாள். போட்டோ யோகுவையே பார்த்துக் கதறினாள். தலையில் மடேர் மடேரென அடித்துக் கொண்டு அழுது புலம்பினாள்.

''ஐயோ.... என்தெய்வமே... என்ராசாவே... பக்தியோட இருந்தாலும் புத்தியோட இருக்கணும்னு படிச்சு சொன்னீங்களே... பாவிநான் கேக்கலையே... புத்தியைக் கடன் கொடுத்துட்டேனே... ஐயோ... ஐயய்யோ... என் ராசாவே...''

அங்கலாய்ப்பான ஒப்பாரி. அடிமனசின் இறுக்கமெல்லாம் பாசப் பிரவாகத்தில் உடைந்து நொறுங்கி...

அழுகையாக வெளிப்படுகிற துயரம். துக்கப் பெரும் பிரவாகம்.

தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறியழுத சரசுவை ஓடிப்போய் ஏந்திக்கொண்டான் யோகு. அவனுக்குள் ஒரு சின்ன ஒளி. இருட்டுத் துக்க முற்றுகைக்குள்ளும் ஒரு நட்சத்திர ஒளிப் புள்ளி.

'சரசு... சாகமாட்டா... சரசு உசுரோட இருப்பா... சரசுக்கு சித்த பிரமை பிடிக்கலை... அழுதுட்டா... கரைஞ்சுட்டா... மனப்பாரத்தை நழுவ விட்டுவிட்டுட்டா...'

ஏந்திப் பிடித்த புருஷனின் முகத்தை ஒரு வெறிப் பாசமாய்ப் பார்த்தாள். முகத்தின் வியர்வையும் கண்ணீரும் உதடுகளில் நிற்க... கோணித்துக் கொண்டு கதறுகிற வாய்.

"ஐயோ... ராசா... உங்க பேச்சைக் கேட்காம... உங்க புள்ளையைக் கொன்னுட்டேன்... நான் கொலைகாரி... கொன்னுட்டேனே... நான்... கொலைகாரி... கொலைகாரி..."

"இல்லை சரசு... நீ பெத்த புள்ளைதான். ஒம்புள்ளைதான். ஒன்னோட வவுறு சுமத்த நம்ம புள்ளைதான். நீ இன்னும் ஒரு தவமணியைச் சுமப்பே. இன்னும் ஒரு பூமழலை ஒன்னோட வவுத்துலே பூக்கும்மா..."

அழுகையில் கலங்கி, உடைந்த குரலில் அவன். அவனது ஆத்ம தழுவல், அவனது அன்பு மனசு. தாயின் இறக்கைக்குள் ஒடுங்கும் குஞ்சாக... அவள்.

அவளை அப்படியே அள்ளியணைத்துக் கொண்டான். கட்கத்தில் கை கொடுத்து ஒரு பூச்செண்டைப்போலத் தூக்கி, கண்ணாடிச் சிதறல்களைத் தாண்டிக் கொண்டு வந்தான்.

இறந்து போன நிமிஷங்களில் கரிய நிழல்களாய்... அவன் உடம்பெல்லாம் உலர்ந்து கறுத்துப்போன ரத்தப் பிசுக்கு.

அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்ட சரசு. விம்மி விம்மி வெடித்து அழுகிற அவளது மனச்சோகம்.

அவனது நெஞ்சு ரோமங்களுக்குள் வாழ்வின் புதிய அழைப்பு குரலாக... அவளது விசும்பல்.

இப்போதுதான்.

தன்னிலைக்கு வந்த சரசு. தாயாக மாறிய சரசு... யோகுவிடமிருந்து பிய்த்துக்கொண்டு... பெற்ற பிள்ளையின் பிரேதத்தைப் பார்த்து... அழுகையும் புலம்பலுமாய்ப் பாய்கிற உயிருள்ள தாய்மை.

தவமணியின் இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகளை அழுகைக் கதறலோடு ஊர் செய்ய... தனது ஆத்ம தோழியை அரவணைத்துக் கொண்டு நிற்கிற யோகு. அவர்களை ஒரு சேர அரவணைத்துக் கொண்ட வாழ்க்கை.

அமுதசுரபி, நவம்பர், 1996

ஆசிரியரின் பிற நூல்கள்

மானுடம் வெல்லும்

சிபிகள்

பூக்காத மாலை .... (அனந்தாச்சாரி இலக்கிய விருது)

மானுடப் பிரவாகம்

பூச்சுமை .... (லில்லி தேவசிகாமணி விருது)

தாய்மதி

காகிதம்

கணக்கு

விரல்

உயிர்க்காற்று .... (பாரத ஸ்டேட் வங்கி விருது)

என் கனா

மனப்பூ ....(தமிழக அரசின் இலக்கிய விருது)

ஒரு மாலைப் பூத்துவரும் ....(தமிழக அரசின் இலக்கிய விருது)

அன்பூ வாசம் .... (திருப்பூர் தமிழ்ச் சங்க விருதும், ஸ்டேட் வங்கி விருதும்)

வெண்பூ மனம்

மானாவாரிப்பூ .... (தமிழர்தந்தை. சி.பா.ஆதித்தனார் இலக்கிய விருது)

ராசாத்தி

மின்சாரப்பூ .... (மத்திய அரசின் சாகித்ய அகாதமி விருது)

பூமனச்சுனை

பூமாயன்

பூக்கும் மாலை

சூரியவேர்வை

கோடுகள் .... (குறுநாவல் தொகுப்பு)

தழும்பு .... (குறுநாவல் தொகுப்பு)

மரம் .... (குறுநாவல் தொகுப்பு)

ஈஸ்வர .... (குறுநாவல் தொகுப்பு)

பாசத்தீ .... (குறுநாவல் தொகுப்பு)

இனி .... (நாவல்)

முற்றுகை .... (நாவல்)

அச்சமே நரகம் .... (நாவல்)

ஆகாய சிறகுகள் .... (நாவல்)

ஊர்மண் .... (பாரத ஸ்டேட் வங்கி விருது)

முழுநிலா

சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம்

கங்கை